எனது வானின் ஞானச் சுடர்கள்

ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்
அருண் கே. திவாரி

எனது வானின் ஞானச்சுடர்கள்

வாழ்க்கையின் குறிக்கோள் குறித்த உரையாடல்

த.ந.உலகநாதன்

ஆ. ப. ஜெ. அப்துல் கலாம்
அருண் கே. திவாரி

தமிழில்:
மு. சிவலிங்கம்

அன்பளிப்பு:
தஞ்சாவூர்
நடராஜ பிள்ளை உலகநாதன் M.A.B.T

கண்ணதாசன் பதிப்பகம்
23, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்
சென்னை-600 017.
தொலைபேசி: 2433 2682
கிளைகள்: மதுரை ❖ கோவை ❖ பாண்டி ❖ வேலூர்

கண்ணதாசன் பதிப்பக வெளியீடு எண்: 492

முதற் பதிப்பு: அக்டோபர், 2006

Published in arrangement with M/s **Ocean Books Pvt. Ltd.**, 4/19, Asaf Ali Road, New Delhi - 1100 002.

E-mail : kannadhasan@vsnl.net
Our Web site : www.kannadhasanpathippagam.com

பதிப்பாசிரியர்: காந்தி கண்ணதாசன்

Price Rs: 75/-

ENATHU VAANIN GNANACHUDARGAL - Tamil
Translated from the English Original, **GUIDING SOULS**

- By : **A.P.J. ABDUL KALAM with ARUN K. TIWARI**
- Translated by : **Mu. SHIVALINGAM**
- First Edition : **October, 2006**
- Publishing Editor : **GANDHI KANNADHASAN**
- Published by : **KANNADHASAN PATHIPPAGAM**
  23, Kannadhasan Salai,
  Thiyagaraya Nagar, Chennai-600 017.
  Ph.: 044-2433 2682 / 8712

Branches

1, Annai Complex, III Street, Vasantha Nagar, **Madurai-625 003.** Ph: 0452 - 2373793	37, Bharathy Stree **Pondicherry - 605 0u1** Ph: 0413 - 4200143
1212, Range Gowder Street, **Coimbatore - 641001** Ph: 0422 - 2479774	Old No: 43, New No: 117, Chunnambukara St **Vellore - 632004.**

- Our Bankers : **State Bank of India,** T.Nagar, Chennai - 17.

Laser : **Sivaa Graphics,** Chennai-94. Ph: 9282152070
Printed by : **United Bind Graphics,** Chennai-4. Ph.:2466 1807

நீதி நேர்மை

நீதி நேர்மை குடியிருக்கும் இதயங்களின்
நடத்தையில் அழகு மிளிர்கிறது.

நடத்தையில் அழகு மிளிர்கிற இல்லங்களில்
நல்லிணக்கம் மலர்கிறது.

நல்லிணக்கம் மலர்கிற இல்லங்கள் நிறைந்த
தேசத்தில் ஒழுங்கு நிலவுகிறது.

ஒழுங்கு நிலவுகிற தேசங்கள் நிறைந்த
உலகத்தில் அமைதி தவழ்கிறது.

-ஒரு பாசுரம்

பாரத ஜனாதிபதி
பாரத ரத்னா
டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்
அவர்களது
75வது பிறந்த தின வெளியீடு

إِن كُلُّ نَفْسٍ لَّمَّا عَلَيْهَا حَافِظٌ ﴿٤﴾

இன் குல்லு நஃப்ஸின் லம்மா அலைஹா
ஹாபிள்

ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அதன் மீது (நம்மால் ஏற்படுத்தப்பட்ட) காவலாளி இல்லாமல் இல்லை.

அல்-தாரிக் (விடிவெள்ளி)
திருக்குர்ஆன் (86:4)

मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव ॥

மயி ஸர்வமிதம் ப்ரோதம்
ஸூத்ரே மணிகணா இவ

நூலிலே மணிகள் போன்று இவை யாவும் (அண்டங்கள் அனைத்தும்) என் மீது கோர்க்கப் பட்டிருக்கின்றன.

ஏழாம் அத்தியாயம்
ஸ்லோகம்: 7 வரி: 2
ஸ்ரீமத் பகவத் கீதை

இந்த பூமியில் வாழ்கிற,
நீதி நேர்மை தவறாத அனைவருக்கும்
இந்த நூல், சமர்ப்பணம்.

முன்னுரை

அசோக சக்கரவர்த்தி, ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி, கலீஃபா உமர் மற்றும் ஐன்ஸ்டீன் ஆகிய ஐவரையும் கனவில் நான் சந்தித்தது பற்றி எழுச்சி தீபங்களில் விவரித்துள்ளேன். ஞானமடைந்துள்ள இந்த ஐந்து மகாத்மாக்களும், நிலவொளி பிரகாசிக்கும் ஒரு பாலைவனத்தில் மனித இனத்தின் பைத்தியக் காரத்தனம் பற்றி விவாதிக்கிறார்கள். மனித குலத்திற்கு அளவிடமுடியாத அளவிற்குத் துயரத்தையும் துன்பத்தையும் உண்டாக்குகிற சுய நாச உந்துதலுக்கு மனிதன் ஏன் இப்படி இரையாகின்றான்?

இந்தக் கனவுக் காட்சியிலிருந்து ஒளிர்கிற எழுச்சி தீபங்கள், ஓர் உன்னதமான மனித ஜீவனின் மூலாதாரத்தை உள்ளடக்கி யுள்ள ஆக்கத் திறன் வாய்ந்த சிந்தனை- தொடர் கட்டங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

2002 ஜூலை மாதத்தில் நான், குடியரசுத் தலைவர் பொறுப்பு ஏற்றபோது இந்த நூல் வெளியிடப்பட்டது.

இந்தியக் குடியரசின் தலைவர் என்ற முறையில் பரந்து விரிந்துள்ள என் தாய்த் திருநாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்துள்ளேன். தனித்துவம் பொங்கும் சில ஆன்மிகத் தலைவர்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட மக்களைச் சந்தித்துப் பேசுகிற வாய்ப்பு அப்போது எனக்குக் கிடைத்தது. மனித சிந்தனையின் பிரபஞ்சத்தை உருவாக்கியுள்ள பல பால் வெளி மண்டலங்களைப் பற்றிய எனது விழிப்புணர்வு மேலும் விசாலமடைந்தது. எனது புரிதல் மேலும் ஆழமடைந்தது. வண்ண மலர்கள் பூத்துக் குலுங்குகிற பூஞ்சோலை போன்று பன்முகப் பரிமாணங்களுடன், மலர்ந்து மணம் பரப்பும் இந்திய தேசத்தின் சமூக, ஆன்மிக மற்றும் கலாசாரப் பெருமை

களின் மகத்துவங்கள் என் முன் பிரமிப்பையும் பெருமிதத்தையும் அலை அலையாய் எழுப்பிய வண்ணம் இருக்கின்றன.

ஒரு விதை திடீரென்று முளை விடுவதைப் போன்று குறிப்பிட்ட சில திசை காட்டிக் கம்பங்கள் தோன்றி வழிகாட்டுகின்றன. சரியான பாதையைக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட ஆன்மிக வழிகாட்டிகளை நான் ஞானச்சுடர்கள் என்று குறிப்பிடுகிறேன். இந்த உலக விவகாரங்களில் மானுட வாழ்க்கையை நெறிப்படுத்தி வழிநடத்திச் செல்லும், உன்னத லட்சியத்தை உயிர் மூச்சாகக் கொண்டிருப்பவர்கள், இந்த ஞானச்சுடர்கள். மானுட விழிப்புணர்வும் அனுபவமும், குருட்டுத்தனமான நம்பிக்கையைக் கடந்து, ஆன்மிக உறுதிப்பாடும் குறிக்கோள் சார்ந்த முனைப்பும் நிறைந்த, ஓர் உயர்ந்த நிலையை எட்டுவதற்கு இவர்கள் வழிகாட்டுகிறார்கள். ஒரு நபரின் உள்ளார்ந்த இருப்பை அறிவியல் கண்ணோட்டத்தில் பார்த்தால் அது, சிந்தனைகள், தோற்றங்கள், உணர்ச்சிகள், நுண்ணுணர்வுகள், கனவுகள், உள்முகப் பார்வைகள் மற்றும் உந்துதல்களின் ஒரு வடிவமற்ற தொகுப்பாகத் தெரியும்.

நிழலுக்கும் (உருவகத்திற்கும்) நிஜத்திற்கும் இடையேயான தொடர்புடன் சற்று நுண்ணுணர்வை சங்கமிக்கச் செய்தால் இவற்றையெல்லாம் படிப்படியாகத் தொடர்ந்து வெவ்வேறு வடிவம் பெற்று வரும் அம்சங்களாக நம்மால் காண முடியும்.

தங்கு தடை இல்லாத வளர்முக மாற்றங்களுக்கு உகந்த நமது ஆன்மாவின் இந்த ஆதாரத் தன்மை, இந்த பூமியில் நமது தனிப்பட்ட இலட்சிய இலக்கை நோக்கி மட்டுமே நம்மை வழிநடத்திச் செல்லவில்லை. அத்துடன் மனித இயல்பில் உள்ளார்ந்து உறைந்துள்ள விடுதலையின் உத்திரவாதத்திற்கான அருளமுதத் துளிகளையும் நம்மை அனுபவிக்கச் செய்கிறது. அனுபவித்துக் கொண்டு, கற்பனைத் தோற்றத்தை உருவாக்கிக் கொண்டு, கிரகித்துக் கொண்டு, செயல்பட்டுக் கொண்டு, சிந்தித்துக் கொண்டு, தெரிவு செய்துகொண்டு, பதில் விளைவுகளை உண்டாக்கிக்கொண்டு, ஆனந்தத்தில் திளைத்துக்கொண்டு மற்றும் பாதிப்புக்கு ஆளாகிக்கொண்டும் இருப்பதுடன் இந்த அனைத்துக் கூறுகளின் உள்ளார்ந்த உறைவிடமாகவும் திகழ்கிற

சுயத்தை ஆட்டுவிக்கிற ஓர் அம்சம்தான் ஆன்மா என்று பகுத்துச் சொல்லலாம். நமக்கு வெளியே உள்ள ஒட்டுமொத்த பிரபஞ்சமும் நமது உள் இருப்புக்குள் உறைந்துள்ளது- அண்ட சராசரங்கள் அனைத்தும் அணுவுக்குள் அடக்கம்- துளி நீரில் நதி நீர் அடங்கியிருப்பது பற்றி சூஃபி சித்தர்களும் புலவர் களும் பல நூறு ஆண்டுகளாக எழுதி வந்துள்ள தொகுப்புகள் ஏராளம் உண்டு.

ஒரு பரிமாணம் இன்னொரு பரிமாணத்துடன் நேர்கோணத் தில் ஒன்றுக்கொன்று செங்குத்தாக சந்தித்துக் கொள்கிற யூகிலிடியன் ஜியோமிதி அடிப்படையில், விமான வடி வமைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை நாங்கள் அணுகு கிறோம். மிகவும் சிக்கலான பிரச்சினைகளில் ரீமேனியன் ஜியோமிதியைப்- (கோளத்தின் மேற்பரப்பில் நேர்கோணத்தில் கோடுகள் சந்திப்பது போல, எந்தப் புள்ளியிலும் இரு பரிமாணங்கள் ஒன்றுடன் ஒன்று செங்குத்தாக சந்தித்துக் கொள்வதில்லை என்பதுதான் ரீமேனியன் ஜியோமிதியின் விதி) பயன்படுத்துகிறோம்.

சில சமயங்களில் உள்முக அனுபவம் என்பது யூகிலிடியன் ஜியோமிதி போல மிகவும் சுலபமான விதத்தில் காரண காரியநிலையில் தோன்றுவது போலத் தெரிகிறது. ஆனால், பெரும்பாலான சமயங்களில் அது ரீமேனியன் நிலையில்தான் இருக்கிறது. சமீபத்தில், நான் பிறந்த ஊரான ராமேஸ்வரம் சென்றிருந்தேன். கடற்கரையில் நின்றுகொண்டு அலைகளின் இயக்கத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன். குழந்தைப் பிராயத்தில் இப்படி கவனிப்பது, எனக்கு வாடிக்கையான பழக்கம்.

ஒவ்வொரு அலையும் ஒரு தனி நபராக எனக்குக் காட்சி தந்தது. ஒரு புதிய உள்முகப் பார்வை உதயமானது. சமுத்திரத்தி லிருந்தோ அல்லது மற்ற அலைகளிலிருந்தோ தனிப்பட்ட ஒன்றாக இல்லாவிட்டாலும்கூட ஒவ்வொரு அலையும் இன் னொரு அலையிலிருந்து எப்படி இப்படி தனித்துத் தெரிகிறது?[1]

எனது நண்பரும் **அக்னிச் சிறகுகள்** இணை ஆசிரியருமான அருண் கே. திவாரி என்னுடன் அடுத்தடுத்து நீண்ட நேரம்

உரையாடியுள்ளார். ராஷ்டிரபதி பவனுக்கு அவர் வருகிற சமயங்களிலும் நாங்கள் இருவரும் ஒன்றாகப் பயணம் செய்கிற சமயங்களிலும் இந்த உரையாடல்கள் தொடர்வதுண்டு. பல சமயங்களில் ராஷ்டிரபதி பவன் மொகல் கார்டனில் அமைக்கப் பட்டுள்ள அமரத்துவக் குடிலில் அமர்ந்து கொண்டு நாங்கள் உரையாடுவோம். ‘லாப்டாப்’ சகிதமாக உட்கார்ந்து அவர் கேள்விகள் தொடுக்க, நான் தெளிவுபடுத்திக் கொண் டிருப்பேன். பரஸ்பரம் ஆர்வமுள்ள விஷயங்கள் குறித்த, சொல்லப்போனால் பிரபஞ்ச முக்கியத்துவம் வாய்ந்த அந்தக் கேள்விகளுக்கு என் சிந்தனைகளில் பளிச்சிட்ட விளக்கங் களைக் கூறிவந்தேன்.

பின்னர் அவர், நான் வாசித்திருக்கிற பல்வேறு புத்தகங்களி லிருந்து, எங்கள் உரையாடலுக்குப் பொருத்தமாகக் காணப் படும் பகுதிகளைக் கச்சிதமாகத் தொகுத்து எங்களுடைய சிந்தனை ஓட்டத்திற்கு மெருகூட்டினார். சரளமான உரையாடல் வடிவமாக இந்த நூலை அவர் உருவாக்கித் தந்துள்ளார். சீடனின் சில குணாதிசயங்கள், தவிர்க்க முடியாத ஒரு பகுதியாக குருவின் பண்புகளோடு இரண்டறக் கலந்து விடுகின்றன என்பதை இந்திய கலாசாரம் வகுத்துத் தந்துள்ள குரு-சீடன் பந்தம் திட்டவட்டமாக சுட்டிக் காட்டுகிறது. மாணவரின் சில பண்புகளை ஆசிரியரிடம் பதிய வைக்கிற இந்த அரிதான, சிரமமான கலையில் அருண் கைதேர்ந்தவர்.

இந்தப் புத்தகம் மூன்று பகுதிகள் கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளது. அனுபவங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களை- எண்ணங்கள், தோற்றங்கள், உணர்ச்சிகள், உணர்வுகள், நுண்ணுணர்வுகள், கண்ணோட்டங்கள், உள்முக தரிசனங்கள் மற்றும் அறிவு உள்ளிட்ட பல கருத்தோட்டங்களை - முதற் பகுதி உங்கள் முன் வைக்கிறது. துளிகூடத் தன்னலமில்லாமல் மனிதகுலம் முன்னேறுவதற்காக வெவ்வேறு காலகட்டங் களில் வழிகாட்டி வந்துள்ள சில மாமனிதர்களின் ஆதார சுருதியை இரண்டாவது பகுதி மீட்டிக்காட்டுகிறது. இந்த மாமனிதர்கள் பட்டியலில், கலங்கரை விளக்கமாகத் திகழ்கிற சமகாலத்திய மனிதகுல மாணிக்கங்கள் சிலரையும் சேர்த்திருக் கிறோம்.

கால ஓட்டத்தின் வெகு தொலைவில் நின்று கொண்டு அருமை பெருமைகளை கவனிப்பதும், கணிப்பதும் சுலபமான விஷயம். ஆனால், அதற்கு மாறான நிலவரத்தில், நம்மைச் சுற்றிலும் உள்ளவர்களை அலசி ஆராய்வது என்பது அத்தனை சுலபமல்ல. அதே சமயத்தில் இது மிகவும் முக்கிய மான ஒன்று. முத்தாய்ப்பான மூன்றாவது பகுதி, ஆன்மாவின் யாத்திரை பற்றியும் ஓர் அமரத்துவ மூலாதாரமாய் அதை மலர வைக்கிற பல்வேறு பரிமாணங்கள் பற்றியும் விவரிக்கிறது.

மனித இனத்தை இறுதியானதும் முதன்மையானதுமான இனம் என்று முகம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார். இந்த உலகத்திற்கு கடைசியாக வந்த ஜீவன் மனிதன்தான் என்றாலும்கூட சிருஷ்டியின் இலக்காகவும் மையமாகவும் இருப்பவன் அவன்தான் என்பதால் முதன்மையான இடம் பெற்றிருக்கிறான்.

கடந்த காலம் தந்துள்ள நமது அறிவு, நமது நிகழ்கால அனுபவங்களைக் கட்டமைக்கிற நிலையில், நிஜம் நீர்த்துப் போகிற ஆபத்துள்ளது. அறியாமை அடித்தளத்தின் இருட்டி லிருந்து விடுபட்டு, தங்களுக்கான புத்தம்புது வழி காணத் துடிக்கும் இளம் தலைமுறையினரை நிந்திக்கிற, கண்மூடித்தன மான கடந்த காலத்தின் மோசமான தவறுகளை காலமும் மனித இனமும் மறுபடியும் மறுபடியும் செய்து வருகிறது. இந்த அறியாமையைத்தான் இந்த நூல் அகற்ற முயல்கிறது.

இதில் இடம் பெற்றுள்ள உரையாடல் முடிவில்லாததது. மானிட வாழ்க்கையின் குறிக்கோளைக் கண்டுபிடிக்கும் தேடலி லும், இந்த உரையாடலைத் தொடர்வதிலும் பங்கேற்கும்படி வாசகர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். நாம் எல்லோருமே முஸாஃபிர்கள் (பயணிகள்) தானே!

உன் ஜாடியில் உள்ளது
உப்புக் கரிக்கும் அழுக்கு நீர்
ஜாடியை உடைத்தெறி!
ஆற்றங்கரைக்கு வா![2]

ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்

பொருளடக்கம்

பகுதி 1

நித்தியத்துவம்

நான் மேலே மேலே
ஏறிக்கொண்டே இருக்கிறேன்...
இறைவா, எங்கே அந்தச் சிகரம்?

நான் உழுதேன் உழுதேன்
உழுதுகொண்டே இருக்கிறேன்...
இறைவா, எங்கே அந்த ஞானப் புதையல்?

நான் கடல் மீது பயணித்தேன்
பயணித்துக் கொண்டே இருக்கிறேன்...
இறைவா, எங்கே அந்த சமாதானத் தீவு?

விடாமுயற்சியால்
முடிவிலாமையை முறியடித்து
இறைவா, எனது தேசத்திற்கு
தரிசனத்தையும், உழைப்பையும்
தந்து அருள் செய்!

அருண் கே. திவாரி (அ.தி.): இவ்வளவு பெரிய ஆல மரத்தினடியில் அமர்ந்திருப்பது எப்பேர்ப்பட்ட ஆழ்ந்த அனுபவம்? திரிபுரா மாநில கைவினைக் கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவான இந்த மூங்கில் குடில்தான் எத்தனை அழகு!

ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் (ஆ.ப.ஜெ.): நான் இதற்கு 'அமரத்துவக் குடில்' என்று பெயர் சூட்டியுள்ளேன்.[3]

அ.தி: எதற்காக இந்தப் பெயர்?

ஆ.ப.ஜெ: இங்கு உட்கார்ந்திருக்கும்போது ஓர் அமரத்துவத்தை நான் உணர்கிறேன். ஓர் உள்ளார்ந்த அக அற்புதத்தின் புறக்காட்சிகளின் நாடக வடிவமாக இந்த உலகத்தைக் காண்கிறேன்.

அ.தி: ஆனால், அக உலகத்தில்தான் எத்தனை அலங்கோலங் களும் குழப்ப மேகங்களும் சூழ்ந்துள்ளன! பலதரப்பட்ட உணர்வுகள்... உணர்ச்சிகள்... தோற்றங்களை உருவாக்குதல்... இப்போது... இது... அது... என்று அலை அலையாய்த் தொடர்கின்றன. இதற்கு மாறாக இந்த உலகம் கச்சிதமான ஒழுங்கு முறையோடு இயங்குகிறது.

ஆ.ப.ஜெ: இந்தப் பிரபஞ்சம்தான் கச்சிதமான ஒழுங்குமுறையோடு இயங்குகிறது. உலகம் அல்ல. புற உலகத்தைக் கட்டுப் படுத்துகிற அதே புவியீர்ப்பு விதி மற்றும் காற்றியக்க விதிகளைப் போலவே அக உலகத்தைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்துகிற விதிகளும் உண்டு. இந்த விதிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் உங்களுடைய அனுபவங் களை உங்களால் புரிந்துகொள்ள முடியும். உங்க ளுடைய சுயத்துடன் உங்களுக்குத் தொடர்பு கிடைத்த வுடனேயே பிரபஞ்சத்தின் மையப்பகுதியாக நீங்கள் முடுக்கிவிடப்படுகிறீர்கள்.

அ.தி: பிரபஞ்சத்தின் மையமாக இருப்பது என்பது எப்படிப் பட்ட ஒரு மகத்தான உணர்வு! ஆனால், இதன் தெளிவான அர்த்தம் என்ன?

ஆ.ப.ஜெ: பிரபஞ்சத்தின் மையப்பகுதியாக இருக்கிற நிலையில் எதுவுமே ஒழுங்கற்று இருப்பதில்லை. நாம் எல்லோருமே இணைக்கப்பட்டிருக்கிறோம். காற்றிலிருந்து தென்றலைக்கூட நீங்கள் பிரித்து விடலாம். ஆனால், ஒருவரின் வாழ்க்கையிலிருந்து இன்னொருவரின் வாழ்க்கையைப் பிரிக்கவே முடியாது.

அ.தி: ஆஹா...! சாஸ்வதமான ஒரு சங்கிலிப் பிணைப்பு என்பது எவ்வளவு அருமையான சிந்தனை; நீங்கள் பிறப்பதற்கு முன்பு நிகழ்ந்த விஷயங்கள், இன்னமும்கூட உங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதே போலவே உங்களுடைய காலத்திற்கு முன்பு வந்தவர்களும் உங்கள் மீது தாக்கத்தை உண்டாக்குகிறார்கள்.

ஆ.ப.ஜெ: சாஸ்வதமான சங்கிலிப் பிணைப்பு என்ற கருத்தில் அனைத்து முடிவுகளுமே ஆரம்பங்கள்தான் என்பதும் அடங்கியுள்ளது. ஆனால், அவை நிகழ்கிற சமயத்தில் நாம் அதை அறிவதில்லை. நாம் அனைவருமே ஏதோ ஓர் ஆழமான அர்த்தத்துடன்தான் படைக்கப்பட்டுள்ளோம். அந்த அர்த்தத்தை நாம் அறியாமலும் இருக்கலாம்.

அ.தி: வண்ணத்துப்பூச்சியாக மாறப்போகிற தனது வாழ்க்கையை அறியாத கூட்டுப் புழு போன்ற நிலை இது.

ஆ.ப.ஜெ: அதைவிட அதிகமாக நம்மால் நினைத்துக்கொள்ள முடியாது. நாம் அனைவருமே ஏதோ ஒரு அற்புத வடிவமைப்பின் அங்கங்கள். அர்த்தமே இல்லாமல் இந்த ஒட்டுமொத்த அண்ட சராசரம் மேலும் கீழுமாக சுழன்று கொண்டிருக்கவில்லை. நாம் ஒவ்வொருவருமே இந்த மகத்தான நாடகத்தில் நடித்துக்கொண்டுள்ளோம் என்று நம்பிக்கை வைத்துள்ளோம்.

அ.தி: சரி... ஆனால், எங்கு பார்த்தாலும் அடுக்கடுக்கான துன்பங்களும் துயரங்களும் வேதனையும் வாட்டு

கின்றனவே? பெருவாரியான மக்களைப் பொறுத்த வரையில், ஒரு மகத்தான நாடகத்தில் பங்கேற்றிருப்பது என்ற சிந்தனை சுவாரஸ்யமாக இருக்காது.

ஆ.ப.ஜெ: நிஜத்தை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்வது என்பது மிகவும் முக்கியமானது. அதே சமயத்தில் அது அர்த்தமற்றது. பலவீனமான மனதின் வறட்டு ஜம்பம் அது. சிரமங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், நம்மைச் சுற்றிலும் நேசமும், அழகும், கொண்டாட்டமும் நிறைந்துள்ளன. நம்மைச் சுற்றிலும் பொங்கி வழிகிற அழகைக் காண மறுத்து, கண்களை மூடிக்கொண்டு, நமது சுயநல பிரச்சினைகளில் மட்டுமே கவனம் செலுத்திக் கொண்டிருந்தால் துயரம் மட்டுமே மிஞ்சும். மனித நேயத்தில் மலர்கிற நெஞ்சுரத்துடன், வாழ்க்கைக்கு இயைந்தவர்களாக நம்மை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

அ.தி: ஏன் நாம் அப்படி நடந்துகொள்வதில்லை?

ஆ.ப.ஜெ: நம்மை மையமாகக் கொண்டதுதான் நமது வாழ்க்கை என்று தவறாக நினைத்துக்கொள்கிறோம். எல்லாமே நமக்கு ஆதாயம் தருகிற விதத்திலும் நாம் விரும்புகிற வகையிலும்தான் நிகழ வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

அ.தி: இப்படி எதிர்பார்ப்பது மிகவும் இயல்பானதுதானே?

ஆ.ப.ஜெ: இந்த எதிர்பார்ப்பு மிகவும் பொதுவான விஷயம்தான். ஆனால், எந்த விதத்திலும் இயல்பானதல்ல. இந்த வாழ்க்கைக்கு நாம் எதைக் கொண்டு வருகிறோம்? நாம் ஒவ்வொருவருமே இந்த உலகத்திற்கு வெறும் கையுடன் நிர்வாணமாக அழுது கொண்டே வரவில்லை?

அ.தி: நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் நம்முடன் மரபியல் ரீதியான தொடர்பையும் கொண்டு வருகிறோமே?...

ஆ.ப.ஜெ: யார் அதைக் கொண்டு வருகிறார்கள்? அது இயற்கையாக வருகிறது. அதுதான் நமது மூலாதாரம். ஒரு மனித ஜீவனின் மூலாதாரம். ஆனால், சீக்கிரமாகவே ஒரு பெயரைக் கொண்டும், உறவுகள், எதிர்பார்ப்புகள்,

பொறுப்புகள் மற்றும் சாதிக்கும் ஆசைகள் என்பவை இரண்டறக் கலந்துள்ள பந்த வலையைக் கொண்டும் அது மறைக்கப்பட்டு விடுகிறது.

அ.தி: ஆம்! இப்படித்தான் ஒரு மனித ஜீவன், ஒரு நபராக உருவெடுக்கிறது. தனித்தன்மை வாய்ந்த ஒரு சுயம் அனைத்துக் குழந்தைகளிடமிருந்தும் மலர்கிறது.

ஆ.ப.ஜெ: எந்த விதத்தில் தனித்தன்மை உள்ளது? ஏதோ ஒரு படிமத்தின் ஒரே மாதிரியான நகல் வடிவம்தானே நாம்? அல்லது தனது மூலாதாரத்திலிருந்து துண்டிக்கப்பட்ட ஒன்றினுடைய ஓர் இருப்பு என்பது இன்னும் பொருத்த மானதாக இருக்கலாம். ஒரு தனிப்பட்ட சுயம் என்பது மனித ஜீவனின் மூலாதாரத்திலிருந்து துண்டிக்கப்பட்டு இப்படித் தனித்து விடப்பட்டிருப்பதுதான், வாழ்க்கை யின் இத்தனை துயரங்களுக்கும் சிக்கல்களுக்கும் மூல காரணம்.

அ.தி: மூலாதாரத்துடன் நாம் எப்படித் தொடர்பு கொள்வது? அதை எப்படி கிரகித்துக்கொள்வது?

ஆ.ப.ஜெ: கடவுளின் விருப்பதை நாம் புரிந்து கொள்கிற பக்குவ நிலையோடு ஒத்திசைந்து போகக்கூடிய அளவுக்கு, நமது எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களை அமைத்துக் கொள்வதன் மூலம் இந்தத் திறனை நாம் வசப்படுத்திக்கொள்ள முடியும்.

அ.தி: அது ஒரு பிரச்சினையாகவே இருக்கக்கூடாது.

ஆ.ப.ஜெ: புனித குர்ஆன் சொல்கிறது: ''நிச்சயமாக நாம் அமானி தத்தை (அல்லாஹ்வுடைய சட்ட வரம்புகளை ஏற்று நடப்பதை) வானங்கள், பூமி, மலைகள் ஆகியவற்றின் மீது நாம் எடுத்துக் காட்டினோம். அப்போது அவை அதனைச் சுமந்துகொள்ள மறுத்தன. அதைப்பற்றி அவை பயந்தன. (ஆனால்) மனிதனோ அதைச் சுமந்து கொண்டான். நிச்சயமாக அவன் பெரும் அநியாயக் காரனாகவும் அறிவில்லாதவனாகவும் ஆகிவிட்டான்.[4]''

அ.தி: மிகவும் கடுமையான வார்த்தைகள். மூலாதாரத்தி லிருந்து துண்டிக்கப்படுகிற சுயம் என்கிற சுவாரஸ்யமான ஒரு கருத்தாக்கத்தை சொல்லியிருக்கிறார்கள். ஒரு சராசரி மனதைப் பொறுத்தவரையில் இரண்டுமே ஒரே மாதிரியாகத்தான் தோன்றுகிறது. நான் ஒரு மனித ஜீவன். நான்தான் என்னுடைய அடையாளம்.

ஆ.ப.ஜெ: என்னுடைய நிஜ இருப்புதான் என்னுடைய மூலாதாரம் என்று நான் நம்புகிறேன். என்னுடைய சுயம் என்பது நான் அணிந்துள்ள ஒரு 'லேபிள்' சில சமயங்களில் இது ஒரு முகமூடி என்ற அளவிலேயே குறுகிப்போய் விடுகிறது.

அ.தி: அப்படியானால் நிஜமான நான் யார்?

ஆ.ப.ஜெ: என்னைப் பொருத்தவரையில் உண்மையிலேயே மனித ஜீவன் என்பதற்கு ஆன்மா என்ற வார்த்தை சிறந்த விளக்கம் தருவதாக அமைந்திருக்கிறது என்று நினைக் கிறேன். இருப்பின் அடையாளமான இந்த சுயம்தான் இந்த உலகத்தின் ஒரு வடிவம். உங்களுக்கு ஒரு பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஒரு சில குறிப்பிட்ட உறவுகளுடன் நீங்கள் வாழ்க்கை நடத்துகிறீர்கள். சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட அந்தஸ்தை எட்டியிருக்கிறீர்கள்... இப்படி தொடர்ந்து கொண்டே போகிறது.

அ.தி: இந்த உலகத்தின் ஒரு வடிவமானது சுயம். புத்தர் இதை 'நாமா' மற்றும் 'ரூபா' (பெயர் மற்றும் வடிவம்) என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆ.ப.ஜெ: அஷ்டவக்ர கீதையில் அஷ்டவக்கிரர்[5] பின்வருமாறு கூறுகிறார்; ''நீ, நிலமோ, நீரோ, நெருப்போ, காற்றோ அல்ல; ஆகாயமும் அல்ல. இந்த பஞ்ச பூதங்களின் சாட்சியாக இருக்கிறோம் என்ற பிரக்ஞை கொண்ட வனாக உன்னை நீயே அறிந்துகொள்.''[6]

அ.தி: வெறும் ஒரு சாட்சிதானா? அப்படியானால் பிரக்ஞை என்பது என்ன? அது எங்கே குடிகொண்டுள்ளது?

ஆ.ப.ஜெ: பிரக்ஞை என்பது ஒரு வடிவமல்ல. அது சாஸ்வதமானது. அது தொடர்ந்து நீடித்திருப்பது; முடிவேயில்லாதது;

மனதிற்கு அப்பாற்பட்டது; மூளைக்கும் அப்பாற் பட்டது, அது.

அ.தி: ''ஆத்மா இந்திரியங்களுக்குப் (பொறிகளுக்கு) புலப் படாதது; சிந்தனைக்கு எட்டாதது; ஆயுதங்கள் ஆன்மாவை வெட்டுவதில்லை; நெருப்பு அதை எரிப்ப தில்லை.நீர் அதை நனைப்பதில்லை; காற்றும் அதை உலர்த்துவதில்லை. நித்தியமாய், நிறைவாய், நிலையாய், சலனமில்லாமல் என்றும் எப்போதும் இருப்பது அது'' என்று பகவத் கீதை கூறுகிறது.[7]

ஆ.ப.ஜெ: ஆமாம் அதேதான். மானுடத் தலைமுறைகள் மூலமாக, வழிவழியாக நீடித்து வருகிற ஒரு தெய்வீகத் தொடர்ச்சி என்பது அனைத்து முக்கிய மதங்களிலும் இடம் பெற்றிருக்கிறது.

அ.தி: இது பற்றி தயவுசெய்து விரிவாகக் கூறுகிறீர்களா?

ஆ.ப.ஜெ: வெவ்வேறுவிதமான மன -ஆன்மிக அம்சங்கள் அல்லது சில சமயங்களில் புலன் உணர்வுத் திறன்கள் பற்றியும் புலன்களால் உணர முடியாதவற்றை அறிகிற ஞானம் பற்றியும் விவரிக்கக்கூடிய பாரம்பரியமான கருத்துகள் உண்டு. புனித குர் ஆனில், மனம் சார்ந்தவை *நஃப்ஸ்* (nafs) என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

அ.தி: *நஃப்ஸ்* என்பது அரேபிய வார்த்தையா?

ஆ.ப.ஜெ: ஆமாம். சமகாலத்திய வழக்கில், *நஃப்ஸ்* என்பதற்கு இழிவான, தரம் தாழ்ந்த, தற்பெருமை கொண்ட மற்றும் கட்டுக்கடங்காத உணர்ச்சிகளால் ஆட்டுவிக்கப்படுகிற மனித சுபாவத்தின் வெவ்வேறு நிலைகள் என்று பொருள் கொள்ளலாம். இந்த மனம் சார்ந்த சுபாவத்துடன் tab (உடல் சார்ந்த இயல்பு) என்பதும் சேர்ந்த நிலையில் மானிட வாழ்க்கையில் சாத்விக மற்றும் மிருகத் தன்மைகள் உள்ளடங்கியுள்ளன. *நஃப்ஸ்* என்பதற்கு சாத்தான், மோகம், பேராசை மற்றும் தன்னை மட்டுமே முன்னிலைப்படுத்திக்கொள்கிற அகங்காரம் என்பன போன்ற அர்த்தங்களும் உண்டு.

அ.தி: அப்படியானால் ***நஃப்ஸ்*** என்பது ஆன்மா இல்லை அல்லவா?

ஆ.ப.ஜெ: அது ஆன்மா அல்ல. ஆன்மா என்பது ***ரூஹ்*** (ruh.) தன்னை மட்டுமே முன்னிலைப்படுத்திக்கொள்கிற மிக மோசமான அகங்கார நிலையிலிருந்து விடுபட்டு பல்வேறு மன - ஆன்மிக கட்டங்களைக் கடந்து வந்து கடவுளின் சித்தப்படி சரணாகதி அடைகிற பவித்திரமான நிலையை எட்டும் அளவுக்கு மறுவடிவம் பெறுவதுதான், அருமையான வாழ்க்கையின் மையக் குறிக்கோள்.

அ.தி: பல்வேறு மன, ஆன்மிக கட்டங்கள் என்னென்ன?

ஆ.ப.ஜெ: ஒரு மனித வாழ்க்கை கடந்து வரக்கூடிய மன, ஆன்மிக அம்சம் பற்றிப் புனித குர் ஆனில் மிகவும் ஆழமான கருத்தோட்டம் இடம் பெற்றுள்ளது. ***நஃப்ஸ்*** (nafs), ***கல்ப்*** (qalb), ***சிர்*** (sirr), மற்றும் ***ரூஹ்*** (ruh) ஆகியவற்றுக்கான வேறுபாடு தெள்ளத்தெளிவாக வரையறுக்கப் பட்டுள்ளது.

அ.தி: தயவு செய்து விளக்கமாகச் சொல்லுங்கள்.

ஆ.ப.ஜெ: ***கல்ப்*** (qalb) என்ற பதம், எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளின் தோற்றுவாயாக இருக்கிற இதயத்தைக் குறிக்கிறது. இந்த இதயம்தான் பேரானந்தப் பரவசத்தின் உறைவிடமாகவும் அமைந்திருக்கிறது. ஆனால், பெரும்பாலோருக்கோ இது, ***நஃப்ஸ்*** (nafs) அல்லது மோகம் மற்றும் ***ரூஹ்*** (ruh) அல்லது ஆன்மா என்கிற இரண்டு படைகளும் யுத்தம் செய்கிற போர்க்களமாகி விடுகிறது. சரியான பாதையில் பயணம் செய்பவர்கள் பின்பற்ற வேண்டிய ஆன்மிக ஒழுங்குமுறையில், ***கல்பை*** (qalb) தூய்மைப் படுத்துவது என்பது மிகவும் முக்கியமான ஒன்று

அ.தி: ***சிர்*** (sirr) என்பது என்ன?

ஆ.ப.ஜெ: ***சிர்*** (sirr) என்பது மார்பின் மையப்பகுதியில், நமது இதயம் அமைந்துள்ள இடத்தில் இருப்பதாக நம்பப் படுகிறது ***சிர்***-ஐ வெறுமையாக்குவது என்பது மனித வாழ்க்கையின் சராசரி விஷயங்களிலிருந்து ஒருவரின்

கவனத்தை மாற்றி ஆன்மிக மையத்தில் நிலை பெற வைப்பது.

அ.தி: ***கல்ப்***-ஐ தூய்மைப்படுத்துவது மற்றும் ***சிர்*** என்பதை வெறுமையாக்குவது என்ற வெவ்வேறு இரண்டு வினைச் சொற்களை பயன்படுத்தியுள்ளீர்கள்.

ஆ.ப.ஜெ: இந்தக் கருத்தை நீங்கள் புரிந்து கொண்டிருப்பது சந்தோஷமாக இருக்கிறது. வெறுமையாக்குவது என்பது அகங்காரத்தை மையமாகக் கொண்டிருக்கிற மனோ பாவத்தை, வேரும் வேரடி மண்ணோடும் அழித் தொழித்துவிடுவதைக் குறிக்கிறது. ***ரூஹ்*** (ruh) என்பது ஓர் ஆன்மிக ஆற்றலுக்கு, இடைவிடாத விழிப்புணர்வு மற்றும் பிரார்த்தனை மூலம் செயல்வடிவம் கொடுப்ப தற்கான அசைவற்ற, நிலையான ஓர் ஆன்மிகத் திறனைக் குறிக்கிறது.

அ.தி: எவ்வளவு மகத்தான, கச்சிதமான ஒரு ஒழுங்குமுறை இது என்று தோன்றுகிறது!

ஆ.ப.ஜெ: அடுத்தடுத்துத் தொடரும் நடவடிக்கைகள் கச்சிதமாக வரையறுக்கப்பட்டுள்ளன. கட்டுக்கடங்காத ஆசை என்பதை ஆரம்ப நிலையிலேயே தூய்மைப்படுத்துதல்; (*தஸ்கியா-இ-நப்ஸ்*-tazkiya e-nafs) அதைத் தொடர்ந்து ஆன்மிக இதயத்தை மாசு மருவற்றதாக அமைத்துக் கொண்டு கண்ணாடி போன்று பிரதிபலிக்கும் வகையில் பவித்திரமாக்குதல் (*தஸ்கியா-இ-கல்ப்*-tazkiya e-qalb); அகங்காரத்தின் உந்துதலை வேரறுத்துவிட்டு ஆன்மிக இதயத்தை வலுப்படுத்திக் கொள்ளுதல் (*தக்லியா-இ-சிர்*-taqliyya-e-sirr) மற்றும் இறை சிந்தனை மூலம் (திக்ர்-zikr) ஆன்மிகப் பேரொளியின் (*தஜல்லி-இ-ரூஹ்*-tajalli-e-ruh) தரிசனத்தைப் பெற முடிகிறது. இந்தத் தரிசனம்தான் மிகவும் முக்கியமான ஆன்மிகப் பயணம்.

அ.தி: இந்தப் பயணத்தில், பெருமளவிற்கு அக நடவடிக் கைளை மேற்கொள்ள வேண்டியிருப்பது போலத் தோன்றுகிறதே?

ஆ.ப.ஜெ: ஆமாம். வாழ்க்கை என்பது பெரும் இன்னல்கள் சூழ்ந்த, தாங்க முடியாத வேதனை வாட்டுகிற ஓர் உள்முகப் பயணம்.

அ.தி: வாழ்க்கை என்பதை ''பாலைவனத்தைக் கடக்கிற அல்லது முடிவே இல்லாத நீர்பரப்பைக் கடக்கிற மிகவும் விரைவான ஒரு பயணம். அந்தப் பயணம் வேடிக்கை யானது அல்ல'' என்று *ப்ரஜன சூத்திரத்தில்* (உள்ளு ணர்வு சூத்திரத்தில்) சுபாஷ் கக்[8] குறிப்பிட்டுள்ளார்.

ஆ.ப.ஜெ: விரைவான பயணம் என்பது அருமையான ஓர் உரு வகம். ப்ரஜன சூத்திரம் சமீபத்தில்தானே வெளிவந்தது?

அ.தி: சென்ற வருடத்தில்தான் வெளி வந்தது. சமகாலத்திய ஞானமாகவும் அது திகழ்கிறது. சுயம் மலர்ச்சியடை வதைத்தான் ஒரு பயணமாகக் கருதுகிறார், சுபாஷ் கக். இயங்குவதில்தான் அதன் சாரம் அடங்கியுள்ளது. அதுதான் ஆரம்ப நிலை அனுபவம். இதே விஷயத்தை குல்ஸார் 'பர்வாஸ்'ஸில் குறிப்பிட்டுள்ளார்.[9]

ஆ.ப.ஜெ: அனுபவம் என்பது ஒரு சுழற்சியாகத் தொடர்கிற அம்சம். ஒரு சுருள் வடிவக் கட்டமைப்பு என்பது இன்னும் பொருத்தமாக இருக்கும். அதே நிலைக்கு ஒவ்வொரு தடவை திரும்புகிறபோதும் நீங்கள் விசாலம் அடைந் திருப்பீர்கள்.

அ.தி: இப்படி விசாலமடைவதின் நோக்கம் என்ன?

ஆ.ப.ஜெ: ஏராளமான கருப் பொருள்களும் கதாபாத்திரங்களும் அரங்கேறுகிற நாடக மேடை இது என்று ஞானிகள் கூறியுள்ளனர். கிரகித்துக் கொள்கிற நிலையில் இருக்கிற ஆன்மாவுக்காக சில குறிப்பிட்ட பாடங்களை வழங்கு வதுதான் வாழ்க்கையின் நோக்கம் என்று எடுத்துக் கொள்ளலாம். நிஜத்தின் பல்வேறு நுணுக்கமான பரிமாணங்களைத் தெள்ளத் தெளிவாகப் பகுத்தறிந்து வாழ்க்கையின் குறிக்கோளுடன் ஒன்றிணைத்துக் கொள் வதன் மூலம் தன்னைத் தானே ஆன்மா வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அ.தி: இதை மறுவடிவம் பெறுகிற ஒரு தொடர்கட்டம் என்று சொல்லலாமா?

ஆ.ப.ஜெ: மலர்ச்சியடைதல் என்பது இன்னும் பொருத்தமான வார்த்தையாக இருக்கும். ஆன்மாவின் வளர்ச்சி மூலமாக ஒரு மனித ஜீவன் நிஜம் என்ற சமுத்திரத்தைப் பிரதி பலிக்கிற கண்ணாடியாகவும், அந்த சமுத்திரத்தில் ஒரு துளியாகவும் மாறுவதோடு மட்டுமல்லாமல் அதன் பிரதிநிதியாக, அங்கமாக, சேவகனாகவும் மாற்றமடை கிறது. அத்தோடு நிஜத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதும் முக்கியமான ஒன்று.

அ.தி: ''பிரதிநிதியாக, அங்கமாக, சர்வசக்தி வாய்ந்த இறைவனின் சேவகனாக''[10] மனிதனைக் கருதுவது ஒரு புனிதமான சிந்தனை.

ஆ.ப.ஜெ: ஒருவேளை எனக்குள் நிகழ்ந்திருக்கக்கூடிய, பிரக்ஞை யின் உள்ளார்ந்த மறுவடிவ மலர்ச்சியில் முகிழ்ந்த கருத்து என்றுகூட இதை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

அ.தி: உங்களுடைய தன்னடக்கத்தை எப்போதுமே நான் மதித்துப் போற்றுகிறேன்.

ஆ.ப.ஜெ: மிஞ்சியிருப்பது வேறென்ன? நாம் தற்பெருமை பாராட் டிக் கொள்ளக்கூடிய அளவுக்கு என்ன இருக்கிறது? நீங்கள் சில கேள்விகள் கேட்கிறீர்கள்; நான் பதில் சொல்ல முயல்கிறேன். நமது உரையாடலின் உள்ளடக்கம் நம்மிருவரின் அறிவுக் கூர்மையில் விளைந்த ஒன்று என உங்களால் எப்படிச் சொல்ல முடியும்? நமது ஆன்மாக் களின் மூலாதாரம் மற்றும் நாம் என்னவாக இருக்கிறோம் என்பதன் பரிணாமம்தான் இந்த உள்ளடக்கத்தின் நிஜ ஊற்றுக்கண் என்றும்கூட சொல்லலாம்.

அ.தி: ஆமாம். இது சாத்தியம்தான். இந்த விதத்தில் ஒருவர் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் அவர் ஞானம் கொண்டவராக இருக்க வேண்டும்.

ஆ.ப.ஜெ: ஞானம் கொண்டவராக மாற வேண்டும் என்றால், பகுத்தறிகிற மனத்தை அவர் ஒதுக்கித் தள்ள வேண்டும். ஜாடியைத் தூக்கி எறிந்துவிட்டு நதிக்கு வாருங்கள்.

அ.தி: அதாவது, உலகியல் அக்கறைகள் மற்றும் கவலைகளுக்கு இடம் கொடுக்காமல் ஆன்மிகக் கண்ணோட்டம் கொண்டிருக்க வேண்டும் என்று சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: இரண்டுமே முக்கியமானவை. உலகியல் மற்றும் ஆன்மிகம் என்ற இரண்டின் சங்கமத்தை இணக்க பாவத்துடன் சாதிக்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

அ.தி: ஆரம்பத்திலாவது, அறிதலை வெளிப்படுத்துகிற சாதனங்களாக, புரிதல்களின் கருவிகளாக மற்றும் சத்தியத்தை வெளிப்படுத்திக் காட்டுகிற மையமாக மட்டுமே நமது சுயங்களைக் கொண்டிருந்தோம். இதில் நாம் அறிந்து கொள்ளவும் புரிந்துகொள்ளவும் வேண்டிய 'நான்' என்பது என்ன?

ஆ.ப.ஜெ: நமது உண்மையான அல்லது ஆன்மிக இயல்புக்கு எந்தவிதமான சீரமைப்போ அல்லது மாற்று ஏற்பாடோ தேவைப்படுவதில்லை. இது ஆதியிலிருந்தே பவித்திரமானதாகவும் பூரணமானதாகவும்தான் இருந்து வருகிறது. இருந்தாலும்கூட, *தஜல்லி-இ-ரூஹ்* (tajalli-e-ruh) என்ற பேரொளியின் சிறு கீற்றை தரிசிப்பதற்குக்கூட நாம் போதுமான அளவுக்கு இயைந்தவர்களாக மாறுகிற அக நடவடிக்கையை *தஸ்கியா-இ-நஃப்ஸ்* (tazkiya-e-nafs) நாம் நமக்குள்ளே மேற்கொள்ளத்தான் வேண்டும்.

அ.தி: நமது ஆன்மாவிற்கு இயைந்ததாக இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: ஆம், அப்படியேதான். மேலும் அது விருப்பத்திற்கு உட்பட்டதல்ல. அது மிகவும் அவசியமானது. சொல்லப்போனால் கட்டாயம் கைக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று அது. புகழ் வாய்ந்த சூஃபி கவியான மவுலானா ஜலாலுதீன் ரூமியின் வைர வரிகள் இதோ:

பசி வாட்டுகையில் நாயாக,
கோபமும் தீய குணமும்
கொண்டவனாக இருக்கிறாய்.
உன் வயிறு நிரம்பியதும் சவமாகிவிடுகிறாய்
உணர்வற்று சுவர் போல சரிந்துவிடுகிறாய்

ஒரு நேரம் நாயாக
இன்னொரு நேரம் சவமாக இருக்கும் நீ
சிங்கங்களோடு எப்படி ஓடுவாய்
அல்லது ஞானிகளை எப்படிப் பின்பற்றுவாய்?[11]

அ.தி: அப்படியானால் வாழ்க்கை, ஏராளமான பொறுப்பு களைக் கொண்டுள்ளதா?

ஆ.ப.ஜெ: இந்தப் பொறுப்பு, நிஜமான கடும் உழைப்பும் ஒழுங்கு நெறியும் அடங்கிய ஒன்று.

அ.தி: Wings of fire *(அக்னிச் சிறகுகள்)* புத்தகம், தங்களுடைய வாழ்க்கைக்கு மறுவடிவம் கொடுத்துவிட்டதாக நூற்றுக் கணக்கான வாசகர்கள் எழுதிய கடிதங்களை உங்களிடம் காட்டியிருக்கிறேன். இந்த விஷயம் அப்படி ஓர் அற்புத மான, திருப்தியான உணர்வை அனுபவிக்க வைத்தது. இப்படிப்பட்ட அற்புத அனுபவத்தை எப்படி நாம் புரிந்து கொள்வது? *அக்னிச் சிறகுகளில்* இடம் பெற்றிருந்த ஏதோ ஒன்று, வாசகருக்குள்ளே ஏற்கனவே பொதிந்துள்ள ஏதோ ஒன்றை பொறி கிளப்பிவிட்டிருக்கிறது என்றே கருதுகிறேன்.

ஆ.ப.ஜெ: எண்ணங்கள் என்பவை வெளியிலிருந்து வருவதில்லை. உணர்வுகள் அல்லது புரிதல்களும் அப்படித்தான். அவை ஆன்மாவிலிருந்து வருகின்றன. மறுபடியும் ஆன்மாவுக்கே திரும்பச் செல்கின்றன; எப்போதுமே ஆன்மாவுக்குள்ளேயே உறைந்திருக்கின்றன. *அக்னிச் சிறகுகளில்* எங்கோ ஓரிடத்தில் வெளிப்பட்ட என்னு டைய மூலாதார மையம், பல வாசகர்களின் மூலாதார மையத்தில் எதிரொலித்திருக்கிறது. மனித குலத்தின் ஒருமைத் தன்மையைப் (ஐக்கியத்தை) பற்றி நாம் பேசிக்கொண்டிருந்தோம். இந்த ஒருமைத் தன்மையை இஸ்லாமிய சிந்தனையாளர்கள் ***வஹதத்-இ-இன்சானியத்*** (Wahadat-e-Insaniyat) என்று மிகவும் பொருத்தமான பதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.[12] அதன் அடி ஆதாரத் தில் நாமனைவருமே ஒன்றிணைக்கப்பட்டுள்ளோம்.

அ.தி: அந்த மூலாதாரம், ஆன்மா என்பதை ஒருவரின் நிஜ சுயம் என்று நாம் சொல்லலாமா?

ஆ.ப.ஜெ: விளக்க வரையறைகளுக்கு அப்பாற்பட்டு இதை நீங்கள் கிரகித்துக்கொள்ள வேண்டும். 'ஆன்மா' என்ற வார்த்தைக்கு விளக்கம் கொடுக்க முயலாதீர்கள். வாழ்க்கையின் அற்புதத் தன்மையைப் புரிந்துகொள்ள முனையுங்கள். ஆன்மா என்பது ஒரு குறிப்பிட்ட மையம்; ஒரு சாதனம்; மானுடத்தின் விதவிதமான அனைத்து அனுபவங்களின் உள்ளடக்கம் என்று நான் புரிந்து கொண்டிருக்கிறேன்.

அ.தி: ஆனால், இப்படிப்பட்ட அனுபவங்களுக்கு யார் ஆட்படுகிறார்கள்.

ஆ.ப.ஜெ: மனம் என்பது நம் உடலில் இருக்கிற ஒன்று என நினைத்துக் கொண்டு நம்மை நாமே முட்டாளாக்கிக் கொள்கிறோம். பொதுவாக நமது கருத்தோட்டம் மற்றும் உலகக் கண்ணோட்டம் என்ற சல்லடை மூலம்தான் நம்மை, நமது பிரக்ஞையைக்கூட நாம் பார்க்கிறோம். ஆனால், நிஜம் இதற்கு நேர்மாறாக உள்ளது. மனம் என்பது ஒரு மகா சமுத்திரம். புதிரான, தெளிவாகக் காண முடியாத எத்தனையோ உலகங்கள் அதற்குள்ளே புதைந்து கிடக்கின்றன.

அ.தி: நமது சரீரம், ஒரு கோப்பை... அது, இந்த மகா சமுத்திரத்தில் மிதந்து கொண்டிருக்கிறது. சீக்கிரத்திலேயே அது நிரம்பி, மூழ்கிவிடப் போகிறது.

ஆ.ப.ஜெ: அற்புதமான கருத்து! நிறையப் பேருக்கு பெரும்பாலான சமயங்களில் இதேதான் நிகழ்கிறது. இந்த சல்லடை இல்லாமல் நாமாகவே அனுபவிக்க முடிந்தால், நேரடியாக, உடனடியாக, ஆழமாக நம்மை நாமே அனுபவித்து உணரலாம். சூரிய ஒளியையும், நிலவொளியையும், தென்றலையும் அனுபவித்துக் கொண்டு மிதந்து கொண்டே இருக்க வேண்டும்.

அ.தி: நமது மனங்களின் கைதிகளாகிவிடக் கூடாது என்பது தான் மிகவும் முக்கியம் இல்லையா...?

ஆ.ப.ஜெ: அதையும் தாண்டி ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வது என்பதுதான் முக்கியம். முழுவதும் நீர் நிரம்பி யிருந்தும், விளிம்புகள் மட்டும் வறண்டிருக்கும் ஒரு ஜாடியாக நீங்கள் இருக்கிறீர்கள் என்றால் என்ன பிரயோஜனம்?

அ.தி: அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கையை எப்படி மேற் கொள்வது?

ஆ.ப.ஜெ: இந்த பூமியில், ஒருவேளை இது வரையிலும் அறியப் பட்டுள்ள அண்டத்திலேகூட அறிவை மேம்படுத்திக் கொள்வதிலும் தனது இலக்கை எட்டுகிற முனைப்பிலும் ஈடுபட்டுள்ள ஒரே ஜீவன் மனித ஜீவன் மட்டுமே. அறிதல் என்பது நமது அனுபவத்தில் ஒவ்வொரு கணத்திலும் அடிப்படை குணாம்சமாக அமைந்துள்ளது. நமது மனக் கிளர்ச்சி என்பது மனக் கிளர்ச்சிப் பற்றிய அறிவு; நமது உணர்ச்சி என்பது உணர்ச்சி பற்றிய அறிவு; நாம் கண்ணால் காண்பது என்பதும் அறிவு; நாம் காதால் கேட்பது என்பதும் அறிவு; கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் பற்றிய நமது சிந்தனை என்பதும் அறிவு; நாம் கேள்வி எழுப்பி ஆராய்வது என்பதும் அறிவு. ஏதோ ஒன்று நமக்குத் தெரியவில்லை என்று நாம் உணர்வதும் அறிவுதான்.

அ.தி: தயவு செய்து இதற்கு ஓர் உதாரணம் சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: சாதாரண சிந்தனை நிலையில், யாரோ ஒருவர் உங்களிடம் அவமரியாதையாக நடந்து கொண்டிருக் கிறார் என்பது உங்களுக்குத் தெரிகிறது. அறிந்துணர்தல் மற்றும் புரிதலின் ஒரு மேலான நிலையில், வேதனையில் வலியை அனுபவித்ததும், கோபத்தில் குமுறியதும் உங்க ளுக்குத் தெரிகிறது. உடல் ரீதியிலான பதற்றங்களில் வெடித்துக் கிளம்பும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் உந்துதலும், உங்களுடைய பதில் நடவடிக்கையில் ஓர் அங்கம் என்பதும் உங்களுக்குத் தெரிகிறது. உங்கள் நண்பரிடம் நீங்கள் சொல்ல விரும்புகிற வார்த்தைகளும் உங்களுக்குத் தெரிந்திருக்கின்றன.

அ.தி: இதை நாம் எப்படிச் செய்வது?

ஆ.ப.ஜெ: நமது உள்ளுலகத்தை அதன் அனைத்துவிதமான செழுமையுடனும், சுதந்திரத்துடனும் முற்றிலுமாகக் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அ.தி: பிறகென்ன கிடைக்கும்?

ஆ.ப.ஜெ: அறியாமை அகற்றப்பட்டுவிடும்.

அ.தி: சொல்லப்போனால் உண்மையல்லாத பல விஷயங்களை நாம் தெரிந்து வைத்திருக்கிறோம்.

ஆ.ப.ஜெ: நமது தவறான நம்பிக்கைகளிலிருந்தும், துல்லியமற்ற புரிதல்களிலிருந்தும்கூட உருவாவதுதான் இந்த தவறான அறிவு. அனைத்து எண்ணப் பதிவுகளிலும் அறிதல் சம்பந்தப்பட்டுள்ளது. அனைத்து அனுபவங்களும் அறிவுதான். அனுபவத்தின் ஆதார சுருதியாக அமைந் திருப்பது அறிவுதான்.

அ.தி: அப்படியானால் மானுட மூலாதாரம் என்பது வெறும் பிரக்ஞையின் ஒரு ஜீவனாக மட்டுமல்லாமல் அறிவின் ஒரு ஜீவனாகவும் இருக்கிறது என்று சொல்லலாம் அல்லவா?

ஆ.ப.ஜெ: சரியாகச் சொன்னீர்கள். பாரம்பரியமான ஆன்மிக போதனைகளும் தத்துவங்களும், உணர்ந்து உய்தலை நிஜத்தை நோக்கி விழிப்படைதல் என்று விவரிக்கிறது. பழுதையைப் பாம்பென்று தவறாக நினைத்துப் பயப் படுவது என்ற உதாரணம் அடிக்கடி சொல்லப்படுகிற ஒன்று. சாதாரண அனுபவத்தில்தான் ஒருவரின் பார்வை மறைக்கப்படுகிறது; மதி மயங்குகிறது; உண்மை புலப் படாமல் போய்விடுகிறது. பிறகோ அது ஒரு கயிறுதான் என்ற உண்மையை நோக்கி அவர் விழித்துக் கொள்கிறார்.

அ.தி: அதாவது மாயை உள்ளிட்ட அனைத்து அனுபவங் களும் அறிவில் அடங்கியுள்ளது என்று சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: ''பிரதிபலிக்கிற பிம்பங்களின் ஒரு பகுதியாகவும் அதே சமயத்தில் அவற்றிலிருந்து விலகி தனித்திருக்கிற ஒரு

கண்ணாடி போலத்தான் சர்வ சக்தி வாய்ந்த இறைவன், இந்த சரீரத்தின் ஓர் அங்கமாகவும், இதைவிட்டு விலகி, தனித்தும் இருக்கிறான்''[13] என்று அஷ்டாவக்கிர முனிவர் கூறுகிறார்.

அ.தி: நமது அனுபவத்தில் எதிர்கொள்கிற சில விஷயங்கள் தகவலாக, வேறு சில விஷயங்கள் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளாக, இன்னும் சில விஷயங்கள் உணர்வு களாகவும் மற்றும் சில விஷயங்கள் குறிக்கோள்களாக வும் வெவ்வேறு விதமாக உருவெடுக்கின்றன. நாம் இன்னும் ஆழமாக எப்படித் தொடர்வது? எப்படிப் பகுத்தறிந்து தெரிந்து கொள்வது?

ஆ.ப.ஜெ: அகங்காரத்தால் உந்தப்பட்ட சிந்தனை மற்றும் அனுபவம் அடங்கிய சராசரித்தனத்தில் இருந்துகொண்டு இவற்றைப் பார்த்தால் நமக்கு இப்படித்தான் தோன்றும், ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து, வெளிப்படையாக தனித்து இருக்கிற பல்வேறு கூறுகளை இணைக்கிற மையங்களை அறிந்தவர்களாக நாம் மாறுகிற நிலையில், இந்த இணைப்பு மையம், இருப்பாக, பிரக்ஞையாக மற்றும் அடிப்படை அறிவாக வெளிக் கிளம்புகிறது.

அ.தி: ரமண மகரிஷி இதை அழகாக விளக்கியுள்ளார்:

''உண்மையான இயல்புதான் எல்லையற்ற ஆன்மா. தனது சொந்த இயல்பு பற்றி ஓயாமல் மனம் ஆராய்ந்து கொண்டிருக்கும்போது மனம் என்கிற ஒன்று இருப்பதை அது வெளிப்படுத்திக் காட்டுகிறது. இதுவே அனை வருக்குமான நேர்வழி''[14]

ஆ.ப.ஜெ: சக்தி வாய்ந்த ஒரு மனத்தைப் பொருத்தவரையில், தானே தனக்கு எஜமானாக இருப்பதென்பது மிகவும் சிரமமான விஷயம்.

அ.தி: இது சாத்தியமானது என்று நினைக்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: நமது எண்ணங்கள், சந்தேகமே இல்லாமல் விஷயங்கள் தான். மனதில் அவை உருவாகி, ஒரு குளத்தில் உருவாகும் நீரலைகள், அவை தீண்டுகிற அனைத்திலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவது போல, காலம் மற்றும்

வெளி வழியாகப் பயணிக்கின்றன. சிந்தனைகள்தான் நமது அனுபவத்தை உருவாக்கித் தருகிற சாதனங்கள். நமது எண்ணங்களைக் கொண்டு நாம் உருவாக்கி யிருப்பதுதான் நாம் காண்கிற இந்த உலகம். கணிக்க முடியாத ஆதிகாலத்திலிருந்தே தத்துவ மேதைகளும் சிந்தனையாளர்களும் நிஜத்தின் வெவ்வேறு பரிமாணங் களை ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். நவீன மரபியலும் கூட இந்தத் தருணத்தில் காணப்படுவதின் ஆதியையும் அந்தத்தையும் ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறது.

அ.தி: இருந்தாலும் இது பற்றிய சர்ச்சைகளும் விவாதங்களும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன.

ஆ.ப.ஜெ: சர்ச்சைகளும் விவாதங்களும் அரைகுறை மனதில் நிரம்பி வழிகின்றன. அடிப்படை அறிவு என்பது அபிப் பிராயங்களாலோ அல்லது புரிதல் கண்ணோட்டங் களாலோ பாதிக்கப்படுவதில்லை. முன்கூட்டியே உருவாக்கப்பட்டுள்ள முடிவுகளாலும் இது தீர்மானிக்கப் படுவதில்லை. அடிப்படை அறிவின் வடிவங்களை நாம் ஆராய்கிறபோது தனது சத்தியங்களையும் மாறாத பாணிகளையும் பிரபஞ்சக் கோட்பாடுகளையும் அது வெளிப்படுத்திக் காட்டுகிறது.

அ.தி: சத்தியத்திற்கு நாம் எப்படி விளக்கம் சொல்வது?

ஆ.ப.ஜெ: என்னால் சொல்ல முடிகிற மிகச் சிறந்த விளக்கம் ஜெர்மானிய தத்துவ மேதை ஃபிரெட்ரிக் நீட்சே சொல்லியுள்ள பின்வருகிற விளக்கம்தான்: ''சத்தியம் என்பது துறவியின் ஒழுங்கு, கட்டுப்பாடு; ஞானியின் தாகம்; எளியவர்களின் நம்பிக்கை; பலவீனமானவர் களின் மீட்சி; நேர்மையானவரின் தராதரம்; பணிவான வரின் கோட்பாடு; பக்குவமானவர்களின் சவால்.''[15]

அ.தி: நீங்கள் இந்தக் கருத்தை சூரத் நகரில் 2003, அக்டோபர் 15 ஆம் நாள் அன்று, ஆச்சார்யர் மகா பிரஜனர் முன்னிலையில் வெளியிட்டீர்கள்.[16] 15 ஆன்மிகத் தலைவர்கள் அன்றைய தினம் ஆன்மிகப் பிரகடனம் ஒன்றில் கையெழுத்திட்டு அதை அறிவித்தார்கள்.

ஆ.ப.ஜெ: அது ஒரு மகத்தான நிகழ்வு. பல ஆன்மிக குருமார்கள் சூழ்ந்திருக்க, ஆசீர்வதிக்கப்பட்ட உணர்வை நான் அனுபவித்தேன்.

அ.தி: அன்றைய தினம் உங்களுடைய 72 ஆவது பிறந்த நாளாகவும் அமைந்துவிட்டது.

ஆ.ப.ஜெ: சூரியனை வலம் வந்த 72 சுற்றுகளை நான் பூர்த்தி செய்துவிட்டேன்.

அ.தி: நீங்கள் மிகவும் தன்னடக்கம் நிறைந்தவர்.

ஆ.ப.ஜெ: வேறு என்ன மிஞ்சியிருக்கிறது? மனிதனைப் படைப்பதற்கு இறைவனுக்குக் கோடிக்கணக்கான வருட காலம் ஆனது. மாசு மருவற்ற தன்மையும் தூய்மையும் நிறைந்த தெய்விக அம்சம் மற்றும் வஞ்சக புத்தியும் கொடூரத் தன்மையும் கொண்ட சாத்தானின் அம்சம் என்ற இரண்டின் கலவையாக மனிதனை அவன் படைத்தான். தனது சிருஷ்டிக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து திறன்களையும் பகுத்தறியும் துணையுடன் அவன் பயன்படுத்திக்கொண்டு, தமது வடிவத்தை எட்ட வேண்டுமென்று பணித்தான். இதுதான் மானுட வாழ்க்கையின் குறிக்கோள்.

பெயரையும் உருவத்தையும் தவிர,
மானிட வாழ்க்கையில் மிஞ்சியிருப்பது என்ன?
பசி அலைக்கழிக்கிறது...
அறிவு, சுக்கு நூறாகக் கிழித்தெறிகிறது...
கொஞ்சம் கடவுள்
கொஞ்சம் தேவதை
கொஞ்சம் மிருகமாக
மாறி மாறி வாழும் வாழ்க்கையில்
மகிழ்ச்சி மலர்வதில்லை.

அ.தி: பகுத்தறியும் திறனில் சுவாரஸ்யமான பல்வேறு அம்சங்கள் அடங்கியுள்ளன. The Inner Journey Home என்ற நூலில் ஏ.ஹமீது அலி[17] (புனைப்பெயர் ஏ.எச். அல்மால்) சிந்தனையின் பரிணாமம் பற்றி ஒரு சுவையான விளக்கம் தந்துள்ளார். நான் அதை விவரிக்கலாமா?

ஆ.ப.ஜெ: தொடர்ந்து சொல்லுங்கள்.

அ.தி: எல்லாவிதமான பொருள்களும் இருக்கிற ஓர் இருட்டறையில் நாம் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்வோம். அந்த அறையில் வெளிச்சம் தரக்கூடிய ஒரு சாதனம் இருக்கிறது. வெளிச்சத்தை அதிகமாக்க அல்லது குறைத்துக்கொள்ள ஏதுவான ஒரு 'ஸ்விட்சும்' அந்த சாதனத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. நாம் தெளிவாகக் காணக்கூடிய கண்ணாடிகளை அணிந்திருக்கிறோம். இவற்றில் வெவ்வேறு வண்ணம் கொண்ட பல மறைப்புக் கண்ணாடிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த மறைப்புக் கண்ணாடிகள் ஒவ்வொன்றின் மீதும் வெளிப்படையாகத் தெரிகின்ற வடிவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன.

ஆ.ப.ஜெ: பிறகு...?

அ.தி: அந்த இருட்டறையில் மிகவும் மங்கலாக வெளிச்சம் வருமளவுக்கு அந்த 'ஸ்விட்சைத்' திருப்புகிறோம். அறையில் உள்ள பொருள்கள் மேலோட்டமாக, அரை குறையாக நமக்குத் தெரிகின்றன. இதுதான் அடிப்படை அறிவின் தொடக்க நிலை.

ஆ.ப.ஜெ: உள்ளதை உள்ளபடியே பார்க்கிற நிலை.

அ.தி: ஆமாம்... ஸார்...! ஆனால், நிழல்களோடும், நிழல்களுக்குள்ளாகவும் தென்படுகிற மங்கலான, மேலோட்டமான வடிவத்தை மட்டுமே காண்கிறோம். நாம் காண்பதைத் தவறாகவும் புரிந்துகொள்ளக்கூடும். இன்னமும் நம்மால் நிஜப் பொருள்களையும் அவற்றின் நிழல்களையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க முடியவில்லை. பல அடுக்கு மறைப்புக் கண்ணாடிகள்வேறு திரைபோட்டுள்ளதால் நமது கணிப்பு மேலும் சிக்கலாகி விடுகிறது.

ஆ.ப.ஜெ: மங்கலான வெளிச்சம் காரணமாக இந்த நமது அறிவு அரைகுறையாகி விடுகிறது. மேலும், மறைப்புக் கண்ணாடியின் வண்ணங்கள் மற்றும் பொறிக்கப்பட்டுள்ள வடிவங்கள் காரணமாகவும் அது திசை திருப்பப் படுகிறது.

அ.தி: ஆனால், நாம் பார்க்கிற அனைத்தும் அறிவாகக் கருதப் படுகிறது. அந்த 'ஸ்விட்சை' நாம் மெதுவாக, நிதான மாகத் திருப்பி, வெளிச்சத்தை அதிகப் படுத்தியவாறு, அப்படித் திருப்புகிற ஒவ்வொரு தடவையும் மறைப்புக் கண்ணாடியையும் ஒவ்வொன்றாக அகற்றுவதாக வைத்துக்கொள்வோம். இப்போது நமது அடிப்படை அறிவு சீராக அதிகரித்துக்கொண்டே வந்து, முழுமை யடைந்து மிகவும் துல்லியமானதாக மாறுகிறது. மறைப்புக் கண்ணாடிகளை ஒவ்வொன்றாக அகற்றுகிற ஒவ்வொரு தடவையும் நாம் பார்ப்பது, நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. நமது ஊகங்கள் அல்லது நமது உள்ளுணர்வுகள் காட்டிய துல்லிய நிலவரம். எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை நினைத்து, திகைத்துப் போகிறோம். நமது அறிவு முழுமையடைகிறது; தெளி வடைகிறது. நிறைவானதாகவும், உண்மையானதாகவும் மாறுகிறது.

ஆ.ப.ஜெ: இது மிகவும் பொருத்தமான விளக்கமாகத்தான் இருக் கிறது. மிகவும் குறைந்த வெளிச்சம் மட்டுமே இருக்கிற நிலையில் மறைப்புக் கண்ணாடிகள் வழியாகப் பார்க்கிற நிலவரம் என்பது வழக்கப்படியான, வழிவழியாக வந்த ஒரு அனுபவ நிலவரமாக இருக்கிறது. ஆனால், நான் குறிப்பிட்டிருப்பது அகங்காரத்தின் உந்துதலில் உருவாகும் அனுபவம். நாம் எல்லாவற்றையும் 'நான்' மூலமாக அணுகுவதுதான் இந்த அனுபவத்தில் நீக்கமற நிறைந்துள்ளது.

அ.தி: தான் என்ற உணர்வை உருவாக்குகிற பல்வேறு அகங்கார கட்டமைப்புகளைத்தான் ஹமீது அலி மறைப்புக் கண்ணாடிகள் என்று குறிப்பிடுகிறார். அந்தக் கட்டமைப்பை வலுப்படுத்துகிற ஒருங்கிணைப்பை ஒவ்வொரு மறைப்புக் கண்ணாடியின் மீது பொறிக்கப் பட்டுள்ள வடிவங்கள் என்று விளக்குகிறார்.

ஆ.ப.ஜெ: இந்த விளக்கத்தின் சாரமென்ன?

அ.தி: அந்த இருட்டறை என்பது நமது ஆன்மா என்று இவருடைய நூல் கூறுகிறது. அதில் இருப்பவற்றை அறிந்துகொள்வதற்கு வெளிச்சத்தை அதிகப்படுத்த வேண்டும். மறைப்புக் கண்ணாடிகளும் கண் கண்ணாடி களும் அகற்றப்பட வேண்டும்.

ஆ.ப.ஜெ: அற்புதமான கருத்து.

அ.தி: அறிவு சார்ந்த ஓர் அமைப்பாக ஆன்மா இருக்கிறது என்ற கருத்தை மேலும் ஆழமாக நாம் ஆராய்ந்து பார்ப்போமா?

ஆ.ப.ஜெ: நம்மில் பெரும்பாலோர் நம்மைப் பெருமளவுக்கு அறிவு படைத்தவர்களாக நினைத்துக் கொள்கிறோம். நமது வாழ்க்கையின் பிந்தைய வருடங்களில்தான், அந்த அறிவு எவ்வளவு சொற்பமானதாகவும் அரைகுறையான தாகவும் இருந்தது என்பதையும், எல்லையற்று வியாபித் திருக்கும் ஆற்றல்மய அறிவுக்கு மாறாக அது எப்போதுமே சொற்பமானதாகவும் போதாததாகவும் இருக்கிறது என்பதையும் உணர்கிறோம்.

அ.தி: அறிவு என்பது எல்லையற்றது என்று சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: அறிவு எப்படி எல்லைக்குட்பட்டதாக இருக்க முடியும்? பவித்திரமான அறிவுக்கு இசைந்தவர்களாக நாம் மாறும் போது, சாத்தியமான அனைத்து விதமான அறிவாற்ற லின் அமுதசுரபியான பிரக்ஞையில் உறைந்துள்ள ஆற்றல்மய அறிவின் தொடர்புக்கு நாம் ஆட்படு கிறோம். ஆன்மா, மனம், மூலாதாரம் அல்லது நிஜம் பற்றி குறிப்பாக ஏதாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் நமது கவனத்தை அதை நோக்கி திருப்பினாலே போதும். நாம் வழி காட்டப்படுகிறோம் என்பதைக் காண்போம்.

அ.தி: நான் ஓர் உருவகத்தின் மூலம் அதை விளக்கலாம் அல்லவா...? நான் என்னை ஒரு மரமாக இல்லாமல் ஒரு விதையாகக் கற்பனை செய்து கொள்கிறேன். விதைக் குள்ளே, வீரியத்துடன் பீறிட்டுக்கொண்டிருக்கும் வாழ்க் கையை அனுபவிக்கிறேன். ஒரு விருட்சமாக வளரக்

கூடிய ஆற்றல் இதில் உறைந்துள்ளதை உணர்கிறேன். ஆனாலும் ஒரு மரமாக இருப்பது எப்படி இருக்கும் என்பதையோ, எந்தக் குறிப்பிட்ட வகையைக் சேர்ந்த தாவரம் நான் என்பதையோ நான் அறியேன்.

ஆ.ப.ஜெ: அருமையான விளக்கம். நமது ஆன்மாவை ஆற்றலாக அனுபவித்து அறியும்போது அனுபவத்திற்கான ஆற்ற லாகவும், அனுபவத்தில் சாத்தியப்படுகிற அனைத்திற் கான ஆற்றலாகவும் அல்லாமல் வேறு எதுவாகவும் நாம் இல்லை என்பதை உணர்கிறோம். ஆன்மா என்பது அடிஆழத்தில் பவித்திரமான ஆற்றலாகவும், பிரக்ஞை, அறிவு, வாழ்க்கை, வளர்ச்சி, கற்றல் மற்றும் விசால மடைதல் போன்றவற்றுக்கான ஆற்றலாகவும் சொல்லப் போனால் பவித்திரமான ஆற்றலாக, ஆற்றலின் வடிவமாக இருக்கிறோம்.

அ.தி: வாழ்க்கையை ஓர் ஆற்றலாகப் பார்ப்பது என்பது உன்னதமான ஒரு சிந்தனை.

ஆ.ப.ஜெ: நமது ஒட்டுமொத்த வாழ்க்கை என்பது இந்த ஆற்றலின் மலர்ச்சி அல்லாமல் வேறொன்றும் இல்லை.

அ.தி: இந்த ஆற்றலை நாம் எப்படிப் புரிந்துகொள்வது? அது ஒரு கொடையா? ஒரு குறிப்பிட்ட வரமா?

ஆ.ப.ஜெ: ஆற்றலின் சாதாரண அர்த்தம் அது. ஆனால், இது நமது ஆற்றலின் ஒரு பகுதிதான். கொடைகள், நம்மிடம் உள்ள விசேஷ குணாம்சங்கள் மற்றும் திறன்கள் என்ற அனைத்தின் வெறும் ஒட்டுமொத்த வடிவமல்ல நமது ஆற்றல். நாம் இதுவரை அனுபவித்துள்ள, நாம் இனி அனுபவிக்கப்போகிற, நம்மால் அனுபவிக்க முடிந்த அனைத்துமே நம் ஆற்றல்.

அ.தி: அப்படியென்றால் இதை அளவிட முடியாதா?

ஆ.ப.ஜெ: இறைதூதர் மோசஸுக்கு ***(ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ் ஸலாம்)*** அடுத்து வந்த ஜோஷுவா, மரணப் படுக்கை யில் சோகத்தில் அழுதார். அழுகைக்கான காரணத்தை அவரிடம் மதகுரு கேட்டதற்கு, இறைதூதர் மோசஸ் ***(அலைஹிஸ் ஸலாம்)*** சாதித்ததையெல்லாம் தன்னால்

சாதிக்க முடியாமல் போய்விட்டதே என்பதற்காக அழுத தாகச் சொன்னார். ''இறைதூதர் மோசஸ் என்னென்ன செய்தார் என்று இறைவன் உம்மிடம் கேட்க மாட்டான்; நீங்கள் என்னென்ன செய்தீர்கள் என்றுதான் கேட்பான்'' என ஜோஷுவாவிடம் மதகுரு கூறினார். ஆற்றல் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆற்றலை நடைமுறையில் நிஜமாக்குவதுதான் முக்கியமான ஒன்று.

அ.தி: இது- ஆற்றல் நிஜ வடிவம் பெறுவது- எப்படி நிகழ்கிறது?

ஆ.ப.ஜெ: ஒரு விதை எப்படி மரமாகிறது- என்பதுதான் உங்க ளுடைய கேள்வி போலத் தோன்றுகிறதே?

அ.தி: இல்லை ஸார்... ஒரு மனித வாழ்க்கையில் நிகழ்கிற அக நடவடிக்கை பற்றிக் கேட்கிறேன்.

ஆ.ப.ஜெ: இதை நாம் ஆழமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றால் முதலில் நாம் நமது மூலாதாரம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலையோ அல்லது நிலவரமோ அல்லது எங்கிருந்தோ பரம்பரைச் சொத்தாக அல்லது செல்வமாக வந்தது என்ற எதுவுமே இல்லை என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். அனைத்து நிலைகளும் நிலவரங்களும் வெளிக்கிளம்புகிற வழிமுறையாகவும், ஆதார மையமாகவும் இருப்பது அது. நிஜமாகவே நீங்கள் யார் என்ற உண்மையை நீங்கள் தெரிந்து கொள்கிறபோது நீங்கள் நிச்சயமாக விடுதலையடைய வாய்ப்புள்ளது.

அ.தி: ***அனாத்மன்*** அதாவது 'நான் இல்லை' என்ற புத்த சமயத் தத்துவமும் இதையேதான் சொல்கிறது.

ஆ.ப.ஜெ: சரியாகச் சொன்னீர்கள். முதலில் நாம் இதைப் புரிந்து கொள்வோமா? நமது அனுபவத்தை ஆராய்ந்து பார்க்கும்போது அந்த அனுபவம் மாறாத மற்றும் தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கிற நிலையிலும், மறுவடிவம் பெறுகிற நிலையிலும் இருப்பதை நாம் காண்கிறோம். ஓர் எண்ணத்தை அடுத்து, இன்னொரு எண்ணம் தொடர்கிறது. இன்னொரு உணர்வுக்கான இடத்தை உண்டாக்குவதற்காக மட்டுமே ஓர் உணர்வு

அகன்று போகிறது. உள்ளார்ந்த நுண்ணுணர்வுகளும் இயக்கங்களும் எப்போதுமே தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. அப்படியே நிலை கொண்டிருப்பதே இல்லை.

அ.தி: வெவ்வேறு ரகத்தைச் சேர்ந்த சிறிய, பெரிய என வெவ் வேறு அளவிலான வாகனங்கள் இடைவிடாது பரபரப் பாகப் போய்க் கொண்டிருப்பதால், பெரும்பாலான சமயங்களில் போக்குவரத்து நெரிசலாக இருக்கிற அனைத்து வீதிகளும் சாலைகளும் சந்திக்கிற ஒரு பெரு நகரத்தின் மையப்பகுதி போன்று நமது அகவெளி அமைந்துள்ளது.

ஆ.ப.ஜெ: பிரமாதமான ஒப்பீடு...! தன்னகத்தே கொண்டுள்ள விஷயங்களால் மட்டுமே நமது அகவெளி மும்முர மாகவும் விறுவிறுப்பாகவும் காணப்படுவதில்லை. ஓயாத இயக்கம், மறுவடிவமடைதல், முன்னேற்றம், பரிணாம வளர்ச்சி அல்லது பின்னடைவு, விசால மடைதல் அல்லது சுருங்குதல் என இடைவிடாத சுழற்சி அதில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

அ.தி: ஒரு சக்தி வாய்ந்த துடிதுடிப்பான சூழ்நிலை போன்று தோன்றுகிறது.

ஆ.ப.ஜெ: ஆமாம்... அதில் சந்தேகமே இல்லை. அது மிகவும் துடிதுடிப்பானதுதான். நமது மூலாதாரத்தின் ஒரு முக்கிய அம்சமாக இருப்பது, மாறுதலுக்கு உள்ளாகிற அதன் தன்மைதான். நமது உடலுக்குள்ளும், வாழ்க்கையைச் சுற்றிலும் நீரோட்டமாகப் பாய்ந்து கொண்டிருக்கிற ஒரு திரவநிலை சாதனம், அது.

அ.தி: அது, ஓர் அற்புத உணர்வாக, ஒருவிதமான பேரானந்தப் பரவசமாக இருக்கும்.

ஆ.ப.ஜெ: நமது மூலாதாரத்தில் பெருக்கெடுக்கிற அந்த லயத்தை, நாம் மேற்கொண்டிருக்கிற செயலில், வேலையில், நாம் நேரடியாக அனுபவிக்கும்போது, எந்தக் குறுக்கீடோ அல்லது முட்டுக்கட்டையோ இல்லாமல் தங்குதடையற்ற லயத்தில் நாம் ததும்பிக் கொண்டிருப்பதை உணர்

கிறோம். அப்போது நமது சக்தி ஒன்று திரட்டப்படுகிறது. நமது மனம் ஒருமுகப்படுகிறது... எல்லாமே ஒன்றிணைந்த, தங்குதடையற்ற, இலகுவான, சரளமான பாணியில் இயங்குகின்றன... தொடர்கின்றன. நாம் என்ன செய்து கொண்டிருந்தாலும் அதில் முற்றிலுமாக மூழ்கிவிடுகிறோம்.

அ.தி: இந்தப் பரவச லயத்திற்கு நாம் எப்படி ஆட்படுவது?

ஆ.ப.ஜெ: ஏதோ ஒன்றை, எங்கோ ஓர் இடத்திற்கு அப்புறப் படுத்துவது என்பதல்ல, இந்த லயம். ஏதோ ஒன்றிலிருந்து பெருக்கெடுத்து பொங்கி வழிகிற ஒன்றல்ல, இது. நமது ஆற்றலைச் சீராக வெளிப்படுத்துவதன் மூலம் பரிணமித்து வருகிற பிரக்ஞையின் மலர்ச்சிதான் இந்த லயம்.

(இந்தத் தருணத்தில் மொகல் கார்டனில் மலர்ந்துள்ள ஒரு ரோஜா மலரைப் பறிக்கிறார், கலாம்.)

தனது ஆற்றலில் பொதிந்துள்ள உள்ளார்ந்த இயல்புகளை வெளிப்படுத்தும் விதத்தில் தனது இதழ்களை விரித்து மலர்ச்சியடைகிற ஒரு ரோஜா மலராக நம்மை நம்மால் அனுபவித்து உணர முடியும். தனது ஒவ்வொரு இதழும் ஓர் அனுபவமாகவும், ஒரு புரிதலாகவும் அமைந்துள்ள எண்ணிலடங்காத இதழ்களுடன் மலர்கிற உயிர்ப்பான ஒரு ரோஜாதான் நமது ஆன்மா.

அ.தி: ஆஹா! எப்படிப்பட்ட ஓர் அற்புதமான கருத்து இது! எல்லையற்ற சாத்தியங்களுக்கு இடம் தருகிற வகையில் ஆற்றலின் மலர்ச்சியாக இருக்கிற 'நான்' என்கிற ஒட்டுமொத்த கருத்து வடிவம்தான் எவ்வளவு ஆக்கபூர்வமானது!

ஆ.ப.ஜெ: 'நான்' என்பதற்குப் பதிலாக 'வாழ்க்கை' என்று நாம் சொல்லலாமே... வாழ்க்கை என்பது ஆற்றல்மயமானது. இதனால்தானோ என்னவோ தமது சுய வடிவத்தில் மனிதனைக் *கடவுள்* படைத்தான் என்று சொல்லப் படுகிறது. இந்த பூமியில் வெவ்வேறு விதமான கோடானு கோடி ஆற்றல் வடிவங்களைப் படைத்து மானுடத்தின்

மூலம் இயங்க வைத்து, தமது விருப்பப்படி அந்த ***சூத்திரதாரி*** அவற்றை மலர வைக்கிறான். ***அவனுடைய*** திறமைகளும், திறன்களும் - தையல் தொழில், கட்டு மானம், அறுவடை, தங்க வேலை, வான சாஸ்திரம், மருத்துவம் போன்ற அனைத்துத் தொழில்களும்- மனிதனுக்குள்ளிருந்துதான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அ.தி: தங்களுடைய உலகியல் பிரச்சினைகளால் பின்னப்பட்ட வலைக்குள் எத்தனையோ பேர் சிக்கிக்கொண்டு மீள முடியாமல் தங்களை இழந்துவிடுவதை நம்மால் காண முடியும். நுகர்வோர் கலாசாரத்தால் சூழப்பட்டு வருகிற இந்த உலகத்தில் தொழில்கள் வேலைகளாகவும், திறமைகள் சேவைகளாகவும், வியாபாரம் என்பது பொருளாதார சக்தியாகவும் மாறியுள்ளன.

ஆ.ப.ஜெ: ஒரு சிலந்தியை உருவகமாக வைத்துச் சொல்லப் பட்டுள்ள ஓர் அருமையான கூற்று இதைத் துல்லியமாக விளக்குகிறது. (''தனது நூலிழையை சிலந்தி வெளி விடுவதைப்போல ஒருவர் தனது நிஜ சுயத்தை வெளிப் படுத்தட்டும்''[18] என்று அமெரிக்கக் கலைஞர் வால்ட் விட்மென் எழுதியுள்ளார்) மனம் என்ற சிலந்தி பின்னியுள்ள அறியாமை வழியில் சத்தியம் பற்றிய நமது கருத்தோட்டங்கள் சிக்கிக் கொண்டு சுலபமாக உருக்குலைந்துவிடுகின்றன.

அ.தி: எனக்கு ஜி-பிங்க் (Ji Ping) என்ற சீன நண்பர், ஒருவர் இருக்கிறார்.

ஆ.ப.ஜெ: நான் அவரைச் சந்தித்திருக்கிறேன். Wings of fire *(அக்னிச் சிறகுகள்)* நூலைச் சீன மொழியில் அவர் மொழி பெயர்த்துள்ளார்.

அ.தி: ஆமாம், ஸார்... அவர் என்னிடம் ஒரு கதை பற்றிக் கூறினார்; ''நாம் அனைவருமே மனித ஜீவன்கள். ஏன் சிலர் உயர்ந்தவர்களாகவும் சிலர் தாழ்ந்தவர்களாகவும் இருக்கிறோம்'' என்று மெங்க் த்சூ என்ற ஞானியிடம் கேட்டிருக்கிறார்கள். ''தங்களுடைய உயர்ந்த சுயங் களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் உயர்ந்தவர்

களாகிறார்கள்; தாழ்ந்த சுயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் தாழ்ந்தவர்களாகிறார்கள்'' என்று மெங்க் த்சூ பதிலளித்தார். ''இருந்தாலும் நாமனை வருமே மனித ஜீவன்கள்... ஏன் சிலர் தங்களுடைய உயர்ந்த சுயங்களுக்கும், சிலர் தாழ்ந்த சுயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்?'' என்று அவரிடம் தொடர்ந்து கேட்டிருக்கிறார்கள். ''நமது பார்க்கிற உணர் வும் கேட்கிற உணர்வும் புற உணர்வுகளால் சிதறடிக்கப் படுகிற நிலையில் சிந்தனைக்கு இடமில்லாமல் போய் விடுகிறது. இந்நிலையில் பொருள் சார்ந்த விஷயங்கள், பொருள் சார்ந்த உணர்வுகளுக்குத் தூபம் போட்டு அவற்றைத் திசைதிருப்பி விடுகின்றன'' என்று பதிலளித் தார், மெங்க் த்சூ.[19]

ஆ.ப.ஜெ: அற்புதமான கருத்து! சிந்திப்பதுதான் மனதின் வேலை. நீங்கள் சிந்திக்கிற போது மனம் உங்கள் வசம் இருக்கிறது. சிந்திக்காதபோது, உங்கள் மனதை நீங்கள் நழுவவிட்டுவிடுகிறீர்கள். இறைவன் நமக்கு வழங்கியிருப்பது, இது.

அ.தி: *நஃப்ஸ்* (nafs) பற்றிய கருத்தாக்கத்திற்கு நாம் மறுபடியும் திரும்பி வந்திருக்கிறோம்.

ஆ.ப.ஜெ: ஆம். நீங்கள் சொல்வது சரிதான்.

அ.தி: தயவு செய்து *நஃப்ஸ்* பற்றி மேலும் விளக்கமாகச் சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: *நஃப்ஸ்* என்பது கருத்துக்களால் நிரப்பப்பட்டுள்ள ஒன்று. *நஃப்ஸைக்* கடந்துபோக வேண்டுமென்றால், தெரிந்து கொள்ளாமல் இருப்பது எப்படி என்பதையும், நமது பிஞ்சுப் பருவத்திருந்தே நாம் உருவாக்கிக் கொண்டுள்ள ஊகங்களிலிருந்து தோன்றிய கருத்தாக் கங்களும், நம்பிக்கைகளும், சித்தாந்தங்களும் நமது மனம் முழுவதிலும் நிரம்பி வழிவதை உணர்ந்து கொள்வது எப்படி என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அ.தி: ஆனால் நம் எல்லோரிடமும் இருப்பது அதுதானே- கலாசாரம் என்பதாக நாம் அறிந்திருக்கிற, நாம் பார்க்கிற, பெருவாரியான பகுதிகளை உள்ளடக்கியதாகத் தானே அது- ***நஂஃப்ஸ்*** -இருக்கிறது.

ஆ.ப.ஜெ: கலாசாரங்கள் என்பவை பல வண்ணங்கள் கொண்ட கண்ணாடியைப் போன்றவை. நிறமற்ற ஒளியை நிறம் இருப்பதுபோல தோன்றச் செய்கிற இந்த வண்ணக் கண்ணாடிகள் போன்று மானுட மூலாதாரத்திற்கு கலாசாரங்கள் வண்ணம் பூசுகின்றன. சொல்லப் போனால், ஒரு நபர், படிப்படியாக வசப்படுத்தியுள்ள கலாசார அம்சங்கள்தான் அவருக்குத் தளையாகி விடுகின்றன.

அ.தி: எதற்காக ஒருவர் இந்தத் தளையிலிருந்து விடுபட விரும்ப வேண்டும்? ஏன் இந்தக் கண்ணாடிகளைத் தகர்த்து எறிய வேண்டும்?

ஆ.ப.ஜெ: ஏனென்றால் இவை எந்த சாரமும் இல்லாத வெறுமை யான கண்ணாடிகள். அதே ஒளியின் வெவ்வேறு நிறங் களை மட்டுமே கொண்டு முலாம் பூசப்பட்ட போலியான கண்ணாடிகள். தந்திரமாகக் காட்சி தருபவை இவை. ஏற்றம் இறக்கம் என்பதை எடுத்துக்கொள்ளுங்கள். உயரம் என்பது எங்கிருக்கிறது? தாழ்வானது என்பது எங்கிருக்கிறது?

அ.தி: ஆனால், இப்படி இருக்கிறபோது ஒருவன் நிலைதான் என்ன?

ஆ.ப.ஜெ: பால்வெளி மண்டலத்தை எடுத்துக்கொள்வோம். அதில், சுமார் 20,000 கோடி நட்சத்திரங்கள் இருக்கின்றன. இவற்றில் தனித்துத் தெரிகிற அற்புத உதாரணமாக சூரியன் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. ஓர் ஒளிக் கிரணக் கற்றையை பால்வெளியைச் சுற்றிலும் வலம் வர வைத்தால், அந்தப் பயணம் முடிவடைவதற்கு சுமார் 2,50,000 வருடங்களாகும். நமது சூரியக் குடும்பம், ஒரு சுழல் வடிவக் கை போன்ற தோற்றம் தருகிற, ***ஓரையன் ஆர்ம்*** (Orion Arm) என்று சொல்லப்படுகிற, கையில்

கத்தியும் இடுப்பில் அரைக்கச்சும் உடைய போர்வீரன் போன்ற உருவமுள்ள ஒரு நட்சத்திரக் கூட்டமாக அமைந்துள்ளது. பால்வெளி மண்டலத்தின் மையப் புள்ளியில் இருந்து இறுதி எல்லைக்கு இடைப்பட்ட தூரத்தில், மூன்றில் இரண்டு பங்கு தூரத்தில் நமது சூரியக் குடும்பம் அமைந்துள்ளது. ஒன்பது கிரகங்களில், சூரியனிலிருந்து பூமி, மூன்றாவது கிரகமாக உள்ளது. சொல்லப் போனால் 1000 கெஜ நடை தூரத்தில்[20] உள்ள ஒரு மிளகு போன்று, கண்ணுக்குத் தெரியாததாக உள்ளது.

அ.தி: 1000-கெஜ சூரியக் குடும்பத்தில் பூமி என்பதே ஒரு மிளகாக இருக்கிறது என்றால் ஒரு மனித ஜீவன் என்பது எம்மாத்திரம்?

ஆ.ப.ஜெ: எனவே அடக்கத்துடன் நடந்து கொள்வோம். யாருடைய சேவையும் தேவைப்படுகிற நிராதரவான நிலையில் ஒன்றும் இந்தப் பிரபஞ்சம் இல்லை. பிரபஞ்சத்தைப் படைத்த ஒரு சக்தி இருக்கிறது. மனித உதவியுடனோ அல்லது உதவியில்லாமலோ அந்த சக்தி அதை கவனித்துக் கொள்கிறது. அதற்காக இந்தப் பிரபஞ்சத் திற்கு இருக்கிற உங்களுடைய சேவை தேவையில்லை என்றாகிவிடாது. நீங்கள் அதற்கு சேவையாற்ற வேண்டும்.

அ.தி: ஆனால், ஒரு மனித ஜீவனாகிய என்னால் சிந்திக்க முடிகிறதே... எல்லோருக்கும் தெரிந்துள்ள இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கிற உயிருள்ள எந்த ஜீவனாலும் சிந்திக்க முடியவில்லையே...?

ஆ.ப.ஜெ: நீங்கள் என்ன சிந்திக்கிறீர்கள்? நமது சிந்தனைகள் அனைத்தும் நமது தனிப்பட்ட விஷயங்கள் சம்பந்தப் பட்டவையாக இல்லை...? உங்களுடைய சிந்தனைகளை ஆழமாக அலசிப் பாருங்கள்... ஒன்று அவை ஆசைகளாக அல்லது பயங்களாக இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரிய வரும். 'நான்' மற்றும் 'நானல்ல'

என்ற நேரெதிரான நிலைகளைத் தவிர வேறு என்ன இருக்கிறது?

அ.தி: நீங்கள் சொல்வது உண்மைதான். ஆனால் நாம் உருவாக்குகிறோம்... கண்டுபிடிக்கிறோம்... புதிய கருத்தாக்கங்களுக்கு வடிவம் கொடுக்கிறோமே...

ஆ.ப.ஜெ: மனம், சலனமில்லாமல் நிலையாக இருக்கிறபோது மட்டுமே இது நிகழ்கிறது. எந்த எதிர்பார்ப்பும் இல்லாத போதுதான் சிருஷ்டி மலர்கிறது. ஓர் அனுபவத்தை நீங்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற வரையிலும் ஒன்றை சாதிப்பதற்காக முனைந்து கொண்டிருக்கிற வரையிலும், மனம், சேணத்தில் அமர்ந்து கொள்ள, அகங்காரம், கையில் சாட்டையை எடுத்துக்கொள்கிறது... அவ்வளவுதான்; புதிதாக எதுவுமே நிகழப்போவதில்லை.

அ.தி: நீங்கள் ஒரு புதிய அகப் பார்வையைத் தந்திருக்கிறீர்கள். நான் எப்போதுமே தீர்க்கமாக சிந்திக்கிறவனாக இருப்பதற்கே ஆசை கொண்டுள்ளேன்.

ஆ.ப.ஜெ: கற்பனை வடிவங்களையும் காட்சிகளையும் உருவாக்கிக் காட்டுகிற அசாத்திய ஆற்றல்களைக் கொண்டிருப்பதே சிந்தனை. எல்லாவற்றையுமே உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியும். ஆனால், அவை நிஜமாகாது.

அ.தி: அப்படியானால் ஒருவர் என்னதான் செய்வது?

ஆ.ப.ஜெ: அமைதியாக இருந்துவிட வேண்டியதுதான். மனித குலம் இன்று, விரோத மனப்பான்மை, மற்றவர்களின் வாழ்வை எள்ளி நகையாடிப் புண்படுத்துவது, செல்வங்களைக் கொள்ளையடிப்பது, பயங்கரவாதம், குண்டு வெடிப்புக் கொடூரங்கள் என்ற போதை வெறி கொண்டுள்ளது; அழிவின் விளிம்பில் நின்றுகொண்டுள்ளது.[21]

அ.தி: ஆனால் வலுவான விளக்கங்களும் விவாதங்களும் முன்வைக்கப்படுகின்றன. எல்லாமே நியாயப்படுத்தப் படுகின்றன. ஏதோ ஒன்றை மாற்றியமைத்திருக்கிறோம்

என்று நினைத்துக்கொண்டு, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோமா?

ஆ.ப.ஜெ: ஒரு புதிய மனிதன் பற்றி, ஒரு புதிய யோசனை பற்றி, ஒரு புதிய முறை பற்றி நாம் பேசுகிற போதெல்லாம் தொடர்ந்து எப்போதுமே நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம் என்பதை நாம் தெரிந்துகொள்வது மிகவும் முக்கியம் என்று நான் நினைக்கிறேன். நமது பழைய பிரக்ஞை நிலையிலேயே இருந்துகொண்டு எல்லாவற்றையும் அணுகுகிற வரையிலும், சாரமற்ற விஷயங்களுக்கு வசீகரமான பெயர்களையும் கொடுத்துக் கொண்டு, அதே பழைய வாழ்க்கை முறை யைத்தான் மேற்கொண்டிருப்போம்.

அ.தி: அப்படியானால் ஒரு புதிய பிரக்ஞையை, ஒரு தொலை நோக்கை நாம் கொண்டிருப்பது, முக்கியமல்லவா?

ஆ.ப.ஜெ: இப்போது உங்களுக்கு விஷயம் பிடிபட்டிருக்கிறது. தொலைநோக்கு இல்லாத மக்கள் அழிந்து போய்விடுவார்கள்.[22] முழுமையாகவும் நிறைவாகவும் வாழ வேண்டும் என்றால், எல்லோருக்குமே கனவுகளும் ஓர் இலக்கும் இருக்க வேண்டும்.

அ.தி: எங்கிருந்து இந்தத் தொலைநோக்கு உதயமாகிறது?

ஆ.ப.ஜெ: உள்ளுக்குள்ளிருந்து. *தஜல்லி-இ-ரூஹ்* (tajalli-e-ruh)

அ.தி: அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்?

ஆ.ப.ஜெ: கண்ணாடிப் பிரதிபலிப்புப் போன்ற தூய்மையான, கிரகித்துக்கொள்கிற பாங்கை (*தஸ்கியா-இ-கல்ஃப்* - tazkia-e-qalb) கொண்டிருக்க வேண்டும். புரிதலின் திசை திருப்புகிற தந்திரங்களிலிருந்து விடுபட வேண்டும். (*தக்லியா-இ-சிர்* - taqliyya-e-sirr)

அ.தி: ஆன்மா பிரகாசமடையும்போது என்ன நிகழ்கிறது?

ஆ.ப.ஜெ: தனது உயர்ந்த சுயத்தைப் பக்குவமாக உருவாக்கிக் கொள்கிற ஒருவரின் தாழ்ந்த சுயம் உயர்ந்த நிலையை எட்டுகிறது. பகவத் கீதை வழங்குகிற உறுதி மொழி இது. நீங்கள் பரிபக்குவ நிலையை எட்டிவிட்டீர்கள் என்றால்

முந்தையப் பழைய நிலைக்குத் திரும்புவதில்லை.[23] *(எங்கு சென்றவர்கள் திரும்பி வருவதில்லையோ, எதை ஞாயிறும், திங்களும், தீயும் விளக்குவதில்லையோ அது எனது பரம பதம்- பகவத் கீதை, அத்தியாயம்: 15, சுலோகம்; 6)*

அ.தி: ஆனால், பொதுவாக ஏன் இப்படி நிகழ்வதில்லை?

ஆ.ப.ஜெ: 'நான்' மற்றும் 'நானல்ல' என்ற இரண்டு துருவங்கள் இதைத் தடுத்துவிடுகின்றன. நமது ஆசைகள், விருப்பங்கள் குறித்த சிந்தனைகளிலேயே நாம் மூழ்கிவிடுவதால், சில குறிப்பிட்ட எண்ணங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதில் நாட்டம் கொண்டு, அவற்றை விட்டு விடாமல் இறுக்கமாகப் பற்றிக்கொள்கிறோம்; சுயநல ஆசைகள் கொண்டிருக்கிறோம். புதிய, நிஜமான எதையும் நம்மால் எட்ட முடியாமல் போய்விடுவதற்கு இதுதான் காரணம். நாமே உருவாக்கிக் கொள்கிற சிறையில் நம்மை நாமே அடைத்துக் கொள்கிறோம்.

அ.தி: அதிர்ச்சியாக உள்ளது.

ஆ.ப.ஜெ: நீங்கள் அதிர்ச்சியடைவது எனக்கு சந்தோஷமாக உள்ளது. எல்லா நிலைகளிலும்- குடும்பங்களில், சமுதாயங்களில், சமூக அமைப்புகளில், மற்றும் தேசங்களுக்கிடையேயும்- இது நிகழ்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

அ.தி: இதை எப்படித் தடுத்து நிறுத்துவது?

ஆ.ப.ஜெ: தடுத்து நிறுத்த முடியாது. எதிர்கொண்டு, தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்டு சமாளிக்க வேண்டிய ஒன்று அது.

அ.தி: சிரமங்களைச் சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: நண்பரே, இந்த சாதாரண சமுதாயம் ... அன்றாட வாழ்க்கை இருக்கிறதே... இதுவே அருமையான பயிற்சிக் கூடம். ஆன்மிகக் கண்ணோட்டத்தில் பார்த்தால், அன்றாட வாழ்க்கையில் நாம் எதிர்கொள்கிற பல அதிர்ச்சிகள் வரவேற்கப்பட வேண்டியவைதான்.

காரணம், சுகமான பாதுகாப்பையோ அல்லது அதிகப் படியான சவுகரியங்களையோ நாம் தவிர்த்திருக் கிறோமா என்று நம்மை நாமே பரிசோதித்துப் பார்ப்பதற்கு இவை உதவுகின்றன.

அ.தி: நீங்கள் சொல்வது தனிப்பட்ட ஒருவரைப் பொருத்த வரையில் உள்ள நிலவரம். சமுதாயத்தைப் பொருத்த வரையில் என்ன நிகழ்கிறது?

ஆ.ப.ஜெ: இதே நிலவரம்தான். சுதேசித் தொழிலைப் பொருத்த வரையில் உலக மயமாக்கல் ஒரு அதிர்ச்சிதான். அதை எதிர்கொண்டு, சமாளித்து வெற்றி பெற வேண்டும்.

அ.தி: வெற்றி பெற முடியுமா?

ஆ.ப.ஜெ: ஏன் முடியாது? போட்டியில் வெல்லும் திறன்தான் உழைப்பு ராஜ்ஜியத்தின் மணிமகுடம்.

அ.தி: ***உழைப்பு ராஜ்ஜியத்தின் மணிமகுடம்*** நமது அடுத்த புத்தகத்திற்கான கரு உருவாகிவிட்டது.

ஆ.ப.ஜெ: சரியாகச் சொன்னீர்கள். கடும் உழைப்பின் புனிதத் தன்மையில் எப்போதுமே நம்பிக்கை கொண்டவன், நான். இந்த பிரபஞ்ச சக்தி எப்போதும் தவறாகக் கணிப்பதே இல்லை. அல்லது குற்றங்குறை சொல்வதே இல்லை. நமது சொந்த மதிப்பின்படி அப்படியே நம்மை ஏற்றுக்கொள்கிறது.

அ.தி: செயலில் இறங்கிவிட வேண்டியதுதான், நாம் செய்ய வேண்டிய வேலை.

ஆ.ப.ஜெ: அதில் சந்தேகமே வேண்டாம். ஒரு பழத்தின் ருசியை நீங்கள் அறிய விரும்பினால், அதன் தோலை உரித்து, கடித்து, மென்று உண்ண வேண்டும். வானில் பறக்கும் போது காற்றியக்க விதியை நீங்கள் காற்றிலே பறக்க விட்டு விட்டால், தங்கு தடையே இல்லாமல் கீழே விழ வேண்டியதுதான்.

அ.தி: அனைத்துவிதமான மெய்யறிவும் நேரடி அனுபவத்தில் துளிர்க்கிறது.

ஆ.ப.ஜெ: ஆனால், பண்படுத்தப்பட்ட ஈரப்பதமான மண்ணில் விதைத்தால் மட்டுமே ஒரு விதை தானாக முளை விடுகிறது.

அ.தி: யோசனைகள் விதைக்கப்படும்போது- அறிவுக் கூர்மையை வளர்த்துக் கொள்ளும்போது- மூளையும் இப்படித்தான் செயல்படுகிறது. சுயமாகவே அறிவுக் கூர்மை கொண்டதல்ல மூளை. அது ஒரு கம்ப்யூட்டர் போன்றது. நீங்கள் 'ப்ரோகிராம்' செய்துள்ளபடி தனது அலசல்களை அது மேற்கொள்கிறது. ஆனால், இறுதியில் அந்தத் தேடலின் விளைவு என்பது எப்போதுமே 'ப்ரோ கிராம்' செய்யப்பட்டதற்குள், மனதிற்குள் அடங்கிய தாகத்தான் இருக்கிறது. எனவே, புதிதாக எதையும் அது கண்டுபிடிப்பதே கிடையாது.

அ.தி: ஆனால், புத்திசாலிகள், மந்தமானவர்கள் என வெவ்வேறு தரப்பட்டவர்கள் இருக்கிறார்களே, ஸார்?

ஆ.ப.ஜெ: மற்றவர்களைவிட சிலர், வரம் வாங்கியதுபோல நிறையத் திறமை பெற்றிருப்பவர்கள் அல்லது தகுதி கொண்டவர்கள் என்ற கருத்து தவறானது. சோதனை யில்லாமல் எந்த சாதனையும் இல்லை. வலிமையின் முத்திரையை அனுபவம் பதிக்கிற வரையிலும், வீரர்களைவிட கோழைகள் வலிமையானவர்களாகத் தெரியலாம். நம்பிக்கைக்கும் போலித்தனத்திற்கும் இடையே இருக்கிறது, அனுபவம்.

அ.தி: நேரடி அனுபவத்தைத் தவிர்த்துவிட்டு, கருத்தாக்கங் களையும், ஊகங்களையும் கொண்டு நிர்வாகம் செய்கிற போக்கு பரவலாகக் காணப்படுகிறதே?

ஆ.ப.ஜெ: நேரடி அனுபவம் இல்லாமல் கருத்தாக்கங்களையும் போலித்தனங்களையும் கொண்டு நிர்வகிப்பது என்பது சோம்பேறித்தனத்தில் உழல்கிற, கற்பனை உலகத்தில் சஞ்சரிக்கிற ஒரு பயிற்சி. ஒருங்கிணைந்த ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தை (Integrated Guided Missile Development Programme-IGMDP) நாங்கள் மேற் கொண்டிருந்த போது நமது நாட்டிலேயே உருவாக்கப்

பட்ட நிர்வாகக் கட்டமைப்பு முறையைத்தான், இரண்டு பெரிய திட்டங்களுக்கு நாங்கள் முற்றிலுமாகப் பயன் படுத்திக் கொண்டோம்.

அ.தி: சர்வதேச வல்லுநர்களையும் ஆலோசகர்களையும் வரவழைத்து உதவி பெறுகிற போக்கு நிலவுகிறதே?

ஆ.ப.ஜெ: நம்முடைய மன ஆற்றல்களை நாம் ஒருமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். அங்கு ஏராளமான சிந்தனைகள் நிறைந்துள்ளன. நம்மைவிட உயர்ந்த ஒரு செயலை மேற்கொள்வதற்கு குழப்பத்திலிருந்து முற்றிலுமாக விடுபடுவது மிகவும் முக்கியம்.

அ.தி: ''உங்களுடைய சிந்தனை ஆன்மாவுக்கு வண்ணம் சேர்க்கிறது'' என்று மார்க்கஸ் அரேலியஸ் அந்தோனியஸ்[24] கூறியுள்ளார்.

ஆ.ப.ஜெ: அருமையான கூற்று. ஒரு சோம்பேறி மனிதனை என்னால் மன்னிக்க முடியும். ஆனால், மோசமான, இழிவான நபரை மன்னிக்கவே முடியாது. தூக்கம் வருவதுபோல இருந்தால்[25] நீங்கள் தூங்கலாம். ஆனால், தயவு செய்து, இறைவனின் பாதையில் தூங்குங்கள். அந்த வழியாக இறைவனைத் தேடிச் செல்லும் யாராவது, உங்களுடைய குறட்டையிலிருந்தும் கற்பனை உலகத்தி லிருந்தும் உங்களை எழுப்பிவிடுவார்கள்.

அ.தி: மோசமான, இழிவான தன்மை என்னைப் பாதிக்காமல் என்னை நானே எப்படி வலுப்படுத்திக் கொள்வது அல்லது பாதுகாத்துக் கொள்வது? அனைத்து வெளிப் புறத் தாக்கங்களும் கடந்த காலத்தின் எனது சொந்த அனுபவங்களும்கூட, பதிலடி கொடுக்கும்படியும் பழி வாங்கி வஞ்சம் தீர்த்துக் கொள்ளும்படியும் என்னைத் தூண்டி விடுகின்றனவே?

ஆ.ப.ஜெ: பழிவாங்குவது முட்டாள்தனம். கருத்தாக கவனிக்கும் தன்மையும் ஆழ்ந்த சிந்தனைத் திறனும் கொண்ட உலகியல் சார்ந்த ஒரு சாதாரண மனித ஜீவன் என்ற நிலை யிலேயே நீங்கள் சிறந்த மனிதராகப் பிரகாசிக்க முடியும்.

அ.தி: ஆனால், இதை எப்படிச் செய்வது? நாம் பல பல விஷயங்களைப் பார்க்கிறோம்... பலர் பேசுவதைக் கேட்கிறோம்... பலவற்றை அனுபவத்தில் அறிகிறோம்... நமது மனம் செயல்படுவது இப்படித்தானே?

ஆ.ப.ஜெ: பகுத்துப் பார்ப்பதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மூக்கை மூடிக்கொண்டுவிட்டால், சாணமும், கஸ்தூரியும்[26] ஒரேமாதிரியாகத்தான் தோன்றும். ''கடவுளுக்கு எதிராகக் குற்றம் இழைப்பவனுக்கு வழிபாட்டிற்கு உரிய யாருமே கிடையாது''[27] என்று கன்ஃபியூஷியஸ் கடுமையான வார்த்தைகளில் குறிப்பிட்டுள்ளார்.

அ.தி: ஆனால், பிரக்ஞை என்ற நிலையில் மனதிற்கு எந்த வடிவமோ கட்டமைப்போ இல்லையே? இந்த விஷயம் குறித்து மருத்துவத் துறை நண்பர்கள் எனக்கு விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். மனம் சூன்யமாகத்தான் இருக்கிறது. 'ஹார்ட் டிஸ்கில்' உள்ள சூன்யம்தான் அதன் உதவியுடன் நாம் மேற்கொள்கிற அனைத்து செயல்களிலும் உள்ளடங்கியுள்ளது. ஒரு பாத்திரத்தின் சூன்யம்தான் தண்ணீரை நிரப்பிக் கொண்டுள்ளது. ஒரு புத்தகத்தின் சூன்யம், வாசிக்கப்பட வேண்டியவற்றை உள்ளடக்கியுள்ளது.

ஆ.ப.ஜெ: ஏதாவது ஒரு கட்டத்தில், அடையாளப்படுத்துவதன் மூலமாக சிந்தனை என்பது தனியான ஒரு விஷயமாக வடிவம் பெறுகிறது. சிந்தனைதான் அந்தத் தனியான ஒன்றை - 'நீ' மற்றும் 'நான்' - உருவாக்குகிறது. இது நிகழ்ந்த உடனேயே அந்த 'நான்' தொடர்ந்து தனக்கு வலுவூட்டிக்கொண்டு, தன்னை மேலும் மேலும் உயர்த்திக் கொள்கிறது. அத்துடன் தனக்குப் பாதுகாப்பையும் வழங்கிக்கொண்டு அந்தத் தனி விஷயமாகத் தன்னை நீடித்து நிலைக்க வைத்துக் கொள்கிறது.

அ.தி: இதற்கு வலுவான ஓர் உதாரணம் சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: ராஷ்ட்ரபதி பவனில் உள்ள பூனைகள் மொகல் கார்டனில் இங்குமங்குமாக ஓடித் திரியும். ஆனால், பூத்துக் குலுங்கும் மலர்களுடனும் பொலிவு பொங்கும்

நீரூற்றுகளுடனும் கொள்ளை அழகு கொட்டிக் கிடந்தாலும், அந்தப் பூனைகளுக்கு புறாவில் தெரியும் இரையைத் தவிர வேறு எதுவுமே தென்படுவதில்லை.

அ.தி: அதாவது, ஒட்டுமொத்தமான தொடர் நடவடிக்கைகளும் ஓர் உள்ளார்ந்த அமைப்பை அடிப்படையாகக் கொண் டிருக்கின்றன இல்லையா? தனது புரிதலில் விளைந்த ஒரு பொருளைத்தான் ஒருவர் காண்கிறார் அல்லவா?

ஆ.ப.ஜெ: நினைவில் உள்ளதை அடிப்படையாகக் கொண்டிருக் கும் சிந்தனை பிரக்ஞையை ஒரு தனி விஷயமாக உருவாக்குகிறது. அடுத்து, ஒரு வாழ்க்கை முழுவதும், அந்தப் புரிதலிலிருந்தே தானாகவே அமைத்துக் கொண் டுள்ள எல்லைகளுடனும் வரையறைகளுடனும் இருக்கிற அந்தத் தனி விஷயம் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது.

அ.தி: அதாவது, நமது கருத்தோட்டங்கள், புரிதல்கள் என்பவை நமது சொந்த சிருஷ்டி என்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: கருத்தோட்டங்கள், புரிதல்கள் எப்படி இருப்பை வந்தடைகின்றன என்பதை அவற்றை உருவாக்குகிற அதே மனம், தனக்குள்ளே சென்று காண வேண்டும். மனம் தானாகவே எப்படிப் பிறந்தது என்பதையும் காண வேண்டும்.

அ.தி: நாம் எப்படி இதைச் செய்வது? எனது மனதிற்குள்ளே என்னால் எப்படிப் போக முடியும்?

ஆ.ப.ஜெ: அதற்கு உங்களுடைய நோக்கங்களை நீங்கள் கவனிக்க வேண்டும். நீங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஓர் உளவியல் அம்சம் இடம் பெற்றுள்ளதா இல்லையா என்பதையும் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது, உடலும் உள்ளமும் சார்ந்த ஏதோ ஒன்று எப்படி ஒவ்வொரு செயலுக்கும் உந்து சக்தியாக இருக்கிறது என்பதை நீங்கள் நிச்சயமாகக் கண்டுணர்வீர்கள்.

அ.தி: செயல்படுவதற்கான நமது இறுதியான குறிக்கோள் எங்கிருந்து முளைவிடுகிறது?

ஆ.ப.ஜெ: இது பற்றி நீங்கள் ஆராய்ந்து பார்த்தால், தன் முனைப்பின் ஆற்றலான உடலும் உள்ளமும் சார்ந்த ஒரு தனிப்பட்ட தன்மையை, எந்த பாதிப்புக்கும் ஆளாகாமல் பத்திரமாக வைத்திருக்கிற ஆற்றலிலிருந்து அது வருவதை நீங்கள் காண்பீர்கள்.

அ.தி: தயவு செய்து ஓர் உதாரணத்தின் மூலம் இதை விளக்கும் படி பணிவுடன் வேண்டுகிறேன். அறிவு சார்ந்த என்னுடைய சிந்தனைப் போக்கு எப்போதுமே உரு வகங்களை நாடும் நிலைக்கு என்னை ஆளாக்கி விடுகிறது.

ஆ.ப.ஜெ: உருவகங்கள் மிகவும் முக்கியமானவை. மகாபாரதத்தில் இந்த உலகமே மிகப் பெரிய யுத்த களமாக சித்திரிக்கப் பட்டு உள்ளது. உண்மையான குருக்ஷேத்திரம், உங்களுக் குள்ளேயே இருக்கிறது. மகாபாரதப் போர் இன்னமும் உங்களுக்குள்ளேயே ஆக்ரோஷமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அறியாமை என்பது திருதராஷ்ட்டிரர்; தனியான ஆன்மா என்பது அர்ஜுனன்; உங்கள் இதயத் தில் குடிகொண்டிருப்பவர், சாரதியான ஸ்ரீகிருஷ்ணர்; இந்த சரீரம்தான் ரதம்; ஐம்புலன்களும் ஐந்து குதிரைகள்; மனம், நான் என்ற அகங்காரம்; மனப் பதிவுகள், புலன்கள், அடங்காத ஆசைகள், விருப்பு வெறுப்புகள், மோகம், பொறாமை, பேராசை, தற்பெருமை மற்றும் போலித்தனம் என்பவை உங்களுடைய பயங்கரமான பகைவர்கள்.

அ.தி: Profile of the Perfect Person என்ற புத்தகத்தில் ஜெய ரோ[28] விவேக சூடாமணியிலிருந்து[29] மிகவும் வலுவான ஒரு செய்தியை மேற்கோள் காட்டி குறிப்பிட்டுள்ளார். தனது ஒரு புலனுணர்வின் பலவீனம் காரணமாக அழிவைத் தேடிக்கொள்கிற ஐந்து வேறுபட்ட ஜீவன்கள் பற்றி அதில் விளக்கப்பட்டுள்ளது. பார்வையின் மூலம் ஈர்க்கப்படுகிற விட்டில் பூச்சி, அசைந்தாடும் சுடரொளி யைச் சுற்றிச் சுற்றி வந்து, அந்த நெருப்புக்கு இரையாகி விடுகிறது. ஒலியால் சுண்டி இழுக்கப்படுகிறது, மான். மத்தள ஓசையால் கவரப்பட்டு புதரைவிட்டு வெளி

வருகிறபோது, அதன் உயிரைத் துப்பாக்கி குண்டு குடித்துவிடுகிறது. ருசி பார்க்கிற பலவீனத்தால் தூண்டில் இரையைக் கவ்வி, சிக்கிக்கொள்கிறது, மீன். வாசனையால் கவரப்படுகிற தேனீ, மலருக்குள் நுழைகிறது; மலர் இதழ்கள் மூடிக்கொள்கின்றன; அது மடிந்துவிடுகின்றது. தீண்டல் சுகம் நாடி வருகிற யானை, குழிக்குள் விழுந்து விடுகிறது. இனச் சேர்க்கை மோகத்தில் அமைதி இல்லாமல் அலைபாய்கிற யானை, வெட்டி வைக்கப்பட்டுள்ள குழியில் மாட்டிக் கொள்கிறது. பாவம், மனிதன்...! அவனோ, இந்த ஐந்து புலன் உணர்வுகள் அனைத்தாலும் தூண்டப்பட்டு அலைபாய்கிறான்.

ஆ.ப.ஜெ: மனு ஸ்ம்ருதியும்கூட[30] மனித அறிவை விஞ்சிய புலன் உணர்வுகளின் ஆற்றல் பற்றி சுட்டிக் காட்டியுள்ளது.

அ.தி: புஸ்லரின் மொழிபெயர்ப்பில் இந்த நூலை வாசிக்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ***''பலவான் இந்திரியா கிராமோ வித்வம்சமபி கர்சதி''*** என்ற வார்த்தைகள் சம்ஸ்கிருத மூலத்தில் இடம் பெற்றுள்ளன.

ஆ.ப.ஜெ: மனிதனின் புலன் உணர்வுகளுக்கு விருந்து படைப்பதில் எத்தனை எத்தனையோ தொழில்கள் கொழித்துக் கொண்டிருக்கின்றன.

அ.தி: ஆனால், நாம் என்ன செய்வது?

ஆ.ப.ஜெ: உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உங்கள் தரப்பில் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய முதற்கட்ட நடவடிக்கை, உங்களுடைய புலன் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவது. அடுத்த கட்ட நடவடிக்கை, மனதைக் கட்டுப்படுத்துவது. புலன் உணர்வுகளைக் கட்டுப்படுத்துகிற வல்லமை படைத்த அறிவுத் திறனுடன் படைக்கப்பட்டுள்ள ஒரே ஜீவன், மனித ஜீவன் மட்டுமே. எனவே, உங்களுடைய அறிவுத் திறனை வலுப்படுத்திக் கொள்ளுங்கள்; மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

அ.தி: எப்படி நாம் இதை மேற்கொள்வது? ஒருவரின் தனிப்பட்ட முயற்சி சம்பந்தப்பட்டதா இது?

ஆ.ப.ஜெ: தனிப்பட்ட முறையிலும் சமுதாய அளவிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய முனைப்பு இது. இதற்கு தார்மிக, நன்னெறி சார்ந்த மற்றும் ஆன்மிக அடித்தளத்தில் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை. உலகியல் விஷயங்களில்கூட இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அ.தி: இந்த ஒருங்கிணைந்த நடவடிக்கையை நாம் எப்படி நடைமுறைப்படுத்துவது?

ஆ.ப.ஜெ: பொருளாதார சுபிட்சத்திற்கும் மத ரீதியிலான உயர்வுக்கும் இடையே வலுவான இணைப்புகளையும், சமரசப் போக்குகளையும் நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒன்றுபட்ட உள்ளங்கள் மூலமாக மட்டுமே இது சாத்தியப்படும்.

அ.தி: உள்ளங்களின் ஒற்றுமைக்காக நீங்கள் ஒரு தேடல் பயணத்தை மேற்கொண்டீர்கள்.

ஆ.ப.ஜெ: ஆம். நமது தேசத்திலும் வெளிநாடுகளிலும் உள்ள முக்கியமான சில புனிதத் தலங்களுக்குச் சென்றிருந்தேன். நீங்களும் என்னுடன் தவாங் வந்திருந்தீர்கள்.

அ.தி: ஆமாம் ஸார்...! 2002 அக்டோபரில் நீங்கள் அங்கு இருந்தீர்கள். அருணாச்சலப் பிரதேசத்தின் மூடுபனி சூழ்ந்திருந்த ஒரு மூலையில், மூவாயிரம் மீட்டர் உயரத்தில் தவாங் அமைந்துள்ளது. ஷங்ரி-லா[31] (Shangri-La) அல்லது ஷம்பாலா என்று இந்த இடம் அழைக்கப்படுகிறது. இதற்கு திபெத்திய மொழியில் சூரியனும் சந்திரனும் ஒருவரின் இதயத்தில் குடிகொண்டுள்ளன என்று அர்த்தம். அன்று உங்களுடைய 71-ஆவது பிறந்த நாள்.

ஆ.ப.ஜெ: அங்குள்ள மக்கள், உலகத்தின் மிகப் பழமையான ஒரு புத்த மடாலயத்தின் அன்பு வடிவமான குடையின் கீழ் உண்மையிலேயே மகிழ்ச்சியாகவும் சாந்தமாகவும் வாழ்ந்து கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது.

அ.தி: தவாங்கில் நிலவும் சாந்தமான சூழ்நிலையின் ரகசியம் பற்றி அந்த மடாலயத்தின் தலைமை பிக்குவிடம் கேட்டீர்கள். ''எல்லா இடங்களிலும் ஏன் இந்த சாந்தம் நிலவுவதில்லை?''

ஆ.ப.ஜெ: ஆமாம், அதை நான் கேட்டேன். 'நான்' மற்றும் 'நீ' என்பதெல்லாம் இங்கு இருந்ததில்லை என்று தலைமை பிக்கு என்னிடம் சொன்னார். ''நமது மூவாயிர வருட சரித்திரத்தை நீங்கள் ஆராய்ந்து பார்த்தீர்கள் என்றால் இந்த பூமி எப்போதுமே அமைதியைக் கட்டிக்காத்து வந்திருப்பதைக் காண்பீர்கள். அமைதிக்காக இது சேவை செய்தது; அமைதிக்காகவே வாழ்ந்து வந்தது'' என்று அவர் கூறினார்.

அ.தி: அதைத் தொடர்ந்து நீங்கள், இப்போது அமைதி என்பது அரிதாகிவிட்ட விஷயம் போலத் தோன்றுகிறது என்று சொன்னீர்கள்.

ஆ.ப.ஜெ: அதற்கு அவர், மிகவும் ஆழ்ந்த சிந்தனை பொதிந்திருந்த ஒரு பதிலைத் தந்தார். ''உங்களில் உள்ள 'நான்' அமைதியை நாடுகிறது. ஆனால், அமைதியைப் பெற வேண்டும் என்றால் முதலில் 'நான்' மற்றும் 'எனது' என்பதிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும்'' என்று அவர் கூறினார்.

அ.தி: அன்று இரவு பின்வரும் கவிதையை நீங்கள் எழுதினீர்கள்.

'நான்' 'எனது' அகலட்டும்
அகங்காரம் ஒழியட்டும்
அகங்காரத்தை வேரறுத்தால்
வெறுப்பு மாயமாகும்
வெறுப்பு களைந்தெறியப்பட்டால்
கோபம் பறந்தோடும்
கோபத்தை விரட்டிவிட்டால்
வன்முறையற்ற மனம் உருவாகும்
வன்முறையற்ற மனம்
அமைதி மலரும் பூந்தோட்டம்

ஆ.ப.ஜெ: பல்கேரியாவில் இன்னொரு அற்புதமான அனுபவம் எனக்கு ஏற்பட்டது. 2003 நவம்பர் மாதத்தில் அங்குள்ள, பத்தாவது நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு மடாலயத்திற்குச் சென்றேன். பல்கேரிய கலாசார வழிகாட்டியான இவான் ரிஸ்கி[32] என்ற துறவியின் வாழ்க்கையோடு சம்பந்தப் பட்டிருக்கிற அந்த மடாலயம் இயற்கை எழில் பொங்கும் மலைகளுக்கிடையே நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. நான் சென்றிருந்த சமயத்தில் இலையுதிர் காலத்தின் வண்ண மயமான வனப்பில் அந்த மலைகள் தகதகவென்று ஜொலித்துக் கொண்டிருந்தன.

அ.தி: 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அந்நியப் படை யெடுப்புகளால் இந்த மடாலயம் தீக்கிரையாக்கப் பட்டது. பிறகு, மடாலய வளாகத்தைப் புனர் நிர்மாணம் செய்து, சுற்றிலும் ஒரு பெரிய கோட்டையை எழுப் பினார்கள்.

ஆ.ப.ஜெ: நீங்கள் சொல்வது சரிதான். வழிபாட்டுப் பீடத்திற்குச் சென்ற நான், மறைதிரு.பிஷப் ஜான் அவர்களின் அனுமதி பெற்று, அஸிஸியின் தூய பிரான்ஸிஸ்[33] இயற்றிய பிரார்த்தனை கீதத்தின் பின்வருகிற பகுதியைச் சொல்லி, பிரார்த்தனை செய்தேன்:

"இறைவா... உனது அமைதிக்கான
ஒரு கருவியாக
என்னை ஆக்கிவிடு
வெறுப்பு பரவியுள்ள இடங்களில் எல்லாம்
என்னை அன்பை விதைக்கச் செய்வாயாக"

அ.தி: என்னால் இதைப் புரிந்துகொள்ள முடிகிறது. மிகவும் தீவிரமாகவும், மிகவும் ஆழமாகவும் ஒருவர் நோக்கிக் கொண்டிருக்கிற வாழ்க்கையின் அந்தச் சிறிய பகுதிக் குள்ளேயே ஒட்டுமொத்த மூலாதாரமும் அடங்கி யுள்ளது. நீங்கள் மேற்கொள்கிற வேலையில் பயன் படுகிற, இதோ, இப்போதே, இங்கேயே இருக்கிற ஒன்று, கைதேர்ந்த சிற்பியின் கையில் இருக்கிற ஓர் உளியைப் போன்றது.

ஆ.ப.ஜெ: அந்த உளி உயிரற்றதாக இருந்தாலும்கூட, அதைக் கொண்டு செதுக்கப்படுகிற கல்லுக்கு அது உயிர் கொடுக்கிறது.

அ.தி: மனித குலம் உயிர் வாழ்வதற்கான ஒரு புதிய அர்த்தம் புலப்படுகிறது.

ஆ.ப.ஜெ: நீங்கள் ஓர் உளியாக மாறியதுமே, அந்த சிற்பியின் இதயத்திற்குள், அடிஆழத்தில் வடிவம் பெற்றுக்கொண் டிருக்கும் சிருஷ்டியின் ஓர் அங்கமாக மாறிவிடுகிறீர்கள். இருப்பின் தன்மை என்பதை நான் இப்படித்தான் புரிந்து கொண்டிருக்கிறேன்.

அ.தி: இருப்பின் தன்மையிலிருந்து திசை தவறிப் போய் விடுகிற சந்தர்ப்பங்களிலெல்லாம் அந்த இடைவெளி யைக் குறைப்பதற்கு ஒருவர், முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று ***Dialogues on Reality*** என்ற நூலில் ராபர்ட் பாவெல்[34] குறிப்பிட்டுள்ளார்.

ஆ.ப.ஜெ: மிகவும் சரியான கூற்று. எவ்வளவு அதிக கவனமாக உங்களால் இருக்க முடிகிறதோ அந்த அளவுக்கு உங்க ளுடைய சிந்தனை குறித்து- அதற்குள்ளே வேரோடிப் போயிருக்கிற பழக்கங்கள், மாயைகள், மற்றும் தவறான புரிதல்களையும் சேர்த்து- மிகுந்த விழிப்புடன் இருப் பீர்கள். இப்படி விழிப்புடன் இருக்கிற நேரம் நீடிக்கிற அதே அளவுக்கு உங்களுடைய கவனமின்மையின் இடைவெளி குறைகிறது.

அ.தி: அப்படியானால் நம்மால் நம்ப முடிந்த ஒரே விஷயம், நமது பிரக்ஞை மட்டுமே அல்லவா?

ஆ.ப.ஜெ: நமது பிரக்ஞைதான் ஆதார நிஜம். நீங்கள் மனதால் உணர்ந்தறிகிற அனைத்தும் பிரக்ஞையில் இடம்பெறுவ தோடு மட்டுமல்லாமல் பிரக்ஞையின் அம்சமாகவும் மாறிவிடுகிறது. இதோ இந்த பிரக்ஞையின் மிகவும் மெல்லிய நூலிழையில்தான் இந்த ஒட்டு மொத்த உலகமும் தொங்கிக் கொண்டிருக்கிறது. பிரக்ஞை என்பது இல்லை என்றால் உலகமும் இல்லை.

அ.தி: நான் அதை அனுபவித்திருக்கிறேன். 2004 ஜனவரி ஐந்தாம் தேதியன்று எனக்கு மாரடைப்பு ஏற்பட்டது. பிறகு, அதிலிருந்து மீட்கப்பட்டேன். சில நிமிட நேரம் உணர்வில்லாமல் இருந்தேன். அந்த சமயத்தில் என்னைப் பொறுத்தவரையில் இந்த உலகம் இல்லாமல் போய்விட்டது.

ஆ.ப.ஜெ: உலகம் இருக்க வேண்டும் என்றால், அதை உணர்ந் தறிகிற ஒருவர் கட்டாயமாக இருக்க வேண்டும். உலகம் மற்றும் அதை உணர்கிறவர் என்ற இரண்டுமே ஒரே தொடர்கட்ட நிகழ்வுகளில் அங்கம் வகிப்பவை. உணர்ந்தறிகிற திறன் என்பது இல்லவே இல்லை என்று ஆகிவிட்டால், உலகமே இருக்காது. பிறகு யாருக்காக இந்த உலகம் காட்சி தரப்போகிறது.?

அ.தி: எனது நிஜம் என்று நான் சொல்வது, ஒரு கனவு என்பதைவிட வேறு எதுவும் இல்லை என்பது இப்போது எனக்குத் தெரிகிறது.

ஆ.ப.ஜெ: இந்தக் கணத்தில் என்னுடன் இணைந்து நீங்கள் விழிப்படைந்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அ.தி: நான் ஒன்றுமே இல்லை என்ற முடிவுக்கு நான் வந்து விடுகிறேன் என்றால்...?

ஆ.ப.ஜெ: அது முக்கியமல்ல. 'நான்' என்று நீங்கள் சொல்கிற அது, ஒன்றுமே இல்லாத ஒன்று தான்.

அ.தி: அப்படியானால், வேறு என்னதான் எஞ்சியுள்ளது?

ஆ.ப.ஜெ: சிக்கலான ஒரு உடல்-மனம் இணைப்பு மூலம் மனிதத்தின் எல்லையற்ற ஆற்றல் மலர்ச்சியடைதல்.

அ.தி: அந்த மலர்ச்சி, நிகழவில்லை என்றால்...?

ஆ.ப.ஜெ: இயற்கை எப்போதுமே அவசரகதியில் செயல்படுவ தில்லை. கோடானு கோடி வருடங்கள் என்ற அடிப் படையில் அது இயங்குகிறது. 80 அல்லது 100 வருட மனித வாழ்க்கை என்பது இயற்கையின் வேலைத் திட்டத்தில் அணுவைவிட மிகவும் குறைந்தது. ஒரு மனிதன், விழிப்படையாத நிலையிலேயே அல்லது

குறட்டைத் தூக்கத்திலேயே ஆயுள் காலத்தை கழித்து விட்டால், அது வீணடிக்கப்பட்ட வாழ்க்கையாகி விடுகிறது.

அ.தி: அதிகமதிகமான ஆற்றலைப் பரிணமிக்கச் செய்கிற அளவுக்கு நமது அனுபவம் விசாலமடைகிறது; ஆழமாகிறது என்று நான் புரிந்துகொண்டால் அது சரியானதா?

ஆ.ப.ஜெ: நீங்கள் சரியாகத்தான் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். இந்த உணர்தல், வசப்பட்டதுமே நாம் யார் என்ற உணர்வு விசாலமடைகிறது. அத்துடன் நம்மால் என்ன செய்ய முடியும் என்பதும் விழுதுவிட்டுப் பெருகுகிறது. ஒரு விதை துளிர்விட்டு வளர்ந்து மேலும் பல விதைகள் உருவாகக் காரணமாகிறது. அதோடு மட்டுமின்றி அந்த விதை தானும் வளர்ந்து மரமாகிறது.

அ.தி: நமது வாழ்வு பற்றி நாம் சிந்திக்கிறபோது அதில் அடங்கியுள்ள விஷயங்களின் அடிப்படையில்தான் சிந்திக்கிறோம். நமது சந்தர்ப்ப சூழ்நிலை, அலுவல்கள், உறவுகள், செயல்பாடுகள், திட்டங்கள், ஆர்வங்கள், முனைப்புகள், சமூக மற்றும் வேலைக் கட்டமைப்புகள் போன்ற பல விஷயங்கள் என்பவைதான் நமது வாழ்க்கை. நமது நேரத்தை எப்படி செலவிடுவது? நாம் செய்ய வேண்டியது என்னென்ன? எதெதற்கு நாம் மதிப்பளிக்க முனைய வேண்டும்...? நமது வெளிப்பாடு மற்றும் ஆக்கத்திறன் என்பன பற்றியதும் உடல்ரீதியிலான மற்றும் மனித முனைப்புகள் தொடங்குகிற இடம் பற்றியதும்தான் வாழ்க்கை என்று நாம் நினைக்கிறோம்.

ஆ.ப.ஜெ: இங்குதான் குழப்பம் வருகிறது. நீங்கள் குறிப்பிட்டிருப்பவை வாழ்க்கையில் அடங்கியிருப்பவை அல்ல. சொல்லப்போனால் இவற்றை ஒட்டித்தான் வாழ்க்கை சுழல்கிறது.

அ.தி: அப்படியானால், வாழ்க்கை என்பது என்ன?

ஆ.ப.ஜெ: வாழ்க்கையிலிருந்து நாம் எதை அனுபவித்து அறிகிறோமோ அதுதான் வாழ்க்கை. நான் அதை மரபு வழி தொடர்கட்ட நிகழ்வு என்பேன்.

அ.தி: மரபு வழி தொடர்கட்ட நிகழ்வு என்பது என்ன?

ஆ.ப.ஜெ: ஆ.ப.ஜெ அப்துல் கலாம் என்ற எனது பெயரைப் பாருங்கள். இதில் ஆ, ப, ஜெ என்ற எழுத்துகள் எனது வம்சாவளித் தொடர் கட்டங்களைக் குறிக்கின்றன. ஆவுல், எனது கொள்ளுத் தாத்தா; பக்கீர், எனது தாத்தா, ஜெயினுலாபுதீன், என் அப்பா. நான் இயல்பான ஒரு வம்சாவளியின் ஒரு தொடர்ச்சி.

அ.தி: பரம்பரை உடைமை என்பது என்ன?

ஆ.ப.ஜெ: நம் எல்லோருக்குமே உள்ளார்ந்த ஆற்றல்களும், பொருள்கள் மீதான ஈர்ப்பும் வெறுப்பும் உண்டு. பிறக்கும்போது சிலவற்றுடன் பிறக்கிறோம். ஆயுள் காலத்தில் மேலும் பலவற்றை வளர்த்துக் கொள்கிறோம். மிகவும் சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் அதே சமயத்தில் ஏழையாகவும் இருக்கிறவரின் வாழ்க்கை, துயரமாக அல்லது நோயாளியாக இருக்கிற பெரும் பணக்காரரின் வாழ்க்கையைவிட எப்போதுமே மேன்மையானது. ஏழையின் வாழ்க்கை உயர்த்தப்பட வேண்டும் என்பதும் முக்கியம்தான். அதுதான் ஆட்சி நடத்தும் அரசின் லட்சியம்.

அ.தி: ''ஒரு மன்னரின் அரண்மனையில் நல்லிணக்கம் நிறைந் திருக்காவிட்டால் அது ஒரு குடியானவரின் மாட்டுத் தொழுவமாக மாறிவிடுகிறது. ஒரு குடியானவரின் குடிசையில் நிலவுகிற நல்லிணக்கம், செல்வச் சீமானின் மாட மாளிகையில் நிலவாவிட்டால், இதைவிட அந்தக் குடிசையில்தான் பெருமளவுக்கு மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும்'' என்று The Law of Success என்ற நூலில் நெப்போலியன் ஹில்[35] கூறுகிறார்.

ஆ.ப.ஜெ: அருமை...

அ.தி: ஸார்... வெளி உலகம் தொடர்பானவை நம்மை ஒடுக்கிவிடுகிறது என்றால் அந்தச் சூழ்நிலைகளை நாம் எவ்வாறு சமாளிப்பது?

ஆ.ப.ஜெ: உங்களுடைய மனதில் உன்னதமாக ஓர் லட்சியத்தை, மிகவும் புனிதமான ஒரு குறிக்கோளை விதையுங்கள்.

வெளிஉலகம் சம்பந்தப்பட்டவை நமக்கு உயிர் கொடுப்பதில்லை. நாம்தான் அதற்கு உயிர் கொடுக்கிறோம். இந்திய ஜனாதிபதி என்ற பதவி கலாமுக்கு உயிர் கொடுக்கவில்லை. கலாம் அடியெடுத்து வைக்கும் போது இந்திய ஜனாதிபதி நடந்து போகிறார் என்று சொல்கிறார்கள்.

அ.தி: இந்த அனுபவ அம்சம் தொடர்பாக மேலும் கொஞ்சம் சொல்ல முடியுமா?

ஆ.ப.ஜெ: நாம் நம்முடன் தொடர்பில் இருக்கும்போது, நம்முடனேயே முரண்பட்டு, மோதிக் கொள்ளாமல், நம்மையே அடக்கி ஒடுக்கி வைக்காமல் அல்லது உள்ளுக்குள்ளே பிளவுபடாமல் இருக்கும்போது, நமது மூலாதாரத்துடன் நமக்கு அதிகத் தொடர்பு ஏற்படுகிறது. இந்தத் தொடர்பு நமது ஆற்றலைப் பரிணமிக்க வைக்கிறது. வாழ்க்கையில் உள்ளார்ந்து இருக்கிற அனுபவம் இது. இந்த நிஜ வடிவத்தோடு இணைந்து போகமுடியாத தன்மை அல்லது பின்தங்கியிருக்கிற ஓர் உணர்வு, காலத்தை அல்லது வாழ்க்கையைக்கூட வீணடிப்பதற்குச் சமம்.

அ.தி: இந்த உலகத்தில் ஆக்கபூர்வமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்துபவனாக நான் எப்படி இருப்பது?

ஆ.ப.ஜெ: இந்த உலகத்தில் ஆக்கபூர்வமான ஒரு தாக்கத்தை நீங்கள் ஏற்படுத்துபவராக விரும்பினால்,[36] முதலில் உங்களுடைய வாழ்க்கையை நீங்கள் ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். உங்களுடைய நடத்தை, நீங்கள் நடந்துகொள்கிற பாங்கு, தண்ணீரைக் கடந்துசெல்கிற நீரலை போல மற்றவர்களிடம் தாக்கத்தை உண்டாக்குகிறது. உங்களுடைய வாழ்க்கை சீராக இருந்தால், உங்களுடைய குடும்பத்தில் உங்களுடைய தாக்கத்தை உண்டாக்குகிறீர்கள்... உங்களுடைய குடும்பம் சீராக இருந்தால், அது சமுதாயத்தின் மீது அதன் தாக்கத்தை உண்டாக்குகிறது. உங்களுடைய சமுதாயம் சீராக இருந்தால், அதன் தாக்கம் தேசத்தில் பிரதிபலிக்கிறது. உங்களுடைய தேசம் சீராக இருந்தால், அது இந்த உலகத்தின் மீது அந்தத்

தாக்கத்தை உண்டாக்குகிறது. இதுதான் மானிட வாழ்வின் உண்மையான இயல்பு.

அ.தி: இந்தத் தாக்கங்கள் மோசமானவை என்றால்...?

ஆ.ப.ஜெ: வாழ்க்கையிடம் நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதையேதான் அது நமக்கு பிரதிபலித்துக் காட்டுகிறது. நேசம், சந்தோஷம், அமைதி, பொறுமை, அன்பு, நல்லுணர்வு, நம்பிக்கை, கனிவு மற்றும் சுயகட்டுப்பாடு என்பவைதான் நமது உலகத்திற்கு நாம் வழங்கக்கூடிய மேலான கொடைகள், அடக்கமான, உண்மையான ஒரு தனிநபரின் இந்தக் கொடைகள் ஆன்மாவிலிருந்து நேரடியாக வருபவை. அறிவுக்கூர்மை என்பது தானாகவே எதையும் செய்வதில்லை. உங்களால் முடிந்த அளவுக்கு அனைத்து நல்ல விஷயங்களையும் பார்த்து அவற்றைப் போற்றிப் புகழுங்கள்.

அ.தி: புத்த சமய நெறி, மனித ஜீவனின் தனித்துவம் நிறைந்த நிலையை, அனைத்து சாத்தியக்கூறுகளின் பவித்திரமான நிலையில் நிறுத்தி, மனித வாழ்க்கையை அடையாளம் காண்கிறது. மறுபிறவி பற்றிய அதன் போதனையில், வாழ்க்கையின் வெவ்வேறு வடிவங்களில் ஒருவர் பிறவியெடுக்க முடியும் என்ற சிந்தனை அடி நாதமாக அமைந்துள்ளது. உணர்வுள்ள ஜீவன்களை, இறை நேசர்கள், பொறாமைக் குணம் கொண்ட இறை அன்பர்கள், மனித ஜீவன்கள், மிருகங்கள், ஆவிகள், மற்றும் நரகத்தில் உழல்பவை என ஆறு பிரிவுகளாக புத்த சமயத் தத்துவம் வகைப்படுத்தியுள்ளது.[37] ஆனாலும்கூட மற்ற எல்லாவற்றையும் விட, அந்தத் தெய்வங்களைக் காட்டிலும்கூட எவ்வளவோ மகத்தானது மனித வாழ்க்கைதான் என்று அது நம்புகிறது. முடிந்த அளவுக்கு முழுமையாக, முற்றிலுமாகக் கற்றுக் கொள்வதற்கு வழி வகுக்கும் வாழ்க்கையின் ஒரே வடிவம் இது மட்டுமே என்பதுதான் இதற்குக் காரணம். உங்களுடைய இறுதியான பொய்மை 'நீ' என்பது நல்லறிவுகளையும் வெகுமதிகளையும் நீங்கள் பெறுவதற்காக உங்களுடைய முதன்மையான நிஜத்திற்கு வந்து விடுகிறது. ஆனால் இந்த நிஜமான 'நீ'

உங்களுடைய மற்றொரு பொய்மை 'நீ' யில் புதைந்து போய் விடுகிறது.

ஆ.ப.ஜெ: தங்களுடைய நிஜமான சுயங்களை எதிர்கொண்டு சமாளிப்பதற்கு மக்கள் பயப்படுவதுதான், பொய்யான சுயங்களை உருவாக்கிக்கொண்டு அவற்றை விடாப்பிடியாக அவர்கள் பற்றிக் கொண்டிருப்பதற்கான ஒரு காரணமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். தடைகளையும் தோல்வியையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதுதான் உயர்வுக்கான ஆதார சக்தி.

அ.தி: ''கடவுளை நீ அறிய விரும்பினால், உன்னை நீயே அறிந்துகொள்ள வேண்டும். தனது தனிப்பட்ட தன்மை என்ற மதிமயக்கத்தில் இருக்கிறபோது அற்ப மனிதன் எப்படித் தெரிந்து கொள்வான்'' என்கிறார், சூஃபி ஞானி, ஹஸ்ரத் இனாயத்கான்[38] ஒவ்வொரு செயலும் இன்னொன்றின் எதிரொலியாக அமைந்திருக்கிற இந்த உலகத்தை ஒரு கவிகை மாடமாகக் காண்கிறார், இவர்.

ஆ.ப.ஜெ: உள்முக அலசல் மிகவும் முக்கியமானது. சிறு சிறு வாய்ப்புப் பொறிகளைக் கிளறி விடுவதன் மூலம் உங்களின் பெரும் பகுதியை, சாதனை அக்னிப் பிழம் பாகத் தகிக்க வையுங்கள்.

அ.தி: உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தி உங்களை தனது கட்டுக்குள் வைத்திருக்கிற ஆசையின் அதே அளவுக்கு நீங்கள் குறுகிப்போய் விடுகிறீர்கள். உங்களுடைய லட்சிய வேட்கை உங்களை ஆட்கொண்டிருக்கிற அதே அளவுக்கு நீங்கள் உயர்ந்த நிலையை எட்டுவீர்கள்'' என்று தனது As A Man Thinketh என்ற நூலில் ஜேம்ஸ் ஆலன்[39] குறிப்பிடுகிறார்.

ஆ.ப.ஜெ: மனிதனுக்குள் நல்லதும் கெட்டதும் கலந்தே இருக் கின்றன. கடவுள் பாதி... மிருகம் பாதி... என்ற கலவை தான் மனிதன். இதைப் பகுத்து அறிவதுதான் நிஜமான சவால்.

அ.தி: நாம் எப்படிப் பகுத்தறிவது?

ஆ.ப.ஜெ: நற்குணங்கள் என்று நாம் சொல்லுகிற துணிவு, தெளிவு, மாசு மருவற்ற தன்மை, சாந்தம், வாய்மை, நிலை தடுமாறாமை, பற்றற்ற தன்மை என்பவையெல்லாம் பகுத்தறிவதற்கான சாதனங்கள்.

அ.தி: பகுத்து அறிந்து கொண்டுவிட்டால், மூலாதாரத்தை எப்படி வசப்படுத்துவது?

ஆ.ப.ஜெ: உங்களிடம் அது எப்போதுமே இருக்கிறது. நம் எல்லோரிடமும் நமது மூலாதாரம் அதன் அத்தனை அம்சங்களுடனும், பரிமாணங்களுடனும், நமது மனித நேயம் என்ற ஆற்றலின் அங்கமாக நம்முடன்தான் இருக்கிறது. நாம் அதைத் தேடாமல் இருப்பதுதான் பிரச்சினை. உள்ளார்ந்த ஆற்றலை உணரத் தவறியது தான் மானுடத்தின் துயர நிலை.

அ.தி: இறுதியான சத்தியத்தின் வடிவமான அத்தனை முழுமை யான மூலாதாரத்தை தன்னுடன் ஒருவர் ஐக்கியப் படுத்திக்கொள்ள முடியுமா?

ஆ.ப.ஜெ: எப்போதுமே அது சாத்தியமானதுதான். மனித வாழ்வின் மூலம், மூலாதாரம் பரிணமித்து, வெளிப்பட்டிருக்கிற நிகழ்வுகள் வரலாறு முழுவதும் நிறைந்துள்ளன.

அ.தி: இப்படிப்பட்ட சிலரின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும் என்று நினைக் கிறேன்.

ஆ.ப.ஜெ: எஸ். ராதாகிருஷ்ணன்[40] எழுதியுள்ள Living with Purpose என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதை உங்களுக்குக் காட்டுகிறேன்.

(தனது படிக்கும் அறைக்குச் சென்ற கலாம், அந்தப் புத்தகத்திலிருந்து வாசித்துக் காட்டுகிறார்)

"சொத்து, செல்வம் படைத்தவர்களோ, பெயர், புகழை ஈட்டியவர்களோ உண்மையிலேயே உயர்ந்தவர்கள் அல்லர். ஆனால், தங்களுக்குள் உறைந்துள்ள சத்தியத் திற்குச் சான்றாக வாழ்ந்து கொண்டு, எதை இழக்க வேண்டி வந்தாலும் சத்தியத்தை விட்டுக்கொடுக்காமல்

உறுதியாக இருப்பவர்கள்தான் உயர்ந்தவர்கள். தங்களுக்கு சரி என்று தோன்றுவதைச் செயல்படுத்துவதில் தீர்மானமாக இருப்பவர்கள், இவர்கள். இவர்களின் உடல்களுக்கு நாம் தண்டனை கொடுக்கலாம், வசதிகளுக்குத் தடை விதிக்கலாம் ஆனால், இவர்களின் ஆன்மாக்களை நம்மால் விலை கொடுத்து வாங்க முடியாது. இவர்களின் உத்வேகத்தை உருக்குலைக்க முடியாது. இப்படிப்பட்ட ஒடுக்கப்பட முடியாத, அடக்கப்பட முடியாத உத்வேகத்தை சிறிதளவு கொண்டிருந்தாலும்கூட அவர்கள் நம் போற்றுதலுக்கு உரியவர்கள்''

அ.தி: ஒடுக்கப்பட முடியாத உத்வேகம் என்பதுதான் இங்கு முக்கியமான கருத்து அல்லவா?

ஆ.ப.ஜெ: மனிதர்களின் சாதாரண நிலவரம் என்பது பல குணாம்சங்களின் ஒரு கலவைதான். எல்லாவிதமான இழிவான, மோசமான குணங்களில்தான் மனித இனம் கைதேர்ந்து இருப்பது போலத் தோன்றுகிறது.

அ.தி: பாதிப்புக்கு இடம் கொடுக்கிற ஓர் ஆன்மாவின் அறிகுறிகள் என்ன? ''உணர்வற்ற நிலை என்பது கடந்த காலங்களின் வெறும் பாதுகாப்பாளராக மட்டுமே இருக்கவில்லை; எதிர்கால மனோபாவ நிலவரங்கள், மற்றும் யோசனைகளின் மூலவித்துக்கள் நிறைந்தவையாகவும் இருக்கிறது'' என்று தனது Man and His Symbols என்ற நூலில் கார்ல் ஜங்[41] கூறியுள்ளார்.

ஆ.ப.ஜெ: மனித ஜீவனின் மிருக ஆற்றலை நாம் அனுபவிக்கிற போது, ஆசைகள், அடக்க முடியாத வேட்கைகள், கட்டுப்படுத்த முடியாத உந்துதல்கள், இந்த உலகம் தந்துள்ள அனைத்தின் மீதும் மோகம் என்ற அத்தனையும் நமக்குள்ளே பெருக்கெடுக்கின்றன. உடனே மகிழ்ச்சியளிப்பவற்றின் மீது ஆசை கொள்கிறோம். ஆனால், இப்படிப்பட்ட மகிழ்ச்சிக்காக ஏங்குகிற தணியாத தாகத்திற்கு எந்த அடிப்படையும் இல்லை; முடிவும் இல்லை. மேலும் மேலும்... இன்னும் இன்னும்...

என்று நமது அடங்காத ஆசையைப் பெருக்கிக் கொண்டே போகிறோம்.

அ.தி: மனித ஜீவனின் மிருகத் தன்மையிலிருந்து எப்படி விடுபடுவது?

ஆ.ப.ஜெ: அதிலிருந்து எப்படி உங்களால் விடுபட முடியும்? ஆன்மா என்பது பிரிக்க முடியாதது. ஆன்மாவின் ஆதார இயல்பு, அதன் மிருக ஆற்றலுடன் முழுமையாக ஒன்றிணைந்து, இயைந்துவிடும் போது ஒரு மனித ஜீவன் பக்குவமடைகிறது; முழுமையடைகிறது- அதாவது 'முழுமையான மனிதனாக'- என்று ஞானம் நிறைந்த, உயர்ந்த நமது பாரம்பரியம் அறிந்துள்ளது.

அ.தி: அதாவது, முழுமையாகப் பரிணமித்துவிட்ட மனித ஜீவன், தனது மிருக இச்சைகளைத் தக்க வைத்துக் கொள்வதோடு அவற்றைத் தன்னலமற்ற, பரிவான ஒரு வடிவமாக ஒருங்கிணைத்துக் கொள்கிறது.

ஆ.ப.ஜெ: இந்த முழு விஷயத்தையும் ஜலாலுதீன் ரூமி அவ்வளவு அழகாக விவரிக்கிறார்:

''மோகத்தீயில் மூழ்கிக்கொண்டு அதை அணைக்க முடியாது
அனுபவிக்காமல் துறந்துவிட்டால்
அது அணைந்துவிடும்.
விறகுக் கட்டைகளைப் போடும் வரையிலும்
தீ எரிகிறது
விறகை எடுத்துவிட்டால்
தீ அணைகிறது
இறைவன் தண்ணீர் கொண்டு வருகிறான்.''[42]

அ.தி: ஆசைகள் தூண்டிவிட்ட நோக்கங்களால், மக்கள் தடுமாறி, திசை தவறிப்போய் மாயையில் மூழ்கு கிறார்கள். இதனால் முன்பிருந்ததைவிட நிஜத்தை விட்டு மேலும் விலகிச் சென்று விடுகிறார்கள்.

ஆ.ப.ஜெ: நிஜத்திலிருந்து உங்களைத் துண்டித்துக்கொள்ளும் போது உங்களைச் சொர்க்கத்திற்குக் கொண்டு செல்வ தற்காக வழங்கப்பட்டிருந்த சிறகுகளை வெட்டி

எறிந்துவிடுகிறீர்கள். ஒரு மாயையால் சீரழிந்து, முடமாகி இந்த உலகத்தை விட்டுப் போய்விடுகிறீர்கள்.

அ.தி: வாழ்க்கையை, அதன் பரந்துபட்ட நோக்கில்- சரியான வற்றைத் தெரிவு செய்வதின் அடிப்படையில்- அணுகுகிற சிந்தனை இது.

ஆ.ப.ஜெ: ஆம். நீங்கள் சொல்வது சரிதான். தெரிவு செய்கிற நமது சக்தியைத் தட்டி எழுப்புவதற்காகத்தான், ஆசையின் அடிப்படையிலான நோக்கங்களை வாழ்க்கை நம் முன்னே வைக்கிறது. நமது மூலாதாரம் என்பது கண்ணுக்குத் தெரியாத வலிமையாக நமக்குள்ளே உறைந்துள்ளது. ஆசையில், இரண்டு எதிரெதிரான நோக்கங்களை அது அடையாளம் காண்கிறபோது மேலும் அது வலுவடைகிறது.

அ.தி: பிதாகரஸ்[43] போல நீங்கள் பேசுகிறீர்கள். ''தன்னைத் தானே வெல்ல முடியாத யாரும் விடுதலை பெற்றவர் அல்லர்'' என்று அவர் சொல்லியுள்ளார்.

ஆ.ப.ஜெ: ஒருவேளை நான் பிதாகரஸின் கூற்றை எதிரொலித் திருக்கலாம். நீங்கள் சொல்வது சரிதான். தனது மனதை ஒருவர் கட்டுக்குள் வைப்பதுதான் அடிப்படையான விஷயம். மனதில் அலைபாய்ந்து கொண்டிருக்கிற சிந்தனைப் பொறியில் உருவாகி, நிலையில்லாமல், விட்டுவிட்டுப் பிரகாசிக்கும் ஒளியை, ஒன்று திரண்ட சிந்தனையின் 'லேசர்' ஒளிக் கற்றையாக மாற்றும்போது விடுதலை கிடைக்கிறது. இயக்கங்கள், உணர்வுகள், ஆன்மாக்கள் மற்றும் தெய்வங்களுக்கு இடையேயான புதிரான தொடர்புகளை உணர்த்துகிற ஒரு பெரிய ஓவியத்தை பிதாகரஸ் வடித்துள்ளார். சாஸ்வதமான சுழற்சி என்ற கருத்தை கிரேக்க சிந்தனைக்கு அறிமுகம் செய்தவரும் இவர்தான்.

அ.தி: மனிதர்களில் மூன்று வகையினர் உண்டு என்பது பிதாகரஸின் வாதம். வாங்கி விற்பதற்காக வருபவர்கள் மிகவும் கீழ்நிலையில் இருப்பவர்கள்; போட்டியிடு வதற்காக வந்திருப்பவர்கள் இவர்களைவிட உயர்ந்த

வர்கள்; எந்த நோக்கமும் இல்லாமல் பார்ப்பதற்காக மட்டுமே வருபவர்கள் எல்லோரையும்விட தலைசிறந்த வர்கள்.

ஆ.ப.ஜெ: சுயநலம், ஜாதி, மதம், வட்டாரம், இன்னும் எத்தனையோ விஷயங்கள் மற்றும் இந்த உலகம் திணித்துள்ளவை என்ற தனது அடையாளங்களால் உருவாக்கப்பட்டுள்ள பையை மனிதன் ஊதி, ஊதிப் பெரிதாக்குகிறான். ஒரு ஊசிக் குத்தலில் அவன் வெறுமையாகி காற்றிலே காணாமல் போய்விடுகிறான். புத்திசாலி மனிதர்களால் காற்று நிரம்பியவர்களாக எப்படி இருக்க முடியும்?

அ.தி: சரியாகச் சொன்னீர்கள். நூறு முக்கிய விவகாரங்கள் மீதும் சிறிய, பெரிய ஆயிரக்கணக்கான ஆசைகள் மற்றும் அக்கறையான விஷயங்கள் மீதும் நமது அறிவுக் கூர்மையைக் கிளை விரித்து வைத்திருக்கிறோம்.

ஆ.ப.ஜெ: சிதறிக் கிடக்கும் பகுதிகளையெல்லாம் நீங்கள் ஒன்று சேர்க்க வேண்டும். தவறைச் சரி செய்யுங்கள். எல் லோருக்கும் உதவுங்கள். யாரையும் காயப்படுத் தாதீர்கள். தடுமாற்றம், குழப்பத்திலிருந்து விடுபட்டு உங்களுடைய ஒவ்வொரு செயலிலும் நீங்கள் இதைப் பின்பற்ற ஆரம்பித்து விட்டால், வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் கிடைக்கும். அது வாழ்க்கையை விடவும் நீடித்து நிற்கும். கோதுமையை மாவாக அரைக்கா விட்டால், உங்களுடைய உணவு மேஜைக்கு ரொட்டி எப்படி வரும்?[44] இவர் இடம் பெற்றிருந்த கனவுக் காட்சியை மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வரு வோமா...? அவர்கள் ஒவ்வொருவரும் ஏதாவதொரு விதத்தில் இந்த உலகத்தில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை?

பகுதி 2

திசைகாட்டிக் கம்பங்கள்

வீட்டின் சொந்தக்காரன் அல்ல நான்;
தோட்டக்காரன் என்றுதான் சொல்ல வேண்டும்.

நல்வாழ்வின் மொட்டுகள் விரிகின்றன.
கருணைக் கனிகள் பழுக்க
நான் காத்திருந்து பாதுகாப்பேன்.

வறுமையிலிருந்தும்
சண்டை சச்சரவுகளிலிருந்தும்
எனது நாடு விடுதலை பெற்று
வளம்பெறக் கனவு காண்கிறேன் நான்.

அ.தி: வெளி, காலம் மற்றும் சுயம் என்பவைதான் எல்லைக்குட்பட்ட இந்த உலகத்துடன் நம்மை சம்பந்தப்படுத்துகிற முக்கியமான மூன்று பரிமாணங்கள். நிஜம் என்று நாம் சொல்வதின் மீது இந்த முப்பரிமாணங்கள் மூலமாக நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் நமது தாக்கத்தை உண்டாக்குகிறோம்.

ஆ.ப.ஜெ: காலம் மற்றும் வெளி குறித்து நீங்கள் சொல்வது சரிதான். ஆனால், சுயம் பற்றித்தான் ஒரு பிரச்சினை உள்ளது. சுயம் என்பது உண்மையிலேயே பிரக்ஞையல்லாமல் வேறொன்றும் இல்லை. அதைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் வரையறுக்கப்பட்ட கண்ணோட்டமாக அது அமைந்துள்ளது. உடம்புக்கு ஒரு செல் எப்படியோ அப்படித்தான் இந்த சமுதாயத்தில் ஒரு மனிதன் இருக்கிறான்.

அ.தி: ஆனால், இந்த உடலைக் கட்டுப்படுத்துவது செல் தானே?

ஆ.ப.ஜெ: தான் எவ்வளவு முக்கியம் என்று அது நினைத்துக் கொள்வது ஒரு பொருட்டே அல்ல. சமுதாயத்திற்கும் இந்த உலகத்திற்குமான அதனுடைய உண்மையான முக்கியத்துவம் தற்காலிகமானது; தெளிவானது.

அ.தி: சமுதாயம் மிக அதிகமாகப் பலனடைவதற்காக, தான் என்கிற சுயம் எப்படி அடக்கிவைக்கப்படுகிறது என்பதையும் மனித குலத்தின் பெருவாரியான நலனுக்காக அந்த சுயத்தைத் தாண்டி எப்படி ஒருவர் உயருகிறார் என்பதையும் புரிந்துகொள்வது அவ்வளவு சுலபமல்ல.

ஆ.ப.ஜெ: சமுதாயம் மிக அதிகமாகப் பலனடைய வேண்டும் என்பதற்காக, சுயங்கள் பற்றிய குறுகிய கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்டு உயர்ந்த நிலையை எட்டியவர்கள் சிலரைப் பற்றி உங்களுக்குச் சொல்கிறேன். அசோகச் சக்கரவர்த்தியிலிருந்து ஆரம்பிக்கிறேன்.

அ.தி: மவுரிய வம்சத்தின் மூன்றாவது மன்னரைப் பற்றித்தானே சொல்கிறீர்கள்?[45]

ஆ.ப.ஜெ: உலக வரலாற்றில், முன்னுதாரணமான, தலைசிறந்த ஆட்சியாளர்களில் ஒருவராகப் போற்றப்படும் வகையில் அரசாட்சி செய்தவர், அசோகர். ஈவிரக்கமற்ற கொடூர மான ஒரு மன்னன், அஹிம்சை தர்மத்தைப் பின் பற்றுபவனாக மாறி, தர்மத்தின் ஆட்சியை நிலைநாட்டிய வரலாறுதான், அசோக சகாப்தம்.

அ.தி: இந்தியத் துணைக் கண்டத்தில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான பிரகடனங்களில் ஒன்றைத்தான் நமது தேசிய இலச்சனையின் வாசகமாக அமைத்துக் கொண் டுள்ளோம். பாறைகளிலும், தூண்களிலும் பொறிக்கப் பட்டுள்ள இந்தப் பிரகடனங்கள், அசோகரின் சீர்திருத் தங்களையும் கொள்கைகளையும் அறிமுகப்படுத்துவ தோடு, குடிமக்களுக்கு அவருடைய அறிவுரைகளையும் பரப்பின. இந்தப் பிரகடனங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, நேர்மையின் அடித்தளத்தில் ஒரு சாம்ராஜ்ஜியத்தை நிறுவி, நல்லாட்சி வழங்குவதற்காகப் பாடுபட்ட, அபாரமான ஆற்றல் வாய்ந்த ஒரு மாமன்னரின் முனைப்புகளை நம்மால் ஆழமாகப் புரிந்துகொள்ள முடிகிறது. தனது குடிமக்களின் தார்மிக மற்றும் ஆன்மிக மேம்பாட்டை தலையாய கொள்கை யாகக் கொண்டிருந்த அவருடைய ஆட்சியின் மகத்துவ மும் நமக்குத் தெளிவாகப் புலப்படுகிறது.

ஆ.ப.ஜெ: தனது தந்தை பிம்பிசாரர் மரணம் அடைந்த பிறகு, அசோகர் ஆட்சிக்கு வந்தார். ஆட்சி உரிமைக்கான வாரிசுப் போட்டியில் இரண்டு வருட சண்டை நடந்த தாகவும் இதில் குறைந்தது அசோகரின் ஒரு சகோதரன் கொல்லப்பட்டதாகவும் தெரிகிறது. மன்னராக அசோகர், முடிசூட்டிக் கொண்ட எட்டு வருடங்களுக்குப் பிறகு, கி.மு.262-ல் அவரது படை கலிங்க தேசத்தை வெற்றி கண்டது. அன்றைய கலிங்க தேசம்தான், ஏறக் குறைய இன்றைய ஒரிசா மாநிலமாக உள்ளது. கலிங்கப்போரில் சிந்தப்பட்ட குருதி வெள்ளம், செத்து மடிந்த வீரர்களின்

சடலங்கள், குற்றுயிரும் குலையுருமாக வீழ்ந்து கிடக்கும் வீரர்கள், வஞ்சம் தீர்க்கும் வெறித்தனங்கள், நாடு கடத்தல்கள் என யுத்தத்தை அடுத்துத் தொடரும் அத்தனை அவலங்களையும் கண்டு மாமன்னன் அசோகன், கதிகலங்கிப் போனான். இந்த வேதனை அவனுடைய ஆளுமைத் தன்மையை அடியோடு மாற்றிவிட்டது. கலிங்கப் போருக்குப் பிறகு, எஞ்சிய வாழ்க்கை முழுவதையும், பரந்து விரிந்துள்ள தனது சாம்ராஜ்ஜிய ஆட்சி நிர்வாகத்தில், புத்தமதக் கோட்பாடுகளை பிரதிபலிக்கச் செய்வதில் முனைந்து பாடுபடுவதற்காகவே அர்ப்பணித்தார். இந்தியா முழுவதிலும் வெளிநாடுகளிலும் புத்த மதத்தைப் பரப்புவதில் முழு மூச்சாகப் பாடுபட்டார். தர்மத்தின் வழிநின்று அசோகர் நடத்திய ஆட்சி, 38 வருட காலம் நீடித்தது.

அ.தி: அசோகரின் கல்வெட்டுப் பிரகடனங்களில், அவர் அறிமுகம் செய்திருந்த சீர்திருத்தங்களும், நேர்மையும் மனித நேயமும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவதற்காக அவர் பரிந்துரைத்த தார்மிகக் கோட்பாடுகளும்தான் பிரதானமாக இடம் பெற்றிருந்தன.

ஆ.ப.ஜெ: தனது கல்வெட்டுப் பிரகடனத்தில் தேசிய ஒழுக்கம் மற்றும் தனிநபர் ஒழுக்கம் பற்றி அசோகர் விவரித்துள்ளார். தேசிய ஒழுக்கத்தை அடித்தளமாகக் கொண்டு தனது நிர்வாகத்தை அமைத்திருந்த அசோகர், மிகவும் நேர்மையான ஆன்மிகத் தாக்கம் கொண்ட சமுதாயத்திற்கு இந்த அடித்தளம் வழிவகுக்கும் என்று நம்பினார். இரண்டாவதாகக் குறிப்பிட்டிருந்த ஒழுக்கத்தை, தனிநபர்கள் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தி ஊக்கமும் அளித்து வந்தார்.

அ.தி: தனிநபர் ஒழுக்கம் என்பது பற்றி மேலும் விரிவாகச் சொல்ல முடியுமா?

ஆ.ப.ஜெ: அசோகர் பேணி வளர்த்த தனிநபர் ஒழுக்கம் என்பதில் பெற்றோர்கள், பெரியவர்கள், ஆசான்கள், நண்பர்கள், துறவிகள் மற்றும் அறிஞர்களிடம் காட்ட வேண்டிய

மரியாதையும் இடம் பெற்றிருந்தது. பரந்த மனப் பான்மையையும் தாராள மனப்பான்மையையும் அவர் ஊக்குவித்தார். தனது கல்வெட்டுப் பிரகடனங்களில் நல்லிதயத்தின் குணாம்சங்களாக அவர் குறிப்பிட் டிருந்தவற்றில் ஆழமான, ஆன்மிகத் தன்மை பிரதிபலிக் கிறது. அன்பு காட்டுதல், சுய-அலசல், சத்தியத்தின் வழி நடத்தல், நன்றியுணர்வு, இதயத்தில் தூய்மை, ஆர்வம், மாறாத விசுவாசம், சுய கட்டுப்பாடு மற்றும் அஹிம்சை தர்மத்தில் பிடிப்பு என்பவை இந்த குணாம்சங்களில் இடம் பெற்றுள்ளன.

அ.தி: அசோகரின் சீர்திருத்தங்கள் சமுதாயத்தில் எந்தளவுக்கு வலுவான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன என்ப தையோ, எவ்வளவு காலத்திற்கு அவை நீடித்திருந்தன என்பதையோ நாம் அறிந்து கொள்வதற்கு நமக்கு வழியில்லாமல் போய்விட்டது. ஆனால், நேர்மை மற்றும் ஆன்மிக அடிப்படையிலான ஆட்சி முறையை உருவாக்க முனைந்த முதலாவது ஆட்சியாளர் என்ற தனிப்பெருமைக்கு சொந்தக்காரர், அவர். ஒரு பக்கம் எங்கு பார்த்தாலும் இப்போதைய சித்தாந்தங்களில் அவநம்பிக்கை கிளை விரித்துள்ளது. இன்னொரு பக்கம் பேராசை, (சந்தைப் போட்டியால் உருவான எதேச்சதி காரம்). வெறுப்பு (சித்தாந்த அடிப்படை வாதம்) மற்றும் மாயை (கறைபடியாத ஆட்சியாளர் நடத்துகிற ஆட்சி) என்பனவற்றுக்கு அப்பாற்பட்ட ஓர் அரசியல் சித்தாந் தத்துக்கான தேடல் தாகம் கிளம்பியுள்ளது. இப்படிப் பட்ட இன்றைய சூழ்நிலையில், மிகவும் வலுவான ஆன்மிக அடித்தளத்தைக் கொண்டு ஓர் அரசியல் அமைப்பு முறையை உருவாக்குவதில், அசோகரின் கல்வெட்டுப் பிரகடனங்கள் ஓர் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கியுள்ளது என்று சொல்லலாம்.

ஆ.ப.ஜெ: சரியாகச் சொன்னீர்கள். மனித குலத்திற்கு திசை காட்டியாக, கலங்கரை விளக்கமாகத் திகழ்கிற இன்னொரு மகத்தான மனிதர், தெய்வப் புலவர் திருவள்ளுவர். நெசவு செய்து வாழ்ந்து வந்த அவர், ஒரு

துறவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். இரண்டடிக் குறளுக்குள் ஒரு கருத்துக் கருவூலத்தையே அடக்கி விட்ட அற்புதக் கவி, அவர்.

அ.தி: திருக்குறள் பற்றி எனக்கு சொல்லுங்கள் ஸார்...

ஆ.ப.ஜெ: திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், மிகவும் மேன்மை யான படைப்பாக, ஈடிணையற்ற நூலாக போற்றிப் புகழப்படுகிறது. மனித குலத்திற்கான நீதி நெறிகளைக் கொண்டதாகவும், நடத்தை விதிமுறைகள் அடங்கிய ஒரு சட்டத் தொகுப்பாகவும் பெருமை பெற்றுள்ளது. 'பொய்யா மொழி' என்றும் இது போற்றப்படுகிறது.

அ.தி: குறள் பற்றி மேலும் கொஞ்சம் சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: 2000 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு முன்பு, திருவள்ளுவர் படைத்த திருக்குறள், 133 அதிகாரங் களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து குறள்கள் வீதம் மொத்தம் 1330 குறள்கள் இடம் பெற்றுள்ளன. அறத்துப்பால், பொருட்பால் மற்றும் காமத்துப்பால் என மூன்று முக்கியப் பகுதிகளாக திருவள்ளுவர் இதை இயற்றியுள்ளார். முதலாவது பகுதியான அறத்துப்பால் ஒரு தனி நபருக்குரிய அருமை பெருமைகளை விவரிக்கிறது. இரண்டாவது பகுதியான பொருட்பால் 70 அதிகாரங்களைக் (700 குறள்களை) கொண்டது. மிகவும் அதிகமான குறள்கள் இடம் பெற்றுள்ள இந்தப் பகுதி, சமுதாயத்தில் வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுபவை பற்றி விவரிக் கிறது. இறுதியாக, மூன்றாவது பகுதியான காமத்துப்பால் (இன்பத்துப்பால்) அக வாழ்வின் வெற்றியை எடுத் துரைக்கிறது.

அ.தி: இந்தியக் குடியரசுத் தலைவர் என்ற முறையில் திருவள்ளுவரின் எந்தக் கூற்று, உங்களை மிகவும் கவர்ந்துள்ளது?

ஆ.ப.ஜெ: தமிழ்ப் பாரம்பரியத்தில் அரசின் தலைவர் என்பவர், சமுதாயத்தின் உயிராகவும், ஆன்மாவாகவும் கருதப் படுகிறார். அஞ்சாமை, விடுதலை வேட்கை, விவேகம்

மற்றும் ஆற்றல் என்ற நான்கு குணாம்சங்களில் அவர். என்றுமே வல்லவராக இருக்கிறார். எந்தவிதமான தீமைகளும் அண்ட முடியாதவராகவும் எளிமையின் வடிவமாகவும், குணக்குன்றாகவும் இருப்பவர், அவர். அகங்காரம், கோபம் மற்றும் மோகத்திற்கு இடம் கொடுக் காத அவர், தற்புகழ்ச்சியையும் வேரறுத்துவிடுகிறார். சுய - கட்டுப்பாடு கொண்டவராகத்தான் அவர் என்றுமே இருப்பார். செல்வங்களைத் திரட்டுகிற அவர், அவற்றைப் பாதுகாத்து மக்களுக்குப் பகிர்ந்தளிப்பவர். எல்லோரும் அணுகக் கூடியவர்; அனைவரிடமும் அன்பு கொண்டவர்; தன்னை நாடி வருகிற எல்லோரையும் பாதுகாப்பவர்; அவருடைய நண்பர்கள் அனைவரும் அறிவாளிகளாகவும் நற்பண்புகளின் வடிவமாகவும் திகழ்கின்றவர்கள். தனது அமைச்சர்களைத் தனது கண்களாகப் போற்றுகிற அவர், அவர்களைப் பதவியில் அமர்த்துவதற்கு முன்பே அவர்களின் நடத்தையையும், தகுதியையும் ஆராய்ந்து அறிந்து கொள்வார். தனது பகைவர்களிடம்கூட, மரியாதை காட்டுபவர், அவர்.

அ.தி: நல்ல ஆட்சி நிர்வாகம் பற்றி திருவள்ளுவர் என்ன சொல்லியிருக்கிறார்.?

ஆ.ப.ஜெ: இது தொடர்பான அனைத்துக் குறள்களும் அடிப்படை யில் அரசனை மையமாகக் கொண்டே சொல்லப் பட்டுள்ளன. ஆனாலும், இவற்றில் அடங்கியுள்ள கருத்து, இனம், வர்க்கம், நாடு என்ற எல்லைகளைக் கடந்து உலகம் முழுவதற்கும், பொதுவானதாகவும், நன்மை பயக்கக்கூடியதாகவும் அமைந்துள்ளது. இன்றைய நவீன யுகத்தில் மன்னராட்சி என்பது, மக்க ளாட்சியாக மாறிவிட்டது. மன்னர்களுக்குப் பதிலாக அரசியல் கட்சிகளையும், அமைச்சர்களையும் ஆட்சியில் அமர்த்துகிறோம். மன்னர்களிடம் இருக்க வேண்டிய பண்புகளாக, அவர்கள் பின்பற்ற வேணடிய வழிமுறை களாக, திருவள்ளுவர் வகுத்துத் தந்துள்ள நெறிகளை, நமது தலைவர்கள், அமைச்சர்கள், சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ராஜ தந்திரிகள், திட்டம்

தீட்டுபவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரசுப் பதவிகளில் இருப்பவர்கள் முதலிய அனைவரும் பின்பற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, இயல்பானதே.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றும் கொல்லோ உலகு.[46]

மழை பொழிகின்ற மேகம் உலகத்தாரிடம் என்ன பிரதிபலனை எதிர்பார்த்துப் பெய்கிறது? அது போல பிறருக்கு உதவி செய்வது என்பது, பிரதிபலன் கருதாமல் ஒருவர் செய்ய வேண்டிய கடமை.

அ.தி: இன்றைக்கும்கூட, திருக்குறள் பொருத்தமானதாக உள்ளது.

ஆ.ப.ஜெ: முன்பு எப்போதையும்விட, இப்போது மிகவும் பொருத்த மாக இருக்கிறது என்று சொல்லலாம். உலகளாவிய போட்டி நிலவுகிற இன்றைய சூழ்நிலையில் எந்தத் திட்டத்திலும், லட்சியக் குறிக்கோளிலும் வெற்றி பெற வேண்டும் என்றால், வெல்ல முடியாத ஆற்றலும், ஓய்ந்துவிடாத உத்வேகமும் நமக்கு மிகவும் முக்கிய மாகத் தேவைப்படுகிறது.

அ.தி: வெல்ல முடியாத ஆற்றலில் என்னென்ன அம்சங்கள் அடங்கியுள்ளன?

ஆ.ப.ஜெ: உயர்ந்த லட்சியங்களை சாதிப்பதற்கு வழிவகுக்கும் ஒரு தொலைநோக்கைக் கொண்டிருக்க வேண்டும். இதோ இந்தக் குறள், தொலை நோக்கை அமைத்துத் தருகிற மனோபாவத்தைப் பிரதிபலிப்பதைப் பாருங்கள்.

வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு.[47]

தண்ணீர் மட்டத்தின் அளவிற்குதான் தாமரை மலரின் தண்டு உயரும். அதைப்போல மக்களு டைய ஊக்கத்தின் அளவிற்குத்தான் அவர்களது வாழ்க்கைச் சிறப்புகள் உயரும்.

எப்படிப்பட்ட தடைகளும் முட்டுக்கட்டைகளும் குறுக்கிட்டாலும் அவற்றை பொருட்படுத்தாமல் நமது வாழ்க்கையில் திட்டவட்டமாக ஒரு குறிக்கோளை தீர்மானித்துக் கொண்டுவிட்டால், அந்த லட்சியத்தின் பேரொளியும் நமது விடா முயற்சியும், நமது ஆன்மா விற்கு வலிமையூட்டி அனைத்து இன்னல்களையும் கடக்க வைத்து, நமக்கு வெற்றியை ஈட்டித் தருகிறது.

அ.தி: உங்களுடைய தனிப்பட்ட அனுபம் பற்றி சொல்ல முடியுமா? நிறையத் திட்டங்களை, பணிகளை நீங்கள் மேற்கொண்டிருந்தீர்கள். வெற்றி, வெகு தொலைவில் விலகிப் போயிருந்த தருணங்களையும் எத்தனையோ தடைகளையும் எதிர்கொண்ட அனுபவங்கள் உங்களுக்கு ஏற்பட்டிருக்குமே...?

ஆ.ப.ஜெ: திருவள்ளுவரின் ஞானத்தை நான் எப்போதுமே, குறிப்பாக என் வாழ்க்கையின் சிக்கலான தருணங்களில் என் இதயத்தை விட்டு நீங்கவிடாமல் ஏந்திக் கொண் டிருக்கிறேன். இது தொடர்பான ஒரு குறளைச் சொல்லட்டுமா?

> **இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
> **இடும்பை படாஅ தவர்.**[48]
>
> இடையூறுகளைக் கண்டு துன்பப்படாத மன உறுதியுடைய அந்த அறிவாளிகள், தங்களிடம் வந்த இடையூறுகளே துன்பப்படும்படி செய்து விடுவார்கள்.

அதாவது, வெற்றிகரமான தலைவர்கள் பிரச்சினை களைக் கண்டு எப்போதுமே துவண்டுவிட மாட்டார்கள். அந்தச் சூழ்நிலையை திறம்படச் சமாளித்து, பிரச்சினை களைத் தோற்கடித்து விடுகிறார்கள்.

அ.தி: வெற்றிபெற வேண்டும் என்றால், அந்த எண்ணத்தை சிந்தையில் நிறுத்தி, ஓய்ந்து விடாத உத்வேகத்துடன் செயல்படுங்கள் என்பதுதானே இதன் சாரம்...

ஆ.ப.ஜெ: ஆம், சரியாகச் சொன்னீர்கள். இன்னொரு குறளும் சொல்கிறேன்.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.[49]

எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும். அந்த உயர்வு கைகூடா விட்டாலும் அவ்வாறு எண்ணுவதைக் கைவிடக் கூடாது.

எந்தப் பிரச்சினையாலும் எப்போதுமே நாம் தோற்கடிக் கப்படவே கூடாது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளை வெற்றி கண்டு, பிரச்சினைகளைத் துணிவுடன் தோற்கடித்துவிட வேண்டும். இந்த இரண்டு குறள்களும் ஓய்ந்து விடாத உத்வேகத்தைப் பிரதிபலித்துக் காட்டு கின்றன என்று நினைக்கிறேன்.

அ.தி: சமீபத்தில் நான், நோபல் பரிசு பெற்ற சர்.வி.எஸ். நெய்பாலை சந்தித்தேன்.[50] நமது இலக்கியம், அதிகாரத் தையே பெருமளவுக்கு மையமாகக் கொண்டுள்ளது என்று அவர் கருதினார். பணம் படைத்தவர்கள் மற்றும் சக்தி படைத்தவர்கள் பற்றித்தான் அது பெரிதும் கவனம் செலுத்துகிறது. ஏழைகளைப் பற்றிய கவலையோ அக்கறையோ அதில் அலசப்படவில்லை என்று அவர் கூறினார்.

ஆ.ப.ஜெ: ஆட்சி நிர்வாகத்தில் இருப்பவர்கள் சம்பந்தப்பட்ட கருத்துகளை குறள் விவரித்தபோதிலும் எல்லோருக்கு மான செய்தியும் அதில் இடம் பெற்றுள்ளது. நானும் சர். நெய்பாலுடன் விரிவாகப் பேசியிருக்கிறேன். என்னை சந்திப்பதற்காக தனது மனைவியுடன் அவர் வந்திருந் தார். உலகப் போக்குகளை ஒரு மாறுபட்ட விந்தையான கண்ணோட்டத்தில் பார்க்கக்கூடிய திறன் அவருக்கு உண்டு. நீண்ட காலத்தை கடந்து நோக்கும் பல வருடங்கள், சொல்லப்போனால், நூற்றாண்டுகளுக்குப் பிந்தைய நிலவரங்களை ஆராய்ந்து பார்க்கக்கூடிய ஒரு தொலைநோக்குக் கண்ணோட்டம் கொண்டவர், அவர். தனது கருத்தை ஒளிவு மறைவில்லாமல் மிகவும் நேரடியாக, சொல்லக்கூடியவர் அவர். சொல்லப் போனால் விஷயங்களை விளக்குகின்ற பாணியில் தயவு

தாட்சண்யமே பார்க்க மாட்டார். இந்த இரண்டு குணாம் சங்களும் திருக்குறளுக்கு மிகவும் நெருக்கமாகவே உள்ளன.

அ.தி: திருக்குறள் சொல்வதில் மிகவும் சக்தி வாய்ந்த செய்தி எது?

ஆ.ப.ஜெ: வறுமையின் கொடுமைகளை ஒரு பாவியாகவும் ஓர் அரக்கனாகவும் உருவகப்படுத்திப் பேசுகிறது, குறள். இந்த அரக்கன் பிடியில் சிக்கிக்கொள்கிற ஒருவர் வாழ்க்கையில் தனது அனைத்து சந்தோஷங்களையும் பறிகொடுத்து விடுகிறார். வறுமை என்பது கொடூர மானது; மக்களை வாட்டி வதைக்கக்கூடியது. தன்னைச் சுற்றிலும் நெருப்பு சூழ்ந்துகொண்ட போதிலும் ஒருவரால் உறங்க முடியலாம், ஆனால் வறுமை சூழ்ந்து கொண்டால், உறங்கவே முடியாது. ராஜ்ஜியத்தின் அருமை பெருமைகளை இது சீரழித்துவிடுகிறது. ஒரு தேசத்திற்கு அடுக்கடுக்கான துயரங்களைக் கொண்டு வருகிறது. ஏழையின் பேச்சு, அம்பலம் ஏறுவதில்லை. வேலை செய்யாமல் சோம்பித் திரிகிற நிராதரவான ஒருவர், அடுத்தவரை அண்டி வாழ நேரிடுகிறது. உணவுக்காக, இன்னொருவரிடம் கையேந்த வேண்டி யிருக்கிறது. ஓர் ஏழை மனிதன், மற்றவர்களுக்கு அந்நியப்பட்டு விடுகிறான். நீங்காத வறுமை, ஒருவரின் கடந்த காலப் பெருமையையும், பேச்சின் கவுரவத்தை யும், கண்ணியத்தையும் நாசப்படுத்திவிடுகிறது.

அ.தி: திருக்குறளுக்கு நாம் எப்படிப்பட்ட முக்கியத்துவம் கொடுப்பது? அது புனித நூல் வரிசையில் இடம் பெறுகிறதா?

ஆ.ப.ஜெ: அது புனித நூலுமல்ல; காவியமும் அல்ல. வாழ்க்கைக் கலை பற்றிய ஓர் அசாதாரண ஆய்வு நூல் அது. மனித வாழ்க்கையின் மாறாத, காலம் கடந்த அடித்தள ஆதாரங்களை ஆழமாக அலசி, ஆராய்ந்து வாழ்க்கை நெறிகளை நமக்கு வகுத்துத் தந்துள்ளது. வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும், சிக்கல்களையும் அக்கு

வேறு ஆணி வேறாக அலசி ஆராய்ந்துள்ளார், திருவள்ளுவர்.

அ.தி: திருவள்ளுவரிடம் உங்களை மிகவும் கவர்ந்தது எது?

ஆ.ப.ஜெ: தெய்வப் புலவர் திருவள்ளுவரிடம் நான் மிகவும் ஈர்ப்புக் கொண்டதும் மதிப்பு வைத்தும், இதோ பின்வரும் காரணத்தின் அடிப்படையில் தான்: தான் பிறந்த சொந்த தேசத்திற்கு அப்பாற்பட்டு, ஒரு படைப் பாளி உருவாக்கிய எந்த காவியத்தையோ அல்லது தத்துவத்தையோ அல்லது சிறந்த படைப்புகளையோ நான் இதுவரையில் படித்ததில்லை. தனது 1330 குறள்களிலும் ஒரு இடத்தில் கூட தான் எந்த தேசத்தை அல்லது மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதையோ அல்லது எந்த மொழியை அல்லது மதத்தைச் சேர்ந்தவர் என்பதையோ திருவள்ளுவர் குறிப்பிடவே இல்லை. இப்படிப்பட்ட பிரபஞ்சம் தழுவிய அவரின் அறிவுத் திறன்தான் என்னை ஆட்கொண்டுள்ளது.

அ.தி: எவ்வளவு மகத்தான எல்லையற்ற ஞானம்! இந்திய தேசத்தில்தான் எத்தனை எத்தனை உயர்ந்த சிந்தனை யாளர்களும் தத்துவ மேதைகளும் தோன்றியிருக் கிறார்கள்!

ஆ.ப.ஜெ: சிந்தனையாளர்களும் தத்துவ மேதைகளும் மட்டுமல்ல, விஞ்ஞானிகளும், பகுத்தறிவு மேதைகளும்கூட இந்த மண்ணில் தோன்றியிருக்கிறார்கள்.

அ.தி: இந்திய விஞ்ஞானிகளில் முதன்மையானவராக நீங்கள் யாரைக் குறிப்பிடுவீர்கள்?

ஆ.ப.ஜெ: ஆரியப்பட்டர். இந்திய விஞ்ஞானிகளில் முதன்மை யானவராக நாம் ஏன் ஆரியபட்டரைக் குறிப்பிட வேண்டும்? இந்த உலகத்திற்குப் பூஜ்ஜியம் என்ற இலக்கத்தை தந்தவர், அவர்தான். இதற்காகவே அவர் என்றென்றும் நீங்காத புகழ் பெற்று நிலைத்திருக்கிறார்.

அ.தி: இது எனக்குத் தெரியாத விஷயம்.

ஆ.ப.ஜெ: நமக்கே உரித்தான நமது பாரம்பரியப் பெருமைகள் நமக்கு முறையாகக் கற்றுக் கொடுக்கப்படவில்லை. பகட்டான கட்டுக்கதைகளும் வரலாற்றின் இருண்ட பக்கங்களும் மட்டும்தான் நமக்குக் கற்றுக் கொடுக்கப் பட்டுள்ளன.

அ.தி: இந்தியாவின் முதலாவது செயற்கைகோள் ஏவப்பட்ட சமயத்தில்தான் நான் ஆரியபட்டர்[51] பற்றி முதல்தடவை யாகக் கேள்விப்பட்டேன். அந்த செயற்கைக்கோளுக்கு அவருடைய பெயரை சூட்டியிருந்தார்கள். அப்போது எனக்கு 20 வயது. கல்வி நிலையத்தில் நான் கற்ற கல்வியில், அறிவியலுக்கு ஆரியப்பட்டர் வழங்கியுள்ள பங்களிப்பு பற்றி எதுவுமே இடம் பெறவில்லை.

ஆ.ப.ஜெ: ஆரியப்பட்டர் எழுதிய ***ஆரியப்பட்டியம்*** என்ற நூலில் பூமி தன்னுடைய அச்சில் சுழல்கிற அடிப்படையிலும், சூரியனை அடிப்படையாக வைத்து கிரகங்களின் காலத்தை கணக்கிடுவதைக் கொண்டும் தனது வான சாஸ்திர மற்றும் கணிதக் கோட்பாடுகளை வழங்கினார். மிகவும் தத்துவார்த்தமான முறையில் இருந்தாலும்கூட, பிதாகோரஸூம் இந்த உண்மையை அறிந்திருந்தார். பின்னர் கிரேக்கர்கள், இதை சூரியனை மையமாகக் கொண்ட தன்மை என்பதைக் குறிப்பிடும் வகையில் 'ஹீலியோசென்டிரிஸம்' என்றார்கள். 1633-ல் சூரியனை மையமாகக் கொண்ட தன்மை பற்றிய தனது கருத்துக் களை திரும்பப் பெறும்படி கலிலியோ[52] கட்டாயப் படுத்தப்பட்டது, ஒரு சுவாரஸ்யமான விஷயம்.

அ.தி: ஆரியப்பட்டியம் பற்றி மேலும் சொல்லுங்கள்.

ஆ.ப.ஜெ: ஆரியப்பட்டியம் 118 சுலோகங்கள் வடிவத்தில் இயற்றப்பட்டுள்ளது. 33 சுலோகங்கள் அடங்கிய இதன் கணிதப்பகுதியில் 66 கணித விதிமுறைகள் எந்த நிருபணமும் இல்லாமல் இடம்பெற்றுள்ளன. 25 சுலோகங்களைக்கொண்ட இன்னொரு பகுதியில் காலத்தைக் கணக்கிடும் முறை மற்றும் கிரகங்களின் வடிவ மாதிரிகள் குறிப்பிட்டுள்ளன. 50 சுலோகங்களைக்

கொண்ட மற்றொரு பிரிவு வான்வெளி மற்றும் கிரணங்கள் பற்றி விளக்குகிறது. கணிதப் பகுதியில் எண் கணிதம், அல்ஜீப்ரா...

அ.தி: 'பை' (pi) என்பதை ஆரியப்பட்டர்தான் கண்டுபிடித்தார் என்பது உண்மையா?

ஆ.ப.ஜெ: 'பை' என்பதற்கான தோராயமான மதிப்பை துல்லியமாக கணித்துத் தந்தவர், அவர் என்று நான் அறிந்திருக்கிறேன். இது பற்றி ஆரியப்பட்டியத்தில் அவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார். ''நூறுடன் நான்கை சேர்க்கவும், அதை எட்டால் பெருக்கி அதனுடன் அறுபத்திரண்டாயிரத்தைக் கூட்டவும் இந்த விடை, தோராயமாக 20,000 என்பதை விட்டமாகக் கொண்ட ஒரு வட்டத்தின் சுற்றளவாகும். இதன் மூலம் வட்டத்தின் சுற்றளவுக்கும் விட்டத்திற்கும் இடையேயான உறவு கொடுக்கப்பட்டுள்ளது.'' இது 'பை' என்பதன் மதிப்பை 3.1416 என்று கணித்துத் தருகிறது. இந்த கணிப்பு துல்லியமான மதிப்பு என்பதுதான் மிகவும் ஆச்சரியமான ஒன்று.

அ.தி: தனது முதலாவது செயற்கைக் கோளுக்கு நமது இந்திய தேசம் 'ஆரியப்பட்டா' என்று பெயர் சூட்டியிருக்கிறது.

ஆ.ப.ஜெ: அது மிகவும் பொருத்தமான ஒரு புகழ் அஞ்சலி. விண்வெளியில் கிரகங்கள் எப்படி அமைந்துள்ளன என்பதை ஆராய்வதற்கான ஒரு சரியான வழிமுறையையும் ஆரியப்பட்டர் வகுத்துத் தந்துள்ளார். பூமியின் சுற்றளவு 4967 யோஜனைகள் என்றும் அதன் விட்டம் 1581 $^{1}/_{24}$ யோஜனைகள் என்றும் அவர் கணித்துத் தந்துள்ளார். ஒரு யோஜனை என்பது ஐந்து மைலுக்கு சமம் என்பதால், பூமியின் சுற்றளவு 24,835 மைல்களாக உள்ளது. இந்த கணிப்பு இப்போது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிற 24,902 மைல்கள் என்ற கணக்கிற்கு ஏறக்குறைய அப்படியே ஒத்திருப்பது எவ்வளவு விந்தை! ஆரியப்பட்டர் எவ்வளவு அபாரமாக இதை கணித்துள்ளார்! தன்னுடைய அச்சில் பூமி தன்னைத்

தானே சுற்றி வருவதால்தான் விண்ணுலகங்களும் சுற்றுவது போலத் தோற்றம் தருகின்றன என்று நம்பினார். சூரியக் குடும்பத்தின் அமைப்பு முறை பற்றிய அவருடைய இந்தக் கருத்து மிகவும் குறிப்பிடத் தகுந்த ஓர் அசாத்தியமான கணிப்பு.

பூமியின் ஆரத்தை அடிப்படையாகக் கொண்டும், கிரகங்கள் பூமியைச் சுற்றி வருகிற காலத்தைக் கருத்திற் கொண்டும், கிரகங்களின் சுற்றுப்பாதையின் ஆரத்தையும் ஆர்யபட்டர் கணித்துத் தந்துள்ளார். சந்திரனும் கிரகங்களும் சூரிய ஒளியைப் பெற்றுத்தான் பிரகாசிக்கின்றன என்றும் அவர் நம்பினார். கிரகங்களின் சுற்றுப் பாதை, நீள்வட்ட வடிவமானவை என்ற அவருடைய கணிப்பும் நம்ப முடியாத ஆச்சரியம். சூரிய கிரகணம் மற்றும் சந்திர கிரகணத்துக்கான காரணங்களையும் அவர் துல்லியமாக தனது நூலில் விளக்கியுள்ளார்.

பூமி தன்னைத்தானே 1,582,237,500 தடவை சுற்றிக் கொள்வது பூமியை 57,753,366 தடவை சுற்றி வருவதற்குச் சமமானது என்றும் ஆர்யபட்டர் எழுதியுள்ளார். இது மிகவும் துல்லியமான கணிப்பு. நமக்குத் தெரிந்திருக்கிற வானவியல் விஷயங்களில் மிகவும் பழமையான, என்றும் மாறாத ஓர் உண்மை இது என்றும்கூட சொல்லலாம்.

அ.தி: ஆரியப்பட்டரை எப்படி தனிப்பெருமை கொண்டவராகப் பார்க்கிறீர்கள்?

ஆ.ப.ஜெ: ஆராய்ந்தறிகிற கண்ணோட்டத்துடன் அண்ட வெளியை முதல் முதலில் கவனித்துப் பார்த்த மனிதர், ஆரியப் பட்டர்தான். அவருடைய அறிவுக்கூர்மை என்னை பிரமிக்க வைக்கிறது. கிட்டத்தட்ட 1500 வருடங்களுக்கு பிறகு ஐன்ஸ்டீனிடமும் அதே ஆழ்ந்த ஞானத்தைக் காண்கிறேன்.

அ.தி: இஸ்லாமிய வரலாற்றுக் களத்திற்கு உங்களை அழைத்துச் செல்ல விரும்புகிறேன். அதில் உங்களுடைய முன்னுதாரண வழிகாட்டி யார்?

ஆ.ப.ஜெ: முன்னுதாரண வழிகாட்டி என்பது மிகப் பெரிய வார்த்தையாக உள்ளது. ஆனால், கலீஃபா உமர் இப்னு அல்-கத்தாப் என்னை மிகவும் கவர்ந்தவர். ***எழுச்சி தீபங்களில்*** அந்தக் கனவுக் காட்சியை நீங்கள் படித் திருப்பீர்கள்.

அ.தி: கலீஃபா உமர் பற்றிய வரலாற்று முக்கியத்துவம் என்ன?

ஆ.ப.ஜெ: இறைதூதர் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்- சாந்தியும் சமாதானமும் அவர் மீது என்றும் உண்டாவதாக) விட்டுச் சென்ற இளம் தளிரை முதலாவது கலீஃபா அபூபக்கர்,[53] புயல்களிலிருந்து பாதுகாத்து, வைரம் பாய்ந்த மிகப்பெரிய, ஒரு மரமாக வளர்த்தார். அது, நான்கு திசைகள் எங்கும் கிளை பரப்பியது. உமரின் ஓயாத உழைப்பாலும் தளராத அக்கறையாலும் இறைதூதர் (சாந்தியும் சமாதானமும் அவர் மீது உண்டாவதாக) வழங்கிய வடிவத்திலேயே இஸ்லாம் மனிதகுலத்திற்கு வாய்த்தது.

அ.தி: உமர், எந்தவிதத்தில் சிறப்பு வாய்ந்தவர்?

ஆ.ப.ஜெ: உமரின் படையினர் அப்போதைய வலிமையான இரண்டு சாம்ராஜ்ஜியங்களைக் கைப்பற்றினார்கள். மெஸபடோமியா மற்றும் பாரசீகத்தின்[54] சில பகுதிகளை யும், கிரேக்க மொழி பேசும் மக்கள் வாழ்ந்த ரோம சாம்ராஜ்ஜியப் பகுதியிலிருந்து[55] எகிப்து, பாலஸ்தீனம், சிரியா, வட ஆப்பிரிக்கா மற்றும் ஆர்மேனியா ஆகிய நாடுகளை இஸ்லாமிய ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். அந்த காலகட்டத்தில் ஆட்சியாளர்கள் பின்பற்றி வந்த ஆடம்பரமான டாம்பீக வாழ்க்கையை விடுத்து, ஏழ்மை யிலும் வேதனையிலும் வாடியபோது முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த அதே வாழ்க்கை முறையை தொடர்ந்து பின்பற்றி வந்தார்.

அ.தி: ஜெருசலேம் வெற்றியாளராக அவர் கருதப்படுகிறார் அல்லவா?

ஆ.ப.ஜெ: ஜெருசலேம் கைப்பற்றப்பட்ட வரலாற்றில் இடம் பெற்றுள்ள விஷயங்களைச் சொல்கிறேன். முற்றுகை

யிடப்பட்டிருந்த ஜெருசலேம் நகருக்குள் இருந்த கிரேக்க தலைமை மத குருவான சோஃபரோனியஸ் **(Sophronius)** போராடாமல் அந்த நகரை ஒப்படைத்து, சரணடையத் தயாராக இருப்பதாக தகவல் அனுப்பினார். ஆனால் கலீஃபா உமரிடம் மட்டுமே நேரடியாக சரணடைய முடியும் என்றும் நிபந்தனை விதித்தார். அந்த சமயத்தில் டமாஸ்கசில் இருந்த உமர், இதை ஏற்றுக் கொண்டார். அந்த நிகழ்வு, இஸ்லாமிய வரலாற்றில் ஓர் அற்புதமான காட்சியாக அமைந்துவிட்டது. ஒரே ஒரு பணியாளர் மட்டும் உடன் வர, தன்னந்தனியாக ஜெருசலேம் நகருக்குள் உமர் நுழைந்தார். டமாஸ்கசி லிருந்து குதிரையில் ப்யணம் செய்து வந்ததால் அவருடைய ஆடைகள் கிழிந்து, புழுதி படிந்திருந்தன. தனது பணியாளரிடம் மிகவும் கனிவான முறையில் நடந்து கொண்டதை அங்கிருந்த மக்கள் கண்டார்கள். வெற்றிவாகை சூடி வந்திருக்கும் மன்னரைப் பார்ப்ப தற்காக கோலாகலமாக திரண்டிருந்த மக்கள் கூட்டம், அந்தப் பணியாளரை உமர் என்று நினைத்துக் கொண்டு, அவரை ஆர்ப்பரித்து வாழ்த்தியது.

அ.தி: அதிகாரத்தின் வலிமையையே எளிமை பணிய வைத்து விடுகிறது!

ஆ.ப.ஜெ: உமர் பற்றிய இன்னொரு அற்புத நிகழ்வும் உண்டு. ஒரு தடவை மஃரிப் தொழுகை (சூரியன் மறைந்தவுடன் தொழப்படும் அந்திநேரத் தொழுகை) சமயத்தில் புனித **sepulchre** தேவாலயத்தின் முன்பு உமர் இருந்தார். உள்ளே வந்து தொழுகை நடத்தும்படி அந்த தேவா லயத்தின் தலைமை மதகுரு உமரை அழைத்தார். தான் அப்படி உள்ளே வந்து தொழுகை செய்தால், பின்னர் தேவாலயத்தை ஒரு மசூதியாக மாற்றுவதற்கு தனது ஆதரவாளர்களுக்கு ஊக்கமளிப்பது போல ஆகிவிடும், என்று கூறி அந்த அழைப்பை நிராகரித்து விட்டார். தனது தலைப்பாகையை தரையில் விரித்து அந்த இடத்திலேயே தனது தொழுகையை மேற்கொண்டார், உமர்.

அ.தி: இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏன் நினைவுகூரப்படாமல் போய்விடுகின்றன? இப்படிப்பட்ட செயல்கள் எல்லாம் கலங்கரை விளக்கங்கள் போன்றவை ஆயிற்றே?

ஆ.ப.ஜெ: உண்மையிலேயே மனிதகுலத்திற்கு இது திசை காட்டி தான். புனித இறைதூதர் முஹம்மதின் (சாந்தியும் சமாதானமும் அவர் மீது என்றும் உண்டாவதாக) தூய்மையான அருளாசிகளை பெருக்கெடுக்க வைக்கிற ஊற்றுக்கண்ணாக தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார், உமர். தமது சாந்தத்தின் ஆதார மையத் துடன் தொடர்பு கொள்கிற கலையை அவர் கற்றிருந்தார். தனக்குள்ளே மோதிக்கொண்டிருந்த பயங்கள் மற்றும் ஆசைகளுக்கிடையே அமைதியை நிலைநாட்டுவதில் தனது சக்தியை வீணடிக்காமல் தனது வாழ்க்கையை நடத்தி வந்தார். வேதனை, துயரம் மற்றும் கவலை அனைத்தையும் அவரால் அப்படியே சரிசமமாக ஏற்றுக் கொள்ள முடிந்தது. கலீஃபா உமரால் போற்றி வளர்க்கப் பட்ட இஸ்லாம், விடுதலை அடைந்த மனதிற்கும் இதயத்திற்கும் ஒரு பொருத்தமான களமாக என்றும் நீடித்திருக்கும்.

அ.தி: வேதனை, துயரம் மற்றும் கவலையை அமைதியோடு ஏற்றுக்கொள்வது என்பதுதான் உங்களுடைய சிந்தனைக்கு மிகவும் மையமாக உள்ளது. 2004, ஆகஸ்டு 31ஆம் நாள் பொற்கோயிலில் இதுபற்றி நீங்கள் குறிப்பிட்டதை நான் கேட்டேன்.

ஆ.ப.ஜெ: மிகவும் துரதிர்ஷடவசமாக, பொற்கோயில் பெரும் ரத்தக்களறியைக் கண்டிருக்கிறது, தாங்க முடியாத வேதனையும், துயரமும், கவலையும் அங்கு நிலவியது. ஆனாலும் கூட, அமைதி நிலைநாட்டப்பட்டது. வரலாற்றின் இருள் கவ்விய நேரங்களில் ஒளிபாய்ச்சிய குருமார்களின் ஞானம்தான், இதற்கு முழுமுதற் காரணம்.

அ.தி: அமிர்தசரஸுக்கு செல்கிற வழியில் நீங்கள் ஒரு கவிதை எழுதினீர்கள். அதிலிருந்து ஒரு சில வரிகள் எனக்கு நினைவுக்கு வருகிறது:

நானூறு வலங்கள் முடிந்ததே தெரியவில்லை
பூமியின் பேரொளிப் பிரகாசம்,
சூரியனையே மங்கவைத்துவிட்டது.
சூரியனை வலம் வரும்போது
அந்த சூரியனே தலைவணங்கித் தொழுகிறது.

குரு கிரந்த சாஹிபின் பிரகாசப் பேரொளியை
ஏந்தி வருவதால்
பூமிக்கு வந்தனை செய்கிறது, சூரியன்.

ஆ.ப.ஜெ: நீங்கள் இதை ஹிந்தியில் மொழிபெயர்ந்து, பொற் கோயிலில் பாடினீர்கள், நுணுக்கமான ஆய்வறிவுக்கு மட்டுமே எட்டுகிற வறட்டுத்தனமான கோட்பாடுகளை அல்லாமல் மனிதனையும் அவனுடைய தலைவிதியை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு, அக்கறை செலுத்துகிற மனிதர்களையும் நோக்கி நான் ஈர்க்கப்படுகிறேன்.

அ.தி: குருநானக் தேவ் அவர்களிடம் இந்த மனித நேயத்தைத் தான் நீங்கள் காண்கிறீர்கள் அல்லவா?

ஆ.ப.ஜெ: தனது 27-ஆவது வயதில் தனது புனிதப் பணியை தொடங்கியபோது குருநானக் தேவ் ஞானமடைந்தார். ஞானமடைந்த பிறகு, அவர் வெளியிட்ட முதல் பிரகடனம், ''ஹிந்து என்று யாருமே இல்லை; முஸல் மான் என்றும் யாருமே இல்லை''[56] என்பது தான். மிகவும் மேன்மையான, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரகடனம், இது. மனிதர்களுக்கிடையேயான சகோதரத்துவத்தையும் எல்லோருக்கும் தந்தையாக கடவுள் இருப்பதையும் மட்டுமே இது அறிவிக்கவில்லை. அத்துடன் மனிதன் மீதும் அவனுடைய தலைவிதி மீதும் பிரதானமாக அக்கறை கொண்டிருந்தார் என்பதையும் அந்தப் பிரகடனம் தெளிவுபடுத்துகிறது. அவருடைய செய்தியில் தனித்துப் பிரிக்கமுடியாத ஆன்மிக, தார்மிக சங்கமத்தைக் காண முடியும்.

அ.தி: குருநானக் தேவ் விரிவான சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

ஆ.ப.ஜெ: அப்போதைய காலகட்டங்களில் சுற்றுப் பயணம் செய்வதில் பல சிக்கல்களும் சிரமங்களும் இருந்தபோதிலும் இந்திய தேசம் முழுவதிலும் அரேபியாவிலும் நீண்ட நெடிய ஐந்து சுற்றுப் பயணங்களை[57] குருநானக் தேவ் மேற்கொண்டார். ஹிந்து மற்றும் முஸ்லிம் வழிபாட்டுத் தலங்களாகப் புகழ் பெற்ற பெரும்பாலான இடங்களுக்கு அவர் சென்றிருக்கிறார். தன்னைத்தானே வருத்திக் கொள்கிற அனுஷ்டான நடைமுறைகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்களின் கவைக்குதவாத, காலத்திற்கு ஒவ்வாத தன்மைகளை தனது போதனைகள் மூலம் அம்பலப்படுத்தினார்.

அ.தி: எல்லாவிதங்களிலும் மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்பதை அறிவித்ததோடு மட்டுமல்லாமல், குடும்ப வாழ்க்கை என்பது மத நடவடிக்கையின் முதன்மையான களமாக அமைந்துள்ளது என்றும் குருநானக் தேவ் அறிவித்தார். வாழ்க்கை என்பது ஒரு சுமையல்ல; அது ஒரு வரம். ஆன்மிகப் பயிற்சி மற்றும் மலர்ச்சிக்கான ஒரு வழிமுறையாக இயல்பான வாழ்க்கையை குருநானக் தேவ் அமைத்துத் தந்தார்.

ஆ.ப.ஜெ: தனது புனிதப் பணியின் பிந்தைய 18 வருட காலமும் உழவுத் தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார் என்பதை நீங்கள் கவனித்ததுண்டா? சமுதாயத்திற்கு பலன் தருகிற வகையிலும் ஒழுக்க நெறி சார்ந்ததுமான வாழ்க்கையில் அவர் கொண்டிருந்த முழுமையான ஈடுபாட்டை இது உணர்த்துகிறது. என்னைப் பொருத்த வரையில் பின்பற்றப்பட வேண்டிய ஒரு முன்மாதிரி வாழ்க்கை அவருடைய வாழ்க்கை. தனது தனிப்பட்ட உதாரணத்தின் மூலம், ஒரு சாதாரண மனிதனின் உழைக்கிற வாழ்க்கையை நடத்துவதுதான் தனது ஆன்மிக வாழ்க்கை முறைக்கு அடித்தளமாக அமைந்திருந்தது. என்பதை அவர் உணர்த்தியுள்ளார். குருநானக்கின் வாழ்க்கை முறையைப் பொருத்தவரையில்

சோம்பியிருப்பது கீழ்த்தரமான செயல். பலன் தருகிற ஆக்கபூர்வமான வேலையில் ஈடுபட்டிருப்பது, மேன்மையான பண்பு.

அ.தி: குருநானக்கின் சிந்தனையில் உங்களை மிகவும் கவர்ந்திருப்பது எது?

ஆ.ப.ஜெ: ''உண்மை உயர்ந்தது; உண்மையான வாழ்க்கையை வாழ்வது, அதைவிட மேலும் உயர்ந்தது''[58] என்று குருநானக் தேவ் கூறியுள்ளார். அவருடைய நம்பிக்கை, எளிமையானது; மிகவும் மேன்மையானது. சுய - கட்டுப் பாட்டின் அடித்தளத்தில் அவர் வாழ்ந்த வாழ்க்கை, அந்த ஒரு வாழ்க்கை முறை, அந்த ஒரு சக்தி, மனிதர் களை ஒருவர்க்கொருவர் இணைத்ததுடன் குருவோடும் கூட இணைத்து வைத்தது.

அ.தி: உண்மையிலேயே அவருடைய ஆன்மிக வழிமுறை, தார்மிக நெறி சார்ந்த அமைப்புகளாகவும் சமூகநல நிலையங்களாகவும் பரிணமித்து, சாதிபேதமற்ற மக்கள் சமுதாயத்தை உருவாக்கியது. இந்த சமுதாயத்தில், எல்லோரும் எந்தத் தயக்கமும் தடையும் இல்லாமல் கலந்து பழகி, உழைத்து, நேர்மையுடன் வருவாய் ஈட்டி, தங்கள் வருவாயில் ஒரு பகுதியை பொது நலனுக்காக வும் சமுதாய உணவுக்கூடத்திற்காகவும் வழங்கினார்கள்.

ஆ.ப.ஜெ: ''அறவழியில் வாழ்க்கையை நடத்தாவிட்டால் பக்தி நெறிக்கு இடமே இல்லை''[59] என்று குருநானக் தேவ் அறிவித்துள்ளார். செயல்பாடுகள் என்ற வழிமுறையின் மூலமாகத்தான் அவர் தனது கோட்பாடுகளை வெளிப் படுத்திக் காட்டினார். அவரே வலுவாக அடித்தளமிட்ட அமைப்புகளும் வழிமுறைகளும் பிறகு, மலர்ந்து, மணம் பரப்பி பலனளித்தது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது, இந்த பூமியில் பிறந்த, மிகவும் சக்தி படைத்த தலைவராகத் திகழ்ந்தார், அவர். பல மதத் தலைவர்களின் மேன்மையான சிந்தனைகள் எல்லாம் குரு கிரந்த சாஹிப் நூலில் அடங்கியுள்ளன.

அ.தி: நவீன யுக விஞ்ஞானிகளில் உங்களை மிகவும் ஈர்த்தவர் யார்?

ஆ.ப.ஜெ: என்னைப் பொருத்தவரையில் நவீன உலகத்தை உரு வாக்கியத்தில் வேறு யாரையும் விட, மிகவும் முக்கிய பங்கு வகித்தவர், தாமஸ் ஆல்வா எடிசன். நமது இன்றைய நாகரிக வாழ்க்கையை மேம்படுத்தியதில் இவரைவிட அதிகமாக வேறு எந்தத் தனிநபரும் பங்கேற்கவில்லை என்றே சொல்லலாம்.

அ.தி: நீல் பால்டுவின்[60] (Edison: Inventing the Century என்ற புத்தகத்தில், எடிசனின் குழந்தைப் பருவம் பற்றிக் குறிப் பிட்டுள்ளார். குடும்பத்தில் ஏழாவது குழந்தையாகவும் கடைக்குட்டியாகவும் பிறந்த எடிசன், சுமார் நான்கு வயதாகும் வரையில் பேசுவதற்குக் கற்றுக்கொள்ள வில்லை. எடிசனின் தனித்தன்மை பளிச்சிடுகிற ஆளுமைத் தன்மையை பட்டை தீட்டியதில் முக்கியப் பங்கு வகித்த இன்னொரு அம்சம், கேட்கிற திறனை அவர் இழந்துவிட்டதுதான்.

ஆ.ப.ஜெ: நீங்கள் சொல்வது சரிதான். சொல்லப்போனால், எடிசனின் இந்த இயலாமை, தங்கு தடையில்லாமல், தன்னிச்சையாக அறிவைத் திரட்டிக் கொள்கிற தாகத்தைத் தூண்டிவிட்டது. இந்தத் தூண்டுதல், மின்சக்தி செயல்பாடுகள் பற்றிய அன்றைய கோட்பாடுகள் குறித்த பல கேள்விகளை அவரை எழுப்ப வைத்தது.

அ.தி: 'தன்னந்தனியான ஒரு பருந்து' என்று பிரியத்துடன் அவர் நினைவுகூரப்படுகிறார்.

ஆ.ப.ஜெ: தனது சொந்த யோசனைகளையும், கோட்பாடுகளையும் நிஜமாக்கிக் காட்டுவதற்குத் தேவையான அனைத்து ஆய்வுகளையும், தனது பரந்துபட்ட மனம், அசாத்திய நினைவுத்திறன், செயல்திறன் மற்றும் நிதானமான, பொறுமையான அணுகுமுறை ஆகியவற்றைப் பயன் படுத்தி, ஆர்வத்துடன் மேற்கொண்டிருந்தார். இந்த விதத்தில் பார்த்தால், அவர் 'தன்னந்தனியான ஒரு பருந்துதான்' என்பதில் சந்தேகம் இல்லை.

அ.தி: எடிசன் காலத்தில் வாழ்ந்த விஞ்ஞானிகள் எல்லாம் அப்போது மிகவும் பிரபலமடைந்திருந்த மின்சக்தி கோட்பாடுகளில் ஒரேயடியாக ஆர்வம் கொண்டிருந்த சமயத்தில், அவை குறித்து பாரபட்சமில்லாமல் கேள்விகளை எழுப்பி, துணிவுடன் அவற்றை ஆட்சேபிக்கிற ஒரு பாணியை அவர் பின்பற்றி வந்தார் என்று **Edison: A Biography** என்ற நூலில் மாத்யு ஜோசஃப்சன்[61] குறிப்பிட்டுள்ளார்.

ஆ.ப.ஜெ: பரந்துபட்ட ஆய்வுக் கண்ணோட்டம் தான் நடைமுறை ரீதியிலான, அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகளின் உலகத்தில் இளம் விஞ்ஞானிகளை ஒரு தனித்தன்மை யுடன் படிப்படியாக வேரூன்ற வைக்கிறது.

அ.தி: உங்களைப்போலவே தாமஸ் ஆல்வா எடிசனும் குழந்தைப் பருவ நாட்களின் செலவுகளுக்காக ஒரு சிறிய வேலையில் ஈடுபட்டு சம்பாதித்திருக்கிறார்.

ஆ.ப.ஜெ: என்னைவிட மிகப் பெரிய வேலையில் ஈடுபட்டார், அவர். நான் செய்ததெல்லாம் என் சகோதரருடன் சேர்ந்து நாளிதழ்களை விநியோகம் செய்தது தான். ஆனால், அசாத்திய திறமை கொண்ட எடிசனோ 14 வயது பிஞ்சு பருவத்திலேயே ஒரு சிறிய பத்திரிகையையே சொந்தமாகவே ஆரம்பித்து வெளியிட்டு வந்தார். '***தி வீக்லி ஹெரால்டு***' (The Weekly Herald) என்ற அந்தப் பத்திரிகை ரயில்களில் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. உலகத்திலேயே முதல் தடவையாக ரயிலிலேயே அச்சுக் கோர்க்கப்பட்டு, அச்சடிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்ட பத்திரிகை இதுதான். இந்த சிறு வெளியீட்டுத் திட்டம் அந்த நாட்களிலேயே அவருக்கு தினமும் பத்து டாலருக்கும் அதிகமான வருவாயை ஈட்டித் தந்தது. இந்த வருவாயின் பெரும் பகுதியை தனது வீட்டின் அடித்தளத்தில் அவர் ஆரம்பித்திருந்த ரசாயன ஆய்வுக் கூடத்திற்காக செலவழித்தார்.

அ.தி: அவருடைய வீட்டு வாசலைத் தேடி வாய்ப்பு எப்படி வந்தது?

ஆ.ப.ஜெ: தனது 15ஆவது வயதில், தந்தி அனுப்புகிறவர்களின் வேலை சம்பந்தப்பட்ட அடிப்படை நுணுக்கங்களில் எடிசன் கரைகண்டவராக இருந்தார். அமெரிக்க உள் நாட்டு யுத்தத்தில் பணியாற்றுவதற்காக தந்தி அனுப்பு கிறவர்களுக்கு அழைப்பு வந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட எடிசன், தந்தி அனுப்புகிற வேகத்தையும், தந்தியின் சங்கேத குறியீடுகளை அனுப்பு வதிலும் பெறுவதிலும் தனது திறமையையும் மேம் படுத்திக்கொண்டதோடு மட்டுமல்லாமல் இந்த தந்தி சாதனத்தை மேம்படுத்துவதற்கான ஆய்வுகளிலும்கூட ஈடுபட்டார். தானியங்கி முறையில் தகவல்கள் திரும்பத் தரும் ஒரு 'ஆட்டோமெடிக் ரிபீட்டர்' (automatic repeater) என்ற சாதனம்தான் அவருடைய துல்லியமான முதலாவது கண்டுபிடிப்பாக உருவானது. ஆளில்லாத நிலையங்களுக்கிடையே தந்தி சிக்னல்களை இந்த சாதனம் அஞ்சல் செய்தது. யார் வேண்டுமானாலும் தங்களுக்குரிய வேகத்திலும் தங்களுடைய வசதிப் படியும் இந்த 'மோர்ஸ் கோட்' (Morse Code) முறை யிலான சங்கேதக் குறிகளை சுலபமாகவும் துல்லிய மாகவும் எழுத்து வடிவத்திற்கு கொண்டுவரக்கூடிய வசதியும் கொண்டது, இந்த சாதனம்.

அ.தி: Engines of Our ingenuity என்ற புத்தகத்தில் ஜான்.எச். லீன்ஹார்ட்டு[62], ஓர் அழகான வாக்குப் பதிவு மின் சாதனத்தை எடிசன் தயாரித்திருந்தது பற்றிக் குறிப் பிட்டுள்ளார். மஸாசுசெட்ஸ் சட்டமன்ற உறுப்பினர் களிடம் அதை விற்பனை செய்வதற்கு எடிசன் முயன்ற போது அதை முற்றிலுமாக நிராகரித்துவிட்டார்கள். அவரைக் கடுமையாக விமர்சித்து அவரை வசைமாரிப் பொழிந்தார்கள். ''சட்டம் இயற்றுவதில் சிறு பான்மை யினர் கொண்டுள்ள செல்வாக்கு என்கிற ஒரே நம்பிக்கையை உங்களுடைய கண்டுபிடிப்பு நாசமாக்கப் போவது மட்டுமல்லாமல் பெரும்பான்மையினர் முன்பு இவர்களை மண்டியிட வைத்துவிடும். கண்டிப்பாக இது

எங்களுக்குத் தேவைப்படவே படாது'' என்று அனுபவம் வாய்ந்த ஒரு அரசியல்வாதி எடிசனை சாடினார்.

ஆ.ப.ஜெ: அரசியல்வாதிகள் என்பவர்கள் எல்லா இடங்களிலும், எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் சிந்தனை செய்வார்கள் போலும்.

அ.தி: மக்கள் வாங்க விரும்பாதவற்றைக் கண்டுபிடிப்பதில் காலத்தை வீணடிக்கவே கூடாது என்பதை இந்த அனுபவத்திலிருந்து எடிசன் பாடம் கற்றுக்கொண்டார். இந்த நிராகரிப்புக்குப் பதிலடி கொடுப்பது போல தகவல் தருகிற சாதனத்தில் மிகவும் சக்தி வாய்ந்த ஒன்றை கண்டுபிடிப்பதில் மூழ்கிவிட்டார். 1903-ஆம் வருடத்தில் ஒலி அமைப்புடன், மவுனமாக அசையும் உருவங்களை இணைத்து, பேசும் படத்தை உருவாக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார். இப்படி உருவாக்கப்பட்ட ***தி கிரேட் ட்ரையின் ராபரி*** (The Great train robbery) என்ற படம்தான் திரைப்படத் தொழிலின் தொடக்கமாக அமைந்தது.

ஆ.ப.ஜெ: இந்த முறையில் எத்தனையோ விஷயங்களை எடிசன் உருவாக்கி வந்தார். முதலாவது உலகப்போர்[63] மூண்ட சமயத்தில் பாதுகாப்பு சாதனங்களையும் நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் போர்க் கப்பல்களையும் உருவாக்கித் தருவதில் முனையும்படி அமெரிக்க அரசாங்கம் இவரைக் கேட்டுக் கொண்டது. இந்த காலகட்டத்தில் ரப்பர், கான்க்ரீட் மற்றும் எத்தினால் ஆகியவற்றின் பயன்பாட்டை மேம்படுத்துவது தொடர்பான பல முக்கிய கண்டுபிடிப்புகளை வழங்கினார். இந்த அனைத்து கண்டுபிடிப்புகளும், அவற்றைத் தொடர்ந்து வந்த காலத்தில் மனித வாழ்க்கை முறையை மேம்படுத்தியது. எடிசனின் கண்டுபிடிப்புப் பணி பற்றி நான் படிக்கிற போது அவர் மீது எனக்கு ஆழ்ந்த மதிப்பும் மரியாதையும் ஏற்படுகிறது.

அ.தி: மனித குலம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் என்று ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால், மனித

வாழ்க்கையில் பெருமளவுக்கு மாறுதல்களை உண்டாக்கியது யாரென்று நினைக்கிறீர்கள்?

ஆ.ப.ஜெ: ஆபிரகாம் லிங்கனும் காந்திஜியும்.

அ.தி: *எழுச்சி தீபங்களில்* நீங்கள் விவரித்துள்ள கனவுக் காட்சியில் லிங்கனும் இடம் பெற்றுள்ளார். உங்களுடைய மனதின் ஓர் அங்கமாக அவர் அமைந்துள்ளது போலத் தோன்றுகிறது.

ஆ.ப.ஜெ: எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை ஜங் (Jung) சொல்வதுபோல ஒன்றிணைந்த உணர்வு நிலை என்பது சிறந்த கருத்தாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால், இங்கே ராஷ்டிரபதி பவனில் நான் பணியாற்றுகிறபோது, இந்த உயர்ந்த ஆத்மாவிடமிருந்து எவ்வளவோ நான் கிரகித்துக் கொள்கிறேன். அவருடைய வாழ்க்கை, ஒரு பெரும் போராட்டமாக இருந்தது. அவருடைய இலக்கு மிகவும் பெரியது. உள்நாட்டு யுத்தம் நடத்தபோது அவர் ஜனாதிபதியாக இருந்தார். எத்தனை எத்தனையோ விமர்சனங்களையும், இகழ்ச்சி உரைகளையும் அவர் துணிவுடன் எதிர்கொண்டார்.

அ.தி: குற்றம் குறை சொல்கிற விமர்சனங்களை எதிர்கொள்வது, உண்மையிலேயே மிகக் கடுமையான ஒரு விஷயம். விமர்சனங்களைக் கண்டு ஒரு தலைவர், அஞ்சி விட்டால், அவர் தலைவராக இருக்க முடியாது. தன்னைச் சுற்றியுள்ள - அதிகாரிகள், நண்பர்கள், ஊடகங்கள் மற்றும் உலகம் சொல்வதை பின்பற்றுபவராக இப்படிப் பட்ட தலைவர் மாறிவிடுகிறார். சொல்லப்போனால், பொம்மலாட்டக் காட்சியின் ஒரு பொம்மையாக மாறிவிடுகிறார்.

ஆ.ப.ஜெ: அடிமைகளை விடுவிப்பதில் ஆபிரகாம் லிங்கன் தோல்வியடைந்தது பற்றி செல்வாக்கான *'நியூயார்க் ட்ரிப்யூன்'* (New York Tribune) இதழின் நிறுவன ஆசிரியரான ஹோரஸ் கிரீலி ஒரு தடவை கடுமையாக விமர்சித்திருந்தார். The Prayer of Twenty Millions[64] என்ற தலைப்பிட்ட தனது தலையங்கத்தில் இந்தப் பிரச்சினை

யில் லிங்கன் உறுதியுடன் செயல்படவில்லை என்றும் குற்றம் சாட்டி இருந்தார். ஜனாதிபதி லிங்கன், பின்வரு மாறு இதற்குப் பதிலளித்திருந்தார்.

''எந்த ஒரு நோக்கத்திற்கும் எனது செயல்பாடு ஊறு விளைவிக்கும் என்று நான் நம்புகிற போதெல்லாம் நான் தயக்கத்துடன் செயல்படுவேன். அந்த நோக்கத்திற்கு எனது செயல்பாடுகள் உறுதுணையாக அமையும் என்று நான் நம்புகிற போதெல்லாம் அதிக ஈடுபாட்டுடன் முனைந்து செயல்படுவேன். எனது தவறுகள் சுட்டிக் காட்டப்படுகிறபோது அவற்றைத் திருத்திக்கொள்வதற்கு முயற்சி செய்வேன். உண்மையானவையாகத் தோன்று கிற புதிய கருத்துகளை வெகு வேகமாக நான் ஏற்றுக் கொள்வேன்.''

அ.தி: இப்படித்தான் காந்திஜியும்கூட உலகத்தின் விமர்சனங் களை எதிர்கொண்டார்.[65]

ஆ.ப.ஜெ: இப்படித்தான் அவர் இந்த தேசத்தின் தந்தையாக உயர்ந் தார். விமர்சனங்களைக் கண்டு காந்திஜி பின்வாங்கி விடவில்லை. தனது முனைப்பில் தொடர்ந்து முன்னேறி, இன்றைய இந்தியாவைச் செதுக்கி, செதுக்கி உருவாக் கினார்.

அ.தி: காந்திஜி பற்றி, குறிப்பாக நாம் சுதந்திரம் பெற்றபோது நிகழ்ந்தவற்றைக் கண்டு அவர் அனுபவித்த வேதனை பற்றி நீங்கள் அடிக்கடி பள்ளிக் குழந்தைகளிடம் சொல்லி வருகிறீர்கள்.

ஆ.ப.ஜெ: ''ஆம்... நீங்கள் சொல்வது சரிதான். விடலைப் பருவத்தில் இருந்த நான், அன்றைய தினமான 1947 ஆகஸ்டு 16ஆம் நாள் விழித்தெழுந்தபோது பத்திரிகை களில் இரண்டு புகைப்படங்களைப் பார்த்தேன். ஒரு படத்தில் தில்லி செங்கோட்டையில் நமது சுதந்திர இந்தியாவின் மூவர்ணக் கொடியை பிரதமர் ஜவகர்லால் நேரு ஏற்றிக் கொண்டிருந்தார். இன்னொரு படத்தில், வங்காளத்தில் காந்திஜி உண்ணாவிரதம் மேற்கொண் டிருந்தார். புதிதாக உருவாக்கப்பட்ட தேசங்களின்

வேதனைகள் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தன. இந்திய தேசத்தில் ஓர் உயர்ந்த ஆத்மா- மகாத்மா- இருந்ததும் அதே அளவுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

அ.தி: 1915-ல் தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்திஜி திரும்பி வந்த குறுகிய காலத்திற்குள் குருதேவர் ரவீந்திரநாத தாகூர் அவருக்கு மகாத்மா என்ற படத்தை வழங்கினார்.

ஆ.ப.ஜெ: விடுதலைப் போராட்டப் புயல்கள் வீசிக் கொண்டிருந்த போது, காந்திஜியும் ரவீந்திரநாத் தாகூரும் இந்தியர் களுக்கு உன்னதமான ஆன்மிக நங்கூரங்களாகத் திகழ்ந்தார்கள்.

அ.தி: மனதின் விடுதலை மற்றும் ஆன்மிக இறையாண்மை மூலம் வெவ்வேறு தேச மக்களிடையே பிரபஞ்ச மனித நேயம் நிறைந்த நல்லிணக்கம் மலர வேண்டும் என்று ரவீந்திரநாத தாகூர் கனவு கண்டார். 1913-ல் நோபல் பரிசை[66] வென்ற அவர்தான் இந்தப் பெருமையைப் பெற்ற முதலாவது ஆசிய எழுத்தாளர்.

ஆ.ப.ஜெ: மகத்தான இந்திய நாகரிகம் உருவாக்கித் தந்தவர், ரவீந்திரநாத் தாகூர்.

அ.தி: மகாத்மா பட்டம் கிடைத்ததும், இந்தியாவின் பிரச்சினை களுக்கான பொறுப்பு மகாத்மாவின் சொந்தப் பொறுப்பாகிவிட்டது.

ஆ.ப.ஜெ: அதற்கு முன்பே, அவரது சிந்தனையில் மக்கள் நலன்தான் மையம் கொண்டிருந்தது. 2004 செப்டம்பரில் நான் தென்னப்பிரிக்கா சென்றிருந்த சமயத்தில் எத்தனையோ பேர், தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தியர்களின் வாழ்க்கையை காந்திஜி அடியோடு மாற்றிவிட்டார் என்று என்னிடம் சொன்னார்கள். ''தேவைப்படும்போது மனித குலம் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய தலைசிறந்த சக்தி, அஹிம்சை. மனிதனின் அறிவுக்கூர்மையால் உரு வாக்கப்பட்ட சர்வ வல்லமை படைத்த நாச ஆயுதத்தை விட மிகவும் வலிமை வாய்ந்தது, அது''[67] என்று காந்திஜி அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

அ.தி: Gandhi : His Life and Message for the World என்ற புத்தகத்தில்,[68] லூயிஸ் ஃபிஷ்ஷர், இந்தியாவில் வெவ் வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள், அமைதியாகவும் சுதந்தரமாகவும் ஒன்றிணைந்து வாழ்கிற ஆசிரமத்தை காந்திஜி ஆரம்பித்தது பற்றி எழுதியுள்ளார். அவரிடம் எப்போதும் ஒளிவு மறைவே கிடையாது. எந்த ரகசியமும் இல்லை. தனது வாழ்க்கை முழுவதும் இனியவராகவும் தோழமை கொண்டவராகவும் வாழ்ந்து வந்தார். அவர் இந்தியா திரும்பி வந்த போது, துறை முகத்தில் திரண்டிருந்த மக்கள் கூட்டம் அவர் வருகை யைக் கொண்டாடியது. ஆனால், அது அவருக்கு மகிழ்ச்சி தரவில்லை. இந்தியாவின் பெரும்பாலான மக்கள் கிராமத்தில் ஏழ்மையில் வாழ்வதைப் போலவே தனது வாழ்க்கையையும் அமைத்துக்கொள்ள அவர் விரும்பினார். அவர் பிறந்த தேச மக்களில் ஒருவராக, அந்த ஏழை மக்களில் ஒருவராக அவர் இருக்க விரும்பினார். ஆனால், நீண்ட காலம் அவர்களைவிட்டுப் பிரிந்து இருந்துவிட்டார். அதனால், தேசம் முழுவதும் தனது சுற்றுப் பயணத்தை ஆரம்பித்தார். அதுவும் மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டியில் அந்தப் பயணத்தை மேற் கொண்டார். அப்போது நிஜ இந்தியாவின் பலதரப்பட்ட மக்களையும் அவர்களின் வாழ்க்கை முறையையும், அவர்கள் மேற்கொண்டிருந்த வேலை முறையையும் அவர் பார்த்தார். விரைவிலேயே 'ஹோம் ரூல்' இயக்கத்தின் இந்தியத் தலைவராக உருவெடுத்தார். தங்களுக்கு மிகவும் நெருக்கமானவராக இருப்பதால், மக்கள் கூட்டம் அவர்மீது அன்பைப் பொழிந்தது.

ஆ.ப.ஜெ: பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியாவை மீட்பதற்கான நீண்ட விடுதலைப் போராட்டத்திற்கு அவர் தலைமை ஏற்றது, மிகவும் இயல்பாக அமைந்துவிட்டது. அவர் அறைகூவல் விடுத்ததை ஏற்று ஒட்டு மொத்த தேசமும் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தது. அன்று எதுவுமே செயல்படவில்லை. சாலையில் எந்த வாகனமும் ஓடவில்லை. தபால் விநியோகம் நடைபெறவில்லை. பிரிட்டிஷாருக்கு மிகவும் முக்கியமான விஷயமான

தொழிற்சாலைகள் இயங்கவில்லை. தந்தித் தொடர்புகள் ஸ்தம்பித்தன. தங்களுடைய தாய்நாட்டிலிருந்து பிரிட்டிஷார் துண்டிக்கப்பட்டார்கள். அப்போதுதான் அவர்கள் முதல் தடவையாக இந்தியாவில் காந்திஜியின் சக்தி என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது... எந்த அளவுக்கு வலுவானது என்பதை உணர்ந்தார்கள்.

அ.தி: ஏகநாத் ஈஸ்வரன் எழுதிய Gandhi, The Man : The Story of His Transformation[69] என்ற புத்தகத்தை நான் படித் திருக்கிறேன். 1930-ல், தண்டி யாத்திரையின் உத்வேக உணர்ச்சி இந்திய சுதந்திரத்திற்கு வழிகாட்டும் ஒளி விளக்காக பிரகாசித்தது. கடலிலிருந்து எடுக்கப்படும் உப்பு பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டில் இருந்தது. உப்பு வாங்குவதற்காக இந்திய மக்கள் பிரிட்டிஷ் அரசாங் கத்திற்கு வரி செலுத்த வேண்டி இருந்தது. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியை அமைத்த பல ஆதிக்க வழிமுறைகளில், உப்புத் தொழிலை வெள்ளையர்கள் தங்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்ததும் ஒன்று என்று காந்திஜி நினைத்தார். கடலை நோக்கிச் செல்கிற 140 மைல் (சுமார் 200 கிலோ மீட்டர்) யாத்திரையைத் தொடங்கினார். உப்பு சத்தியாகிரஹம் என்ற அதை அவர் ஆரம்பித்தபோது சில நூறு தொண்டர்கள் மட்டுமே அவரைப் பின்தொடர்ந்தார்கள். ஆனால், கடலை எட்டிய போது பல்லாயிரக்கணக்கான மக்கள் பெரும் கூட்டமாகத் திரண்டிருந்தார்கள். யாத்திரையின் வழியில் உள்ள பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள், அதில் சுதந்திர தாகத் துடனும் ஆர்வத்துடனும் பங்கேற்றார்கள்.

மக்கள் கூட்டம் கடலை அடைந்ததும், ஒரு கைப்பிடி உப்பை காந்திஜி எடுத்தார். அது ஓர் அடையாள நடவடிக்கை! எல்லோரையும் அதைப்போலவே செய்யச் சொன்னார். காவல் துறையினர், கடற்கரையிலிருந்து அந்த மக்கள் கூட்டத்தை அப்புறப்படுத்தியதும், உப்புத் தொழிற்சாலைக்குச் சென்று, அங்கிருந்த உப்பை எடுப்பது என்று மக்கள் தீர்மானித்தார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் தொழிற்சாலைகளின் வாசலில் படைவீரர்

களை நிறுத்தி வைக்கும்படி உத்தரவிட்டது. யாரையும் உள்ளே நுழைய அனுமதிக்கவில்லை. எந்த ஆயுதமும் இல்லாத ஆர்ப்பாட்டக்காரர்கள் படைவீரர்களை நெருங்கினார்கள்; உள்ளே நுழைவதற்கு முயன்றார்கள். ஒரு சமயத்தில் ஐந்து ஐந்து பேராக உள்ளே நுழைந்தார்கள். அவர்களால் மேலும் அடியெடுத்து வைக்க முடியாத அளவிற்கு படைவீரர்கள் தாக்கிச் சாய்க்கிற வரையிலும் தங்கள் முயற்சியைத் தொடர்ந்தார்கள். காயம் பட்டு விழுந்தவர்களை பெண்கள் தூக்கிக் கொண்டு போய் காயங்களுக்கு மருந்திட்டார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களில் யாருமே வன்முறையில் ஈடுபடவே இல்லை. அஹிம்சைத் தத்துவத்தின் வலுவான சக்தியை வெளிப்படுத்துகிற ஒரு காட்சியாக அந்தப் போராட்டம் அமைந்துவிட்டது! நாகரிக உலகம் அதைக் கண்டு நடுநடுங்கியது!

ஆ.ப.ஜெ: காந்திஜியின் பல நடவடிக்கைகள் பெருமளவுக்கு வெற்றியடைந்தன. வன்முறையைப் பயன்படுத்தாத ஒரு எதிரிக்கு எதிராக என்ன நடவடிக்கையை எடுப்பது என்று பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குப் புரியாததுதான் அவருடைய வெற்றிகளுக்குக் காரணம். ஆனால், உலகம் முழுவதிலும் உள்ள ஊடகங்கள் காந்திஜி பற்றியும் அவருடைய நடவடிக்கைகள் பற்றியும் குரல் கொடுத்தன. இந்தக் குரல் ஒலித்திருக்காமல் போயிருந்தால், பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்திற்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்காது. வன்முறையைப் பின்பற்றாத மக்களுக்கு எதிராக பிரிட்டிஷ் அரசாங்கம் கட்டவிழ்த்து விட்ட வன்முறையைக் கண்டு உலகெங்கிலும் உள்ள மக்கள் காந்திஜியின் போராட்டத்திற்கு மேலும் மேலும் அதிக ஆதரவு கொடுத்தனர். தனது தேச மக்களிடம் அவர் இந்த அளவுக்கு நெருக்கமானவராக இருப்பதால் உலக மக்கள் அவரை நேசித்தார்கள். பத்திரிகைகளுடன் மிக நெருக்கமாக இருந்து பணியாற்றிய அவர், எந்த ஒளிவு மறைவும் இல்லாமல் செயல்பட்டது அவருடைய சேவையின் முக்கியமான ஓர் அம்சம்.

அ.தி: மதம் பற்றிய அவருடைய கருத்துகளில் பெருமளவுக்குக் குழப்பம் காணப்படுகிறதே?

ஆ.ப.ஜெ: எனக்கு அதில் எந்தக் குறையும் தெரியவில்லை. நோபல் அறிஞர் அக்டோவோ பாஸ்[70] (Octavo Poz) இதைப் போன்ற ஒரு கேள்விக்கு பின்வரும் பதிலை அளித்துள்ளார்: ''சாதுக்கள், கணிப்புகளுக்கு அப்பாற்பட்டவர்கள். போற்றப்படக் கூடியவர்கள் அவர்கள்.'' சொந்த தேசத்தில் பிறந்த முஸ்லிம்களும் ஹிந்துக்களும் வன்முறையில் ஈடுபட்டபோதெல்லாம் அது ஆங்கிலேயர்களுக்கு எதிராக இருந்தாலும் சரி, அல்லது பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டாலும் சரி, அந்த மோதல் நிறுத்தப்படுகிற வரையிலும் காந்திஜி உண்ணாவிரதம் இருந்தார். 1947-ல் கிடைத்த சுதந்தரம், ஒரு ராணுவ வெற்றி அல்ல. மனித மன வலிமையின் வெற்றி. ஆனாலும் காந்திஜியின் விருப்பத்திற்கு மாறாக, இந்த தேசம், இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்று துண்டாடப்பட்டது. அவரது வாழ்க்கையின் கடைசி மாதங்களை வன்முறையை நிறுத்தி அமைதியை நிலைநாட்டுவதிலேயே செலவிட்டார். இந்த முயற்சியில் மரணத்தின் விளிம்புக்குச் செல்கிற வரையில் உண்ணாவிரதம் இருந்தார். இறுதியில் இந்த ஒரு நடவடிக்கை கலவரங்களைத் தணித்தது.

அ.தி: காந்திஜியின் வழிகாட்டுதலை எப்படி ஆழ்ந்து நோக்குகிறீர்கள்?

ஆ.ப.ஜெ: தங்களுடைய வாழ்க்கை முழுவதுமே ஒடுக்கி வைக்கப்பட்டு இருப்பவர்களின் உரிமைகளுக்காக காந்திஜி போராடினார். தங்களுடைய உரிமைகளுக்காக, துணிந்து நின்று கொடுமைக்கு எதிராகப் போராடுவதற்காக அவர்கள் அனைவருக்கும் ஊக்கமளித்தார். ஒரே குறிக்கோளுடன் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடினால், ஒருவரின் உரிமைகளுக்குப் போராடுவது எவ்வளவு சுலபம் என்பதையும் இந்தப் போராட்டம் எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பதையும் ஒட்டு மொத்த உலகிற்கும் அவர் நிரூபித்துக் காட்டினார். In Light of India

என்ற புத்தகத்தில் அக்டோவா பாஸ், ''அவர் (காந்திஜி) அதிகாரத்தையோ புகழையோ விரும்பவில்லை. மற்றவர்களுக்கு, குறிப்பாக துர்பாக்கியசாலிகளுக்கு சேவை செய்வதில்தான் நாட்டம் கொண்டிருந்தார். இதை தனது வாழ்க்கையிலும் மரணத்திலும் நிரூபித்துக் காட்டிவிட்டார்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அ.தி: இது உண்மைதான், உலகத்தில் எங்கெல்லாம் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக் கெல்லாம் ஓர் உதாரணமாகத் திகழ்கிறார். காந்திஜி.

ஆ.ப.ஜெ: தென்னாப்பிரிக்காவிலும், வட அமெரிக்காவிலும் கறுப்பு இன மக்கள் நடத்திய போராட்டத்தையும், தென்னமெரிக்காவில் அமெரிக்க - இந்தியர்கள் (Ameri-Indian) நடத்திய போராட்டத்தையும் இதற்குச் சிறந்த உதாரணமாகச் சொல்லலாம். காந்திஜியின் சாதனையைப் போற்றிப் புகழ்ந்துள்ள பல மேதைகள் மற்றும் தலை வர்களில் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனும் ஒருவர். மார்ட்டின் லூதர் கிங், ஜூனியர் தலாய் லாமா மற்றும் உலகத்தின் அனைத்து அமைதி இயக்கங்களை நடத்துபவர்களும் காந்திஜியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி முன்னேறி யிருக்கிறார்கள். ஒரு தேசத்தை மீட்பதற்காக உலகளா விய நல்லிணக்கத்தைக் கைவிட்ட அவர், மரணம் அடைந்த பிறகு அதிசயப்படத்தக்க வகையில் உலகத் தின் குடிமகனாக உயர்ந்துவிட்டார். குறிப்பாக காந்திஜி பற்றி ஐன்ஸ்டீன் கூறியுள்ள வார்த்தைகளை நினைத்துப் பார்க்கிறேன்.

''வன்முறை வழிகளை கைவிடாதவர்களைக்கூட வன் முறை இல்லாமல் வெற்றிகொள்ள முடியும் என்பதை உங்களுடைய செயல்கள் மூலம் நீங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள்.''[71]

அ.தி: பாபா சாஹேப் அம்பேத்கருக்கும் காந்திஜிக்கும் இடையே சில குறிப்பிட்ட பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு இருந்ததாக சொல்லப்படுகிறதே?

ஆ.ப.ஜெ: கருத்து வேறுபாடு என்பது பொருத்தமான ஒரு வார்த்தை யாக இருக்காது என்று நினைக்கிறேன். காந்திஜி, பாபா சாஹேப் இருவருமே மக்களின் பிரதிநிதிகள். இந்த மண்ணின் நிஜ மைந்தர்கள். தலைமைத் தகுதி என்பதற்கு முழு அர்த்தமாகத் திகழ்ந்த தலைவர்கள். ஆற்றல், ஒழுக்கம், மேன்மையான செயல் திறன் என்ற குணாம் சங்களை இயற்கையாகவே பெற்றிருந்த இவர்கள் இருவருமே புதிய பாரதத்தின் அடையாளச் சின்னங்கள். எதிரெதிர் துருவங்கள் என்பது நிஜத்தின் அடிப்படை அம்சம். சூரியன் உதயமாகும்போது வானம் கிழக்கு மேற்கு என்று பார்க்கப்படுகிறது. கிழக்கு எங்கே இருக்கிறது? மேற்கு எங்கே இருக்கிறது?

அ.தி: காந்திஜியின் பெருமையை கிரகித்துக் கொள்ள முயல் வோமா? அது எந்த அம்சத்தில் இடம் பெற்றுள்ளது?

ஆ.ப.ஜெ: இந்தியாவின் சுதந்திர தாகத்தைப் பொங்கி எழச் செய்து, அதற்கு ஒரு வடிவம் கொடுத்து, நாடு தழுவிய மக்கள் இயக்கமாக உருவெடுக்க வைத்து, சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரையும் வெள்ளை ஏகாதிபத்தியத் திற்கு எதிராக அணி திரளவைத்ததில் காந்திஜிக்கு மிகவும் முக்கிய பங்கு உண்டு. ஆனாலும் கூட, சுதந்தர இந்தியா பிளவுபட்ட தேசமாகத்தான் கிடைத்தது. நவீனமயமாக்கல் மற்றும் தொழில் மயமாக்கல் திட்டத் திற்காக உறுதி பூண்டது. காந்திஜி கனவு கண்ட இந்தியா, இதுவல்ல.

அ.தி: சுதந்தரப் போராட்டத்தின் போது இந்திய விஞ்ஞானிகள் பலர் உயர்ந்த நிலையை எட்டி சர்வதேச அளவில் புகழ் பெற்று, பாராட்டப் பெற்றார்கள். அவர்கள் தேசிய மனோபாவத்திற்கு மெருகு சேர்த்தார்களா?

ஆ.ப.ஜெ: மனோபாவத்திற்கு மட்டுமல்ல. அதற்கு நிச்சயமாக மெருகூட்டினார்கள். ஓர் அடையாளத்திற்கான அடித் தளத்தையும் அவர்கள் நிர்மாணித்தார்கள் என்பதும் உண்மை. இந்த அடித்தளத்தில்தான் நவீன இந்தியா நிர்மாணிக்கப்பட்டது. ஒரு பக்கம் தேச விடுதலைக்கான

அரசியல் முனைப்பு, இன்னொரு பக்கம் நவீன இந்தியாவின் நிர்மாணப்பணி என்ற இரண்டும் அடுத்தடுத்துத் தொடர்ந்தன. இந்திய மக்களுக்கு, நமது இந்த விஞ்ஞானிகள் அசாத்திய நம்பிக்கையை ஊட்டினார்கள்.

அ.தி: அந்த 20-30 வருட காலகட்டத்தில் இந்திய விஞ்ஞானம் எழுச்சியடைந்ததை நமது தேசம் கண்கூடாகப் பார்த்தது.

ஆ.ப.ஜெ: ஆம், நீங்கள் சொல்வது சரிதான். 1920-40களில் கிட்டத்தட்ட அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வுக்கு இணையாக இந்திய அறிவியலும்கூட எழுச்சி பெற்றது. ஜகதீஸ் சந்திர போஸ், சி.வி.ராமன், எம்.விஸ்வேஷ்வரய்யா, மேகநாத் சஹா, ஸ்ரீநிவாச ராமானுஜன், சுப்பிரமணியன் சந்திரசேகர் மற்றும் எத்தனையோ அறிவுக் கூர்மை பிரகாசிக்கும் உள்ளங்கள் இந்திய தேசியத் தன்மையை ஒளிர வைத்தன.

அ.தி: குறிப்பாக உங்களை மிகவும் ஈர்த்தவர் யார்?

ஆ.ப.ஜெ: இவர்கள் அனைவருமே என்னைக் கவர்ந்திருந்தாலும் குறிப்பாக ஸ்ரீநிவாச ராமானுஜன் எனக்கு உத்வேக சக்தியாக அமைந்திருந்தார். சில விஷயங்களில் அவருக்கும் எனக்கும் ஒற்றுமைகள் உண்டு. அவரைப் போலவே எனது ஆரம்ப வாழ்க்கையும் எளிமையாக அமைந்திருந்தது. எனது அப்பா, படகு கட்டுபவர், அவருடைய அப்பாவோ ஒரு ஜவுளிக் கடையில் எழுத்தராக வேலைப் பார்த்தார். நாங்கள் இருவருமே இறைசக்தியின் அருளுக்கும் ஆசிகளுக்கும் பாத்திரமானவர்கள். எங்கள் இருவருக்கும் இடையேயான ஒற்றுமைகள் அவ்வளவுதான். நானோ சாதாரண ஒரு மாணவன். ஆனால், தனது பன்னிரெண்டாவது வயதிலேயே ராமானுஜன் திரிகோண விதியில் கரைகண்டுவிட்டார். தனது ஆசிரியர்களையே பிரமிக்க வைக்கும் அளவுக்கு அதி நவீன தியரோம்களைக் கண்டுபிடித்தார்.

அ.தி: ராபர்ட் கனிஜெல், The Man Who Knew Infinity[72] என்ற புத்தகத்தில், சாதாரண மனிதர்களால் கடலின் அலைகளைப் பார்க்க முடிவதைப்போல கணிதம் சம்பந்தப்

பட்ட தனித்துவம் நிறைந்த கருத்தாக்கங்களை தனது தொலைநோக்குக் கண்ணோட்டத்தில் ராமானுஜனால் கண்டு கொள்ள முடிந்தது என்று எழுதியுள்ளார்.

ஆ.ப.ஜெ: கணிதத்திலேயே முழு மூச்சாக அவர் கவனம் செலுத்திய தால் மற்ற பாடங்களில் அவர் மந்தமாக இருந்ததுதான் வேடிக்கை. எண்கள் கோட்பாட்டில் தனது ஆசிரியர் களையெல்லாம் அவர் விஞ்சி நின்றார். ஆனால், மற்ற பாடங்களில் அவர் கவனம் செலுத்தவில்லை. போது மான அளவுக்கு அவரால் ஆங்கிலத்தில் பேச முடிந்தது. ஆனால், ஆங்கிலப் பாடத்தில் தோல்வியடைந்து விட்டார். சரித்திரம் மற்றும் அறிவியல் பாடங்களிலும் இதே கதைதான்.

அ.தி: பிறகு, அவர் வாழ்க்கையில் அதி அற்புதமான ஒரு திருப்பம் வந்தது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இருந்த, புகழ் பெற்ற ஜி.எச்.ஹார்டிக்கு ஒரு கடிதம் எழுதி, அத்துடன் தன்னுடைய நூறு தேற்றங்களை இணைத்து ராமானுஜன் அனுப்பி வைத்தார். ''அவற்றை ஒரு தடவை பார்த்தாலே போதும்... தலைசிறந்த கணித வல்லுநரால் மட்டுமே இப்படி எழுத முடியும் என்பது புலப்படும். அவை உண்மையாகத்தான் இருக்கும். அவை உண்மையானவை அல்ல என்றால், அவற்றை கண்டுபிடிப்பது பற்றி யாராலும் கற்பனை செய்திருக்க முடியாது'' என்று கனிஜெல் குறிப்பிட்டுள்ளார்.

ஆ.ப.ஜெ: அருண்... ராமானுஜன் பற்றி நீங்கள் நிறைய படித்திருப்பது போலத் தோன்றுகிறதே?

அ.தி: உங்களுடன் பணியாற்றுவது எப்போதுமே சுலபமான வேலையில்லையே? ராமானுஜன் பற்றி சுவாரஸ்யமான பல விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. அவருடைய மன ஆற்றல் பற்றி நம்ப முடியாத வகையில் சொல்லப்படுகிற பல சம்பவங்களும்கூட உண்டு.

ஆ.ப.ஜெ: ஒரு சம்பவம் பற்றி எனக்குச் சொல்லுங்கள்.

அ.தி: ஒரு தடவை ராமானுஜத்தின் உடல்நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. ஒரு கிராமத்தில்

தங்கியிருந்த அவர், கொஞ்சம் கொஞ்சமாகத் தேறி வந்து கொண்டிருந்தார். ஒரு டாக்ஸியை அமர்த்திக்கொண்டு அவரைப் பார்ப்பதற்காக ஹார்டி அந்த கிராமத்திற்குப் புறப்பட்டார். கணித ஆசிரியர்கள் செய்வதைப்போலவே ஹார்டியும் அந்த டாக்ஸியின் இலக்கமான 1729-ஐ குறித்துக் கொண்டார். இந்த இலக்கங்களைக் கூட்டிக் கழித்து ஏதாவது ஒரு விதத்தில் கணக்கிட்டுப் பார்த்தால் சுவாரஸ்யமான முடிவுகள் ஏதாவது கிடைக்குமே என்பதற்காக கணித ஆசிரியர்கள் இப்படிச் செய்வதுண்டு. ஆனால், ஹார்டிக்கோ இந்த இலக்கம் எந்த விதத்திலும் முக்கியமானதாகத் தெரியவில்லை. இது ஒரு அபசகுனமான இலக்கமாக இருந்துவிடக் கூடாதே என்ற எண்ணத்துடன் ராமானுஜன் தங்கியிருந்த வீட்டு வாசலை மிதித்தார். ராமானுஜனிடம் 1729 இலக்கம் பற்றி ஹார்டி குறிப்பிட்ட உடனேயே அவர் பதிலளித்து விட்டார். "உண்மையிலேயே இது மிகவும் சுவாரஸ்யமான ஒரு இலக்கம். இரண்டு இலக்கங்களின் இரண்டு வேறுபட்ட விதமான மும்மடிப் பெருக்கத்தின் (க்யூப்ஸ்) கூட்டுத் தொகையாக வரக்கூடிய மிகச் சிறிய இலக்கம் இது."[73]

ஆ.ப.ஜெ: அந்த இலக்கங்கள் எவை?

அ.தி: 1 மற்றும் 12ன் மும்மடிப் பெருக்கத்தின் கூட்டுத் தொகையும் (1×1×1+12×12×12=1729) 9 மற்றும் 10ன் மும்மடிப் பெருக்கத்தின் கூட்டுத் தொகையும்தான் அந்த இலக்கமான 1729.

ராமானுஜத்தின் எந்த அம்சம் உங்களிடம் மிகவும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆ.ப.ஜெ: ராமானுஜனின் கணிதப் பங்களிப்பு அவருடைய உண்மையான மேதைமையைப் பிரதிபலிக்கிறது. ஆனால் அவருடைய வாழ்க்கையோ இந்த தேசத்தின் கிராமங்களில் வசிக்கிற நடுத்தர மற்றும் ஏழை மக்களுடன் இரண்டறக் கலந்துவிட்ட துன்பங்களையும் துயரங்களையும் சுட்டிக் காட்டுகிறது. அவருடைய மரணத்தின் போது அவருக்கு வயது 33தான்.

அ.தி: இது ஏதாவது விதியின் சதியா? எங்கு பார்த்தாலும் மேதைகள் பாதிக்கப்படுகிறார்களே?

ஆ.ப.ஜெ: உண்மையிலேயே அது பற்றி எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஒன்றை மட்டும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். அந்த வேதனை, பெரும்பாலும் ஆத்ம திருப்தியின் ஒரு தெய்விக அம்சத்தையும் தன்னுடன் சேர்த்தே கொண்டிருக்கிறது. அதில் ஆன்மிக அர்த்தம் பொதிந்துள்ளது என்பது சர்வ நிச்சயம். எரிக்கப்படும் போது மட்டுமே சில குறிப்பிட்ட ஆற்றல்கள் வெளிப் படுகின்றன.

அ.தி: இந்தியாவில் திடீரென்று அறிவியல் மேதைகள் பளிச் சிட்டு, பிரகாசித்த நிலவரத்தை மறுபடியும் ஆராய்ந்து பார்ப்போம். இதை, அந்த சமயத்தில் உலகத்தில் காணப்பட்ட நிலவரத்துடன் எப்படி தொடர்புபடுத்திப் பார்க்கிறீர்கள்?

ஆ.ப.ஜெ: ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் 1893-ல் நிகழ்ந்தது. *எம்ப்ரஸ் ஆஃப் இண்டியா* (Empress of India) என்ற கப்பல் ஜப்பானில் உள்ள யோகோ ஹாமா என்ற இடத்திலிருந்து கனடாவில் உள்ள வான்கூவருக்குச் சென்று கொண்டிருந்தது. அபூர்வமான இரண்டு தலை சிறந்த இந்தியர்கள் அந்தக் கப்பலில் பயணம் செய்தனர். ஒருவர், சுவாமி விவேகானந்தர்; மற்றொருவர் ஜாம்செட்ஜி என்.டாட்டா. இரண்டு மாறுபட்ட நோக்கங் களுக்காக இருவரும் சிகாகோவுக்கு சென்று கொண்டிருந்தார்கள். உலக சர்வ சமய மாநாட்டில் கலந்து கொள்வதற்கு சுவாமிஜி பயணமானார். தொழில் நுட்பம் மற்றும் தொழிற்துறை வளர்ச்சியின் முன்னேற்றங்களில் ஒரு கொண்டாட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உலக கொலம்பிய கண்காட்சியைக் (World's Columbian Exposition) காண்பதற்காக ஜாம்செட்ஜி பயணமானார். இந்தியாவில் ஒரு எஃகு ஆலை தொடங்குவது குறித்த தனது திட்டங்கள் பற்றி ஜாம்செட்ஜி அந்தக் கப்பல் பயணத்தின் போது சுவாமி விவேகானந்தருடன் ஆலோசனை நடத்தினார். இந்த சவாலான திட்டத்தில்,

உற்பத்தி தொடர்பான தொழில் நுட்பம் மற்றும் எஃகு சம்பந்தப்பட்ட அறிவியல் என்ற இரண்டு அம்சங்கள் அடங்கியுள்ளன என்று ஜாம்செட்ஜியிடம் சுவாமிஜி கூறினார். தொழில்நுட்பத்தை வேண்டுமானால் வெளிநாட்டிலிருந்து இறுக்குமதி செய்து கொள்ளலாம். ஆனால் அறிவியல் என்பது நமது நாட்டிலேயே ஆராய்ச்சி செய்து உருவாக்கப்பட வேண்டும் என்றும் சுவாமிஜி குறிப்பிட்டார். இந்த ஆலோசனைதான் பெங்களூரில், இந்திய அறிவியல் அமைப்பை (Indian Institute of Science) தொடங்குவதற்கான யோசனையை ஜாம்செட்ஜி டாட்டாவின் மனதில் விதைத்தது. பின்னர் அவர், 1898-ல் சுவாமிஜிக்கு எழுதிய கடிதத்தில் தனது முயற்சிக்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டார்.

அ.தி: அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடிதத்தின் நகல் வடிவத்தை நான் பார்த்திருக்கிறேன். அந்தக் கடிதத்தில் ஜாம்செட்ஜி டாட்டா எழுதியிருந்த அதே வார்த்தைகள் இவை: ''இப்படிப்பட்ட ஒரு இலக்கை எட்டுவதற்கு வழிநடத்தக்கூடிய மிகவும் பொருத்தமான ஒரு தளபதியாக விவேகானந்தரைத் தவிர வேறு யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதற்கு எழுதிய பதில் கடிதத்தில் சுவாமிஜி பின்வருமாறு குறிப்பிட் டிருக்கிறார்: ''இவ்வளவு வாய்ப்புகளையும் பலன்களை யும் உள்ளடக்கிய எந்த ஒரு திட்டமும் இதுவரையில் உருவாகியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை... நமது தேசிய நலன் சம்பந்தப்பட்ட முக்கியமான பலவீன அம்சங்களை ஆழமாகப் புரிந்துகொண்டு, தெளிவான தொலைநோக்குடனும் மிகவும் வலுவானதாகவும் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக சாதிக்கும் போது தாராளமான வெகுமதிகளாக பொதுமக்களுக்கு ஏராளமான பலன் கிடைக்கும்.''[74]

ஆ.ப.ஜெ: சுவாமிஜி 1902-ஆம் வருடத்தில் மறைந்தார். அற்புத மான இந்திய அறிவியல் அமைப்பு 1909-ஆம் வருடத்தில் பெங்களூரில் செயல்படத் தொடங்கியது.

அ.தி: சரியாகத் திட்டமிடப்பட்ட ஓர் ஒழுங்குமுறையோடு 20-ஆம் நூற்றாண்டில் இந்தியா வலுவுடன் பிரவேசித்தது.

ஆ.ப.ஜெ: காற்றை வெற்றி கண்ட 'ரைட் சகோதரர்களின்' சாதனை யுடன் 20-ஆம் நூற்றாண்டு தொடங்கியது. அதிசய வருடம் என்று அடிக்கடி குறிப்பிடப்படுகிற 1905-ஆம் ஆண்டில் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் சார்பியல் கோட்பாடு (Theory of Relativity), ஒளி மின் விளைவு (Photoelectric Effect) மற்றும் ஒளித்துகள் நகர்வு (Brownian Motion) என்ற மூன்று முக்கிய விஷயங்கள் குறித்து ஐந்து ஆராய்ச்சி கட்டுரைகளை ஐன்ஸ்டீன் வெளியிட்டார். அதே சமயத்தில், இந்தியாவில் சி.வி.ராமன் ஆராய்ச்சி முனைப்புகளில் முன்னேறினார்.

அ.தி: ஒரே சமயத்தில் சிந்தனை வீச்சின் வண்ணமயமான ஓர் எழுச்சியை நாம் கண்டோம் என்று சொல்லலாம். சுமார் 2,500 வருடங்களுக்கு முன்பு, உலகில் வெவ்வேறு பகுதிகளில் ஒரே சமயத்தில் புத்தர், சாக்ரட்டீஸ் மற்றும் கன்ஃப்யூசியஸ் ஆகியோர் காரண காரியங்களை அலசி ஆராய்தல் மற்றும் பகுத்தறிவுத் திறன் பற்றி பேசி வந்தார்கள்.

ஆ.ப.ஜெ: எப்படிப்பட்ட தற்செயலான நிகழ்வு இது.

ஆ.தி : சி.வி.ராமனின் இளமைப் பருவ காலகட்டத்தில், துடி துடிப்பும் ஆர்வமும் பொங்கித் ததும்பும் இளைஞர் களுக்கு இந்தியாவில் எந்தவிதமான வாய்ப்புகள் கிடைத்தன?

ஆ.ப.ஜெ: எந்த வாய்ப்பும் கிடைக்கவில்லை. இதனால்தான் இந்திய அரசுப் பணியில், கல்கத்தாவில் உதவி அக்கவுண்டண்ட் ஜெனரல் பதவியில் சேரும் நிர்பந்தத்திற்கு ஆளானார், சி.வி.ராமன். அந்தப் பதவியில் பணியாற்றிக் கொண் டிருக்கும்போது தனது அறிவியல் ஆர்வத்தையும் அவரால் தக்க வைத்துக் கொள்ள முடிந்தது. அறிவி யலை மேம்படுத்துவதற்கான இந்திய அமைப்பான Indian Association for the Cultivation of Science-ன்

ஆய்வுக்கூடங்களில் தனது ஓய்வு நேரத்தில் அவர் பணி யாற்றி வந்தார்.

அ.தி: தனது அறிவியல் திறமையை இந்தியாவில் நிலை நிறுத்தியதை அடுத்து, 1917-ஆம் ஆண்டில் சி.வி. ராமனுக்கு கல்கத்தா பல்கலைக்கழகத்தில் இயற்பியல் பேராசிரியர் பதவி வழங்கப்பட்டது என்று Journey Into Light என்ற புத்தகத்தில் ஜி.வெங்கட்ராமன் எழுதி யுள்ளார். அங்கு 15 வருடங்கள் ராமன் பணியாற்றினார். அந்த சமயத்தில் ஒளியியல் மற்றும் ஒளிச்சிதறல் குறித்த அவருடைய ஆய்வுப் பணி மூலம் சர்வ தேச அங்கீகாரம் அவருக்குக் கிடைத்தது.

ஆ.ப.ஜெ. ஜி.வெங்கட்ராமன் என்னுடைய அருமை நண்பர். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பான டி.ஆர்.டி.ஓ.வில் (Defence Research and Development Organisation - DRDO) நாங்கள் இருவரும் ஒன்றாக வேலை பார்த்தோம்.[75] புகழ்பெற்ற ராமன் விளைவின் (Raman Effect) மூலம் பிறந்த கதை பற்றி அவர் வசீகரமாக விவரித்தது, எனக்குப் பசுமையாக நினை வுக்கு வருகிறது.

அ.தி: ஆமாம் ஸார், 1921-ஆம் வருடத்தில் லண்டனில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தைச் சேர்ந்த பல்கலைக் கழகங் களின் கூட்டம் நடைபெற்றது. கல்கத்தா பல்கலைக் கழகத்தின் பிரதிநிதியாக சி.வி.ராமன் அங்கு சென்றிருந் தார். அதுதான் அவருடைய முதலாவது வெளிநாட்டுப் பயணம். அங்கிருந்து இந்தியா திரும்பும்போது தன்னைச் சுற்றிலும் பரந்து விரிந்துள்ள மத்தியத் தரைக்கடலின் பேரழகை அவர் அனுபவித்தபோது அவருக்குள் ஓர் ஆச்சரியம் எழுந்தது. நீல வானத்தை பிரதிபலிப்ப தால்தான் கடல் நீல நிறத்தில் இருக்கிறதா? நீர்ப்பரப்பில் அடுத்தடுத்து பேரலைகள் எழும்பி வந்தாலும் வண்ணம் மாறாமல் நீல நிறத்திலேயே இருக்கிறதே! இப்படி அலை அலையாகத் தொடர்ந்து சிந்தனைகளில் மூழ்கினார். கடல் பரப்பை கப்பல் கடந்து கொண்டிருந்த போது அவர் மனக்கண்ணில் ஒரு யோசனை மின்னல் வெட்டாய்ப்

பளிச்சிட்டது. தண்ணீரின் மூலக்கூறுகள் (மாலிக்யூல்ஸ்) சூரிய ஒளியை சிதறச் செய்வதால் கடல் நீல நிறமாக இருக்கிறதோ? இந்தச் சிந்தனை அவரை ஆட்கொண்டது. இந்தியா வந்து சேர்ந்து ஒரு மாதம் முடிவதற்குள் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை ராயல் சொஸைட்டி ஆஃப் லண்டனுக்கு அனுப்பி வைத்தார். ஒரு வருடத்திற்குள் மூலக்கூறுகளின் ஒளிச் சிதறல் பற்றிய ஒரு விரிவான கட்டுரையை வெளியிட்டார். 1924-ல் ராயல் சொஸைட்டி ஆஃப் லண்டனின் உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

ஆ.ப.ஜெ: இது பற்றி மேலும் சொல்லுங்கள்...

அ.தி: தனது புகழ்பெற்ற பட்டகம் பற்றிய ஆய்வில் (prism experiment) ஒளி என்பது எண்ணற்ற நிறங்களை உள்ளடக்கிக் கொண்டுள்ள ஒன்று என்பதை நியூட்டன் முன்பே நிரூபித்துக் காட்டியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ள ஜி.வெங்கட்ராமன், அந்தப் புத்தகத்தில் பின்வருமாறும் விவரித்துள்ளார். ஒரு பட்டகத்தைப் பயன்படுத்தி ஒளியைச் சிதறச் செய்கிற நிறப்பிரிகை நுட்பம் மூலம் நியூட்டன் இதை நிரூபித்தார். ஆனால் சி.வி.ராமனோ இயல்பான ஒளிக்கற்றை ஒன்றை, ஒளி உட்புகுவதற்கு இடமளிக்கின்ற தண்ணீர் போன்ற ஒரு ஊடகத்தில் செலுத்தும்போது என்ன நடக்கிறது என்பதை முக்கியமாக ஆராய்ந்தார். இப்படிச் செலுத்தப்படும் அந்த ஒளிக்கற்றை இலக்கில்லாமல் பல திசைகளில் சிதறுகிறது. ஆனால், அதில் மிகச் சிறிய ஒரு பகுதி மட்டும், ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட ஒளிக்கு முற்றிலும் மாறாக, தனது அதிர்வு எண்ணை மாற்றிக் கொள்கிறது. இதன் மூலக்கூறு அதன் வேகத்தை மாற்றிக் கொள்வதுதான் இதற்குக் காரணம் என்பதை சி.வி.ராமன் கண்டுபிடித்தார்.

இந்த ஆய்வின் இறுதியில், 1928 பிப்ரவரியில், மிகக் குறைந்த வீச்சுக் கொண்ட இரண்டு நிறப்பிரிகைக் கதிர்களை சி.வி.ராமன் அடையாளம் கண்டார். இந்தக் கண்டுபிடிப்பு ***ராமன் விளைவு*** என்றும், இவ்வாறு

சிதறிய ஒளிக்கற்றை *ராமன் ஸ்கேட்டர்* என்றும் புகழ் பெற்றுள்ளது. இதற்காக பிரிட்டிஷ் அரசு இவருக்கு, 1929-ஆம் ஆண்டில் *பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் நைட்* (Knight of the British Empire) பட்டம் வழங்கி கவுரவித்தது. இந்திய வரலாற்றில் முதல்முறையாக, ஒரு இந்திய அறிஞர், அதுவும் தனது கல்வி முழுவதையும் இந்தியாவிலேயே கற்ற ஒருவர் 1930-ல் மிக உயர்ந்த பரிசான நோபல் பரிசை, இயற்பியல் சாதனைக்காக வென்றார்.[76]

ஆ.ப.ஜெ: எவ்வளவு உயர்ந்த சாதனை இது! கேட்பதற்கே அவ்வளவு ஆனந்தமாக இருக்கிறதே! '*ராமன் ஸ்கேட்டர்* அடிப்படையில் மூலக்கூறு மாற்றங்களை அறிந்து கொண்டதன் மூலம் அறிவியலுக்கு சக்தி வாய்ந்த ஒரு சாதனம் கிடைத்துவிட்டது.

அ.தி: *ராமன் விளைவு* கண்டுபிடிக்கப்பட்ட முதல் பனிரெண்டு வருடங்களுக்குள் சுமார் 1800 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. கிட்டத்தட்ட 2500 ரசாயன கூட்டுப் பொருள்கள் உலகமெங்கும் ஆராய்ச்சியாளர்களாலும், விஞ்ஞானிகளாலும் ஆய்வு செய்யப்பட்டன. தூய்மை யான தண்ணீர், நீராவி, வாயு, ஸ்படிகம், குவார்ட்ஸ், பனிக்கட்டி மற்றும் ஆல்கஹால்கூட இந்த ஆய்வில் இடம் பெற்றன. டெரக் ஏ. லாங், *தி ராமன் எஃபகட்* (The Raman Effect) என்ற புத்தகத்தில் இது பற்றி மிகவும் விரிவாக எழுதியுள்ளார்.

ஆ.ப.ஜெ: பிறகு சி.வி. ராமன் பெங்களூர் வந்துவிட்டார்.

அ.தி: ஆமாம் ஸார், 1933-ல் இருந்து அவர் மரணமடைந்த 1970-ஆம் வருடம் வரையிலும் அவர் பெங்களூரி லேயே வாழ்ந்தார். அங்கேயே பணியாற்றினார். முதலில் இந்திய அறிவியல் அமைப்பிலும் (Indian Institute of Science), அடுத்து அவரே சொந்தமாக ஆரம்பித்த ராமன் ஆய்வு நிலையத்திலும் (Raman Research Institute) பணியாற்றினார்.

ஆ.ப.ஜெ: தனிப்பட்ட நிதி வசதியைக் கொண்டு 1948-ல் ராமன் ஆய்வு நிலையம் நிறுவப்பட்டது. சி.வி. ராமன் குறிப்பாக ஆர்வம் கொண்டிருந்த, தெரிவு செய்யப்பட்ட இயற்பியல் துறைகளில் அடிப்படை ஆய்வை மேற்கொள்வது தான் இந்த ஆய்வு நிலையத்தின் பிரதானப் பணியாக அமைந்திருந்தது. வானியல் (Astronomy), விண்வெளி இயற்பியல் (Astrophysics), திரவப் படிகவியல் (Liquid Crystals), இயற்பியல் (Theoretical Physics), ஒளியியல் (Optics) ஆகிய துறைகளில் தலைசிறந்த விஞ்ஞானிகள் இந்த ஆய்வு நிலையத்தில் பயிற்சி பெற்றார்கள்.

அ.தி: தனது இறுதி நாட்கள் வரையிலும், ராமன் ஆய்வு நிலையத்தோடு சதீஷ் தவன் இணைந்திருந்தார்.

ஆ.ப.ஜெ: இந்த உயர்ந்த ஆத்மாக்கள் அனைவரும் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள். சர்.சி.வி.ராமன் பற்றிய இந்த சம்பவத்தை நான் எப்போதுமே இளம் விஞ்ஞானிகளுக்கு சொல்வ துண்டு:

இயற்பியல் ஆராய்ச்சி மாணவர் ஒருவர் ஒரு கிலோவாட் சக்தி கொண்ட எக்ஸ்ரே ட்டியூபைக் கொண்டு ஒரு ஆய்வில் ஈடுபட்டிருந்தார். இதே பிரச்சினையில் இங்கி லாந்தில் ஒரு விஞ்ஞானி, ஐந்து கிலோ வாட் எக்ஸ்ரே ட்யூபைக் கொண்டு ஆய்வு நடத்துவதாக கேள்விப்பட்ட வுடன் அந்த இளைஞர் விரக்தி அடைந்து விட்டார். இது பற்றி சி.வி. ராமனுக்குத் தெரிய வந்ததும் அந்த மாணவரிடம் சென்று புன்னகையுடன் கூறினார்: ''இதற்கு மிகவும் சுலபமான ஒரு தீர்வு உண்டு. அந்தப் பிரச்சினை யில் மட்டுமே பத்து கிலோ வாட் மூளையைப் பயன் படுத்துங்கள்''[77]

அவர் அனுபவத்தின் மூலம் பேசினார். அவரே தனிப்பட்ட முறையில் உருவாக்கிய எளிய உபகரணத் தைப் பயன்படுத்தி எந்த மானியமோ அல்லது வேறு யாரிடமிருந்தும் நிதி உதவியோ பெறாமல் ஆய்வு மேற்கொண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்றார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

அ.தி: அவ்வளவு சுலபத்தில் நம்ப முடியவில்லை. அவருடைய உன்னத வாழ்க்கை மற்றும் சிந்தனையில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட அம்சம் உங்களை ஈர்த்திருப்பது பற்றி விவரிக்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: தொழில்துறையில் அறிவியலைப் பயன்படுத்துவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர், சி.வி.ராமன். அடுத்த 70 வருடங்களில், ராமன் விளைவின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சிலிகான் லேசர்கள் மற்றும் ஒளிரும் தன்மையை அதிகரிக்கக் கூடிய ஆம்ப்ளிஃபையர்கள் புதிய மாற்றங்களுக்கு வழிவகுத்தன. இதனால், ஒளித்துறையில் சிலிகான் டேட்டா ஆம்ப்ளிஃபையர்கள் (silicon data amplifires), அலைநீள மாற்றிகள் (wavelength converters) போன்றவைக்கான நிறைய வாய்ப்புகள் உருவாயின. ஒளியியல் களத்தின் முன்னேற்றங்கள் தடைபடக்கூடிய வகையிலும் இந்த மாற்றங்கள் தொடர்ந்தன. உலகத்தில் முதல் தடவையாக சிலிகான் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒற்றைச் சிப்பைக் கொண்டுள்ள continuous-wave - லேசரை- தொடர்ந்து லேசர் கதிர்களை உருவாக்குகிற சாதனம்- இன்டல் கார்ப்பரேஷன் தயாரித்தது. இதற்கு அடிப்படையாக இருந்தது, ராமன் விளைவுதான்.

அ.தி: இயற்கையை ராமன் மதித்துப் போற்றிய தன்மையுடன் உங்களை நீங்கள் ஆழமாக அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

ஆ.ப.ஜெ: இயற்கையை ராமன் மேன்மையான ஓவியக் கலைஞர் என்று குறிப்பிட்டுள்ளார். அழகின் வடிவங்களை, உயிர்ப்பை மற்றும் வண்ணத்தை இயற்கை உருவாக்குகிறது. ஈடிணையற்ற இந்த ஓவியமான படைப்புக் கலை, காலத்தின் தொடக்கத்திலிருந்தே தொடர்ந்து வருகிறது. ஓவியக் கலைஞர்கள், வண்ணக் கலைஞர்கள், சிற்பிகள் மற்றும் பொறியாளர்களுக்கு மட்டுமல்லாமல் அறிவியல் நபர்களுக்கும்கூட உத்வேக ஊற்றுக் கண்ணாகத் திகழ்பவள், இயற்கை அன்னைதான். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் நன்றிகள் நிரம்பிய கூடையுடன்

போய் அந்த அற்புத வெகுமதிகளைப் பெற்றுக் கொள்வதுதான்.

அ.தி: அத்தனை பேரிலும் தங்கள் சுவடுகளை உங்களிடம் ஆழமாகப் பதித்துச் சென்றிருப்பவர் யார்?

ஆ.ப.ஜெ: மிகவும் சுலபமாகச் சொல்ல முடியும். என் அம்மாதான். எனக்கு மட்டுமல்ல, நம் எல்லோர் வாழ்க்கையிலும் இதுதான் உண்மையாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அ.தி: மிகவும் வசதியான ஒரு தமிழ் முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தவர் உங்களுடைய தாய் என்று Wings of Fire ***(அக்னிச் சிறகுகள்)*** புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது என் நினைவில் பளிச்சிடுகிறது. அவருடைய மூதாதையர்களின் ஒருவருக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பகதூர் பட்டம் கிடைத்திருக்கிறது. ராமேஸ்வரத்தில் வாழ்ந்து வந்த, உயரமான, ஆஜானுபாகுவான உங்களுடைய அப்பா ஜெயினுலாபுதீனை உங்களுடைய அம்மா திருமணம் செய்து கொண்டார். அப்போது அவருக்கு வயது 25. உங்களுடைய அப்பாவிடம் பெரிதாக ஒன்றும் பண வசதி இல்லை. முறையாகப் பள்ளிக்கூடம் போய், சொல்லிக்கொள்ளும்படியாக அவர் படிக்கவும் இல்லை. உங்கள் அம்மா பெற்றெடுத்த ஐந்து குழந்தைகளில், நீங்கள்தான் கடைக்குட்டி.

ஆ.ப.ஜெ: அருமையான ஆள் நீங்கள். என் குழந்தைப் பருவ நாட்களை நான் திரும்பிப் பார்க்கையில் விதவிதமான பல அழகான காட்சிகள் விரிகின்றன. அற்புதமான மனித நேய நெறிகள்; எளிமையான, சந்தோஷமான மக்கள்; கடல் அலைகள்; வானத்தில் உலா வரும் ஸீகல் கடல் பறவைகள்; தங்க வண்ண மணற்பரப்பு; தொலை தூரங்களிலிருந்து வருகைதரும் நம்பிக்கை கொண்ட யாத்ரீகர்கள் கூட்டம்; மசூதி தெரு; தொழுகைகள்; பள்ளிக்கூடம், பெட்டிக் கடைகள், குதிரை வண்டிகள்... என அத்தனை காட்சிகளும் பளிச்சிடுகின்றன. இவை அனைத்தும் கருணையும் தூய்மையும் நிறைந்த ஒரு

பெண்மணி- என் அம்மா ஆஷியம்மா - வடிவத்தில் ஐக்கியமாகிவிடுகின்றன.

அ.தி: மேலும் தொடர்ந்து சொல்லுங்கள்.

ஆ.ப.ஜெ: எனது குழந்தைப் பருவம் மிகவும் சவுகரியமாகவே அமைந்திருந்தது. அதாவது அனைத்துப் பிரச்சினை களையும் தங்களுக்குள்ளே தாங்கிக்கொண்டு, வீடு, உணவு, உடை, கல்வி என்ற அடிப்படை வசதிகளை என் பெற்றோர்கள் வழங்கினார்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக அன்பு பொங்கும் அற்புதமான சூழ்நிலையை அமைத்துத் தந்தார்கள். இருந்தாலும், அப்போது இரண்டாவது உலகப் போர் மூண்டு விட்டதால் எங்கு பார்த்தாலும் எல்லாவற்றுக்கும் தட்டுப்பாடு வந்து விட்டது. வாழ்க்கை கடுமையானதாகவும் ஒரு சவா லாகவும் மாறிவிட்டது. அதிகாலையிலேயே எழுந்து விடும் நான், என் பெற்றோர்கள், அதிகாலைத் தொழுகையை மேற்கொண்டிருப்பதைப் பார்ப்பேன். நீலக் கடலிலிருந்து சூரியன் உதயமாவதற்கு வெகு நேரத்திற்கு முன்பே தனக்குச் சொந்தமான தென்னந் தோப்புக்கு என் அப்பா புறப்பட்டு விடுவார். எங்கள் வீட்டிலிருந்து சுமார் நான்கு மைல் தொலைவில் அந்த தென்னந்தோப்பு இருந்தது. பல மைல் தூரத்தில் இருக்கும், புனிதமான ஆசிரியரின் வீட்டிற்கு நடந்து போய் பாடம் படிப்பேன். அதன் பிறகு, அரபிப் பள்ளிக்கூடத்திற்கும் போவேன்.

அ.தி: அது சரி... பத்திரிகைகளை விநியோகம் செய்வதற்கு எப்போது போவீர்கள்?

ஆ.ப.ஜெ: இந்த இரண்டு இடங்களிலும் பாடம் படித்து முடித்த பிறகு, ராமேஸ்வரம் ரயில் நிலையத்தில், ஓடும் ரயிலி லிருந்து தூக்கி வீசப்படும் பத்திரிகைகளை ஒன்று திரட்டி எடுத்துக் கொண்டு, வீடு வீடாகப் போய் விநியோகம் செய்வேன். நாளிதழ்களின் உள்ளூர் முகவரான என் ஒன்றுவிட்ட சகோதரர் இந்த வேலை வாய்ப்பை எனக்கு

வழங்கினார். இந்த வேலைக்காக தினமும் அவர் ஓரணா (6 பைசா) கொடுப்பார்.

அ.தி: அந்தக் காசை வைத்துக் கொண்டு என்ன செய்வீர்கள்?

ஆ.ப.ஜெ: மிகவும் பெருமிதத்துடன் அந்த ஓரணாவை என் அம்மாவிடம் கொண்டு போய்க் கொடுத்து சேர்த்து வைப்பேன். அந்தப் பணம் எனக்கு எப்போதுமே தேவைப்பட்டதில்லை. ஆனால், உயர் நிலைப் பள்ளியில் படிப்பதற்காக ராமநாதபுரத்திற்கு நான் புறப்பட வேண்டி வந்தபோது, அது ஒரு கணிசமான தொகையாகச் சேர்ந்திருந்தது. மிகவும் கவனமாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்த அத்தனை நாணயங்களையும் என் அம்மா என்னிடம் தந்தார். என் கண்களில் கண்ணீர் வழிந்தது. தன் கைகளால் என் தலைமுடியைக் கோதி விட்டவாறு அமைதியாக அவர் சொன்னார்; ''மகனே! அம்மாமார்கள் எல்லாம் எப்பவுமே கொடுப்பவங்க தான்''

அ.தி: உண்மைதான், ஸார்... அம்மாக்கள் எப்போதுமே கொடுக்கத்தான் செய்கிறார்கள். இந்த விதத்தில் நானும் கூட மிகவும் பாக்கியசாலிதான்.

ஆ.ப.ஜெ: உங்கள் அம்மாவைப் பற்றிச் சொல்லுங்கள்.

அ.தி: தனது நான்கு குழந்தைகளையும் எனது பாட்டியையும் கவனித்துக்கொண்டு, என் தந்தையின் குறைந்த ஊதியத்தை ஈடுகட்டுவதற்காக, என் அம்மா ஆசிரியைப் பயிற்சி பெறுவதற்கு சென்று வந்தார்கள். அது ஒரு பெரிய போராட்டமாக இருந்தது. நான் உயர்வதற்கு எனக்குச் சிறகுகள் தந்தவர், என் அம்மாதான்.

ஆ.ப.ஜெ: உங்களுடைய அம்மா உங்களுக்குக் கொடுத்தது போல எனக்கும் என் அம்மா சிறகுகளைக் கொடுத்தார். அன்னையர் அனைவருமே இப்படித்தான் கொடுக்கிறார்கள். என்னுடைய பகல் பொழுது பள்ளிக்கூடத்தில் கழிந்தது. என் ஒன்றுவிட்ட சகோதரர் நடத்தி வந்த சிறிய கடையில் மாலை நேரங்களில் அவருக்கு உதவி செய்வேன். வீடு திரும்புவதற்கு நேரம் ஆகிவிடும். என்

அம்மா, இரவு உணவு சமைத்து வைத்துவிட்டு காத்துக் கொண்டிருப்பார்கள். பொதுவாக நாங்கள் இருவரும் கடைசியாக சாப்பிடுவது வழக்கம். சமையல் அறையில் தரையில் உட்கார்ந்து கொண்டு எனக்கு வாழை இலை போட்டு அம்மா பரிமாறுவார்கள். சுடச்சுட சாதம், அப்போதுதான் அரைத்த தேங்காய் சட்னி, சாம்பார், வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஊறுகாய் என்று அனைத்தையும் எனக்கு ஆசையோடும் அன்போடும் பரிமாறுவார்கள்.

பிறகு, லாந்தர் விளக்கின் வெளிச்சத்தில் என் பாடங்களைப் படிப்பேன். ஒவ்வொரு நாள் இரவும் பாத்திரங்களைக் கழுவி, தரையைப் பெருக்கி, அடுத்த நாள் உணவுக்காக, அரிசியில் கல் பொறுக்கி, சுத்தம் செய்து வைத்துவிட்டு பிறகு குழந்தைகளாகிய நாங்கள் அனைவரும் படுப்பதற்காக பாய்களை விரித்து வைப்பார்கள். ஒரு சிறு பிரார்த்தனையுடன் எங்களுக்கு முத்தமிட்டு தூங்க வைப்பார்கள்.

அ.தி: ***அக்னிச் சிறகுகளில்*** 'என் அன்னை' கவிதையில் நீங்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தது பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள். எந்த சமயத்தில் அப்படி ஆனது?

ஆ.ப.ஜெ: எனக்குப் பத்து வயதாக இருந்தபோது கடுமையான காய்ச்சலால் பல நாட்கள் வரையிலும் அவதிப்பட்டேன். தாங்க முடியாத வலியால் வேதனைப்பட்டேன். ஒரு தேவதையைப்போல என் அம்மா எனக்கு மிகவும் அருகில் இருந்து கொண்டு, தன் 'சிறகுகளால்' என்னை அணைத்துக் கொள்வார். அவர்களுடைய இதமான, பாசமான ஸ்பரிசம் காய்ச்சலின் உக்கிரத்தைத் தணித்தது. நான் விரைவாக குணமடைந்தேன்.

அ.தி: இதற்கு முன்பு என்னிடம் தாங்கள் பகிர்ந்து கொள்ளாத சில விஷயங்கள் பற்றி தயவு செய்து சொல்லுங்கள்.

ஆ.ப.ஜெ: 1952-ல் திருச்சிராப்பள்ளியில் உள்ள செயின்ட் ஜோஸஃப் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது கோடை விடுமுறைக்காக நான் வீட்டிற்கு

வந்திருந்தபோது ஒரு நாள் மதிய நேரத்தில் என் அம்மாவிடம் ஒரு கேள்வி கேட்டேன். ''என் வயதில் இருந்த போது அப்பா என்னவாக இருந்தார்கள் என்று சொல்லுங்கள்?'' அப்போது துணி தைத்துக் கொண்டிருந்த அம்மா, அந்த வேலையை நிறுத்திவிட்டு என்னை நிமிர்ந்து பார்த்தார்கள். என்னுடைய கேள்வி யால் திகைத்துப் போன அவர்கள், பதில் சொல்வதற்கு நீண்ட நேரம் எடுத்துக் கொண்டது போலத் தோன்றியது. ''அவங்க உன்னைப்போல இருந்ததே இல்லை. ஒரு கணவர், அப்பா, தாத்தா என்பதைத் தாண்டி ஒரு வக்கீலாக, பேராசிரியராக அல்லது வேறு எப்படிப்பட்ட வராகவோ இருக்க வேண்டும் என்று எப்போதுமே அவங்க கனவு கண்டதில்லை. எங்களோட அஞ்சு குழந்தைகளில் நீதான் கடைசிக் குழந்தை. குடும்பத் திற்கான சாப்பாடு, துணிமணிகள் கொடுப்பது என்று பொறுப்புகளும் வேலையும்தான் விழித்துக் கொண் டிருந்த ஒவ்வொரு கணத்திலும் அவங்க நினைப்பாக இருந்தது. இந்தத் தீவில் அவங்களுக்கு ஒரே ஒரு தொழில்தான் இருந்தது. கடுமையான உழைப்பாளியாக இருப்பதுதான் அது. தூய்மையான நடத்தை கொண்டவ ராக இருப்பதால், அவங்க மீது எல்லா மக்களும் பிரியமா இருக்காங்க'' என்று அம்மா விளக்கம் சொன்னார்கள். இதைக் கேட்டதும் என்னை மிகவும் சாதாரணமானவனாக உணர்ந்தேன். வெவ்வேறு இடங் களுக்கு என்னைக் கொண்டு செல்லப் போகிற ஒரு வேலையைத் தேடும் முயற்சிக்காக, தொலைதூர நகரத்தில் விஞ்ஞானம் படித்துக் கொண்டிருந்ததை, ஒரு பெரிய வேலையை மேற்கொண்டிருப்பதாக நான் நினைத்திருந்தேன். ஆனால், இங்கே என் அம்மாவோ ஒரே இடத்திலேயே நிலைகொண்டுவிட்ட என் அப்பாவின் எளிய வாழ்க்கையைப் போற்றித் துதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அ.தி: இந்த மாதிரியான தம்பதியினர் ஆசிர்வதிக்கப்பட்ட வர்கள்.

ஆ.ப.ஜெ: அவர்களின் ஆன்மா சாந்தியடையட்டும்.

அ.தி: அக்கம்பக்கத்தில் இருந்தவர்களைப் பற்றி மேலும் சொல்லுங்கள்.

ஆ.ப.ஜெ: ராமேஸ்வரத்தில் வசிக்கிற பெரும்பாலான மக்களைப் போல என்னுடைய பெற்றோரும் கடல் பொருட்களை அடிப்படையாகக் கொண்டிருந்த பொருளாதாரத்தை நம்பி வாழ்ந்திருந்த ஒரு சமுதாயத்தில், தங்கள் குடும்பத் துடன் வாழ்ந்து வந்தார்கள். மீன், சங்குகள், மற்றும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்தல், இங்கு வருகை தரும் யாத்ரீகர்களுக்கு தேவையான பொருட் களையும் அடிப்படை வசதிகளையும் வழங்குதல் என்பதுதான் இந்த மக்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைந்திருந்தது. தாங்கள் பிறந்த பூமியைவிட்டு நகரங்களுக்கு குடிபெயர்ந்து போவதைப் பற்றி அவர்கள் நினைத்துப் பார்த்ததே கிடையாது. மதுரை, திருச்சிராப் பள்ளி, சென்னை மற்றும் அன்று சிலோன் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீலங்காவில் வாழ்கிற பல்லாயிரக் கணக்கான மக்களைப் போலவே தங்கள் சொந்த பூமியிலேயே வாழ்ந்து, இறுதி வரையிலும் அங்கேயே நிலைத்து விட்டார்கள். தங்களுடைய எளிய வாழ்க்கை மூலம் இந்த உலகத்திற்கு என் பெற்றோர் எந்தப் பங்களிப்பையும் வழங்கவில்லை. ஆனால், வாழ்க்கை யின் கொடிய துன்பங்களும், குழப்பங்களும், கடுமை யான சோதனைகளாக வாட்டியபோது தாங்கள் பின்பற்றி வந்த மேன்மையான, புனிதமான, பாரம்பரிய நெறிகளி லிருந்து துளிகூட பிறழாமல் அப்படியொரு உறுதியுடன் வாழ்ந்து வந்தார்கள்.

அ.தி: சற்று விளக்கமாகச் சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: தனிப்பட்ட நபரின் ஆசைகளைவிட கவுரவம், மரியாதை மற்றும் நல்லிணக்க மயமான குடும்பத்தின் ஒற்றுமைக்கு முக்கியத்துவம் கொடுக்கிற ஒரு கலாசாரத் தின் அடையாளச் சின்னமாக வாழ்ந்தவர், என் தாய். ஒவ்வொரு உணவு வேளையின்போது, எப்போதுமே

எதற்காக அம்மா நீங்கள் கடைசியாக சாப்பிடுகிறீர்கள் என்று நான் கேட்ட சமயத்தில் அவர்கள் சொல்வார்கள்: ''ஆம்பளைங்க முக்கியமானவங்க. அவங்க பலசாலிங்க, புத்திசாலிங்க. அதனாலதான் எப்பவுமே அவங்க பொம்பளைங்க சாப்பிடறத்துக்கு முன்னாடி சாப்பிடறாங்க. அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். நான் சாப்பிடறதை விட நீங்க எல்லோரும் சாப்பிடற தைப் பார்க்கிறதுதான் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும்.'' இன்றுகூட ராஷ்ட்ரபதி பவனில் நான் தனியாக உணவு அருந்துகிறபோது என் அம்மா எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, தென்னை ஓலை விசிறியால் இதமாக எனக்கு விசிறிவிட்டு, நான் உணவு அருந்துவதை பார்த்துக் கொண்டிருப்பதை என்னால் உணர முடிகிறது.

அ.தி: உங்களுடைய ஆன்மாவில் எந்த விஷயம் மிகவும் ஆழ மான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக உணர்கிறீர்கள்?

ஆ.ப.ஜெ: என் பெற்றோர், ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாடு - அந்த பரஸ்பர மரியாதைதான். 1952-ஆம் வருடத்தின் அந்த கோடைகால பிற்பகல் நேரத்தில் என் அம்மா சொல்லியதை நான் மவுனமாக உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். என் அப்பா ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருந்ததையும், அம்மா எப்போதுமே வீட்டு வேலைகளில் மூழ்கி இருந்த தையும் பார்த்துக் கொண்டிருப்பது, நான் வளர வளர வெறுப்பாக இருந்தது. எங்கள் எல்லோருக்கும், கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்த இன்னும் பலருக்கும், அக்கம் பக்கத்தினர் மற்றும் தூரத்துச் சொந்தங்களுக்கும் கூட வாழ்க்கையின் சாதாரண விஷயங்களை வழங்குவ தற்காக என் பெற்றோர் மிகவும் கடுமையாகப் பாடுபட் டார்கள். ''அம்மா...! பகல் முழுவதும், இரவிலும் ஒவ்வொரு நாளும் ஓய்வொழிச்சல் இல்லாமல் வீட்டில் நீங்கள் வேலை செய்வதை நான் பார்க்கிறேன். ஒரு தடவைகூட உங்களுக்கு நன்றி சொல்கிற வகையில் 'ஆஷியா, நீ ஒரு அருமையான மனைவி' என்பது போல

எதுவும் அப்பா சொல்ல நான் கேட்டதில்லையே!... இது உங்களைப் புண்படுத்தியதில்லையா?'' என்று ஒரு தடவை என் அம்மாவைக் கேட்டேன்.

நான் எவ்வளவு வளர்ந்துவிட்டேன் என்று என்னைப் பற்றி நினைத்தவாறே ஜன்னலுக்கு வெளியே அம்மா வெறித்துப் பார்த்தார்கள். ''உன் அப்பா, உத்தமமான மனிதர். தனக்கு வேண்டும் என்று அவங்க எதற்கும் எப்பவும் ஆசைப்பட்டதே இல்லை. மத்தவங்களுக் காகத்தான் கொடுத்திருக்காங்க. கொடுக்கறதுதான் அவங்க வாழ்க்கையிலே ரொம்ப முக்கியமான விஷயமா இருந்தது'' என்று சொன்ன அம்மா, தைத்துக் கொண்டிருந்ததை கீழே உற்றுப் பார்த்து விட்டு, தொடர்ந்து சொன்னார்கள்: ''என் சம்பந்தப்பட்ட எதுவும் உன் அப்பாவுக்கு முக்கியமில்லாம இருந்ததேயில்ல. உன் அப்பாவ நான் கல்யாணம் செஞ்சுகிட்டபோது என் பொறந்த வீட்டின் வசதிகளையும் சுகங்களையும் சந்தோஷமாத்தான் விட்டுட்டு வந்தேன். இப்ப அது பத்தி அவங்ககிட்ட சொல்றதுன்னா அது ரொம்ப நாளான விஷயமாயிடுச்சே? தனக்கு அது பத்தித் தெரியும்னு அவங்க சொன்னதேயில்லையின்னாகூட அவங்க அதை தெரிஞ்சு வெச்சிருக்காங்கறது எனக்குத் தெரியும். அப்படி அவங்க தெரியாம இருந்திருந்தாங்கன்னா எந்த முடிவும் எடுக்கறதுக்கு முன்னாடி என்னுடைய அபிப்பிராயத்த தெரிஞ்சுகிறதுல அக்கறை காட்டியிருக்க மாட்டாங்க. எப்போதுமே என் அபிப்பிராயத்தை தெரிஞ்சுக்கிறதுலே அக்கறையா இருப்பாங்க. அவங்கள்ல என்னையும் ஒரு பகுதியாகத்தான் ஆக்கிக் கிட்டாங்க. இப்படியிருக்கும் போது வாய் வார்த்தை களுக்கும் பாவனைகளுக்கும் எங்கே இடமிருக்கு என் அருமை மகனே... அபுல்?''

நான் பெரியவனாக வளர்ந்து வந்த சமயத்தில் தீவிரமான எந்தப் பேச்சையும் அவர்களாகவே முன்வந்து ஆரம் பித்ததே இல்லை. போகிறபோக்கில் சொல்வதைப்போல என்னுடைய கவனக்குறைவான போக்கு, கசங்கிய ஆடைகள், சிகையலங்காரம், என்னுடைய கோபத்தை

நான் எப்படி அடக்கிக்கொள்வது... என்பன பற்றியும் நல்லவனாகவும், அடக்கமானவனாகவும் இருப்பதற்காக, அறிவை வளர்த்துக் கொள்வதில் ஆர்வமாக இருக்க வேண்டியது பற்றியும் சொல்வார்கள். கிடைக்கிற மிகக் குறைவான வசதி வாய்ப்புகளுக்குள் தங்களுடைய குழந்தைகளை வளர்த்து, ஆளாக்குவதில் தலைமுறை தலைமுறையாக தங்களை அர்ப்பணித்துக் கொண்டு விட்ட இந்தியப் பெண்கள், தங்களுடைய மகன்களுக்கும், மகள்களுக்கும் எப்படி சமைப்பது, சுத்தம் செய்வது, தண்ணீர் இறைப்பது, துணி தைப்பது, உபயோககரமான வகையில் எப்படி நடந்துகொள்வது, பணிவாகவும், மரியாதையாகவும் எப்படி நடந்து கொள்வது என்ற வாழ்க்கைக்குத் தேவையானவற்றை கற்றுக் கொடுத்து வந்தார்கள்.

வயது முதிர்ந்து, நோய்ப்பட்டிருந்த என் தந்தைக்கு, கைதேர்ந்த ஒரு நர்ஸ் போல அக்கறையோடும் பரிவோடும் என் அம்மா பணிவிடை செய்து வந்ததை நான் பார்த்திருக்கிறேன். 1976-ல் என் அப்பா கடைசித் தடவையாக சுவாசித்து முடித்தபோது, நீண்ட நேரம் என் அம்மாவுக்குப் பக்கத்தில் மவுனமாக உட்கார்ந்திருந்தேன். எந்த மகனும் கேட்கத் தயாராக இல்லாத ஒரு விஷயத்தை அதாவது இந்தப் பூமியில் அவர்களுடைய கடமை முடிந்து விட்டதை - என்னிடம் சொல்வதற்கு அவர்கள் ஒருவேளை விருப்பப்பட்டிருக்கலாம். அவர்களை என்னுடன் தும்பாவுக்கு அழைத்துச் சென்று மிகவும் அக்கறையுடன் மருத்துவ கவனிப்புடன் வைத்துக் கொள்ள முடிந்தால், நான் மிக அதிகமாக சந்தோஷப்படுபவனாக இருப்பேன் என்றால் அவர்கள் அதற்கு ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள் என்பதும் எனக்குத் தெரியும். தன்னை அவர்கள் எப்போதுமே தனது கணவர் ஜெயினுலாபுதீனின் வம்சத்தின் பாது காவலராகவே கருதி வந்தார்கள். அவர்களுக்கு எப் போதுமே கொடுத்துக்கொண்டிருக்கிற, அக்கறையோடு கவனித்து வருகிற ஆத்மாவாக வாழ்ந்து வந்தார்கள். அதுதான் அவர்களுடைய சரீரத்துடனான எனது கடைசி

சந்திப்பு. ஒரு சில மாதங்களுக்குப் பிறகு, அம்மா மறைந்துவிட்டார்கள். இறுதிச் சடங்குகளுக்காக நான் தும்பாவிலிருந்து ராமேஸ்வரம் வந்தேன்.

அ.தி: அவர்கள் இல்லாத குறையை உணர்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: அவர்களை நான் இழக்கவே இல்லை.

அ.தி: ஒருவேளை அவர்கள், இதோ இங்கேயே, இந்த அமரத்துவக் குடிலிலேயே, இந்தப் பெரிய ஆலமரத்தின் அடியில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்றால் என்ன சொல்வார்கள்?

ஆ.ப.ஜெ: ''எனக்குப் பல குழந்தைகள் இருப்பதும் அவர்கள் எல் லோரிடமும் நான் பிரியமாக இருப்பதும் உண்மைதான். ஆனால், நீயோ என்னுடைய கடைக்குட்டி, எல்லா வற்றிலும் எனக்கு நீதான் தலைசிறந்தவன். என்னுடைய வாரிசு சொக்கத் தங்கமாக பிரகாசிக்கிறது என்ற என்னுடைய கடைசி நம்பிக்கையாக உன்னைப் பார்க் கிறேன். உன்னிடம் கண்டிப்பாகவும், கடுமையாகவும் நடந்து கொண்டிருக்கிறேன். ஆனால் எனக்குத் தெரிந்த முறையிலேயேதான் உன்னை வளர்த்திருக்கிறேன். உன்னைப் பற்றிப் பெருமிதப்படுகிறேன்'' என்று என் அம்மா சொல்லியிருப்பார்.

அ.தி: அதற்கு நீங்கள் எப்படி பதில் சொல்லியிருப்பீர்கள்.

ஆ.ப.ஜெ: ''அம்மா...! பல சந்தர்ப்பங்களில், பல விஷயங்களில் உங்களுக்கு நான் ஏமாற்றம் அளித்திருப்பேன். உங்க ளுடைய இறை நம்பிக்கை சார்ந்த சம்பிரதாயங்களி லிருந்தும் உங்களுடைய புனிதத் தன்மையிலிருந்தும் நீங்கள் வழுவிச் செல்வதற்கு நான் காரணமாக இருந்து விடக்கூடாது என்பதற்காக எப்போதுமே முயன்று வந்திருக்கிறேன். உங்களைப் பற்றி நானும் கூட பெருமிதப்படுகிறேன், அம்மா...!

அ.தி: நீங்கள் மதித்துப் போற்றுகிற வேறு யாராவது பெண்மணியைப் பற்றி சொல்ல முடியுமா?

ஆ.ப.ஜெ: எம்.எஸ்.சுப்புலட்சுமி மீது நான் எப்போதுமே மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருக்கிறேன். தனது தலைமுறையைச் சேர்ந்தவர்களில், பாரம்பரியத்திலும் பழமையிலும் மிகவும் ஊறிப்போயிருந்தவர், அவர். அவருடைய இசையில் என் ஆன்மாவை நீராட்டித் தூய்மைப்படுத்திக் கொள்கிறேன்.

அ.தி: அவருடைய இசையில் மிகவும் சிறப்பான விஷயமாக எதை நினைக்கிறீர்கள்?

ஆ.ப.ஜெ: பக்கவாத்தியங்களின் தாள லயத்தோடு இயைந்து ராகம்-தானம் பல்லவியில் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் இசை ஞானம் பொங்கும் தெய்விகக் குரல் கேட்போரை உருக வைத்துவிடுகிறது. பேகடை ராகத்தில், ஆதி தாளத்தில் அவர் பாடிய ‘கைலாச பதே, பசுபதே உமாபதே நமோஸ்துதே’ பல்லவியில் அவர் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். சமர்ப்பணம், கடும் உழைப்பு, வருடக்கணக்கான சாதகம் மூலம்தான் இப்படிப்பட்ட ஒரு நிலையை எட்ட முடியும். கர்நாடக இசையின் முகமும் குரலுமாக அவர் வாழ்ந்து வந்தார்.[78] கடந்த ஐம்பது ஆண்டு காலமாக நான் விழித்தெழுகிற ஒவ்வொரு புதிய நாளும் அவர் பாடுகிற வெங்கடேச சுப்ரபாதத்துடன்தான் தொடங்குகிறது.

அ.தி: அவருடைய இசை அல்லாமல் வேறு எந்த குணாம் சங்கள் உங்களை மிகவும் கவர்ந்துள்ளன?

ஆ.ப.ஜெ: அவருடைய எளிமை. பல்லாயிரக்கணக்கான ரசிக நெஞ்சங்களின் போற்றுதல்களும், புகழுரைகளும் அவரை சலனப்படுத்தியதே இல்லை. அவருடைய கடைசி நாள் வரையிலும் எளிமையான, தூய்மையான பக்திமயமான வாழ்க்கையைத்தான் அவர் நடத்தி வந்தார். அவர் எப்போதுமே மிகவும் யதார்த்தமான வராகவும் மற்றவர் நலனில் உண்மையான அக்கறை கொண்டவராகவும் வாழ்ந்து வந்தார்.

அ.தி: இசை, ஆன்ம வளர்ச்சியை அவருக்கு வழங்கியது.

ஆ.ப.ஜெ: அழகியல் மேன்மை மற்றும் கலை நேர்த்தி என்ற அடிப்படையில் மட்டுமல்லாமல் தனது அற்புதமான சில குணாம்சங்களான அடக்கம், எளிமை, கருணை, மற்றவர் நலனில் அக்கறை மற்றும் நடத்தை நெறிமுறைகளில் உறுதியான பிடிப்பு ஆகியவற்றிலும் கூட எம்.எஸ். சுப்புலட்சுமி உத்வேகம் தருகிற ஒரு முன்னுதாரண மாதரசியாகத் திகழ்கிறார்.

அ.தி: பிரார்த்தனை என்பது பிரகாசமான, தானாகவே சக்தியை உருவாக்கிக் கொள்கிற ரேடியம் போன்றது என்று அலெக்சிஸ் காரல்[79] கூறுகிறார்.

ஆ.ப.ஜெ: தனது கண்களை மூடிக்கொண்டு, 'குறை ஒன்றும் இல்லை' என்று எம்.எஸ். பாடுகிற காட்சியை பார்க்கிற போது, அன்போடும், உண்மையோடும் கொடுக்கிற ஒருவருக்கு தன்னிடம் எதையுமே வைத்துக்கொள்ளா மல் எல்லாவற்றையுமே பிரபஞ்சம் வழங்கிவிடுகிறது என்று உணர்கிறேன்.

அ.தி: அதிகார அரசியல் உலகத்தை எடுத்துக் கொண்டால் யாரை மிகவும் மதிக்கிறீர்கள்?

ஆ.ப.ஜெ: தென்னாப்பிரிக்க மக்கள், காந்திஜியைப் போற்றிப் புகழ்வது போல நெல்சன் மண்டேலாவை நான் மதித்துப் போற்றுகிறேன்.

அ.தி: 2004, செப்டம்பரில் நீங்கள் தென்னாப்பிரிக்கா சென்றிருந்தீர்கள்.

ஆ.ப.ஜெ: பரந்து விரிந்துள்ள தென்னாப்பிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்கிற யாரும் அதன் புவி அமைப்பு முறையில் காணப்படுகிற பெருமளவிலான வேறுபாடு களையும், மாறுபட்ட நிலவரங்களில் கிராம மக்கள் மேற்கொண்டுள்ள வாழ்க்கை முறையையும் கண்டு திகைத்துப் போய்விடுவார்கள். இந்திய மக்களுக்கும் தென்னாப்பிரிக்க மக்களுக்கும் ஒரு பொதுவான வரலாறு உள்ளது. இந்த இரண்டு தேச மக்களுக்குமே ஒரே மாதிரியாக, ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களிடம் தங்கள் பூமியைப் பறிகொடுத்தவர்கள். குடியேறிகளாக

வந்த அவர்கள், அங்கேயே மூலதனத்தைத் திரட்டிக் கொண்டு, அந்த நாட்டு மக்களையே சுரண்டி தங்களுடைய சொந்த நலனுக்கான அடித்தளத்தை அமைத்துக் கொண்டுவிட்டார்கள்.

அ.தி: இன்றைய கேப்-டவுன் அமைந்திருக்கிற இடத்தில் 1652-ல் ஐரோப்பியர்கள் குடியேறினார்கள் என்றும், கீழை நாடுகளுக்குப் பயணம் செய்கிற கப்பல்கள் வழியில் நின்று செல்வதற்கான கப்பல் தளத்தை அங்கு அமைத்தார்கள் என்றும் நான் படித்திருக்கிறேன். அப்போது, அங்கு வாழ்ந்த விவசாயிகள் பெருமளவிலான கால்நடை மந்தைகளை வைத்திருந்தார்கள் என்றும் அன்றைய சராசரி ஐரோப்பிய விவசாயியைக் காட்டிலும் மிகவும் வசதி கொண்ட பணக்காரர்களாக இருந்தார்கள் என்றும் ஆரம்பகால ஐரோப்பிய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், இங்கு அடுத்தடுத்து அதிக அளவில் குடியேறிய ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களால், தங்களுடைய செல்வங்களையும், சுபிட்சமான வாழ்க்கையையும் குறுகிய காலத்திற்குள்ளேயே தென்னாப்பிரிக்க மக்கள் பறிகொடுத்துவிட்டார்கள்.

ஆ.ப.ஜெ: இந்தியாவிலும் இதே நிலவரம்தான் நீடித்தது.

அ.தி: ஐரோப்பியர்களின் காலனி ஆதிக்கம் அவ்வளவு சுலபமாக விரிவடைந்துவிடவில்லை. தங்கள் பூமியை அபகரித்துக்கொண்ட ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து ஆப்பிரிக்க மக்கள் இடைவிடாது போராடி வந்தார்கள். 17ஆவது, 18ஆவது நூற்றாண்டிலும், 19ஆவது நூற்றாண்டின் பெரும்பகுதியிலும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் உள்நாட்டு மக்களுக்கும் இடையே மோதல்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. ஆக்கிரமிப்பாளர்களின் கால்நடைகளைக் கொள்ளையடித்தல், நீண்டகால கொரில்லாத் தாக்குதல்கள், நேரடி யுத்தம் என வெவ்வேறுவிதமான போராட்டங்களை ஆப்பிரிக்க மக்கள் சளைக்காமல் நடத்தி வந்தார்கள். ஆனால், இவை அனைத்தும் ஈவிரக்கமின்றி ஒடுக்கப்பட்டன. ஆரம்பத்தில், ஐரோப்பிய விவசாயிகள், அடிமைகள் மற்றும்

ஆப்பிரிக்க நிலக் குத்தகைதாரர்கள் அடங்கிய ஆயுதம் தாங்கிய படையினரைக் கொண்டும் பின்னர், 1811-ல் இருந்து பிரிட்டிஷ் ராணுவத்தைக் கொண்டும் எதிர்ப்பு களையும் ஆர்ப்பாட்டங்களையும் ஐரோப்பியர்கள் அடக்கி வந்தார்கள்.

ஆ.ப.ஜெ: நான் அங்கு சென்றிருந்த சமயத்தில் இந்தப் போராட்டம் பற்றி என்னிடம் விவரித்தார்கள். ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து, உள்நாட்டு மக்கள் நடத்திய போராட்டம் திட்டமிட்ட ரீதியிலும் வெற்றிகரமாகவும் நீண்டகாலம் தொடர்ந்தது என்றும் அது மிகவும் கடுமையான யுத்தமாக இருந்தது என்றும் என்னிடம் கூறினார்கள். தங்களுடைய பூமியையும், உடைமைகளையும், வாழ்க்கை முறையையும் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆப்பிரிக்கா மக்கள் ஆக்ரோஷமாகப் போராடினார்கள். நேரடி யுத்தத்திலிருந்து கால்நடைகளைக் கொல்வது வரையிலான வெவ்வேறுவிதமான வடிவங்களில் எதிர்ப்பு நீடித்து வந்தது. மகானா (Makana), சர்ஹிலி (Sirhili), மோலோன்லு (Mhlontlo), சிகாவூ (Sigcawu), செடிவாயோ (Cetywayo), பம்படா (Bambata) என்ற நாயகர்களின் சாகசப் போராட்டங்கள் பற்றிய கதைகள் தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்டு வரு கின்றன. இவர்களில் பல தலைவர்களை ராபன் தீவிலுள்ள சிறையில் அடைத்தார்கள் அல்லது கேப் - டவுன் கோட்டையிலுள்ள இருட்டறையில் சிறை வைத்தார்கள். மற்றவர்கள் யுத்தத்தில் வீரமரணம் அடைந்தார்கள்.

அ.தி: தென்னாப்பிரிக்க விடுதலை யுத்தத்தில் நில விவகாரம் முக்கிய அம்சமாக இடம் பெற்றிருந்தது. விடுதலை சாசனத்தில் ''உழைப்பவர்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப் பட வேண்டும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கிராமப் புற ஏழைகளின் நலன் குறித்த பல அம்சங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. அனைத்து அரசியல் இயக்கங்களின் தேர்தல் அறிக்கைகளும் இதே கருத்தைத்தான் பிரதி

பலித்தன. இதே சூழ்நிலை நிலவுகிற இந்தியாவில் இப்படி அறிவிக்க முடியாத நிலை உள்ளது.

ஆ.ப.ஜெ: பரந்த அளவிலான கிராம வளர்ச்சி மற்றும் விவசாய சீர்திருத்த அணுகுமுறையை மேற்கொள்கிற வகையில் நிலச் சீர்திருத்தங்கள், அமல்படுத்தப்பட வேண்டும் என்பது மிகவும் முக்கியமான விஷயம்.

அ.தி: Long Walk to Freedom என்ற புத்தகத்தில் நெல்சன் மண்டேலா தனது குழந்தைப் பருவம் பற்றிய விவரங்களைக் குறிப்பிட்டுள்ளார். 1918 ஜுலை 18-ஆம் நாள் உம்டட்டா என்ற இடத்தில் பிறந்த இவருக்கு ரோலிஹ்லஹ்லா மண்டேலா என்று பெயர் சூட்டினார்கள். தென்னாப்பிரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதியிலுள்ள ட்ரான்ஸ்கி என்ற இடத்தில் தனது குழந்தைப் பருவத்தின் ஆரம்ப நாட்களைக் கழித்தார். தானாகவே சட்டக்கல்வி பெற்றார்.

ஆ.ப.ஜெ: அவரைப் பற்றி மேலும் சொல்லுங்கள்.

அ.தி: இரண்டாவது உலக யுத்தம் உச்சத்தில் இருந்தபோது தென்னாப்பிரிக்காவில் நிகழ்ந்தவற்றை Fighting years என்ற புத்தகத்தில் ஸ்டீவன் மு்ஃப்ஸன்[80] விவரித்துள்ளார். ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் (African National Congress - ANC ஏ.என்.சி.) உறுப்பினர்களாக ஆப்பிரிக்க இளைஞர்கள் அடங்கிய ஒரு சிறு குழு, ஓர் அமைப்பாக உருவானது. அறுபது உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப் பட்ட இந்த இளைஞர்கள் குழு, ஆப்பிரிக்க தேசிய காங்கிரசை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கான ஒரு அசாதாரண இலக்கை நோக்கி முனைப்புடன் செயல் பட்டது. நகரங்களையும் கிராமங்களையும் சேர்ந்த எழுதப்படிக்கத் தெரியாத கோடிக்கணக்கான உழைக்கும் மக்களிடமிருந்து வலிமையையும் ஊக்கத்தையும் பெற்று, இந்த மக்கள் இயக்கம் வலுவடைந்தது. பொதுக்கூட்டங்களை நடத்த முடியாத சூழ்நிலையில், தனது உறுப்பினர்களுடன் *ஏ.என்.சி.* தலைமை வலுவான தொடர்பை உருவாக்கிக்கொள்வதற்கு ஏதுவான

அமைப்பு ரீதியிலான ஒரு திட்டத்தை தயாரிக்கும் பொறுப்பு 1952-ல் நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப் பட்டது. உள்ளூர் மற்றும் வட்டார அளவில் சக்தி வாய்ந்த கிளைகளை அமைத்து, ***ஏ.என்.சி.*** இயக்கத்தை அரசியல் சக்தியாக மண்டேலா வலிமை பெற வைத்தார்.

ஆ.ப.ஜெ: காந்திஜி பின்பற்றிய அதே வழிமுறையை இங்கும் காண்கிறேன்.

அ.தி: அந்தோனி சாம்ப்ஸன்[81] எழுதியுள்ள மண்டேலா வாழ்க்கை வரலாற்றில், ஐம்பதுகள் முழுவதிலும் பலவிதமான அடக்குமுறைகளுக்கு அவர் ஆளானார் என்று குறிப்பிட்டுள்ளார். அவருக்குத் தடை விதித்தார்கள். கைது செய்து சிறையில் அடைத்தார்கள். பெரும் பரபரப்பான தேசத்துரோக வழக்கு விசாரணை யில் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்ததால், அவருடைய வழக்கறிஞர் தொழிலும் அரசியல் பணியும் மிக மோசமாக பாதிக்கப்படக்கூடிய ஆபத்து வந்தது. ஆனால், அந்த வழக்கு விசாரணை செல்லாக் காசாகி விட்டது. அதையடுத்து விரைவிலேயே குடியரசு அரசியல் அமைப்பை தென்னாப்பிரிக்கா பின்பற்றக் கூடிய நிலை வந்தது. ஆனாலும் கூட மண்டேலாவுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மிகவும் கொடுமை யான ரோபன் தீவில் பலத்த பாதுகாவலுடன் சிறை வைக்கப்பட்டார். இந்தத் தீவு, கேப் - டவுனிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

ஆ.ப.ஜெ: ரோபன் தீவுக்கு நான் சென்றிருந்தேன். அங்கு அவர் அரசியல் விழிப்புணர்வு வகுப்புகளை நடத்தி, அந்தத் தீவை கல்வி கற்கும் ஒரு மையமாக மாற்றி விட்டார் என்று என்னிடம் கூறினார்கள். தன்னை வஞ்சம் தீர்க்க முனைந்திருந்த எதிரிகளுக்கு இங்குதான் மண்டேலா, ''என்னுடைய கண்ணியத்தை சீரழிக்க முயல்கிற எந்த மனிதனும் அல்லது அமைப்பும் தோற்றுத்தான் போவார்கள்'' என்று முழங்கினார். சிறைச்சாலையில் தான் எதிர்கொண்ட அவமானங்களையும் பழி வாங்குகிற நடவடிக்கைகளையும் ஓர் ஆக்கபூர்வமான முறையில் அவர் மழுங்கடித்தார். சுயமான ஒரு கல்வி

முறையை அவராகவே அபாரமாக அமைத்துக் கொண்டு தன்னைத் தானே பட்டைத் தீட்டிக் கொண்டதால், அந்தச் சிறைச்சாலைக்கு 'தீவு பல்கலைக்கழகம்' என்ற பெருமையையும் பெற்றுத் தந்தார்.

அ.தி: ''1990-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அதிபர் எஃப்.டபிள்யூ.டி க்ளர்க் (F.W.de Klerk) *ஏ.என்.சி.* மீதான தடையை நீக்கியதும், மண்டேலாவுக்கு அக்னிப் பரீட்சை ஆரம்பமானது'' என்று ***Time 100*** என்ற புத்தகத்தில் ஆண்ட்ரே ப்ரிங்க்[82] எழுதியுள்ளார். ''தனது அரசியல் பயணத்தின் ஒவ்வொரு அங்குலத்திலும் தன்னுடைய சொந்த தொண்டர்கள் ஆதரவை மண்டேலா திரட்ட வேண்டி வந்தது. அப்போதும்கூட வெள்ளையர்கள் பற்றிய பயத்தைத் தணிக்கிற வேலை இதைவிட மிகவும் சிக்கலாக இருந்தது. ஆனால், தனது நிதானம், விவேகம், தொலைநோக்கு ஆகிய பண்புகளையெல்லாம் தனது போராட்டத்தில் பிரதிபலிக்க வைத்ததோடு, இவை எல்லாவற்றையும் விட பிளவுபட்டுக் கிடந்த மக்களை தார்மிகமான ஒருங்கிணைப்புத் திறன் மூலம் ஒன்று படுத்தினார். இதன் விளைவாக ஆப்பிரிக்க நாட்டின் முதலாவது ஜனநாயகத் தேர்தலில் அவர் ஜனாதிபதி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

''தனது மனைவியின் ஊழல் மோசடிகள் காரணமாக உண்டான மனவேதனை, அதனால் இறுதியில் தன் மனைவியைவிட்டுப் பிரிந்துவிட்ட நிலை, தனது ஆதரவாளர்களின் ஊழல் தில்லுமுல்லுகள், வெள்ளை யரின் பேராசையால் சீரழிந்துவிட்ட ஒரு தேசத்தில் வேலை வாய்ப்புகளையும் வீட்டு வசதிகளையும் உருவாக்கித் தருகிற திட்டங்களை நிறைவேற்றுவது பற்றிய கவலை... என அடுத்தடுத்த துயரங்களில் சிக்கி, அவர் சோகமானவராகவும் பக்குவமான மனிதராகவும் மாறியிருக்கிறார்'' என்று அந்தப் புத்தகத்தில் விவரிக்கப் பட்டுள்ளது.

ஆ.ப.ஜெ: உண்மையில் வாழ்க்கையின் ஓர் உயர்ந்த ஆசிரியராக மண்டேலா திகழ்ந்தார். ஜனாதிபதியாக வழிநடத்திய

அவருடைய தலைமையில், முன்னெப்போதும் இல்லாத உண்மையையும், சத்தியத்தையும் சமரசத்திற்கான முனைப்புகளையும் தேசம் கண்டது. அடக்கியாண்டவர் களையும் அடக்கப்பட்டவர்களையும் பிஷப் டெஸ்மாண்ட் டுட்டுவின் (Bishop Desmond Tutu) செல்வாக்கான உதவியுடன் ஒருவரையொருவர் சந்திக்க வைத்து, மன்னிக்கும் பாங்கை மண்டேலா மலர வைத்தார். தென்னாப்பிரிக்காவிலும், உலகத்தின் எந்த மூலையிலும் அடக்கப்பட்டு, உரிமைகளைப் பறி கொடுக்கிற அனைவருக்கும், அடக்குமுறையையும் அடிமைத்தனத்தையும் எதிர்த்துக் குரல் கொடுக்கும் அனைவருக்கும் அவருடைய வாழ்க்கை ஓர் உத்வேக சக்தியாக அமைந்துள்ளது.

அ.தி: ''இந்த பூமி கிரகத்தில், இந்த தேசத்தை இருந்த இடம் தெரியாமல் தீயிட்டுக் கொளுத்தி கரித் துண்டுகளாக சிதறடித்து சின்னாபின்னமாக்குகிற, இதன் நகரங்களில் ரத்த வெள்ளத்தை பெருக்கெடுக்க வைக்கிற ஒரு கொடூரமான அச்சுறுத்தலாக கிளம்பியிருந்த ஒரு மோதலிலிருந்து நாம் எப்படி மீண்டு வந்தோம் என்பதை நினைத்துப் பார்ப்போம். இனம், மதம், கலாசாரம் அல்லது மற்ற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, ஒவ் வொரு மனிதனின் கவுரவத்திற்கும் கண்ணியத்திற்கும் மதிப்பளிக்க வேண்டும் என்ற ஒரு புதிய ஒழுங்கு நெறியைப் பின்பற்ற வேண்டும் என்ற ஒரு பொதுவான உறுதிப்பாடுதான், அனைத்து விதமான இந்த அச்சுறுத் தல்களையும் நம்மை நெருங்கவிடாமல் தடுத்துவிட்டது. இப்போதைய முனைப்பிலும்கூட மனித கவுரவம் மற்றும் சமத்துவம் என்ற அந்த உறுதிப்பாட்டை நிறைவேற்று வதில் உண்மையுடன் செயல்படுவோம்''[83] என்று மண்டேலா கூறியுள்ளார்.

ஆ.ப.ஜெ: மனிதனுக்கு மனிதன், மனிதத் தன்மையில்லாமல் நடந்துகொள்கிற அவலத்துக்கு முடிவுகட்டிய மனிதநேய உத்வேக சக்தியின் வெற்றி வடிவமாக மண்டேலாவின் வாழ்க்கை அமைந்துள்ளது. போராட்டத்தின் அடை

யாளச் சின்னம் அவர். யாருக்குமே அதில் சந்தேகமே வேண்டாம். மண்டேலாவைப் போன்றவர்கள், சில குறிப்பிட்ட லட்சியங்களுக்காக உயிரைக் கொடுக்கத் தயாராக இருப்பவர்கள். அனைவரின் நலனுக்காக, அந்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகவே உயிர் வாழ்வதிலும் அதைவிட அதிக உறுதி கொண்டவர்கள், அவர்கள்.

அ.தி: தங்களுடைய தேசத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக எத்தனையோ இன்னல்களைத் தாங்கி, தியாக வேள்வி நடத்திய தென்னாப்பிரிக்க மக்கள் அனைவரின் சார்பாக 1993-ஆம் ஆண்டு நெல்சன் மண்டேலாவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ஆ.ப.ஜெ: தனது மக்களுக்காகவும் உன்னதமான ஒரு குறிக்கோளுக்காகவும் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையையும், தனது இளமையையும் தியாகம் செய்து விட்ட அவருடைய வாழ்க்கைதான் எவ்வளவு மகத்தான, முன்னுதாரண வாழ்க்கை!

அ.தி: இவருடைய வாழ்க்கை சொல்கிற செய்தி என்ன?

ஆ.ப.ஜெ: நம்மைச் சுற்றிலும் நிலவுகிற பிரபஞ்ச வேதனையை கண்டுகொள்ளாமல் நமது இதயங்களையும் மனங்களையும் தொடர்ந்து மூடி வைத்துக்கொண்டால், வளர்ச்சியடையாத மற்றும் அரைகுறையாக வளர்ச்சியடைந்த நமது மனோ பாவத்திற்குள்ளேயே மீள முடியாமல் சிக்கிக்கொண்டு விடுவோம் என்பதை மண்டேலா நிரூபித்துக் காட்டியுள்ளார். 'அந்த ஜாடியை மட்டுமே அவர் உடைத்து நொறுக்கவில்லை, நதியிலும் மூழ்கி நீராடினார்.'

அ.தி: ''புறச்சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் தனக்குள்ளேயே ஒருவர், ஏந்திக்கொண்டிருக்கிற ஒரு குணாம்சம்தான் உண்மையான அமைதி'' என்று ரால்ஃப் வால்டோ எமர்சன்[84] கூறியுள்ளார். ''குறைந்த தேவைகளை வைத்துக் கொண்டு, தானாகவே அவற்றை நிறைவேற்றிக் கொள்வதைவிட வேறு எது அவ்வளவு மேன்மை

யானதாகவும் அருமையானதாகவும் இருக்க முடியும்?'' என்று எமர்சன் கேட்கிறார்.

ஆ.ப.ஜெ: இந்த வார்த்தைகளை தனது வாழ்க்கையில் நிரூபித்துக் காட்டிவிட்டார், மண்டேலா. நான் அவருடன் கை குலுக்கிய போது ஒரு வலிமையான ஆன்மாவின் ஸ்பரிசத்தை உணர்ந்தேன். ஓர் ஊன்றுகோலுடன் மெது வாக நடந்து வந்துகொண்டிருந்த அவர், என்னுடன் கைகுலுக்கிய பிறகு, அந்த ஊன்றுகோலை கைவிட்டு விட்டு, என் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தார். நான் அவருக்குப் பக்கபலமான துணையாக மாறிவிட்டேன். நெல்சன் மண்டேலாவின் உயர்ந்த ஆளுமைத் தன்மையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பெரிய பாடம். பின்வரும் குறளில் விளக்கப்பட்டுள்ளது.

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

பிறர் செய்கிற மன்னிக்க முடியாத குற்றத்தை உடனே தண்டித்து விட்டாலும் குற்றமில்லை. ஆனால், அவ்வாறு செய்யாமல் அதை மனதில் வைத்து நொந்துகொண்டே இருந்து பிறகு, அதர்மமான முறையில் அதற்காகப் பழிவாங் காமல் இருப்பது நல்லது.[85]

தனது மக்களின் வேதனையை தனது ஆன்மாவில் உணர்ந்தார், நெல்சன் மண்டேலா. வெஞ்சிறைக் கொடுமையாலும் வெல்ல முடியாத அவருடைய சக்தியைக் குலைத்துவிட முடியவில்லை. நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த காலகட்டத்தின் ஓர் உயர்ந்த, உத்தமத் தலைவராகவும் அரசியல் தலைவராகவும் அவரை நான் பார்க்கிறேன்.

அ.தி: இப்போது உங்களுடைய சொந்தப் பணி வாழ்க்கை பற்றிய விஷயத்திற்கு வரலாமா? விக்ரம் சாராபாய், ஹோமி ஜஹாங்கீர் பாபா, சதீஷ் தவன், பிரும்ம பிரகாஷ், டி.எஸ். கோத்தாரி, ராஜா ராமண்ணா ஆகியோரைப் பற்றி நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். இந்த உயர்ந்த ஆத்மாக் களில் யார் உங்களிடம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி

யிருக்கிறார்கள் அல்லது உங்கள் இதயத்தில் மிகவும் அழுத்தமான தடம் பதித்திருக்கிறார்கள்?

ஆ.ப.ஜெ: இவர்கள் ஒவ்வொருவருமே தனித்துவம் வாய்ந்த விஞ்ஞானிகள். இருந்தாலும், சதீஷ் தவனின் நேரடித் தலைமையில் பத்தாண்டு காலமாக பணியாற்றியிருக் கிறேன். தொலைநோக்கு சிற்பியான, விக்ரம் சாராபாய், எங்களுடைய போற்றுதலுக்குரிய குரு.

அ.தி: 1990-ல் ஹைதராபாத்தில், பறவைகளின் பயணம் (The Flight of Birds) பற்றி உரையாற்ற வந்திருந்த சமயத்தில் சதீஷ் தவனை நான் சந்தித்தேன். பார்வையாளர்களுக்கு அவரை நீங்கள் அறிமுகம் செய்து பேசியபோது அவருக்கு நீங்கள் சூட்டிய புகழாரம் கொஞ்சம்கூட மிகையல்ல. அந்தப் போற்றுதல் நூற்றுக்கு நூறு நிஜமான வார்த்தைகள்.

ஆ.ப.ஜெ: தவனிடம் என்னை மிகவும் கவர்ந்த ஒரு விஷயம், அவருடைய சகலகலா வல்லமை. தனது பணி வாழ்க்கை யின் வெவ்வேறு கட்டங்களில் பலவிதமான பொறுப்பு களை அவர் வகித்திருக்கிறார். ஓர் ஆசிரியராக, ஆய்வு விஞ்ஞானியாக, பொறியாளராக, தொழில்நுட்ப வல்லுந ராக, நிர்வாகியாக, தலைவராக மற்றும் ஆலோசகராகப் பணியாற்றியிருக்கிறார். சில சமயங்களில் ஒரே நேரத்தில் இவற்றின் பல பொறுப்புகளையும் சேர்த்தே வகித்திருக் கிறார். அவர் மேற்கொண்டிருந்த ஒவ்வொரு பணியிலும் அர்ப்பண மனோபாவம், பரந்துபட்ட தொலைநோக்கு கண்ணோட்டம், மிகவும் கவனமான, துல்லியமான செயல்திறன் மற்றும் மனிதநேயம் ஆகியவற்றைப் பிரதிபலிக்க வைத்தார். இந்த அனைத்து குணாம்சங் களுடன் தனது அசாத்தியமான விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத் திறன்களையும் சங்கமிக்க வைத்து, அவர் பணியாற்றிய அல்லது வழி நடத்திய ஒவ்வொரு அமைப்பிற்கும் நிறுவனத்திற்கும் புதுவடிவம் கொடுத் தார். இவற்றையெல்லாம் சாதிப்பதற்கான ஆற்றல் தங்களிடம் இருக்கிறதா என்று நினைத்துக்கூடப் பார்க்க

முடியாத நிலையிலிருந்த அமைப்புகளையும் நிறுவனங்களையும் சாதிக்க வைத்த ஜாம்பவான், அவர்.

அ.தி: ஸ்ரீ நகரில் பிறந்த சதீஷ் தவன், பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் (லாஹுர்) தனது பட்டப் படிப்பை முடித்தார். அவர் பெற்ற பட்டங்கள் ஒரு விந்தையான கலவை. கணிதத்திலும் இயற்பியலிலும் இளங்கலைப் பட்டம்; ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப்பட்டம் மற்றும் இயந்திரவியல் பொறியியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார். 1947-ல் மினசோட்டா பல்கலைக்கழகத்தில் விமான வடிவமைப்புப் பொறியியலில் (Aeronautical Engineering) எம்.எஸ். பட்டம் பெற்றார். பிறகு கலிஃபோர்னியா தொழில் நுட்பப் பயிலகத்தில் (California Institute of Technology) ஆராய்ச்சியை மேற்கொண்டார். 1949-ல் அங்கு வடிவமைப்புப் பொறியாளர் பட்டமும் (Aeronautical Engineer's Degree), அதையடுத்து அதே பயிலகத்தில் திரவ இயக்கவியல் (Fluid Dynamics) நுட்பத்தில் ஜாம்பவானும், புகழ்பெற்ற விண்வெளி விஞ்ஞானியுமான ஹன்ஸ் டபிள்யூ. லீஃப்மானுடன் (Hans W.Liepmann) இணைத்து விமான வடிவமைப்பு மற்றும் கணிதத்தில் 1951-ல் பி.எச்.டி. பட்டமும் பெற்றார். இந்தத் தகவல்களையெல்லாம் *ஃப்ரண்ட் லைன்*[86] இதழில் ஆர்.ராமச்சந்திரன் எழுதிய கட்டுரையில் படித் திருக்கிறேன். கல்வியில் கரைகண்டிருக்கும் எவ்வளவு பெரிய மேதையாக தவன் உயர்ந்திருக்கிறார்!

ஆ.ப.ஜெ: அறிவியல், பொறியியல் மற்றும் மனிதநேயப் பண்பு களை உள்ளடக்கிய அவருடைய பரந்து விரிந்துள்ள கல்வி ஆற்றலும் தனித்தன்மை வாய்ந்த அவருடைய குடும்பப் பின்னணியும்தான் பல மாறுபட்ட கோணங் களில் இந்த உலகத்தை அணுகக்கூடிய ஒரு திறனை அவருக்கு வழங்கியிருந்தது என்று தோன்றுகிறது. தனித் தன்மை வாய்ந்த பண்புகள் நிறைந்த ஒரு தலைவராக, அவர் உயர்ந்ததற்கும் இந்தப் பின்னணிதான் ஒரு காரண மாக இருந்திருக்கலாம் என்றும் நினைக்கிறேன்.

அ.தி: சதீஷ் தவன் குறித்த அஞ்சலிக் கட்டுரை ஒன்றில் ரோடம் நரசிம்ஹ அவருடைய வாழ்க்கையை வெகு சிறப்பாக சித்தரித்துள்ளார்.[87] காற்றின் இயக்கவிசை பற்றிய தனது ஆய்வை சதீஷ் தவன் ஆரம்பித்த சமயத்தில், 'சூப்பர் சோனிக்' எனப்படும். ஒலியின் வேகத்தை விட அதிக வேகத்தில் நகர்தல், காற்றில் வேகமாக நகரும்போது ஏற்படும் அதிர்வுகளால் உருவாகிற அதிர்வலைகள் (ஷாக் வேவ்ஸ்) என்பவையெல்லாம் முற்றிலும் புதுமை யான விஷயங்களாக இருந்தன. ஒரு திடப் பரப்பின் மீது அதிர்வலைகள் மோதும்போது எந்த மாதிரியான பாதிப்புகள் உண்டாகின்றன என்பதைத் தனது ஆரம்ப கட்ட ஆராய்ச்சி அறிக்கை ஒன்றில் திட்டவட்டமாகவும் தெள்ளத் தெளிவாகவும் விளக்கியிருந்தார், சதீஷ் தவன். இவ்வாறு வேகமாக நகரும் திடப்பொருளின் மீது காற்று உராய்வதால் ஏற்படும் பாதிப்புகளை அளவிடுவதற்கு, இவர் ஒரு நூதனமான முறையை உருவாக்கினார். Schlichting எழுதியுள்ள ***Boundary Layer Theory*** உள்ளிட்ட பல்வேறு புத்தகங்களில் இந்த ஆராய்ச்சி முடிவுகள் வெளிவந்துள்ளன. கடந்த 50 வருடங்களாக இதன் பல பதிப்புகளில் சதீஷ் தவனின் ஆராய்ச்சி முடிவு களை மறு பிரசுரம் செய்தார்கள். 1999-ல் வெளிவந்த எட்டாவது பதிப்பிலும் இவை இடம்பெற்றிருந்தன.

ஆ.ப.ஜெ: ரோடம் நரசிம்ஹ வெகு சிறப்பாக எழுதியுள்ளார்.

அ.தி: நெடிதுயர்ந்த, வசீகரமான ஓர் இளைஞராக சதீஷ் தவனை, ரோடம் நரசிம்ஹ நினைவு கூர்ந்துள்ளார். தனது சிறிய எம்.ஜி.பந்தயக் காரிலிருந்து கீழே குதித்து இறங்கும் சதீஷ் தவன், சிவப்பு சட்டை அணிந்திருப்பார். முகத்தில் சந்தோஷப் புன்னகை விரிந்திருக்க, மாடிப் படிகளை மிக வேகமாகக் கடந்து சென்று, வகுப்பறைக் குள், மிகவும் சந்தோஷமாக 'குட் மார்னிங்' சொல்லிக் கொண்டே நுழைவார். அந்தக் கல்வி நிலையத்திற்கு ஓர் இளமைத் துடிதுடிப்பையும், பொலிவையும், நவீனத்துவத்தையும் அக்கறை மற்றும் சகஜ மனோ பாவத்தையும் தன்னுடன் கொண்டு வந்தார். இந்தத்

துடிதுடிப்பும் செயல்வேகமும், அவருடைய மாணவர் களையும், பல சகாக்களையும் பற்றிக்கொண்டு விட்டது. அந்த வளாகத்தில் அவர் ஒரு துருவ நட்சத்திரமாகப் பிரகாசித்தார். அவருடைய நகைச்சுவை உணர்வும் சமூக அக்கறையும் அவருடைய ஆளுமைத் தன்மைக்கு மேலும் மெருகேற்றி அவரைக் காண்போரை எல்லாம் காந்தமென அவர்பால் ஈர்த்தது.

ஆ.ப.ஜெ: தவன் பற்றி எனக்கும் சில இனிமையான, மிக அருமை யான நினைவுகள் உண்டு. எனவே, தவனின் அகவெளி பற்றிக் கூற விரும்புகிறேன்.

அ.தி: என்ன ஓர் அருமையான விஷயம்...!

ஆ.ப.ஜெ: ஆய்வு தொடர்பான தவனின் தத்துவத்தில் இரண்டு தலைசிறந்த அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. முதலாவது அம்சம்: குறைந்த செலவில் சாமர்த்திய மாகவும், சாதுர்யமாகவும் ஆராய்ச்சியை மேற்கொள் வது. அந்த சமயத்தில் கிடைக்கிற பொருள்கள், திறன்கள் மற்றும் சாதனங்களைப் பயன்படுத்திக் கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபடுவது. இரண்டாவது அம்சம்: அவருடைய ஆராய்ச்சிக் கூடங்களில் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயங்கள் அனைத்துமே நமது தேசத்தில் புதிதாகத் தோன்றிய விமானத் தொழிலில் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகளிலிருந்து ஏதாவது ஒரு விதத்தில் கிளைவிட்டவையாக அமைந் திருந்தன. மிகவும் உயர்நிலை அளவிலான கொள்கை வகுப்பது மற்றும் நிர்வாகத் திட்டத்தின் அடிப்படையில் விமானத் தொழிலை மேம்படுத்துவதற்கான முயற்சியில் தவன் இடையறாது பாடுபட்டு வந்தார்.

அ.தி: தவனுடைய தொடர்பும் அவருடன் கலந்து பழகுவதும் எப்போது ஆரம்பமானது?

ஆ.ப.ஜெ: 1959-61 வருட காலகட்டங்களில் பெங்களூரில் உள்ள விமான வடிமைப்பு மேம்பாட்டு அமைப்பில் (Aeronautical Development Establishment-ADE) நான் பணியாற்றி வந்தேன். அப்போது நாங்கள் ஹோவர்

கிராஃப்ட் நந்தி விமானத்தை வடிவமைத்து வந்தோம். இந்த வடிவமைப்புத் திட்டத்தில் ஒரு முக்கியமான பிரச்சினையை எதிர்கொண்டோம். கான்ட்ரா ரொட்டேட்டிங் ப்ரப்பல்லர் (contra rotating propeller) வடிவமைப்பது தொடர்பான பிரச்சினை இது. ஒரு ப்ரப்பல்லரை எப்படி வடிவமைப்பது என்பது எனக்குத் தெரியும். ஆனால், டக்ட் எஃபக்ட் (duct effect) என்ற தொழில்நுட்பம் (ஒரு விசிறியின் சுழற்சியில் உருவாகுகிற காற்றை இன்னொரு விசிறியைச் சுழல வைப்பதற்காக குழல் வடிவ சாதனம் ஒன்றின் மூலமாக ஒரு பாதையில் செலுத்துகிற நுட்பம்) சம்பந்தப்பட்டுள்ள கான்ட்ரா ரொட்டேட்டிங் ப்ரப்பல்லர் (contra rotating propeller) வடிவமைப்பு பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. எதிர்த்திசையில் சுழன்று உந்துவிசை கொடுக்கும் ஒரு சாதனம்தான், இந்த ப்ரப்பல்லர்.

அப்போது *ஏ டி இ* அமைப்பின் இயக்குனராக இருந்த ஓ.பி. மெடிரெட்டாவிடம் இந்த வடிவமைப்பு தொடர்பாக தவனிடமிருந்து உதவி கோரலாமா என்று கேட்டேன். அபாரமாகக் கற்றுத் தருகிற அவருடைய திறமைகள் பற்றி என் நண்பர்கள் என்னிடம் கூறியிருந்ததால், தவனிடமிருந்து உதவி பெறுவதில் ஆர்வம் கொண்டிருந்தேன். எங்கள் இயக்குனரின் அனுமதி கிடைத்ததும் இந்திய அறிவியல் அமைப்புக்குச் சென்று தவனைச் சந்தித்தேன். இந்த வடிவமைப்புக்காக உதவி செய்யும்படி சதீஷ் தவனிடம் நான் கேட்டபோது, கான்ட்ரா ரொட்டேட்டிங் ப்ரப்பல்லரை எப்படி வடிவமைப்பது என்பதை எனக்கு அவர் கற்றுத் தருவதாகச் சொன்னார். ஆனால், பத்து சனிக் கிழமைகளில் பிற்பகல் இரண்டு மணியிலிருந்து மூன்று மணி வரை அவரிடம் நான் வரவேண்டும் என்றும் சொன்னார்.

ஓர் உயர்ந்த ஆசான் வழங்கிய அற்புதமான வாய்ப்பு அது! சந்தோஷக் கொண்டாட்டத்துடன் அவரிடம் நேரடியாக நான் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். அந்தப் ப்ரப்பல்லர் சாதனத்தின் வடிவமைப்பு நுட்பம் பற்றி எனக்கு அவர் கற்றுத் தந்தார். முதலாவது வகுப்பு

முடிந்து, இரண்டாவது நாள் வகுப்பை ஆரம்பிப்பதற்கு முன்பு, முதல் நாள் கற்றுக் கொடுத்த விஷயங்கள் தொடர்பான மிகவும் முக்கியமான கேள்விகளை அவர் என்னிடம் கேட்டார். நான் புரிந்து கொண்டவற்றை செயல்படுத்துவதற்கான திறனை நான் எந்த அளவுக்கு பெற்றிருக்கிறேன் என்பதையும், அதற்கு வழிவகுக்கக் கூடிய வகையில் நான் எந்த அளவுக்கு விஷயங்களைப் புரிந்து கொண்டிருக்கிறேன் என்பதையும் இந்தக் கேள்விகள் மூலம் என்னை அவர் பரிசோதித்துப் பார்த் தார். இப்படிப்பட்ட பின்னணியுடன் அவர் நடத்திய அனைத்து பத்து வகுப்புகளிலும் கலந்து கொண்டேன். இந்த வகுப்புகள் முடிவடைந்தபோது காண்ட்ரா ரொட்டேட்டிங் ப்ரப்பல்லரை வடிவமைப்பதில் முழுமூச் சாக இறங்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு வந்தது.

அ.தி: சதீஷ் தவன் *இஸ்ரோ*வில் (ISRO) எப்படி இணைந்தார்?

ஆ.ப.ஜெ: 1972-ல் விண்வெளி அமைப்பின் (Space Commission) தலைவராகவும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப் பின்- *இஸ்ரோ* (Indian Space Research Organisation - ISRO) தலைவராகவும் இந்திய அரசின் விண்வெளித் துறை செயலாளராகவும் நியமிக்கப்பட்டார். பலருக்கு உத்வேகம் அளிக்கக்கூடிய ஒரு வலுவான உந்து சக்தியாக இந்த நியமனம் அமைந்தது.

அ.தி: விக்ரம் சாராபாய் மற்றும் சதீஷ் தவன் ஆகிய இருவருமே இரண்டு சகாப்தங்கள். இந்த இருவரையும் ஒப்பீடு செய்கிற அர்த்தத்தில் நான் இந்தக் கேள்வியைக் கேட்க வில்லை. ஆனால், இந்த இருவரின் பங்களிப்பு பற்றிய உங்களுடைய கண்ணோட்டம் என்ன?

ஆ.ப.ஜெ: இந்திய விண்வெளித் திட்டத்தின் சிருஷ்டிகர்த்தாவான விக்ரம் சாராபாய்க்கு அந்தத் திட்டம் மிகவும் கடமைப் பட்டுள்ளது. தொலையுணர்வு, வானிலை ஆய்வு, தகவல் தொடர்பு மற்றும் நேரடித் தொலைக்காட்சி ஒளிபரப்பு போன்ற பயன்பாடுகளுக்கு வழிவகுப்பதற்கான செயற்கைக்கோள்களை இந்தியா உருவாக்கி விண்ணில்

செலுத்த வேண்டும் என்ற தொலைநோக்குத் திட்டத்திற்கு வித்திட்டவர், அவர்தான். விண்வெளித் திட்டத்திற்கு ஒரு வடிவம் கொடுத்து, அதற்கான அமைப்பு ரீதியிலான கட்டமைப்பையும் நிர்வாக முறையையும் வகுத்துத் தந்து, மிகவும் சக்தி வாய்ந்த, வெற்றிகரமான ஒரு அமைப்பாக அதை உருவாக்கித் தந்தவரும் அவரே தான். அதேசமயத்தில், தலைசிறந்த தொழில்நுட்பத்தை உருவாக்கித் தருகிற அமைப்பான ***இஸ்ரோ,*** சதீஷ் தவனின் சிருஷ்டி. இந்த அமைப்பு, அவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அமைப்பாக வடிவம் பெற்று வளர்ந்தது.

அ.தி: அவரைப் பற்றிய விசேஷமான ஏதாவது நினைவு உங்களுக்குள் விழுது விட்டிருக்கிறது அல்லவா?

ஆ.ப.ஜெ: பெங்களூரில் உள்ள ***இஸ்ரோ*** தலைமையகத்தில் 1980-ல் நானும் அவரும் அடுத்த 20 ஆண்டுகளுக்கான விண்வெளித் திட்டங்கள் பற்றி ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தோம். பல திட்ட வாய்ப்புகள் பற்றி விவாதித்தோம். தன் கைப்பட தயாரித்திருந்த வரைபடங்களில் எங்களுடைய ஒட்டுமொத்தமான விவாதங்களையும் விளக்கமாகத் தொகுத்து அவர் வைத்திருந்ததை அடுத்த நாள் காலையில் கண்டேன். இந்த வரைபடங்கள்தான், ***பி.எஸ்.எல்.வி., ஜி.எஸ்.எல்.வி.*** மற்றும் இந்தியத் தொலையுணர்வு செயற்கைக் கோள்கள், இன்சாட்-தொடர் செயற்கைக் கோள்கள் மற்றும் இப்போதைய தொழில்நுட்ப வடிவங்கள் உள்ளிட்ட அடுத்த பதினைந்து ஆண்டுகளுக்கான தேசிய விண்வெளித் திட்டத்திற்கான ஆதாரத் திட்டங்களாக வடிவம் எடுத்தன.

அ.தி: இந்த வரைபடங்களின் நகல்களை நீங்கள் எனக்குக் காட்டியிருக்கிறீர்கள். புனித நூல்களின் பவித்திரமான ஏடுகள் போன்று இவற்றைப் பொக்கிஷமாகப் பாது காத்து வருகிறீர்கள்.

ஆ.ப.ஜெ: தவனின் தலைமைப் பொறுப்பின் வலிமை பற்றி இன்னொரு மகத்தான நினைவும் எனக்குள் பசுமையாய்ப் பதிந்துள்ளது. தோல்விகள் நேரிடுகிறபோது அதற்கான பொறுப்பை கொஞ்சமும் தயங்காமல் அவரே ஏற்றுக் கொண்டார். ஆனால், வெற்றிகள் கனிந்தபோது, அதற்கான பெருமையை, பெருந்தன்மையோடு மற்றவர்களுக்கு விட்டுக்கொடுப்பார். எஸ்.எல்.வி.-3 செயற்கைக் கோள் ஏவுகலத்தை விண்ணில் செலுத்துகிற திட்டத்துக்கு நான் தலைமை ஏற்றிருந்தேன். 1979 ஆகஸ்டு 10-ஆம் நாளன்று எஸ்.எல்.வி.-ஐ விண்ணில் செலுத்துகிற அந்தக் கன்னித் திட்டம் தோல்வி அடைந்தபோது எங்களைத் துளைத்தெடுத்த ஊடகத்தின் கடுமையான விமர்சனங்களை அவரே எதிர்கொண்டார். ''நண்பர்களே, ஒரு செயற்கைக்கோளை அதன் சுற்றுப்பாதையில் நிறுத்துவதற்காக இன்று நமது முதலாவது செயற்கைக்கோள் ஏவுகலத்தை விண்ணில் செலுத்தினோம். ஆனால், நம்மால் வெற்றி பெற முடியவில்லை. செயற்கைக்கோள் மற்றும் செயற்கைக்கோள் ஏவுகலங்களிலும் பல அடுக்கு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திய நமது முதலாவது திட்டம் இது. பல தொழில்நுட்பங்களில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். இன்னும் சிலவற்றில் நமக்கு வெற்றி கிடைக்கவில்லை. இவையெல்லாவற்றையும்விட எனது அணி உறுப்பினர்களுக்கு மேலும் அதிக அளவில் தொழில்நுட்ப ஆதரவை வழங்க வேண்டியுள்ளது என்பதை நான் உணர்கிறேன். அதை நான் நிறைவேற்றப் போகிறேன். நமது அடுத்த திட்டம்வெற்றி பெறும்'' என்று அவர் அறிவித்தார். ஆனால், எங்களது இரண்டாவது ஏவுதல் திட்டம் வெற்றியடைந்து, 1980 ஜூலை 18-ஆம் நாள் ரோகிணி செயற்கைக்கோளை அதன் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தியபோது, அந்தப் பாராட்டுக்கும் புகழுக்கும் உரியவனாக என்னை முன்னிறுத்தினார்.

அ.தி: சதீஷ் தவனின் தலைமைத் தகுதியில் ஏதாவது குறிப்பிட்ட குணாம்சத்தை நம்மால் தனித்து அடையாளம் காண முடியுமா?

ஆ.ப.ஜெ: முடியுமென்றே நினைக்கிறேன். தனிநபரின் பங்களிப்புகளை முறையாக, சரியாக மதிப்பீடு செய்வதில் பெரும்பாலான அறிவியல் அமைப்புகள் தடுமாறி விடுகின்றன. இந்தப் பணி எப்போதுமே சுலபமானதல்ல என்பதும் முற்றிலும் உணமை. தனது சகாக்களின் நிர்பந்தங்களுக்கு இடையேயும் பதில் சொல்கிற பொறுப்பை சதீஷ் தவன் எப்போதுமே தட்டிக் கழித்ததில்லை. அந்தப் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றி வந்தார். அதே சமயத்தில் நியாயமான தோல்விகளின்போது, விமர்சனக் கணைகளின் தாக்குதல்களிலிருந்து தனது பொறியாளர்களைப் பாதுகாத்து வந்தார். அதிக அளவில் செயல் திறன் கொண்ட பொறியாளர்கள் தங்களுடைய சகாக்களைவிட முன்னேறி உயர்ந்த பதவியை எட்டுகிற அதே நேரத்தில், அதே சகாக்களின் நம்பிக்கையையும் தக்கவைத்துக்கொள்கிற வகையில் பதவி உயர்வு மற்றும் மதிப்பீட்டு முறையில் ஒளிவு மறைவு இல்லாத, நேர்மையான அணுகுமுறையை அவர் பின்பற்றி வந்தார்.

அ.தி: உயர் தலைமையை அவர் எப்படிக் கையாண்டார்?

ஆ.ப.ஜெ: தேசிய விண்வெளித் திட்டத்தை முற்றிலுமான ஒரு 'சிவில்' அமைப்பாகத்தான் உருவாக்க வேண்டும் என்பதை உயர் தலைமையை ஏற்றுக்கொள்ள வைப்பதில் அவர் வெற்றி பெற்றார்.

அ.தி: வழிகாட்டுகிற ஒரு ஞானச்சுடராக அவரை நாம் எப்படி விவரிப்பது?

ஆ.ப.ஜெ: 1999-ல் தேசிய ஒருமைப்பாட்டிற்கான இந்திராகாந்தி விருது அவருக்கு வழங்கப்பட்ட சமயத்தில், அவருக்கு அளிக்கப்பட்ட பாராட்டுப் பத்திரம் அவருடைய ஆதாரத் திறனை வெகு சிறப்பாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. ''நமது நாட்டின் முதன்மையான விஞ்ஞானிகள், ஆசிரியர்கள் மற்றும் தேச நிர்மாண சிற்பிகளில் ஒருவர்... அறிவியல் கல்வி, ஆராய்ச்சி, கொள்கை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகிய துறைகளில் பன்முகப்

பரிமாணங்கள் நிறைந்த பங்களிப்புகளை அவர் வழங்கியிருக்கிறார். அறிவியலைப் பயன்படுத்துவதன் மூலம் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஆழமான அக்கறை கொண்டிருந்தார்.''

அ.தி: விஞ்ஞானிகளின் செயல்பாடுகள் பெருமளவுக்கு போற்றப்படுகின்றன; புகழப்படுகின்றன. ஆனால், அதன் பின்னணியில் அளவிட முடியாத அளவிற்கு கடுமையான சோதனைகளும், கஷ்டங்களும் மறைந்து கிடக்கின்றன. உலகியல் நோக்கில் மதிக்கப்படுகிற பணம், புகழ் என்று வரும்போது, விஞ்ஞானிகள் உரிய மதிப்பும் மரியாதையும் பெறாமல் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: இது அவரவர் புரிதல் கண்ணோட்டங்களைப் பொருத்த விஷயம். இங்கே ஐன்ஸ்டீன் பற்றிய ஒரு உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபோது ***உலக அரசாங்கம்*** என்ற இயக்கத்தை வழிநடத்துகிறவராக அவர் திகழ்ந்தார்.

அ.தி: தனக்கு வழங்கப்பட இருந்த இஸ்ரேலிய அரசின் குடியரசுத் தலைவர் பதவியை ஐன்ஸ்டீன் நிராகரித்து விட்டதை நான் அறிந்திருக்கிறேன்.

ஆ.ப.ஜெ: ஜெருசலேம் ஹீப்ரு பல்கலைக்கழகத்தை (Hebrew University of Jersusalem) நிறுவுவதில் அவர் ஒரு முக்கியப் பங்கு வகித்தார். 1921-ஆம் ஆண்டில் தனது கனவுப் பல்கலைக்கழகத்திற்கு நிதி திரட்டுவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு முதல் தடவையாக அமெரிக்க நாட்டுக்கு விஜயம் செய்தார்.[88] இந்த உலகத்திற்கு ஐன்ஸ்டீன் வழங்கிய கொடைகள் அனைத்தும், அறிவுத் திறன் சூழ்ந்த ஏகாந்தத்தில் அவர் மூழ்கித் திளைத்திருந்த சமயத்தில்தான் வடிவெடுத்தன.

அ.தி: அறிவுத் திறன் சூழ்ந்த ஏகாந்தம் என்பது அத்தியாவசியமான ஒன்றா?

ஆ.ப.ஜெ: ஆம், அப்படியும் இருக்கலாம்.

அ.தி: ஐன்ஸ்டீனின் வாழ்க்கையில், இசை ஒரு முக்கியப் பங்கு வகித்ததாக நான் படித்திருக்கிறேன். பியானோ இசைப்பதில் ராஜா ராமண்ணா வல்லவர். வீணையில் நீங்கள் கொண்டுள்ள ஈடுபாடு எல்லோரும் அறிந்ததே.

ஆ.ப.ஜெ: ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கான தலைசிறந்த மருந்து, இசைதான். இது உங்களுடைய உள்ளார்ந்த பகுதிக்குள்ளிருந்து உங்களைத் தூய்மைப்படுத்துகிறது.

அ.தி: இப்போது ஒரு சிக்கலான விஷயத்தைப் பற்றி அலசிப் பார்க்கலாமா, ஸார்...?

ஆ.ப.ஜெ: என்ன அது?

அ.தி: டெக் ஹேமர்ஸ்க்ஜோல்ட் (Dag Hammarskjold)[89] எழுதியுள்ள Markings என்ற புத்தகத்தின் முன்னுரையில் டபிள்யூ.எச்.ஆடன் (W.H.Auden)[90] இப்படிக் குறிப்பிட்டுள்ளார்: ‘உயர்ந்த தன்மையை ஒரு தொலைவிலிருந்து பார்ப்பதும் பல வருடங்களுக்கு அல்லது பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த ஏதாவது உயர்ந்த மனிதர் யாரையாவது பற்றிப் பேசுவதும் சுலபமான விஷயம். உங்களுடைய காலத்திலேயே உங்களைச் சுற்றிலும் காணப்படுகிற அருமை பெருமைகளை அடையாளம் காண்பதும் அங்கீகரிப்பதும் கடுமையான, சிக்கலான விஷயம்’. இப்போது நம்மிடையே ரத்தமும் சதையுமாக வாழ்ந்து கொண்டிருக்கிற வழிகாட்டும் ஓர் ஆத்மாவைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறீர்களா?

ஆ.ப.ஜெ: நிச்சயமாகச் சொல்வேன். ஆனால், அதற்கு முன்பு, வழிகாட்டும் ஆத்மாக்களின் ஒரு சில அம்சங்களை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.

அ.தி: சொல்லுங்கள் சார்.

ஆ.ப.ஜெ: ஞானச்சுடர்களான வழிகாட்டும் ஆத்மாக்கள், பேரதிர்ஷ்டசாலிகள். ஏனென்றால் அவர்கள் எதைச் செய்ய வேண்டும் என்று மிகவும் விருப்பம் கொண்டிருக்கிறார்களோ அதையே செய்து முடிக்கும்படியான வாழ்க்கை அவர்களுக்கு அமைந்துவிடுகிறது. தாங்கள்

மேற்கொண்டுள்ள பணி மேன்மையான பணி என்பதிலும் தங்களுடைய மேதைமை, தங்களுடைய ஆயுட் காலத்தில் அங்கீகரிக்கப்படாமல் போனாலும்கூட, காலத்தின் சோதனைக் கட்டங்களைக் கடந்து அது நிலைத்து நிற்கும் என்பதிலும் அவர்கள் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். செம்மையாகச் செய்து முடிக்கப்பட்ட வேலையில் கிடைக்கிற மனநிறைவு என்ற வெகுமதியை அவர்கள் எப்போதுமே அனுபவித்து வருகிறார்கள்.

அ.தி: அதனால், தங்களுடைய சாதனைகளைப் போற்றிக் கொண்டாடுவதற்காக அவர்களுக்கு வாரிசுகளோ, வழித் தோன்றல்களோ தேவைப்படுவதில்லை. ஒரு விதத்தில் பார்த்தால், அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே அவர்களுக்கான வெகுமதியைப் பெற்று விடுவார்கள்.

ஆ.ப.ஜெ: இந்த உலகம் தங்களின் பின்னே ஓடி வருகிற அளவுக்கு தங்களுடைய ஆன்மிகப் பணியில் அவ்வளவு முழு மூச்சாக அவர்கள் மூழ்கி விடுகிறார்கள். இங்கேயே அவர்கள் சொர்க்க சாம்ராஜ்யத்தில் வாழ்கிறார்கள், ஆனந்த் நகரில் வர்கீஸ் குரியன் வாழ்வதைப்போல.

அ.தி: இந்தப் பால்காரரின் இடத்திற்கு நான் சென்றிருந்தேன். மாபெரும் வெற்றியைச் சாதித்திருக்கிற இந்தியாவின் மிகப் பெரிய ஒரு நிறுவனத்தை *(அமுல்)* மட்டுமே வர்கீஸ் குரியன் நிர்மாணிக்கவில்லை. அவர் உருவாக்கிய கூட்டுறவு பால் பண்ணைத் தொழில் என்ற முன்மாதிரித் திட்டம், இந்தியாவில் வெண்மைப் புரட்சிக்கும் வழி வகுத்தது. உலகத்தின் மிகப் பெரிய பால் உற்பத்தி நாடாக இந்தியாவை உயர வைத்தது.

ஆ.ப.ஜெ: குரியன் பற்றி நீங்கள் அறிந்திருப்பதை எனக்குச் சொல்லுங்கள்.

அ.தி: எம்.வி.காமத் எழுதிய **Milkman from Anand: The Story of Verghese Kurien** என்ற புத்தகத்தை நான் படித்திருக் கிறேன். குரியன், 1940-ல் சென்னையில் உள்ள லயோலா கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தார். சென்னைப்

பல்கலைக் கழகத்தில் இயந்திரவியல் பொறியியலில் இளங்கலைப்பட்டம் பெற்றார். ஜாம்ஷெட்பூரில் உள்ள டாடா ஸ்டீல் மற்றும் தொழில்நுட்ப நிலையத்தில் (Tata Steel and Technical Institute) தனது பணி வாழ்க்கையை ஆரம்பித்தார். அதையடுத்து, உயர்கல்விக்காக அமெரிக்கா சென்று மிச்சிகன் ஸ்டேட் பல்கலைக்கழகத்தில் (Michigan State University) இயந்திரவியல் பொறியியலில் முதுகலைப்பட்டம் பெற்றார். 1949-ல் இந்தியா திரும்பியதும் ஆனந்த நகரில் உள்ள அரசு பால் பொருள்கள் தயாரிப்பு நிறுவனத்தில், பால் பண்ணைப் பொறியாளர் பதவியில் சேர்ந்தார். கிட்டத்தட்ட அந்தச் சமயத்தில், அப்போதுதான் தொடங்கப்பட்டிருந்த கூட்டுறவு பால் பண்ணையான கைரா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் அமைப்பு, (Kaira District Co-Operative Milk Producers' Union) பால்சன் டயரி என்ற பன்னாட்டு நிறுவனத்துடன் கடுமையாகப் போட்டியிட்டுப் போராடிக் கொண்டிருந்தது. ''இந்திய விவசாயிகள் பொருளாதார சுதந்தரம் பெறவேண்டும் என்றால், இடைத் தரகர்களின் பிடியிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும்'' என்று சர்தார் பட்டேல் விடுத்த அறைகூவல், இளம் குரியனுக்கு உத்வேகம் அளித்தது. சமூக நலனுக்காகப் பாடுபட்டு வந்த தலைவர் திரிபுவன் தாஸ் பட்டேலுடன் ஒன்றிணைந்து பால் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை குரியன் ஆரம்பித்தார்.

ஆ.ப.ஜெ: *அமுல்* என்ற பிராண்ட் பெயர் எப்படி வந்தது?

அ.தி: அமூல்யா என்ற சம்ஸ்கிருத வார்த்தையிலிருந்து- விலைமதிப்பற்றது என்பது இதன் பொருள்- *அமுல்* என்பது பிறந்தது என்று அந்தப் புத்தகம் கூறுகிறது. ஆனந்த நகரில் பணியாற்றி வந்த தரக்கட்டுப்பாடு நிபுணர் ஒருவர், *அமுல்* என்ற பெயர் ஆலோசனையை சொல்லியிருக்கிறார். *அமுல்* என்ற பிராண்ட் பெயரு டன் 1955-ல் முதல் முறையாகப் பால் பொருள்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அன்று விற்பனைக்கு வந்த அவை இன்று, இந்தியா முழுவதிலும், வெளிநாடுகளி

லும் கோடிக்கணக்கான குடும்பங்களில் பயன்படுத்தப் படுகின்றன. இன்று *அமுல்* என்பது உயர் தரம் வாய்ந்த பொருள்களின் அடையாளச் சின்னமாக பெருமை பெற்று, நியாயமான விலையில் எல்லா இடங்களிலும் கிடைக்கிறது.

ஆ.ப.ஜெ: சமீபத்தில் குரியன் எனக்கு *அமுல்* மோர் அனுப்பி வைத்திருந்தார். நீண்ட நாட்கள் வரையிலும் கெட்டுப் போகாமல் இருக்கும் தன்மையுடன் அது தயாரிக்கப் பட்டிருக்கிறது. *அமுல்* பிராண்டின் சிறப்புத் தன்மைக்கு மேலும் ஏதோ முக்கிய காரணங்கள் இருக்கின்றன என்று நான் உணர்கிறேன். குஜராத் மாநிலம் முழுவதும் கிளை விரித்துள்ள பத்தாயிரம் கிராம பால் கூட்டுறவு சங்கங் களில் அங்கம் வகிக்கிற 20 லட்சம் விவசாயிகளின் ஒன்றுபட்ட சக்தியின் பிராண்ட் பெயர்தான் *அமுல்*.

அ.தி: *அமுல்* சிறப்புத் தன்மையில் வேறு என்ன நீங்கள் காண்கிறீர்கள்?

ஆ.ப.ஜெ: குரியனின் மூலாதாரம் *அமுலின்* - இந்தியாவின் இன்சுவை - வெற்றியாகப் பரிணமித்துள்ளது. வாழ்க்கைக் குறிக்கோளைவிட மிகப் பெரிய அளவில் அது வெளிப் பட்டுள்ளது. கொள்முதல், உற்பத்தி, மற்றும் மார்க் கெட்டிங் என அனைத்தையும் விவசாயிகளின் முழுமை யான கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, அவர்களுக்கு சுதந்தரம் வழங்குவதுதான் *அமுலின்* குறிக்கோள். இந்தத் திட்டத்திற்கு இப்போது அமிர்தா படேல்[91] தலைமையேற்று, திறம்பட வழிநடத்தி வருகிறார்.

அ.தி: உலகத்தின், இந்த நூற்றாண்டின் உயர்ந்த விவசாயத் தலைவர்களில் வர்கீஸ் குரியன் ஒருவர் என்று நார்மன் இ. பர்லக்,[92] **An Unfinished Dream** என்ற புத்தகத்தின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்த உலகத்தில், பெருமளவிலான உணவுப் பாதுகாப்பையும் சுபிட்சத்தை யும் அமைதியையும் நிலை நாட்டுவதற்கான போராட் டத்தை மேற்கொள்ள வேண்டிய அனைவருக்கும்

சூரியனின் பணி, ஒளி தீபமாக வழிகாட்டி, துணை நிற்கும்.

ஆ.ப.ஜெ: அருமையான வார்த்தைகள்!

அ.தி: கிராமப்புற இந்தியாவுக்கு மறுவடிவம் கொடுப்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ள சமூக, மறுமலர்ச்சித் திட்டங்களை முன்மாதிரி அடிப்படையில் மேற்கொள்வதற்காக தொடங்கப்பட்டுள்ள ***விகசித் பாரத்*** (வளர்ச்சியடைந்த இந்தியா) அறக்கட்டளைக்கு வர்கீஸ் குரியன் தலைமையேற்றிருக்கிறார். இந்திய அரசுப் பணியில் இத்தனை நீண்ட காலம் நீங்கள் ஆற்றிய பணிக்காக உங்களுக்குக் கிடைத்த ஓய்வு காலத் தொகையின் ஒரு பகுதியை இந்த அறக்கட்டளைக்கு நீங்கள் நன்கொடையாக வழங்கியுள்ளீர்கள்.

ஆ.ப.ஜெ: நீங்கள் மேற்கொள்கிற செயல்களில் உங்கள் பெயர் எந்த அளவுக்கு மிகக் குறைவாக சம்பந்தப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கு நீங்கள் அதிக நன்றியுடன் இருக்க வேண்டும்.

அ.தி: சுதந்திரம் பெற்ற பிறகு, இந்திய அறிவியல் களத்தில் உங்களை மிகவும் கவர்ந்தவர் யார்?

ஆ.ப.ஜெ: டி.எஸ்.கோத்தாரி,[93] ஹோமி பாபா, மற்றும் விக்ரம் சாராபாய் ஆகியோரைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மூன்று இயற்பியல் அறிஞர்களும் மிகப் பெரிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைப்புகளை உருவாக்குவதற்காகப் பாடுபட்டவர்கள். இவை 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளம் விஞ்ஞானிகளையும் பொறியாளர்களையும் ஈர்த்து, புதுமைகளைப் படைக்கும் அவர்களின் ஆக்கத் திறனைக் கிளறிவிட்டன.

அ.தி: இந்த மூன்று விஞ்ஞானிகளும் இந்தியாவிலேயே தங்கியிருந்து பணியாற்றுவதற்குத் தீர்மானித்துவிட்டவர்களாயிற்றே?

ஆ.ப.ஜெ: இந்த மூன்று தலைசிறந்த விஞ்ஞானிகளும் இயற்பியலில் மட்டுமே தொடர்ந்து தீவிரமாகக் கவனம் செலுத்தியிருந்தார்கள் என்றால், குறைந்தது இவர்களில்

ஒருவராவது நோபல் பரிசை வென்றிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். இப்படி நிகழ்ந்திருந்தால், அணு சக்தி, விண்வெளி மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பு களின் ஆதாயங்கள் இந்த அளவுக்கு இவ்வளவு ஏராளமாக இந்திய தேசத்திற்குக் கிடைத்திருக்காது. என்னைப் பொருத்தவரையில் இந்த உயர்ந்த அமைப்புகள்தான் நமக்குக் கிடைத்திருக்கிற நோபல் பரிசுகள்.

அ.தி: வளர்ச்சியடைந்து வரும் தேசங்களில் குறிப்பாக இப்படிப்பட்ட அமைப்புகளை, நிர்மாணிப்பது என்பது மிகவும் முக்கியம்.

ஆ.ப.ஜெ: நல வாழ்வு பராமரிப்புத் துறையில் என் நண்பர் காக்கர்லா சுப்பராவ் எப்படி முனைந்து பாடுபடுகிறார் தெரியுமா?

அ.தி: 2004 ஜூலை 14ஆம் நாள் நடைபெற்ற வரலாற்றுப் புகழ்பெற்ற ஆந்திர பிரதேச சட்டப் பேரவைக் கூட்டத் தில் நீங்கள் உரையாற்றியபோது அவருக்குப் புகழாரம் சூட்டினீர்கள்.

ஆ.ப.ஜெ: காக்கர்லா சுப்பராவின் மேன்மையை ஒரு மேன்மையான பேரவையில் அறிவித்தேன்.

அ.தி: ''ஓர் உயர்ந்த மனிதரான காக்கர்லா சுப்பராவ் பற்றி நினைவு கூர்வதை நீங்கள் விரும்புவீர்கள். எவ்வளவு அதிகமாக அவருடைய வாழ்க்கையை நீங்கள் புரிந்து கொள்கிறீர்களோ அவ்வளவு அதிகமான உத்வேகத் திற்கு நீங்கள் ஆளாவீர்கள். மிகவும் அரிதான மருத்துவ வசதி வாய்ப்புகளை அவர் இந்தியாவுக்கு அறிமுகம் செய்தார். அவருடைய சொந்த வீடு ஒரு பள்ளிக்கூடமாக மாற்றப்பட்டது. நிஜாம் மருத்துவ அறிவியல் அமைப் பின் (Nizam's Institute of Medical Sciences) நிறுவன இயக்குனராக பணியாற்றிய அவர், சர்வதேச அளவில் புகழ்பெற்றிருந்த கதிரியக்க மருத்துவ நிபுணர். அவரு டைய சக மருத்துவர்கள் அவரைப் ***புத்தாயிரமாவது ஆண்டின் இந்திய கதிரியக்க நிபுணர்*** என்று அறிவித்துள்ளார்கள். நமது நாடு முழுவதிலும்

அவரிடம் பயின்ற ஏராளமான மாணவர்கள் இன்று மருத்துவர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். அவருடன் இணைந்து மலைவாழ் கிராமங்களில் புற்று நோயைக் கண்டறிவதற்கான பல முகாம்களை நடத்தியிருந்த நீங்கள்... அந்த நோயாளிகளை நகரத்திற்குக் கொண்டு வந்து சிகிச்சை அளித்தீர்கள்'' என்று நீங்கள் அந்தப் பேரவைக் கூட்டத்தில் குறிப்பிட்டீர்கள்.

ஆ.ப.ஜெ: உங்களுக்கு நல்ல ஞாபகத் திறன்!

அ.தி: காக்கர்லா சுப்பராவின் சுய சரிதத்தை அவருடன் இணைந்து A Doctor's Story of Life and Death என்ற புத்தகமாக எழுதியிருக்கிறேன். அது ஒரு மகத்தான அனுபவமாக இருந்தது. அவர், ஆழ்ந்த ஞானம் கொண்ட ஒரு மனிதர்.

ஆ.ப.ஜெ: நீங்கள் இருவரும் நல்ல வேலை செய்திருக்கிறீர்கள். மனித வாழ்க்கையை காக்கர்லா சுப்பராவ் போற்றுகிற விதம், குறிப்பாக எனக்கு மிகவும் பிடித்துள்ளது: ''இந்தப் பேரண்டம் முழுவதிலும் வேறு எதையும்விட மனித வாழ்க்கையில் தான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன். ஒரு நட்சத்திரம் எப்படி இல்லாமல் மறைந்து விடுகிறது என்பதைவிட ஒரு மனிதன் எப்படி வாழ்கிறான் என்பதுதான் என்னை மிகவும் ஈர்க்கிறது. இறைவன் இருக்கிறான் என்றால், இந்த உலகத்தைப் படைத்தபோது அவன் இருந்ததைப் போலவே நம் ஒவ்வொருவரின் படைப்பிலும் அவன் இடம் பெற்றிருக்கிறான். என்னை ஆட்கொண்டுள்ள புதிராக இருப்பது மனித இனத்தின் நிலைதான். சமுதாயமோ, தேசமோ, மனித இனமோ மற்றவையோ அல்ல. என்னைப் பொறுத்தவரையில் மனிதனே இறைவன். எல்லாவற்றிற்கும் மையம் அவன்தான். பரம்பரையாக தங்களுக்கு வாய்த்தவற்றை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள்தான் அதிகமானவற்றை- பணம், அறிவுக்கூர்மை, திறமைகள், மகிழ்ச்சி அல்லது நேசம் என்ற அடிப்படையில்- பெற்றிருக்கிறார்கள்.''[94]

அ.தி: காக்கர்லா சுப்பராவிடம் நீங்கள் காண்கிற சிறப்பம்சம் என்ன?

ஆ.ப.ஜெ: அப்பழுக்கற்ற அவருடைய உண்மையான ஈடுபாடு.

அ.தி: தயவு செய்து கொஞ்சம் விரிவாகச் சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: உண்மையான ஈடுபாட்டுடன் செயல்படும்போது சில சமயங்களில் என்ன நடக்கப்போகிறது என்ற தீர்க்க தரிசனம் ஒருவருக்குப் புலப்படும். காக்கர்லா சுப்பராவ் அப்படிப்பட்ட ஒருவர். "எனது நோயாளியின் சரீரத்தை என்னால் குணப்படுத்த முடியாது. ஆனால் அவருடைய ஆன்மாவுக்காக கடவுளிடம் பிரார்த்தனை செய்ய முடியும்" என்று சுப்பராவ் கூறுகிறார்.

அ.தி: நீங்கள் இருவரும் நமது சமுதாயத்தில் நிலவுகிற சங்கட உணர்வு பற்றிப் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டிருக்கிறேன். இது குறித்த உங்களது சிந்தனை களைப் பகிர்ந்து கொள்வீர்களா?

ஆ.ப.ஜெ: அது மிகவும் சுவாரஸ்யமான ஒரு கலந்துரையாடல். பல அமைப்புகளுக்குத் தலைமை ஏற்றிருக்கும் நல்லவர்கள் ஏன் இவ்வளவு சங்கடமாக இருக்கிறார்கள் என்பது பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். ஏதாவது ஒன்றை உருவாக்குவதற்கான வாய்ப்பு உங்களுக்கு வழங்கப் படும்போது, இப்படி நிகழ்கிறது. ஒரு பக்கம் அடுத் தடுத்து தொடர்கிற ஒவ்வொரு நாள் வேலையிலும், அந்தந்த தருணத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் நீங்கள் நிறைவு காண்கிறீர்கள். இன்னொரு பக்கம் மற்றவர்களின் அங்கீகாரத்திற்காகக் கவலைப்படு கிறீர்கள். மேலும் அவர்கள் புகழ்பெற்று விடுவார்களோ என்று பொறாமைப்படுகிறீர்கள். நீங்கள் மேற்கொண் டிருக்கிற வேலை, இறுதியில் என்ன ஆகுமோ என்ற திகைப்புக்கு ஆளாகத் தொடங்குகிறீர்கள்.

அ.தி: சங்கடமாக உணர்வது, மோசமானதா? அல்லது விரும்பத்தகாததா?

ஆ.ப.ஜெ: அப்படியெல்லாம் இல்லவே இல்லை. மாறாக, அது நல்லது. உங்களுக்குள் இன்னமும் உயிர்ப்பு இருப்பதற்

கான ஓர் அறிகுறி அது என்பதால் உங்களுடைய சங்கடத்தை வாழ்த்திப் போற்றுங்கள். மேன்மையான திறன், விசுவாசம் மற்றும் லட்சிய வேட்கை என்பவை யெல்லாம் தங்களுக்கு இருப்பதாகக் காட்டிக்கொண்டு பலர் செயலற்று, சவம் போலக் கிடக்கிறார்கள்.

அ.தி: சங்கடம் என்பதை நாம் எப்படி விளக்குவது?

ஆ.ப.ஜெ: இரண்டுவிதமாகச் சொல்லலாம். முதலாவதாக, நீங்கள் வேலை செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால், அது போதுமானதா என்பதில் நீங்கள் சந்தேகம் கொண்டிருக் கிறீர்கள். இரண்டாவதாக, மதிப்பு வாய்ந்த ஒரு வேலையை நீங்கள் மேற்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், உங்களுடைய மதிப்பு, அருகதை பற்றி உங்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. நீங்கள் மேற்கொண்டிருந்த வேலையிலிருந்து விடுபட்ட பிறகு, உங்களுக்குப் பிறகு வருபவர்கள் உங்களைப் பற்றி என்ன சொல்வார்களோ அல்லது எதுவுமே சொல்லாமல் இருந்து விடுவார்களோ என்ற பய உணர்வு அது.

அ.தி: உங்களுடைய சங்கடத்தின் ஆழத்தையும் வேகத்தையும் என்னால் எப்போதுமே அளவிட முடிந்ததே இல்லை.

ஆ.ப.ஜெ: நம் அனைவருக்குமே பல விஷயங்கள் தெரிவதில்லை.

அ.தி: காக்கர்லா சுப்பராவை வழிகாட்டும் ஒரு ஞானச்சுடராக எப்படிப் பார்க்கிறீர்கள்?

ஆ.ப.ஜெ: அவர் மிகவும் மனித நேயம் நிறைந்தவர். முரண் பாடுகளின் ஒரு மொத்த உருவம், அவர். அப்படியொரு தகுதி வாய்ந்தவர்; ஆனாலும் தயக்கம் கொண்டவர். அவர் மிகவும் சாந்தமானவர்; அதேசமயத்தில் மிகவும் பதற்றமானவர். அவர் ஒரு குணக்குன்று; ஆனாலும் உலகியல் கண்ணோட்டத்தில் அவர் ஒரு வெற்றியாளர் அல்லர். குழம்பித் தத்தளிக்கிற ஒரு மனித இதயத்தில், ஒளி சிந்துகிற கண்ணுக்குத் தெரியாத கடவுளாகிய பேரொளியைத் தன்னுள்ளே கொண்டிருப்பவர், காக்கர்லா சுப்பாராவ். இதுதான் அவருடைய பெருமை. அவருடைய சோகமும் இதுவே.

அ.தி: பெருமை மற்றும் சோகம் என்பது மிகவும் முரண்பட்டதாகத் தோன்றுகிறதே?

ஆ.ப.ஜெ: முரண்பாடுகளைப் புரிந்துகொள்வது என்பது மிகவும் முக்கியமானது. பெரும்பாலான சமயங்களில் பொன்னான வாய்ப்புகளைக் கொண்டே உங்களால் வாழ்க்கை நடத்த முடிவதில்லை. ஆனால் பரஸ்பரம் பிரத்யேகத் தேவைகளுக்கிடையேயான பதற்றத்தில் ஒய்வில்லாமல் நாம் வாழத்தான் வேண்டும். இந்த குணாம்சம் வயது முதிர்ச்சியிலிருந்து வருகிறது. என்னுடைய நண்பர், சி.என்.ஆர்.ராவ்[95] இதற்கு ஓர் அருமையான உதாரணம். அவரைப் பொருத்தவரையில் நேர்த்தி என்பது ஒரு செயல்பாடு அல்ல. அது ஒரு பழக்கம். ஓர் ஒட்டுமொத்த விஞ்ஞானிகள் படைக்கு ஊக்கமூட்டி, உற்சாகப்படுத்தியுள்ள அவர், இன்னமும் கூட ஒய்வொழிச்சல் இல்லாமல் பாடுபட்டு வருகிறார்.

அ.தி: எனக்கு வழிகாட்டுகிற ஞானச்சுடராக உங்களை நான் எப்படிப் பார்க்கிறேன் என்று இப்போது நான் சொல்லலாமா?

ஆ.ப.ஜெ: அப்படியா என்னைப் பார்க்கிறீர்கள்?

அ.தி: அப்படிச் சொல்வதற்கு என்னை அனுமதியுங்கள். இருக்கிற விதத்திலேயே விஷயங்களை நீங்கள் பார்க்கிறீர்கள். உண்மையிலேயே பார்ப்பதற்கு விகாரமாக உள்ளவற்றின் அழகான தோற்றத்தை உங்களால் காண முடிகிறது. உண்மையிலேயே அழகாக இருப்பவற்றின் விகாரமான தோற்றம் அவற்றை நீங்கள் அணுகுவதற்குத் தடையாக இருப்பதில்லை. ஒவ்வொன்றையும் அவை இருக்கிறபடியே, அவற்றின் உண்மையான வண்ணத்தையும் எனக்கு நீங்கள் காட்டி ஒரு பொறியில் நான் சிக்கிக் கொள்ளாமலும், தவறிழைத்து விடாமலும் எப்போதுமே நீங்கள் என்னைக் காத்து வருகிறீர்கள்.

ஆ.ப.ஜெ: இறையருள் உங்களுக்குக் கிடைக்கட்டும்..!

பகுதி 3

மூலாதாரம்

மனித குலமே!
நம் இறைவன்
மிகவும் தாராள மனம் கொண்டவன்.

நமக்குத் தெரியாததை எல்லாம்
மௌனத்தின் மூலமே
அவன் தெரிவிக்கிறான்.

அன்பே மனிதகுலத்தின் அருட்பணி.

மனிதகுலமே!
இவ்வுலகில் நீ
ஒரு பயணியைப்போல் இரு!
செத்தாரைப் போலத் திரி!

அ.தி: மூலாதாரம் என்பது மனித வாழ்க்கையின் மையமாக இருப்பதை இப்போது என்னால் காண முடிகிறது. பேரரசர் அசோகரிலிருந்து வர்கீஸ் குரியன் மற்றும் காக்கர்லால் சுப்பராவ் வரையிலும் ஏற்கெனவே அங்கிருந்த ஒன்றில், மரபணுக்களுக்குள் பொதிந்திருந்த ஒன்றான அந்த மூலாதாரத்தில் தெள்ளத் தெளிவான ஒரு பரிணாமம் நிகழ்ந்துள்ளது. அந்த மூலாதாரத்தைப் பரிணமிக்க வைப்பது எது என்பதுதான் இங்கே கேள்வியாக எழுகிறது.

ஆ.ப.ஜெ: உங்களது கூற்றை நான் சற்றே மாற்றியமைக்க விரும்புகிறேன். மூலாதாரம் என்பது மனித வாழ்க்கையின் மையமாக இருக்கிறது... மூலக்கூறுகளுக்குள் பொதிந்துள்ளது... என்று சொல்வதற்குப் பதிலாக பின்வருமாறு சொல்வது மேலும் சிறந்த விளக்கமாக அமையும். அதாவது, மூலாதாரம் என்பது மனித இருப்பு விடுதலை அடைவதற்கும் மேம்பாடு அடைவதற்குமான பயணத்தின் தொடர் கட்டங்களுக்கு மையமாக இருக்கிறது; மரபணுக்களின் தனித்துவமான கூட்டுச் சேர்க்கை, தனித்தன்மை வாய்ந்த ஆற்றல்களையும் வாய்ப்புகளையும் உருவாக்குகிறது.

அ.தி: தொடர் கட்டங்கள் மற்றும் மேம்பாடு அடைதல் என்பவை குழப்பமில்லாமல் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடிய வார்த்தைகள். இறுதியில் எனக்குப் பழக்கமான ஒரு தளத்திற்கு நான் வந்து சேர்ந்திருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். விடுதலையடைதல் பற்றி தயவு செய்து மேலும் சொல்லுங்கள்.

ஆ.ப.ஜெ: முதலில் அறியாமை இருளை அகற்றுதல், அடுத்து, மூலாதாரத்தை மேகமாய் மறைத்திருக்கிற கற்பனைக் கண்ணோட்டங்களையும் கருத்துகளையும் அகற்றுதல் என்ற அர்த்தத்தில்தான் விடுதலை என்பதைக் கூறுகிறேன்.

தனது இருப்பில் உறைந்துள்ள உந்துதல்களை உணர்ந்திருப்பவர் தான் விடுதலையடைந்த ஒரு மனிதர். இவர், படிப்பதிலும் கற்றுக்கொள்வதிலும் தாகம் கொண்டவர்; ஒவ்வொரு நாளும் எதிர்கொள்கிற அனுபவங்களின் ஆதிக்கத்திற்கு உட்படாமல் அவற்றை உள்முகமாக ஜீரணித்துக் கொள்பவர், இவர்.

அ.தி: இது மிகவும் தெளிவான விளக்கம். மனித வாழ்க்கை யின் குறிக்கோள் இதுதான் என்று சொல்வதற்காகத்தான் இருப்பு நிலை என்ற பதத்தை நீங்கள் பயன்படுத்து கிறீர்கள் அல்லவா?

ஆ.ப.ஜெ: ஒரு குறிப்பிட்ட இருப்பு நிலை; தனித்துவமான ஒரு இருப்பு நிலை.

அ.தி: இந்த தனித்துவமான இருப்பு நிலையின் குறிப்பிட்ட பலன் என்ற மனித வாழ்க்கையின் செயல்பாட்டை நாம் எப்படித் தெரிந்துகொள்வது?

ஆ.ப.ஜெ: இந்த பூமியில் இருப்பு நிலை பரிணமிப்பதை, தொடர் கட்டங்களின் மூன்று உட்பிரிவுகளாக வகைப்படுத்த லாம்; மூலாதாரத்தின் இருப்பு நிலை பற்றி அறிந் துணர்தல்; மூலாதாரத்துடன் இணைந்து தனித்துவமான இந்த நிலை நீடித்திருத்தல்; தனித்துவமான இருப்பு நிலையும் மூலாதாரமும் ஒன்றிணைந்து அமரத்துவமான இருப்பு நிலையாக மாறுதல்.

அ.தி: அற்புதமான விளக்கம்! இப்போது எனக்குத் தெளிவாகப் புரிகிறது. அது ஒரு பயணம் போன்றது. மிகவும் துல்லிய மாகச் சொல்வதென்றால், மூன்றுவிதமான தேடல் நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படுகிற ஒரு பயணம் அது.

ஆ.ப.ஜெ: மறுபடியும் வார்த்தைகள்... இருந்தாலும் பொருத்தமான, சரியான வார்த்தைகள்.

அ.தி: பாதையைத் தெரிந்து கொள்வது, பயணத்தின் முதற் கட்டம். ஆயுள் காலத்தில் தனது பாதை எது என்பதை ஒருவர் தெரிந்துகொள்வதற்குக் கொஞ்ச காலம் ஆகிறது.

ஆ.ப.ஜெ: வாழ்க்கையின் வெவ்வேறு நிலைகளில் அல்லது கட்டங்களில், வெவ்வேறு விதமானவர்கள் அதை உணர்கிறார்கள். ராமானுஜன் மற்றும் தாமஸ் ஆல்வா எடிசன் போன்ற சிலர் அதை வெகு சீக்கிரமாகத் தெரிந்து கொள்கிறார்கள். காந்திஜி மற்றும் கலீஃபா உமர் போன்ற சிலர் மிகவும் தாமதமாகத் தெரிந்து கொள்கிறார்கள். சில சமயங்களில் எடிசன் மற்றும் வர்கீஸ் குரியனின் வாழ்க்கையில் நடந்ததுபோல, மிகவும் சுலபமாக அடையாளம் கண்டுக் கூடிய வடிவத்தில் அந்தக் குறிக்கோள் வெளிப்படுகிறது. சதீஷ் தவன் மற்றும் காக்கர்லா சுப்பராவ் போன்ற சிலருக்கோ குறிக்கோள் என்பது அவ்வளவு சுலபமாகப் பிடிபடுவதில்லை.

அ.தி: பாதையைத் தெரிந்து கொண்டதும் என்ன நிகழ்கிறது?

ஆ.ப.ஜெ: பாதையைத் தெரிந்து கொண்டவுடனேயே, அந்தப் பயணத்திற்கு ஏற்றவாறு தன்னை ஒருவர் உருவாக்கிக் கொள்வது தொடர்பான நிறைய வேலைகள் தொடர்கின்றன. விழிப்புணர்வுடன் வாழ்வது மற்றும் தனது அனுபவத்தையும் அத்துடன் சுயத்தையும் ஒருவர் ஜீரணித்துக் கொள்வதன் மூலம் இவை நிகழ்கின்றன. ஆப்ரஹாம் லிங்கனும் நெல்சன் மண்டேலாவும், இந்தப் பயணத்தை வருடக் கணக்காக மேற்கொண்டிருந்தார்கள்.

அ.தி: இந்த வேலையை அடுத்து என்னை நிகழ்கிறது?

ஆ.ப.ஜெ: இந்த முனைப்புதான் மூலாதாரத்தின் இருப்பு நிலையை கண்டுபிடித்துத் தருகிறது. அதன் பல்வேறு வடிவங்களையும் குணாம்சங்களையும் அடையாளம் கண்டு கொள்கிற கலையையும் கற்றுத் தருகிறது. இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்த கப்பல் பயணத்தின் போது, சி.வி. ராமனின் வாழ்க்கையில் அது ஆரம்பமானது. தென்னாப்பிரிக்காவில், முதல் வகுப்பு ரயில் பெட்டியிலிருந்து தூக்கி எறியப்பட்ட சமயத்தில் காந்திஜிக்கு அது நிகழ்ந்தது. அதைத் தொடர்ந்து வந்த பல வருட மேம்பாடு, அவருடைய பயணத்தில் தனி முத்திரை பதித்தது.

அ.தி: உங்களுடைய கருத்து எனக்குத் தெளிவாகப் புரிகிறது. ஒருவேளை இது அயர்லாந்து நாவலாசிரியர் ஜேம்ஸ் ஜாய்ஸ் குறிப்பிடுவது போல அற்புத வெளிப்பாடாக இருக்குமா? அதாவது, திடீரென்று புலப்படுகிற உள்ளுணர்வைப் புரிந்து கொள்கிற ஒரு தருணமாக, உள்ளொளியின் ஒரு மின்னல் வெட்டாக அல்லது அப்படிப்பட்ட ஒரு தருணத்தை உண்டாக்கித் தருகிற ஒரு அனுபவமாக இருக்கலாம். இதுதான், இருப்பு நிலை மற்றும் மூலாதாரத்தின் தனித்தன்மை வாய்ந்த சங்கமத்தில் மலர்கிற ஓர் அமரத்துவ இருப்பு நிலையை எட்டுவதற்கான, மூன்றாவது கட்டப் பயணத்தை முடுக்கிவிடுகிறது. இதே தர்க்கரீதியில், மூலாதாரத்துடன் இணைந்திருக்கிற தனித்துவமான இருப்பு நிலையை எட்டுகிற இரண்டாம் கட்டப் பயணத்தை ஆரம்பித்து வைப்பது எது?

ஆ.ப.ஜெ: முதற்கட்டப் பயணத்திலிருந்து இரண்டாம் கட்டப் பயணத்தை எட்டுகிற நிலைமாற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட அனுபவத்தினால் மட்டுமே நிகழ்வதில்லை. இந்தக் கண்டுபிடிப்பில், அடுத்தடுத்த தொடர்கட்டங்கள் இடம் பெற்றிருந்தாலும் முதலாவது அனுபவமும் இருப்பு நிலையை அடையாளம் கண்டு கொள்வதும் தான் இதன் மையக் கூறாக அமைந்துள்ளது.

அ.தி: இதை இன்னும் சிறப்பாக நாம் எப்படிப் புரிந்து கொள்வது?

ஆ.ப.ஜெ. இந்தக் கண்டுபிடிப்பு இரண்டு கட்டங்களாக நிகழ்கிறது. ஒரு சரீரத்தில் ஒரு மூலாதாரமாக - மனித குலத்தில் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக நாம் இருக்கிறோம் என்கிற ஒரு விழிப்புணர்வு நம்மில் உதயமாகிற நிலை - இந்த பூமியில் நாம் இருக்கிற நமது இருப்பு நிலையை நாம் அறிந்துணர்கிறபோது இது தொடர்கிறது. மனித குலம் என்பது என்ன என்பதை நாம் உணர்கிறோம்; அறிகிறோம். அதன் உள்ளார்ந்த உண்மையையும் ஆற்றலையும் நாம் அறிந்து கொண்டவர்களாக மாறுகிறோம். சொல்லப்போனால், மனித குலத்தோடு நாம் பிணைக்கப்

பட்டிருப்பதையும் ஒட்டுமொத்த மனித குலத்துடன் நம்மை அடையாளப் படுத்திக்கொள்ள நாம் விரும்பு வதையும் நாம் உணரக்கூடும்.

அ.தி: இந்த அனுபவம் உங்களுக்கு எப்போதாவது நிகழ்ந் திருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்ளலாமா?

ஆ.ப.ஜெ: ஆம்! நான் அதை என் அனுபவத்தில் உணர்ந்திருக் கிறேன். 1933-ல் டி.ஆர்.டி.ஓ.வின் அறிவியல் சமூகத் தின் முன்னே நான் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் ''என்னுடைய மூளை, உங்களுடைய வேதனையை அகற்றுமா?'' என்று ஒரு கேள்வியை எழுப்பினேன். இந்தக் கேள்வி உயிரி மருத்துவத் தொழில்நுட்ப அமைப்பு (Society for Biomedical Technology - SBMT) உருவா வதற்கு வழி வகுத்தது. இந்த அமைப்பு, மருத்துவர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களை ஒருங்கிணைத்து, அவர்களின் கூட்டு முயற்சியில் சுதேசி மருத்துவ சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் பொருட் களை உருவாக்க வைத்தது. நான் ஏன் இதைச் செய்தேன்? நான் அப்போது மேற்கொண்டிருந்த செயலுக்கான புதிய ஆற்றல் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றிருந்தேன். சாதாரண மனிதன் மீதான அக்கறை என்னில் உதய மானது. என்னுடைய பிரக்ஞை என்னுடைய மூலா தாரத்தை செயல்பட வைத்திருக்கலாம். நீங்களும் அந்த அமைப்பில் அங்கம் வகித்தீர்கள்.

அ.தி: நீங்கள் உணர்ந்துகொண்டதைப் போல நானும் உணர்ந்த தால், உங்களைப்போலவே அதே உணர்வுக்கு ஆட்பட்டு நான் அந்த அமைப்பில் அங்கம் வகித்தேன் என்று சொல்ல முடியாது. நீங்கள் ஓர் அழைப்பு விடுத்தீர்கள். அங்கு கூடியிருந்த பல பொறியியல் தொழில்நுட்ப வல்லுநர்களிடையே இருந்த நானும், நீங்கள் சொன்னதைக் கவனித்தேன். பி.சோமராஜ் மட்டும்தான் உங்களது அழைப்பை செவிமடுத்த ஒரே ஒரு மருத்துவர். *கலாம்-ராஜு ஸ்டண்ட்* என்ற ஓர் அற்புதம் இப்படித்தான் பிறந்தது. இதைப் போலவே பி.என்.பிரசாத் வழங்கிய ஒத்துழைப்புடன் ஏவுகணை

கலவைப் பொருளிலிருந்து எஃப்.ஆர்.ஓ. (Floor Reaction Orthosis - FRO) என்ற மிகவும் எடை குறைந்த செயற்கைக்காலை இளம் பிள்ளை வாதத்தால் பாதிக்கப் பட்ட குழந்தைகளுக்காக நீங்கள் உருவாக்கினீர்கள்.

ஆ.ப.ஜெ: உண்மைத் தகவல்களை அழகாகத் தொகுத்து சுவையான கதைகளாகச் சொல்வதில் நீங்கள் கெட்டிக்காரர்.

அ.தி: இரண்டு கட்டங்கள் என்று நீங்கள் சொன்னீர்கள். அடுத்து என்ன நிகழ்கிறது?

ஆ.ப.ஜெ: மூலாதாரத்துடன் இப்படி இணைந்து இயங்குவது என்பது, ஒரு கப்பலில் ஏறி உள்முகத் தேடலுக்கான ஒரு பயணத்தை மேற்கொள்வது போன்றது.

அ.தி: உள்முகத் தேடலுக்கான கப்பல் பயணத்தை மேற் கொள்வது என்பது எவ்வளவு வசீகரமான ஓர் உருவகம்! இந்த அற்புதத்தை நீங்கள் எப்படி விவரிப்பீர்கள்?

ஆ.ப.ஜெ: இந்த உள்முகப் பயணத்தில், தெளிவடைதல் மற்றும் தூய்மையடைதல் என்று நுட்பமான ஒரு தொடர்கட்ட செயல்முறை மூலமாக, பிரக்ஞை கடந்து செல்கிறது. தனது பல்வேறு அம்சங்களையும் பரிமாணங்களையும் மூலாதாரம் வெளிப்படுத்துகிறது. மூலாதாரத்தின் இந்தப் புத்தம் புதிய வடிவங்கள் இருப்பு நிலையுடன் இணைந்துகொண்டே போகின்றன.

அ.தி: ஆனால், ஒரு குழந்தை, பெரியவனாக வளர்கிற போது இதேதானே நிகழ்கிறது? உள்ளுணர்வுபூர்வமான மிருக சுபாவங்கள், பண்பட்ட வளர்ந்த மனிதனின் சுபாவ மாகப் பரிணமிக்கிறது.

ஆ.ப.ஜெ: இதில் ஒரு வேறுபாடு உள்ளது. ஆதார வளர்ச்சியின் தொடர் கட்ட செயல்முறை, ஒருவரின் உள்ளார்ந்த சுயத் தின் ஆரம்ப நிலையிலிருந்து தொடங்கி சுய - முனைப்பு வளர்ச்சியின் நிறைவுக் கட்டம் வரையிலும் தொடர் கிறது. நிறைவு பெற்ற இந்த நிலையில், மிருக சுபாவங் கள், பண்பட்ட சுய-முனைப்புக் கட்டமைப்புகளின் பொலி

வான தோற்றங்களில் மறைந்துகொண்டு நீடித்திருக்கின்றன.

அ.தி: சுய முனைப்பு - மேம்பாடு என்பது ஆன்மாவின் மேம்பாடாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: அப்படியல்ல. மூலாதாரத்தைக் கண்டுபிடித்து, அதை ஒன்றிணைத்துக் கொள்கிற நிலை, ஆன்மாவுக்கு மறுவடிவம் கொடுக்கிறது. அடிப்படையில், உள்ளுணர்வால் உந்தப்படுகிற நிலையிலிருக்கிற ஆன்மா, அடிப்படையில் பகுத்தறிந்து இதய பூர்வமான பரிவுடன் வழிநடத்தப்படுகிற ஆன்மாவாக மாறுகிறது. இந்த நிலைதான் *கல்ப்* (Qalb).

அ.தி: அடுத்து என்ன நிகழ்கிறது?

ஆ.ப.ஜெ: மூலாதாரத்தைப் பொருத்தவரையில், தெள்ளத் தெளிவானதாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் மாறுவதுதான், உள்ளுணர்வு ரீதியில் உந்தப்படுகிற போக்கிலிருந்து பரிவு மற்றும் பகுத்தறிகிற பாங்கு மூலம் வழி நடத்தப்படுகிற செயல்முறையாக மறுவடிவம் பெறுவது என்பது. ஆன்மாவின் சுபாவங்கள் மற்றும் செயல்கள் மூலமாக தானாகவே மூலாதாரம் பரிணமிக்கிற நிலையில், உள்ளார்ந்த சுயம் இப்போது அதிகமாக மனித நிலையில் செயல்படுவதை, குழப்பமில்லாத தெளிவான புரிதலுடன் நாம் உணர்ந்தறிகிறோம்.

அ.தி: இரண்டாவது பயணத்தின் இலக்கு இதுதானா?

ஆ.ப.ஜெ: அடிப்படையில், இருப்பு நிலையின் இரண்டாவது பயணத்திற்கான இலக்கு, இதுதான். மூலாதாரத்தை எட்டுவதற்கான பயணம் முதற் கட்டமாக அமைந்திருந்தது. இப்போது இது, மூலாதாரத்துடன் மேற்கொள்கிற இணைந்த பயணம். இங்கே மூலாதாரம் உடன்வர, அதற்கு இயைந்த வகையிலும் அதன் வழிகாட்டுதலுடனும் இருப்பு நிலை பயணிக்கிறது.

அ.தி: ஓர் உதாரணம் தருகிறீர்களா?

ஆ.ப.ஜெ: மாவீரர் அசோகர், அஹிம்சை தர்மத்தைப் பரப்பியது; பொறியாளர் குரியன், பால்வளத் தொழிலில் இறங்கி லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய ஒரு மாபெரும் கூட்டுறவு இயக்கத்தை உருவாக்கியது; நீங்கள் ஒரு மருத்துவமனையில் பணியாற்றுவது என்பவையெல்லாம் அதற்கு உதாரணங்கள்.

அ.தி: இரண்டாவது பயணத்தின் போது என்ன நிகழ்கிறது?

ஆ.ப.ஜெ: மூலாதாரத்தைத் தன்னுடன் ஒன்றிணைத்துக் கொள்கிற ஆன்மா, அதன் (மூலாதாரம்) பல்வேறு குணாம்சங்களிலும் இரண்டறக் கலக்கும் போது பக்குவமடைகிறது. தனது நற்குணங்களை, ஆற்றல்களை மற்றும் திறன்களை மேம்படுத்திக்கொள்கிறது.

அ.தி: ஏதாவது உதாரணம்...?

ஆ.ப.ஜெ: ஐன்ஸ்டீன் அருமையான ஓர் உதாரணம். இயற்பியலின் பிரச்சினைகள் குறித்து, தெளிவான கண்ணோட்டத்தையும் அவற்றைத் தீர்ப்பதற்கான ஒரு தீர்மானமான உறுதியையும் கொண்டவராகவே அவர் எப்போதுமே காட்சியளித்தார். தனது இலக்கை எட்டுவதற்கான பயணத்தின் பிரதானக் கட்டங்களை அவரால் கற்பனை செய்து பார்க்க முடிந்தது. சொல்லப்போனால், தனது மகத்தான சாதனைகள் பற்றி அவர் விவரித்தபோது அவையெல்லாம் முந்தைய நிலையிலிருந்து அடுத்த கட்ட முன்னேற்ற நிலையை எட்டுவதற்கான வெறும் படிக்கற்கள் என்று அவர் குறிப்பிட்டது, வெளிப்படையான, பட்டவர்த்தனமான கூற்று.

அ.தி: அப்படியானால் முக்கியமாக இது, பக்குவமடைதலுக்கான ஒரு தொடர்கட்ட செயல்முறைதானே?

ஆ.ப.ஜெ: பக்குவமடைதல் அல்ல. ஒருங்கிணைதல். மூலாதாரத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டதுமே அது, தெளிவுபளிச்சிடுகிற மையமாகச் செயல்படத் தொடங்குகிறது. அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளின் சங்கமத்தில் மலர்கிற தனது ஆற்றலில் விளைகிற, தனது தனிப்பட்ட அனைத்து அனுபவங்களையும் இந்த மையத்தைச்

சுற்றிலும் தன்னுடன் ஆன்மா ஒன்றிணைத்துக் கொள்கிறது.

அ.தி: 'நான்' 'எனது' என்கிற சுய-முனைப்பு எங்கு பொருந்து கிறது?

ஆ.ப.ஜெ: இந்த சுய-முனைப்பின் கட்டமைப்பு என்பது ஒரு கற்பனை வடிவமாக அல்லாமல், மனம் உருவாக்கிய ஒரு பொருளாக அல்லாமல் வேறு ஒன்றும் இல்லை. தான் சுயமாக செயல்படக்கூடியவராகவும் தனித்துவம் வாய்ந்த ஒரு தனிநபராகவும் இருக்கிறோம் என்று ஒரு தவறான உணர்வை ஒருவருக்கு இந்த சுய-முனைப்பின் கட்டமைப்பு தருகிறது. ஆன்மாவில் இடம் பெற்றுள்ள நிலையான மனப்பதிவுகள் மூலமாக இந்தக் கட்டமைப்பு ஆன்மாவில் நிர்மாணிக்கப்படுகிறது. சுய முனைப்பின் அடையாளம்தான் முதன்மையான தடையாக உள்ளது. தனது உள்ளார்ந்த சுய மோகத்தில் மூழ்கியுள்ள ஆன்மா வுடன் சுய முனைப்பின் கட்டமைப்பு மோதிக் கொள்கிறது.

அ.தி: தண்ணீரில் பிரதிபலித்த தனது சொந்த பிம்பத்தின் மீதே மோகம் கொண்டிருந்த கிரேக்க சிறுவன் நார்சியஸ் கதையின்படி இது உண்மைதான்.

ஆ.ப.ஜெ: சுய மோகத்திலிருந்து விடுதலை பெறுவது என்பதுதான் தன்னை அறிதல். தங்குதடையில்லாமல் இலகுவாக, இருப்பு நிலையுடன் மூலாதாரம் இரண்டறக் கலக்கத் தொடங்குகிறது. மூலாதாரம் மற்றும் இருப்பு நிலையின் இரட்டைத் தன்மை ஒன்றாக இணையத் தொடங்குகிறது. காலத்திற்கு அப்பாற்பட்ட மூலாதாரத்தின் அற்புத அழகும் எளிமையும் அல்லாமல் வேறொன்றும் இல்லை என்ற உண்மையை மேலும் மேலும் அதிகமாக உள்ளிருப்பு அறிந்துகொள்கிறது. இந்தத் தொடர் கட்ட செயல் முறைக்கு மிகவும் பொருத்தமான உதாரணங் களாக, கலீஃபா உமர் மற்றும் காந்திஜியின் வாழ்க்கை அமைந்துள்ளன.

அ.தி: மேலும், உங்களுடைய வாழ்க்கை?

ஆ.ப.ஜெ: வேடிக்கையான மனிதர் நீங்கள்.

அ.தி: அது எப்படி அவ்வளவு துல்லியமாக நிகழ்கிறது? அது படிப்படியாகத் தொடர்கிற நிகழ்வா? அல்லது ஒரு திடீர் அற்புதமா?

ஆ.ப.ஜெ: மூலாதாரத்தை அறிந்துணர்தல் என்பது பெரும்பாலும் அடுத்தடுத்த வளர்முகத் தொடர் கட்டங்களாகத்தான் நிகழ்கிறது. எப்படியிருந்தாலும் ஒரு மனித வாழ்க்கையின் குறிக்கோள் பெரும்பாலும் கண்டுபிடிக்கப்பட்டு விடுகிறது.

அ.தி: செயல்பாடுகள் ரீதியில் பார்த்தால் அது எப்படி நிகழ்கிறது?

ஆ.ப.ஜெ: மூலாதாரம் கண்டறியப்பட்டு, அது இயங்கத் தொடங்கிய உடனே ஒருவரின் நடவடிக்கைகள், மிகவும் அறிவுக்கூர்மை கொண்டவையாகவும், பரிவு நிறைந்தவையாகவும், தெளிவானவையாகவும், வலுவானவையாகவும், முழுமையானவையாகவும் மாறுகின்றன. இந்த நடவடிக்கைகள் உடல் ரீதியானவையாக, வெளிப்படையானவையாக அல்லது மனரீதியிலானவையாக இருக்கலாம். கலீஃபா உமரின் தூய்மை மற்றும் நேர்மை, எம்.எஸ். சுப்புலட்சுமியின் இசை, ராமானுஜனின் கணிதம் என்பவையெல்லாம் இதற்குத் தெளிவான உதாரணங்கள்.

அ.தி: இந்தத் தொடர்கட்ட செயல்முறையை இப்போது என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. 'காபினட்' அந்தஸ்துள்ள பதவியை நீங்கள் துறந்துவிட்டு, அண்ணா பல்கலைக்கழகம் சென்று ஓர் ஆசிரியராகப் பணியாற்றினீர்கள்.

ஆ.ப.ஜெ: நீங்கள் என்னை வேறு ஏதோ திசைக்கு கொண்டு சொல்லப் பார்க்கிறீர்கள்...

அ.தி: நான் அதை இப்படித்தான் பார்க்கிறேன். நீங்கள் இருப்பு நிலை - மூலாதாரத்தின் ஒத்திசைவு தொடர்பு முறை பற்றி விளக்கிக் கொண்டிருந்தீர்கள். முடுக்கி விடப்பட்டதுமே

மூலாதாரம் துடிதுடிப்பான உயிர்ப்புத் தன்மை கொண்ட ஓர் இருப்பு நிலையாக மாறுகிறது. அதன் வெவ்வேறு விதமான மறுவடிவ நிகழ்வுகள், உண்மையான இயல்பின் தூய்மையான, துல்லியமான விளைவுகளை வெளிப்படுத்துகின்றன. இந்த வெளிப்பாடுதான் உண்மையிலேயே ஒத்திசைந்த மகத்தான ஒரு தொடர்பு முறை. உண்மையான இயல்பு என்பது பாரம்பரியமாக வந்தடைகிற ஒன்றா?

ஆ.ப.ஜெ: இல்லை. உண்மையான இயல்பு என்பது வெளிப்படையாகப் பெறப்படாத மனித ஆற்றல், ஒரு ஆடு ஆடாகவும், ஒரு நாய் நாயாகவும் இருப்பதைப் போன்றது, இது.[96]

அ.தி: இந்த ஆற்றல் மலர்ச்சியடைகிறபோது மூலாதாரத்திற்கு என்ன நேரிடுகிறது?

ஆ.ப.ஜெ: மனித ஆற்றல் மலர்ச்சியடைகிறபோது அல்லது மூலாதாரம் பரிணமிக்கிற போது, மூலாதாரத்தின் ஒரு கட்டம் என்ற நிலையிலிருந்து மூலாதாரத்தின் ஓர் அங்கம் என்ற நிலைக்கு ஆன்மா வளர்ச்சியடைந்து, ஒரு தெய்வீக ஆன்மாவாக, வழிகாட்டுகிற ஓர் ஆன்மாவாக மாறுகிறது.

அ.தி: சற்று முன்பு, மிருக இயல்புகள் பற்றி நீங்கள் சொன்னீர்கள்.

ஆ.ப.ஜெ: மிருக இயல்புகளை அடியோடு வேரறுக்கிற சமயத்தில், மனித ஆற்றல் வெளிப்படுவதற்கான வாய்ப்புகள் குறைந்து விடுகின்றன. இருந்தாலும் மூலாதாரத்தைக் கண்டறிவதற்கு, துடிதுடிப்பான களத்தையும், ஆன்மாவை அறிவதற்கான வழிமுறையையும் அடையாளம் காண்பதற்கு, இந்த வேரறுக்கிற நடவடிக்கை வழி வகுக்கிறது.

அ.தி: என்னுள் இப்போது இந்த நடவடிக்கை நிகழ்ந்து கொண்டிருப்பதாக நினைக்கிறேன்.

ஆ.ப.ஜெ: இல்லை. உங்களுடைய முனைப்பின் மூலமாக ஓர் எழுத்தாளரின் மூலாதாரம் மலர்வது ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது.

அ.தி: உங்களுடைய மிகவும் அன்பான வார்த்தைகளுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

ஆ.ப.ஜெ: பல்வேறு அம்சங்களின் மூலாதாரம் தன்னைத் தானே வலுப்படுத்திக் கொள்கிறது. உங்களைப் பொருத்த வரையில் மிகவும் வெளிப்படையான அம்சமாக எழுத்து அமைந்துள்ளது. ஆனால், ஒன்றோடொன்று இணைந்து இரண்டறக் கலந்துள்ள வேறு அம்சங்களும் இருக்கத் தான் வேண்டும்.

அ.தி: அந்த அம்சங்கள் என்பவை?

ஆ.ப.ஜெ: கற்பனை வளம், நுண்ணுணர்வு, சிந்தனைகளை எழுத்து வடிவங்களாகக் கட்டமைக்கிற திறன் மற்றும் வார்த்தை வெளிப்பாடுகளை வடித்தெடுக்கிற திறன் என்பவை இதற்கு உதாரணங்கள்.

அ.தி: வாழ்க்கையில் இப்படிப்பட்ட ஓர் அற்புதத்தைத் தீர்மானிக்கிற ஓர் அம்சமாக அல்லது சக்தியாக இருப்பது எது? எந்த சூழ்நிலையில் அது நிகழ்கிறது?

ஆ.ப.ஜெ: கடந்தகால அனுபவங்களும், நம்மை முடக்கி வைத்துள்ள அவற்றின் நிர்பந்தங்களும் கடுமையான தடைகளாக உள்ளன. கடந்த காலத்தின் பதிவுகள் என்ற கடிவாளம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே, ஒரு பழக்கப்பட்ட முறையிலேயே நம் அனைவரையும் இயக்கி வைக்கிறது. இப்படிப்பட்ட நிலை பெரும்பாலும் பிரக்ஞைக்கு வெளியே நீடித்திருந்து, தானாகவே இயங்குகிறது. இந்தக் கடிவாளப் பிடியிலிருந்து தன்னைத் தானே ஒருவர் விடுவித்துக் கொள்கிற அதே தருணத்திலேயே மூலாதாரம் முடுக்கிவிடப்படுகிறது.

அ.தி: இப்படிப்பட்ட கடிவாளக் கட்டுப்பாடும், ஒடுக்கி வைத் திருப்பதும், நன்மைக்குத்தான் என்று நான் நினைத் திருந்தேன். தாங்க முடியாத கஷ்டங்கள் இருந்த

போதிலும் தன்னைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்வதற்கான பல்வேறு வழிமுறைகள் மூலம், அந்தக் கஷ்டங்களை உணராமல் இருப்பதற்கு ஒரு தனி மனிதன் முயல்கிறான். இந்த முயற்சியின் மூலம் அவன், தன்னைத்தானே உயர்த்திக் கொள்கிறான்.

ஆ.ப.ஜெ: இதில் எந்த நன்மையும் இல்லை. அடக்கி, ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கும் விஷயம், இல்லாமல் போய் விடுவதில்லை. அது தன்னை மறைத்துக்கொண்டு, நீடித்திருக்கிறது. இதைத்தான் பிரக்ஞையுடன் நிகழ்கிற அனுபவத்தின் மீது தனது வலுவான சக்தியை, பிரக்ஞையற்ற தன்மை செலுத்துகிறது என்று உளவியல் குறிப்பிடுகிறது. இந்தத் தாக்கம் மக்களின் பழக்க வழக்கங்களில், பழக்கங்களுக்கு அடிமையாவதில், மனோபாவங்களில், மோசமான தவறுகளில் மற்றும் கட்டுப்படுத்த முடியாத உணர்வுப் பொறிகளில் எதிரொலிக்கிறது.

அ.தி: ஆரம்ப வருடங்களில் நமக்குள் திணிக்கப்பட்டு, நம்மை ஒரு கடிவாளப் பிடிக்குள் கட்டுப்படுத்தி வைத்துள்ள விஷயங்களிலிருந்து விடுபடுவதற்கான ஓர் உபாயத்தை நவீன உளவியல் கண்டுபிடித்துள்ளது. பிரக்ஞையற்ற நிலைக்குள் வேரோடிப் போயிருக்கிற அந்த அடி ஆழத்திலிருந்தே உள்மோதல், ஒவ்வொரு கட்டமாகத் தொடர்ந்து, வேதனை வெளிப்பாடுகள் மற்றும் அறிகுறிகளை முற்றிலுமாகக் களைந்தெறிந்து விடுகிற உபாயம் இது. First and Last Freedom என்ற புத்தகத்தில் இந்த நிலையை ஜிட்டு கிருஷ்ண மூர்த்தி,[97] முரண்பாடு, யுத்தம், மாறுவதற்கான மோதல் என்று குறிப்பிடுகிறார்.

ஆ.ப.ஜெ: உங்களுடைய மருத்துவ மனையில் உங்களுடன் பணியாற்றுகிற உளவியல் நிபுணர்கள் இதுபற்றி என்ன சொல்கிறார்கள்?

அ.தி: நான் ஒரு சமயம், உளவியல் மருத்துவரான என் நண்பர், பி.ஆனந்திடம் மனதின் துடிதுடிப்பான செயல்பாட்டிற்கு அன்றாட வாழ்க்கையிலிருந்து ஓர் உதாரணம் தரும்படி

கேட்டுக்கொண்டேன். பலத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்த ஓர் உதாரணம் தந்தார். கோபத்தையும் ஆவேசத்தையும் சமாளிக்க முடியாமல் மிதமாகவும் பலவீனமாகவும் இருக்கிற ஒரு நிலைதான் உண்மையிலேயே பலம் சம்பந்தப்பட்ட தீர்க்கப்படாத ஒரு பிரச்சினை என்று கூறினார்.

ஆ.ப.ஜெ: எப்படி?

அ.தி: பெற்றோர் முன்னால் மிதமாகவும் அடங்கிப்போகும் தன்மையுடனும் இருக்கிற குழந்தை, வளர்ந்து பெரியவனாக அல்லது பெரியவளாக மாறியவுடன் இதே பாணியைப் பின்பற்ற வேண்டிய தேவை இல்லாமல் போய்விடுகிறது. இந்த உணர்வின் சக்தியை ஆராய்ந்து பார்த்தால், பலத்துடன் அதற்குள்ள தொடர்பைத் தெரிந்துகொள்ள முடியும். கோபம் என்பது உண்மையிலேயே உணர்வுபூர்வமான, வலிமையின் உள்ளார்ந்த ஒரு வடிவம்தான்.[98]

ஆ.ப.ஜெ: அதாவது வலிமையின் குணாம்சம் கோப உணர்வில் சிக்குண்டுவிடுகிறது என்று நீங்கள் சொல்கிறீர்களா?

அ.தி: ஆமாம் ஸார்... தனது பெற்றோரின் கோபத்தை தூண்டிவிட்டு விடுவோமோ என்ற பயம் காரணமாக ஒருவரின் ஆன்மா தனது வலிமையை ஒப்புக் கொள்வதற்கு அஞ்சுகிறது. எனவே அந்த ஆன்மா, தனது வலிமையைக் கைவிட்டும், அடக்கிக் கொண்டும், திசைமாறிய கோப உணர்வுக்கு ஆளாகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஈடுபடும்போது, வலிமையின் குணாம்சம் அந்த ஆன்மாவில் வெளிப்படுகிறது.

ஆ.ப.ஜெ: மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறதே... மனித ஜீவன்கள் எதிர்கொண்டுள்ள உணர்வுபூர்வமான மற்ற பிரச்சினைகள் குறித்து உங்களுடைய உளவியல் மருத்துவ நண்பர்கள் என்ன சொல்கிறார்கள்?

அ.தி: மற்றவர்களுடன் ஓர் உலகத்தில் வாழ்கிற ஒரு மனித ஜீவனாக இருப்பதற்கான சாதாரண வரையறைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் குறிப்பிடுவதற்கு

'இருத்தல் தொடர்பான பிரச்சினைகள்' என்ற பதத்தை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஆசை மற்றும் ஆசையில்லாத நிலை, மனநிறைவு மற்றும் விரக்தி, நெருக்கம் மற்றும் தனிமை, இணைந்திருக்கும் தன்மை மற்றும் தனித்திருத்தல், நேசம் மற்றும் மூர்க்கத் தன்மை, உள்ளுணர்வு மற்றும் பகுத்தறிதல், எல்லைக்குட்பட்ட மற்றும் எல்லையற்ற தன்மை, அற்ப ஆயுள் மற்றும் மரணம், தெரிவு செய்தல் மற்றும் எதிர்பாராத நிகழ்வு, பொருள் கொண்டது மற்றும் பொருளற்ற வெறுமை, இருப்பு மற்றும் சூன்யம், பயம் மற்றும் அச்சம் முதலியவை தொடர்பான பிரச்சினைகளால் ஏற்படுகிற பாதிப்புகள், ஆட்சேபங்கள் மற்றும் மோதல்கள் என்பவை இந்த இருத்தல் தொடர்பான பிரச்சினைகளில் அடங்கும்.

ஆ.ப.ஜெ: கற்பனை வளம் நிறைந்த இப்படிப்பட்ட அடுக்கடுக்கான வார்த்தைகளை உங்களுடைய மருத்துவ நண்பர்கள் பயன்படுத்தினர் என்று என்னிடம் சொல்லாதீர்கள்.

அ.தி: அவர்கள், இருத்தல் தொடர்பான பிரச்சினைகளை அச்சமூட்டுகிற மருத்துவ பதங்களில் விளக்குகிறார்கள். இது தொடர்பான அருமையான விளக்கக் கையேடுகள் நிறைய உள்ளன. அவற்றிலிருந்து இந்த வார்த்தைகளை நான் பொறுக்கி எடுத்தேன்.

ஆ.ப.ஜெ: நம் எல்லோரிடமும் இருக்கிற அனைத்துமே பொறுக்கி எடுக்கப்பட்ட விஷயங்கள் தான். நீங்கள் மிகவும் வசீகரமான வார்த்தைகளை பொறுக்கி எடுத்திருக்கிறீர்கள்.

அ.தி: தனது சாதாரண வரையறைகள் மற்றும் விரக்திகளை தன்னுடன் உள்ளடக்கிக் கொண்ட ஒரு வாழ்க்கையை ஆன்மா மேற்கொண்டிருப்பதுதான், முக்கியமான இருத்தல் தொடர்பான பிரச்சினை. தனது உண்மையான இயல்பு பற்றிய ஆன்மாவின் அறியாமையும் இவற்றுடன் மேலும் சேர்ந்து கொள்கின்றன.

ஆ.ப.ஜெ: எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்கிற அதே சமயத்தில், எதன் மீதும் பற்றுக் கொள்ளாமலும் இருக்கிற தன்மை கொண்ட ஒரு மனதைப் பெற்றிருப்பதுதான் மிகவும் முக்கியம் என்று நான் நினைக்கிறேன். இருத்தல் தொடர் பான பிரச்சினைகள் குறித்து மேலும் சொல்லுங்கள்.

அ.தி: வாழ்க்கையில் இருத்தல் தொடர்பான பிரச்சினைகள் என்பவை இயல்பாக அதிலும் குறிப்பாக மாறுதல்கள் நிகழ்கிறபோதும், தீவிரமான நிகழ்வுகளின் போதும் தோன்றக் கூடியவை. ஆனாலும்கூட, உள்முக நட வடிக்கை மூலமாக அவற்றை வெளிக்கொணர முடியும். தனது சுய-முனைப்பின் கட்டமைப்புக்குள் ஊடுருவிச் சென்று, அதைக் கடந்து செல்வதை ஆன்மா கற்றுக் கொள்கிற நிலையில், குறிப்பாக இந்தப் பிரச்சினைகள் எழுகின்றன. தனது தலை சிறந்த படைப்பான Metamorphosis என்ற நூலில் ஃபிரன்ஸ் கஃப்கா[99] இந்தக் கருத்து பற்றி எழுதியுள்ளார்.

ஆ.ப.ஜெ: என்னால் அதைப் புரிந்து கொள்ள முடிகிறது. எஸ்.எல்.வி-3 ஏவுகலத்தின் முதலாவது விண்ணேற்றுதல் தோல்வியடைந்ததை அடுத்த கால கட்டமும், 'அக்னி' ஏவுகணையை சோதனை முறையில் முதலாவது தடவையாக விண்ணில் செலுத்துகிற முயற்சிக்கு முந் தைய சிக்கல்களும், மிகவும் குறிப்பிடத்தக்க முறையில் என்னுடைய நிஜ சுயத்தை என்னைத் தேடிக் காண வைத்தன. ஆனால், 1999-ல் நிகழ்ந்த அரக்கோணம் விமான விபத்து என்னை மிகவும் வேதனையில் ஆழ்த் திய துயர அனுபவமாகி விட்டது. எனது சுய-முனைப்பு கட்டமைப்பையும் கூட அது நிலைகுலைய வைத்து விட்டது.

அ.தி: இது பற்றி நீங்கள் என்னிடம் பேசியதே இல்லை. உங்களுடைய பணி என்ற மகா சமுத்திரத்திற்குள், எப்போதுமே நீங்கள் மூழ்கடித்திருக்கும் கொடிய வேதனை என்ற பனிப்பாறையின் நுனிப்பகுதியை மட்டுமே என்னால் பார்க்க முடிந்தது. அதை என்னுடன் பகிர்ந்துகொள்ள விரும்புவீர்களா?

ஆ.ப.ஜெ: பகிர்ந்துகொள்வது என்பதைவிட ஒரு விஞ்ஞான முயற்சியில் தங்கள் உயிர்களை தியாகம் செய்துவிட்ட அந்த எட்டு இளைஞர்களுக்கும் எனது நன்றிகளை வெளிப்படுத்த விரும்புகிறேன். பேசப்படாத அந்த நாயகர்களைப் பற்றி இந்த தேசம் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் குடும்பம் அனுபவித்த வேதனைகளைப் பகிர்ந்து கொள்ளத்தான் வேண்டும்.

அ.தி: ஸார், 1999 ஜனவரி 11-ஆம் நாள் நிகழ்ந்த Airborne Surveillance Platform (ASP) விபத்து பற்றித்தானே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்?

ஆ.ப.ஜெ: ஆம், அரக்கோணம் அருகே அடர்ந்த காட்டுக்குள் அந்த ஏ.எஸ்.பி. விழுந்து நொறுங்கியது.

அ.தி: நான் ஒரு சமயம் இந்த சம்பவம் பற்றி கே. ராம்சந் திடம்[100] பேசி இருக்கிறேன். அவர்தான் அப்போது சிஸ்டம் என்ஜினியராக இருந்தார். அந்த ஆவ்ரோ விமானத்தின் மேற்பகுதியில், வான்வெளியைக் கண் காணிக்கும் வசதி கொண்ட ஒரு 'டிஷ்' வடிவ சாதனமான மோட்டோடாம்[101] (motodome) பொருத்தப்பட்டிருந்தது. சுமார் பிற்பகல் இரண்டு மணிக்கு விமானத் தளத்தி லிருந்து அது கிளம்பி, 10,000 அடி உயரத்தை எட்டி, சென்னை கடற்கரைப் பகுதியை நோக்கிப் பறந்தது என்று என்னிடம் அவர் கூறினார். அரக்கோணம்-சென்னை கடற்கரைப் பகுதிக்கு இடையே ராடார் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த சோதனைத் திட்டத்திற்கு உள்ளான இலக்கு விமானமான ஏ.எஸ்.32 விமானம், ஆவ்ரோ கிளம்புவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாகக் கிளம்பியது. தரைக்கட்டுப்பாடு நிலையத் திற்கும் சோதனையை மேற்கொண்டிருந்த ஆவ்ரோ விமானத்திற்கும் இடையே தகவல் தொடர்பு துல்லிய மாக இருந்தது.

ஒன்றரை மணிநேர சோதனை முறையிலான பயணத் திற்குப் பிறகு, இலக்கு விமானம், அன்று சுமார் மாலை 4 மணி அளவில் அரக்கோணத்தில் தரை இறங்கியது.

அதையடுத்து, சென்னையிலிருந்து அரக்கோணம் நோக்கி வந்த ஏ.எஸ்.பி. விமானம், அரக்கோணம் விமானத் தளத்தை நெருங்கியதும் பத்தாயிரம் அடி உயரத்திலிருந்து ஐயாயிரம் அடி உயரத்திற்கு இறங்கியது. விமானத் தளத்திலிருந்து சுமார் 5 நாட்டிகல் மைல் தொலைவு இருந்த போது, மூவாயிரம் அடி மற்றும் ஐந்தாயிரம் அடி உயரத்திற்கிடையே பறந்து கொண்டிருந்த போது விமானத்திலிருந்து 'மோட்டோ டாம்' பிய்த்துக் கொண்டது. அந்தத் துவாரம் வழியாக காற்று வெகுவேகமாக உள்ளே புகுந்ததால் விமானம் கட்டுப்பாட்டை இழந்து நிலைகுலைந்தது. சுமார் மணி 4.20க்கு அது கீழே விழுந்து நொறுங்கியதில் அதிலிருந்த எட்டுப் பேரும் உயிரிழந்து விட்டார்கள்.

ஆ.ப.ஜெ: தில்லியில், சவுத் ப்ளாக்கில், என்னுடைய அலுவலகத்தில் பாதுகாப்பு ஆய்வுக் குழு கூட்டத்தில் நான் கலந்து கொண்டிருந்த அந்த சமயத்தில் விபத்து பற்றி என்னிடம் சொன்னார்கள். விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினரை சந்திப்பதற்காக நான் உடனே பெங்களூர் விரைந்தேன். விமானப்படைத் தலைமை தளபதி ஏ.ஒய்.டிப்னிஸும் அங்கே இருந்தார். வேதனையிலும் விரக்தியிலும் இளம் மனைவிகள் கதறி அழுத சோகம், மீள முடியாத அதிர்ச்சியில் பெற்றோர்கள் உறைந்து போய் நின்றிருந்த அந்தத் துயரக் காட்சி என்னை மிகவும் கலங்க வைத்து விட்டது. ஒரு பெண்மணி, அவருடைய கைக்குழந்தையை என் மடியில் போட்டு, ''இந்தப் பிஞ்சுக் குழந்தையின் வாழ்க்கையை யார் கவனித்துக் கொள்வார்கள்?'' என்று அழுதார். இன்னொரு பெண் மணி, ''எங்களுக்கு ஏன் இப்படி செய்து விட்டீர்கள், மிஸ்டர் கலாம்'' என்று கதறினார்.

அ.தி: தங்கள் உயிரைப் பலி கொடுத்துவிட்ட அதிகாரிகளின் பட்டியலை ராம்சந்த் என்னிடம் கொடுத்தார். ஸ்குவாட்ரன் லீடர் பி.வெங்கட் அந்த விமானத்தை ஓட்டி வந்தார். அதில் பயணம் செய்த இன்ஸ்ட்ருமென்டேஷன் என்ஜினியர் பி.இளங்கோவும் ராடார் சிஸ்டம் என்ஜினி

யர் கே.பி.சஜூவும், ஏர்போர்ன் சிஸ்டம்ஸ் மையத்தைச் சேர்ந்தவர்கள். ராடார் பிராசஸிங் விஞ்ஞானி, டி.நரசிம்ஹ ஸ்வாமி மற்றும் சிக்னல் பிராசஸிங் விஞ்ஞானி, ஐ.ஜெயக்குமார் ஆகியோர் மின்னணு ஆய்வு மற்றும் மேம்பாட்டு அமைப்பைச் (Electronics Research and Development Establishment) சேர்ந்தவர்கள். ஸ்குவாட்ரன் லீடர்களான என்.வி.சேஷு, ஆர்.பத்நாகர் மற்றும் எஸ்.ரவி ஆகியோர் விமானப் படையைச் சேர்ந்த மற்ற அதிகாரிகள்.

ஆ.ப.ஜெ: இறந்தவர்களுடைய உடல்களின் எந்தப் பகுதியும் மிஞ்சியிருக்கவில்லை. பலியானவர்களின் குடும்பத்தின் ஆறுதலுக்காக அதிகாரிகள் சவப்பெட்டிகளை ஏற்பாடு செய்து, அங்கிருந்த சமுதாயக்கூடத்தில் வைத்தார்கள்.

அ.தி: ஐயோ! கடவுளே..!

ஆ.ப.ஜெ: மிகவும் ஆழ்ந்த துயரத்தில் இருந்த என்னால் நான் பேச இருந்த அஞ்சலி உரையில் ஒரு சில வார்த்தை களைத்தான் முணுமுணுக்க முடிந்தது. பின்னர் அன்று இரவு பின்வருமாறு எழுதினேன்.

விளக்குகள் வெவ்வேறானவை,
ஆனால், ஒளி ஒன்றே
இந்த உலகத்திற்கு
சந்தோஷங்களை வழங்கிய நீங்கள்
என் ஆன்மாவின் அடி ஆழத்தில்
என்றும் நிலைத்திருக்கிறீர்கள்.

அ.தி: உள்நாட்டுப் போரில் வீர மரணம் அடைந்த ஐந்து மகன்களைப் பெற்றெடுத்த ஒரு தாய்க்கு, ஆபிரஹாம் லிங்கன் எழுதிய ஒரு கடிதத்தை[102] இது நினைவு படுத்துகிறது.

'ஈடுசெய்யவே முடியாத இழப்பின் துயரத்திலிருந்து உங்களை கொஞ்ச நேரத்திற்காவது விடுபடவைக்க முயல்கிற எனது எந்த வார்த்தைகளும் எவ்வளவு பலவீன மானவையாகவும் பலனற்றவையாகவும் இருக்கும் என்பதை நான் உணர்கிறேன். ஆனால், தங்கள் உயிரைக் கொடுத்து அவர்கள் காப்பாற்றிய குடியரசின் நன்றிகளில்

வெளிப்படக்கூடிய ஆறுதலை உங்களுக்கு வழங்காமல் என்னால் இருக்க முடியவில்லை.

உங்களுடைய மகன்களைப் பறிகொடுத்துவிட்ட வேதனையில் தவிக்கும் உங்களுக்கு நிம்மதி அளித்து, உங்களுடைய அந்த அன்புக்குரிய நெஞ்சங்களின் இனிய நினைவுகளை மட்டுமே உங்களிடம் நிலைத்திருக்க வைத்து, விடுதலை வேள்வியில் அவ்வளவு மகத்தான தியாகம் செய்திருக்கிற பெருமிதம் உங்களுக்கே உரித்ததாக அமைவதற்கு நமது பரம பிதாவிடம் நான் பிரார்த்திக்கிறேன்.''

ஆ.ப.ஜெ: கதறி அழுகிற விதவைகள், அதிர்ச்சியில் உறைந்துபோன பெற்றோர்கள், என் மடி மீது இருந்த மாசு மருவற்ற அந்தக் குழந்தை மற்றும் சடலங்கள் வைக்கப் பட்டிருப்பது போன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சவப்பெட்டிகளை தகனம் செய்தது... என்ற அந்த நினைவுகள் இதோ இங்கே ராஷ்ட்ரபதி பவனில் உட்கார்ந்து கொண்டிருக்கும் என் மனதைவிட்டு அகலாமல் அப்படியே உறைந்து போயுள்ளது. அரசியல் நடத்திக் கொண்டிருக்கிற, விதிமுறை சம்பிரதாயங்களை பின்பற்றி வருகிற ஒரு சிலராவது, ஆய்வுக்கூடங்களிலும் பணிக்களங்களிலும் பாதிக்கப்பட்டவர்களின் வேதனையையும் துயரத்தையும் புரிந்து கொள்வார்களா?

அ.தி: நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

ஆ.ப.ஜெ: ஒரு மெழுகுவர்த்தியாக இருப்பது போன்று காட்டிக் கொள்ளாதீர்கள். ஒரு மின் மினிப் பூச்சியாக இருங்கள். சேவை செய்வதில் மறைந்திருக்கும் ஆற்றலை அறிந்து கொள்ளுங்கள். அரசியலின் புற வடிவங்களுக்குள் நாம் சிக்கிக்கொண்டு, அவைதான் தேசத்தை நிர்மாணிப் பவையாக இருக்கின்றன என்ற பிரமையில் நாம் தவறாகப் புரிந்து கொண்டிருப்பது போலத் தோன்று கிறது. உண்மையிலேயே ஒரு தேசத்தை உருவாக்குவது, வெளிப்படுத்தப்படாத அல்லது கண்ணுக்குத் தெரியாத

தியாகங்களும் உழைப் பும் ஆபத்தைக் கண்டு அஞ்சாத துணிவும்தான்.

அ.தி: இந்த விபத்தில் பலியான ஒவ்வொருவரின் குடும்பத்திற்காக ஏழு லட்ச ரூபாயை நிவாரணத் தொகையாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதில், நீங்கள் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்ததை நான் அறிவேன்.

ஆ.ப.ஜெ: நான் அதை மறந்துவிட்டேன். எல்லாமே சுலபமானவையாக அமைந்துவிடக் கூடிய, என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் தீர்மானிப்பதற்கு வாய்ப்பே இல்லாத ஒரு நிலை உண்டு. ஏனென்றால், நீங்கள் திரும்பிப் பார்த்தால் நீங்கள் பணயம் வைத்திருக்கிற அனைத்துமே பறிபோய் விடும்.

அ.தி: வேதனையின் வெளிப்பாடை உங்களிடம் முதல் தடவையாக நான் காண்கிறேன்.

ஆ.ப.ஜெ: எனக்குக் கவலையாக இருக்கிறது. நாம் நமது மக்களுக்குத் தவறிழைக்கிறோமா?

அ.தி: இதைப்போலவே சமீபத்தில் 2005 மார்ச் மாதத்தில், நாடாளுமன்ற கூட்டத்தில் நீங்கள் சொன்னீர்கள்.

ஆ.ப.ஜெ: எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய கட்டாயங்களுக்காக சில சட்டசபை இடங்களை விலை கொடுத்து வாங்குவதாக சொல்லப்படுகிறது. ஜனநாயக விரோதமான மற்றும் மோசடி வழிமுறைகள் மூலமும் தேர்தலில் வெற்றி பெறுவதாக சொல்லப்படுவதும் என்னை சங்கடப்படுத்துகிறது. அரசியல் சாகசம் என்று நினைத்துக் கொண்டு, தன்னைத்தானே அரசியல் தரம் தாழ்த்திக் கொண்டால், இந்த தேசம் சீரழிவுப் பாதைக்கு இழுத்துச் செல்லப்பட்டு சிதைந்து போவதைத் தடுக்க முடியாது. இந்த நிலைக்கு நாம் ஆளாகிவிடக்கூடாது என்று நான் கூறினேன்.

அ.தி: நீங்கள் நிச்சயம் தனிமையை அனுபவித்திருக்க வேண்டும்?

ஆ.ப.ஜெ: ஆம்! உண்மையிலேயே ஆழமான ஓர் ஏகாந்த உணர்வு அது. துயரத்தின் போது ஒருவர் தனியாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் என்னைச் சுற்றிலும் உள்ள விஷயங்கள் சரிசெய்யப்பட்டதும், ஆதார இருப்பு நிலையின் உள்ளார்ந்த நெருக்கத்தை நான் கண்டறிந்தேன். எனது தன் முனைப்பு-சுயம் அறிந்திருந்ததை விட மிகவும் அதிக அளவில் அடிப்படையான பிணைப்புத் தன்மையை எனது மூலாதாரம் உருவாக்கியிருப்பதை நான் உணர்ந்தேன்.

அ.தி: ஏதோ ஒன்றுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது அல்லவா? இருத்தல் தொடர்பான பிரச்சினைகளுடன் பெரும்பாலும் வேதனைப்படுத்துகிற வகையில் உள்முகப் பயணம் நம்முடன் மல்லுக்கு நின்றாலும்கூட, மூலாதாரத்தின் அனுபவ அறிவும் புரிதலும், நமக்குத் தீர்வையும் ஓர் ஆழ்ந்த ஞானத்தையும் வழங்குகிறது.

ஆ.ப.ஜெ: மனதைக் கடந்து ஆன்மா செல்வதை நான் ஒரு கட்டம் என்று சொல்கிறேன்.

அ.தி: மனதைக் கடந்து போவது என்பது ஓர் அருமையான பதம். அந்த அனுபவம் பற்றி விரிவாகச் சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: பயத்தை உடனடியாக சிந்தனையாகவும் செயலாகவும் மாற்றிக்கொள்கிற பழக்கம், நமது மானுடத்தை முடக்கி வைத்திருக்கிறது; ஒரு தற்காப்புப் பொறிக்குள் நம்மைச் சிக்க வைத்திருக்கிறது. 'நாம் அறிந்திராத' நமக்குப் பரிச்சயம் இல்லாத விஷயம் குறித்து நாம் பயப்பட வேண்டும் என்று மனம் விரும்புகிறது. 'என்ன இருக்கிறது' மற்றும் அந்த விஷயங்கள் 'எப்படி இருக்க வேண்டும்' என்று நம்மை சிந்திக்க வைப்பதற்கான அதன் விருப்பம் என்பதற்கிடையே ஒரு பிளவை உருவாக்கி, இதை மனம் சாதித்துக் கொள்கிறது. இந்த முரண்பாடு, மனதை ஓர் அதீத சுறுசுறுப்புடன், தொடர்ந்து பிரச்சினைக்கு தீர்வு காண்கிற பிரக்ஞையுடன் செயல்பட வைக்கிறது.

அ.தி: இப்போது எனது சில எதிர்வினைகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆ.ப.ஜெ: இப்படிப்பட்ட மனநிலையில் தானாகவே வெளிப்படுகிற தீர்வுகள், மீண்டும் மீண்டும் அதிகமான சிந்தனைகளையும் செயல்களையும் கிளப்பிவிடுகிற ஓர் ஆபத்தான சூழலில் சிக்க வைத்துவிடுகிறது. இப்படிப்பட்ட செயல்களில் தற்காலிகமாக வேண்டுமானால் உடலை அவற்றிலிருந்து விடுபட வைக்கலாம். ஆனால், எதிர்காலத்தில் தப்பித்துக் கொள்வதற்கான மற்ற வழிமுறைகளில் மனதை அவை நாட்டம் கொள்ள வைத்துவிடுகின்றன. இந்த நிலை, அதிகமாக செயல்படுவதற்தான உந்துதலை பெருமளவில் கிளப்பிவிடுகிறது. ஆனால், எந்த நிஜத் தீர்வுகளையும் இது தருவதில்லை.

அ.தி: உண்மைதான். இந்த நிலை, முடிவே இல்லாமல் தொடர்கிறது. குறிக்கோள் இல்லாத செயல்பாடு, நிராதரவான உணர்வுகளுக்கு ஆளாகி, அதன் விளைவாக மேலும் மேலும் அர்த்தமற்ற சிந்தனைகளையும் செயல்களையும் கொண்ட இன்னொரு சுற்று ஆரம்பமாகிறது.

ஆ.ப.ஜெ: சிந்தனை மற்றும் செயல் மூலமாக மனம் நிகழ்த்துகிற தப்பித்தல் தந்திரங்களைப் புறக்கணித்துவிட்டு, மனம் கடந்த ஒரு நிலையில் அனைத்து அனுபவங்களையும் நீங்கள் கிரகித்துக்கொள்ளும்போது, பதற்றம் இல்லாத, ஆசுவாசமான, சாந்தமான பிரக்ஞை, ஆன்ம- வழிகாட்டுதலில் பிறந்த செய்திகளை ஏற்றுக்கொள்ளத் தயாராகிறது.

அ.தி: இந்தச் செய்திகள் பற்றி விரிவாகச் சொல்கிறீர்களா? எந்தவிதமான செய்திகள் அவை?

ஆ.ப.ஜெ: இந்தத் தகவல்கள், சங்கேதக் குறியீடுகளாக, உள்ளீடு செய்யப்பட்டுள்ள கம்ப்யூட்டர் ப்ரோகிராம்கள் போன்று செயல்படுகின்றன. அந்தக் குறியீடுகளை, எழுத்து வடிவத்தில் கொண்டு வருகிற போது, ஒரு குறிப்பிட்ட உள்ளடக்கம் மற்றும் தர்க்க முறைக்கு ஏற்ப அவை வெளிப்படுவதைப் போலவே இந்தத் தகவல்களும் வெளிப்படுகின்றன.

அ.தி: அவை எங்கிருந்து வருகின்றன?

ஆ.ப.ஜெ: அவற்றின் இயல்புத் தன்மையின் வெகு ஆழமான, மிகவும் அடிப்படையான உண்மைகளிலிருந்து ஊற்றெடுக்கும் அவை, மரபணுத் தொகுப்பின் தொடர்ச்சியில் உறைந்துள்ளன.

அ.தி: இது பற்றி இரண்டு கேள்விகள் கேட்க விரும்புகிறேன். முதலாவதாக, ஆதாரத் தன்மையின் இயல்பு என்ன? அவற்றின் குணாம்சங்கள் என்னென்ன? இரண்டாவதாக, மூலாதாரத்தை நாம் எப்படி அனுபவித்து அறிவது?

ஆ.ப.ஜெ: இந்த இடத்தில் நீங்கள் அடிப்படையான உண்மைகளை நழுவவிட்டு விடுகிறீர்கள். மூலாதாரத்திற்கு என்ற குணாம்சங்கள் உள்ளன என்ற சிந்தனை சந்தேகத்துக்குரிய ஒன்று. காரணம், மூலாதாரம் என்பது முற்றிலுமாக தீர்மானிக்க முடியாத ஒன்று. அதற்கு வெளிப்படையான, எந்த குணாம்சங்களும் கிடையாது. அடையாளம் காணக் கூடிய எந்த வேறுபாடுகளையும் கொண்டது அல்ல, அது.

அ.தி: நான் 'தன்னிச்சையான ஒரு தனி நபர்' என்ற உணர்வு, சுய-முனைப்பு கட்டமைப்பின் வரையறைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பது நவீன உளவியலின் ஒரு முக்கிய முடிவு. இப்படிப்பட்ட நிலையில் இந்த உண்மையை வேதனை நிறைந்த, ஆழமான, தனிப்பட்ட அனுபவத்தில் ஆன்மா அறிந்துகொள்ளத் தொடங்கலாம். இந்த சுய-முனைப்பு, 'இப்போதே நிராகரி-இப்போதே நம்பிக்கை கொள் -இப்போதே ஆசைப்படு' என்ற முடிவேயில்லாத அனுபவச் சுற்றுக்கு நம்மைக் கொண்டுசெல்கிறது.

ஆ.ப.ஜெ: 'தன்னிச்சையான நபர்' என்ற கருத்தாக்கம் பற்றி விரிவாகச் சொல்கிறீர்களா?

அ.தி: ஸார்... இந்தப் பதம் உண்மையிலேயே ரூஸோவிடமிருந்து[103] வந்தது. இது நவீன சிந்தனையாளர்கள் மத்தியில் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. 'தனது சொந்த மதிப்பீடுகளையும் அடையாளத்தையும், தானே தெரிவு செய்கிற ஒருவர்' என்பதுதான் 'தன்னிச்

சையான ஒரு தனிநபர்' என்பதற்கான ஒரு நேரடியான அர்த்தம். 'தன்னிச்சையான தனிநபராக' இருப்பது என்பது, ஒரு வாழ்க்கை முறையைத் தெரிவு செய்வது அல்லது தூய்மையான நடைமுறை ரீதியிலான காரண காரியங்களின், பிரபஞ்ச கோட்பாடுகளின் அடிப்படை யிலான நன்மையைப் புரிந்து கொள்வது. இப்படிப்பட்ட ஒருவர், தான் போக வேண்டிய திசைகளையும் தனது கொள்கைகளையும், அரசிடமிருந்தோ, மதம், பழக்கம் அல்லது வேட்கையின் அடிப்படையிலோ அல்லாமல், புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மிகவும் ஆழமான தனது நிஜ சுயத்தில் உறைந்துள்ள கோட்பாடுகளின் அடிப்படையில் உருவான விதிகளைக் கொண்டு, அமைத்துக் கொள்கிறார்.

ஆ.ப.ஜெ: நற்குணம்தான் மூலாதாரத்தின் அடிப்படையான ஒரு குணாம்சம் என்று நான் நம்புகிறேன். எந்த நிலையிலும் அல்லது எந்த இடத்திலும் தன்னைத் தானே வெளிப் படுத்திக் கொள்ளக்கூடிய, என்றென்றும் நிலைத்து நிற்கிற காலத்தை வென்ற ஓர் ஆற்றல் அது. அது, மாசு மருவற்ற நற்பண்பு; களங்கப்படுத்த முடியாத நற்பண்பு; நாசப் படுத்த முடியாத நற்பண்பு. அது தெய்விகமானது; தனிநபர்களுக்கு பங்குபோட்டுக் கொடுக்க முடியாதது; அது முற்றிலுமாக எல்லையற்றது; வரம்பற்றது; முடிவற்றது. இந்த எல்லையற்ற தன்மையைக் குறிக்கிற, அஸீம், அமோல் என்ற உங்களுடைய மகன்களின் பெயர்கள் எனக்குப் பிடித்திருக்கின்றன.

அ.தி: அடிப்படையில் எல்லோருமே நல்லவர்கள் என்பதுதான் இதன் அர்த்தமா?

ஆ.ப.ஜெ: ஆமாம்! இயற்பியல் மற்றும் புவியீர்ப்பு விதிகளின்படி இயங்குவது போலவே இந்த உலகம், ஆன்மிகக் கோட் பாடுகளின் அடிப்படையிலும் இயங்குகிறது. இந்தக் கோட்பாடுகள் என்ன என்பதைக் கற்றுக்கொள்வதும் அவற்றின்படி வாழ்க்கை நடத்துவதை முடிவு செய்வ தும் நம்மைப் பொருத்தது.

அ.தி: இந்த சிந்தனை அப்படி ஓர் அருமையான உணர்வை ஊட்டுகிறது.

ஆ.ப.ஜெ: இந்த உலகத்தில் நற்குணம் உள்ளது. தனித்துத் தெரிகிற வடிவங்களிலோ உங்கள் கவனத்தை கவருவதற்காக போட்டி போடுகிற ஈர்ப்பிலோ அது இல்லை.[104] இந்த உலகத்தின் ஆழமானதும் இறுதியானதுமான அதன் இயல்பில்தான் நற்குணம் உள்ளது. இப்போதைய கருத்தினாலோ அல்லது திடீரென்று எழுகிற ஆசையினாலோ அது வடிவம் பெறுவதில்லை. மனிதர்களால் தீர்மானிக்கப்படுவதில்லை. இந்த உலகம் முழுவதிலும் உள்ள எல்லோருக்குமே அது சமமாகப் பொருந்துவதால், நற்குணம் என்பது பாரபட்சமற்றது. எனக்கு 'நிஜ நற்குணமாக' இருப்பது இந்த பூமியில் உள்ள அனைவருக்குமே நல்லதாகத்தான் இருக்க வேண்டும். நற்குணத்தின் விதி என்பது, நான் அப்படிக் குறிப்பிடலாம் என்றால், சுயமாக அமல்படுத்தப்படுவது. மனித அதிகாரம் அல்லது கட்டளைகளைச் சார்ந்ததல்ல அது.

அ.தி: ஒருவர் அதை எப்படிப் பின்பற்றுவது?

ஆ.ப.ஜெ: தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாத உங்களுடைய ஆன்மாவின் தன்மையை பகிரங்கமாக வெளிப்படுத்தி, இந்தப் புரிதலுக்கு ஆன்மாவை முற்றிலுமாக சரணடையச் செய்வதன் மூலம் மிகவும் சுலபமாக இதற்கான வழியை நீங்கள் தெரிந்துகொள்ள முடியும். தனிப்பட்ட சுயம் மற்றும் அதற்கே உரித்தான ஆசை என்ற மாயையை சரணடையச் செய்யும்போது, ஆன்மா இந்த நற்குணத்தைக் கண்டறியும். உண்மையிலேயே தானாகவே ஆன்மாவை எல்லா வழிகளிலும், இவரிடமோ அல்லது அவரிடமோ அல்லாமல், இந்த வகையிலோ அல்லது அந்த வகையிலோ அல்லாமல் முற்றிலுமாகவும், முழுமையாகவும் இறைவனின் சித்தத்திற்கே- இன்ஷா அல்லாஹ்- சரணடையச் செய்து விட்டால் அது கைவிடப்படாமல், கருணையோடும் அன்போடும் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ.தி: உளவியல் பூர்வமான அல்லது உணர்வுபூர்வமான, இதயம் என்று நீங்கள் ***கல்ப்*** பற்றிக் குறிப்பிட்டிருக் கிறீர்கள். இந்த உளவியல் வெளியில்தான் நற்குணம் உறைந்திருக்கிறது அல்லவா?

ஆ.ப.ஜெ: ஒரு மாறுதலுக்காக நான் ஓர் உருவகத்தைப் பயன் படுத்தட்டுமா? ஒரு வீட்டில் கண்ணாடிகளைப் பயன் படுத்த வேண்டிய தேவையுள்ளது. பல விஷயங்களைக் காண்பதற்காக மனித குலத்திற்கு உதவி செய்வதற்கு, தேசத்தில் தொலைக்காட்சிகள் தேவைப்படுகின்றன. இதைப்போலவே மனித உடலில் ஒரு விசேஷக் கண்ணாடிபோல இருக்கிற உளவியல் ரீதியிலான இதயத்தால் எல்லா விஷயங்களின் இயல்பை சிறந்த முறையில் தீர்மானிப்பதிலும் அவற்றைப் பயன் படுத்துகிற வழிமுறைகளிலும் மனிதனுக்கு உதவ முடியும்.

விகாரம் என்றும் அழகு என்றும் வேறுபடுத்திப் பார்க்காத ஒரு கண்ணாடியைப் போலவே ***கல்ப்*** எல்லா இடங்களிலும் எல்லோரிடமும் நல்லதையே காண்கிறது. அனைத்துமே நல்லவை என்றும் வலியுறுத்துகிற அது, நல்லதைத் தவிர வேறு எதையும் மறுப்பதன் மூலம் தன்னிடமும் மற்றவற்றிலும் அந்த நல்ல தன்மையை தோன்ற வைப்பதில் ஆர்வம் கொண்டுள்ளது.

அ.தி: அப்படியென்றால், நாம் எதற்காகக் கஷ்டப்படுகிறோம்?

ஆ.ப.ஜெ: ***கல்பின்*** தெய்விக ஒளி, ஒரு கண்ணாடியில் தூசு படிவ தைப்போல மங்கும்போது அதன் அசலான தாக்கங்கள் வலுவிழந்துவிடுகின்றன; தடைபட்டு விடுகின்றன; சிதைக்கப்பட்டு விடுகின்றன. இப்போது மானுட அனுபவத்தை அடையாளப்படுத்துகிற பலவித உணர்வு களும் உணர்ச்சிகளும் வெகுவேகமாகப் பல்கிப் பெருகுகின்றன. வெறுப்பு, விரக்தி, இயலாமை, கோபம், ஆவேசம், துயரம், சோகம், வேதனை, இழப்பு, இல்லாமை, பொறாமை, பேராசை, மமதை மற்றும் நாம் நன்கு அறிந்துள்ள, நமது இதயத்தில் தோன்றுகிற சிரமமான உணர்வுகளுக்கு நாம் ஆளாகிறோம்.

அ.தி: சிக்கலான சூழ்நிலைகளில்கூட, நீங்கள் பதற்றமில்லாமல் அமைதியாக இருப்பதை நான் கண்டிருக்கிறேன். மிகவும் அக்கறையோடு காணப்படுகிற அதே சமயத்தில் மோசமான, பாதகமான சந்தர்ப்பங்களில் எல்லாம் நீங்கள் கலங்கிப்போய் விடாமல் சாதாரணமாகவே காணப்படுகிறீர்கள்.

ஆ.ப.ஜெ: ஓர் உதாரணம் சொல்லுங்கள்.

அ.தி: டி.ஆர்.டி.ஓ.-வில் பணியாற்றிய நமது சக அலுவலர், ஹரித்துவார் சிங் மிகவும் மோசமாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தார். அவருடைய கல்லீரல் செய லிழந்துவிட்டால், அவர் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த சிக்கலான சந்தர்ப்பம், அது. மிகவும் மதிப்பு வாய்ந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்த அவர், அறிவியல் களத்தில் இன்னும் சாதிக்க வேண்டியவை நிறைய இருந்த நிலையில், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மட்டுமே அவர் உயிரைக் காப்பாற்றுவதற்கான ஒரே உபாயமாக எஞ்சியிருந்தது. ஆனால், அரசு விதிமுறைகளின்படி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படியும்கூட, வெளிநாட்டில் சிகிச்சை பெறுவதற்கு அனுமதி கிடைக்காத நிலை இருந்தது. 1998-ல் அவர் எதிர்கொண்ட இந்தத் துயர அனுபவம் என் நினைவுக்கு வருகிறது.

ஆ.ப.ஜெ: நீங்கள் சொல்வது சரிதான். அந்த அறுவை சிகிச்சைக் கான செலவுகளும் கூட அதிகம். கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு இங்கிலாந்தில் 60லிருந்து 80 லட்சம் ரூபாய்[105] வரையிலும் செலவாகும். ஆனால், சந்தேகமே இல்லாமல், சாத்தியப்படாத அந்த வேலையை மேற்கொண்டிருந்த நான், அதில் மிகவும் உறுதியாக இருந்தேன்.

அ.தி: லண்டனுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் ஹரித்துவார் சிங்கையும் அவருடைய மனைவியையும் நான் சந்தித்தேன். அவர் மிகவும் வெளிறிப்போய் வெறும் ஒரு எலும்புக்கூடுபோல் இருந்தார். அவரால் உட்காரக்கூடிய முடியவில்லை.

ஆ.ப.ஜெ: நீங்கள் அவரிடம் உற்சாகப்படுத்தும் வகையில் நீண்ட நேரம் பேசியது பற்றி பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் அவர் என்னிடம் கூறினார். நீங்கள் இதற்கு முன்பு லண்டனிலுள்ள கிங்'ஸ் மருத்துவமனைக்குச் சென்றிருந்தது பற்றியும் சந்தேகமே இல்லாமல் நிச்சயமாக அவர் குணமடைந்து விடுவதற்கான வாய்ப்பு இருப்பது பற்றியும் அவரிடம் எடுத்துச் சொன்னதாகக் கூறினார்.

அ.தி: ஆமாம், ஸார். நான் இதற்கு முன்பு கிங்'ஸ் மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். அங்கிருந்து திரும்பி வரும்போது கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கான மருத்துவ வசதி, இந்தியாவில் உருவாக வேண்டும் என்ற கனவையும் சுமந்து வந்தேன்.

ஆ.ப.ஜெ: உங்களுடைய அந்தக் கனவு, இன்று நனவாகிவிட்டது. பல இடங்களில் நமது நாட்டில் இதற்கான மருத்துவ வசதி உள்ளது. இன்று யாருமே கல்லீரல் மாற்று சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல வேண்டிய அவசியமே இல்லை.

அ.தி: நீங்கள் ஒருமுறை கூறியதுபோல, கனவுகள் சிந்தனைகளை உருவாக்குகின்றன; சிந்தனைகள், செயல்களாகக் கனிகின்றன; செயல்கள் வாழ்க்கைக்கு மறுவடிவம் கொடுக்கின்றன என்பதன் நிஜ-வாழ்க்கை உதாரணம் இதுதானே.

ஆ.ப.ஜெ: உங்களைச் சுற்றி உள்ளவர்களிடம் உங்களுடைய ஆர்வத்தைப் பற்றிக்கொள்ள வைப்பதில், நீங்கள் கெட்டிக்காரர்.

அ.தி: நான் சமீபத்தில் ஹரித்துவார் சிங்கைச் சந்தித்தேன். அவருடைய உடலில் பிரிட்டிஷ் கல்லீரல் பொருத்தப்பட்ட ஏழு வருடங்களுக்குப் பிறகு அவரைப் பார்த்தேன். முழுமையான ஆரோக்கியத்துடன் காணப்பட்டார். வெளிநாட்டில் 'நானோ டெக்னாலஜி' பற்றி கற்றுக் கொடுக்கும் பணியை முடித்துவிட்டுத் திரும்பி வந்திருந்த சமயத்தில் அவரைச் சந்தித்தேன்.

ஆ.ப.ஜெ: மிகவும் தூய்மையான, மிகவும் கனிவான, நேசத்தில் வடிவெடுத்திருக்கிற உங்களுடைய மூலாதாரத்தின் துணையுடன் நீங்கள் செயல்பட ஆரம்பித்தவுடன், தனது தாக்கத்தை அது ஆன்மாவில் பிரதிபலிக்கிறது. எதற் கெல்லாம் எப்போதுமே ஏங்கி, நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் ஆன்மா தவித்ததோ அவற்றை எல்லாம் மூலாதாரம் அனுபவிக்கச் செய்கிறது. மூலாதாரத்தின் மென்மை, மிகவும் இதமானது. அது மனத்திற்குத் தாலாட்டாய் அமைந்து, அதற்கு ஓய்வு தருகிறது, உடலுக்கு இயல்பான ஆசுவாசம் அளிக்கிறது, இதய வாசலில் அமைதியைத் தவழவிட்டு அதைத் திறந்து வைக்கிறது. இப்படிப்பட்ட ஏதோ ஒன்று ஹரித்துவார் சிங்கிற்கு நிகழ்ந்துள்ளது. எனக்கு சந்தோஷமாக இருக்கிறது.

அ.தி: ஒரு தெய்விகமான, மிகவும் மென்மையான கரம் உங்களைத் தொட்டதுமே அன்பு பொங்கும் அன்னை யின் நெருக்கமான அரவணைப்பில் பாதுகாப்பான சுகத்தை அனுபவிக்கிற ஒரு குழந்தை போல, ஒரு சவுகரியமான உணர்வுக்கு நீங்கள் வெகு இயல்பாக ஆளாகிவிடுகிறீர்கள் என்று சொல்வேன்.

ஆ.ப.ஜெ: உங்கள் கூற்று முற்றிலும் சரியானது.

அ.தி: மூலாதாரத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்ததுமே, சென்னை யில் அனைத்துக் கவலைகளையும் விட்டுவிட்டு, அந்தமான் தீவுகளில் நீண்ட விடுமுறையை அனு பவித்ததுபோல இந்த உடல், கரைந்துவிடுகிறது.

ஆ.ப.ஜெ: இத்தனை அற்புதமான காட்சிகளையெல்லாம் எப்படி நீங்கள் உருவாக்குகிறீர்கள்?

அ.தி: மனவானில் இப்படி சஞ்சரிப்பதும், இந்த மாதிரியான தொடர் கருத்துப் பரிமாற்றமும்தான் நான் சரியாகப் புரிந்துகொள்வதற்கு உதவுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். ***நஃப்ஸ்*** அல்லது உலகியல் இயல்பு மற்றும் ***ரூஹ்*** அல்லது ஆன்மா ஆகிய இரண்டு படைகள்

மோதிக்கொள்கிற யுத்தகளம்தான் *கல்ப்* என்பது பற்றிய நமது உரையாடலுக்கு மீண்டும் வருவோம்.

ஆ.ப.ஜெ: ஒரு நபரிடமிருந்து இன்னொருவருக்கும், பணியாளரிட மிருந்து மகிமை வாய்ந்த இறைவனுக்கும் அஞ்சல் செய்கிற மற்றும் கிரகித்துக்கொள்கிற ஒன்று என்று இதை ஏன் நீங்கள் சொல்லக்கூடாது?

அ.தி: அற்புதமான உருவகங்களை நீங்கள் பயன்படுத்து கிறீர்கள்.

ஆ.ப.ஜெ: மூலாதாரத்தின் சாந்தமான, பொலிவான குணாம்சங் களும், பண்புகளும் ***நஃப்ஸின்*** கட்டமைப்பிலும், அடையாளத்திலும் உருவாகி, அதற்குள்ளேயே வலு வாக வேரோடிப் போயிருக்கிற நம்பிக்கைகளுக்கும், நிலைபாடுகளுக்கும் உண்மையிலேயே சவாலாக அமைந்துவிடுகின்றன. இந்த உலகம், அடிப்படையில் பாதுகாப்பற்றது... மிஞ்சி மிஞ்சிப் போனால் நிச்சயமற்ற நிலையில் இருக்கிறது என்று ***நஃப்ஸ்*** நம்மை நம்ப வைக்கிறது. இந்த அடிப்படையான அவநம்பிக்கை மனோபாவம், அதன் தனிப்பட்ட தளத்தை பாதுகாத்துக் கொள்வதற்கும் பத்திரப்படுத்திக் கொள்வதற்குமான சாதனங்களையும், வழிமுறைகளையும் தொடர்ந்து தேடிச் செல்லும்படி ஒருவரைத் தூண்டிவிடுகிறது.

அ.தி: இது எனக்கு நன்றாகப் புரிகிறது. தன்னிச்சையான போக்கு, வலுவான ஒரு தற்காப்பு மனோபாவத்தை உண்டாக்குகிறது. எல்லாவற்றையும் நாமேதான் கவனித்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும், முன்னெச்சரிக்கைகளையும், தேவையான ஏற்பாடு களையும் நாம் மேற்கொள்ளாவிட்டால், நமது நலன்கள் தானாகவே பாதுகாக்கப்படாமல் போய்விடும் என்றும் நாம் நினைக்கிறோம். சக்தி வாய்ந்த பலர், எப்போதுமே எச்சரிக்கை உணர்வுடனேயே வாழ்ந்து வருவதை நான் பார்த்திருக்கிறேன். எல்லா விஷயங்களும் எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடக்கப் போவதில்லை என்று திட்டவட்டமாக நம்புகிற ஒரு சித்தப் பிரமை நிலையில்

அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். தங்களுக்கான பாதுகாப்பு, குறைக்கப்படுகிற அந்த கணத்திலேயே தங்கள் வாழ்க்கை சின்னாபின்னமாகிவிடும் என்று இவர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

ஆ.ப.ஜெ: அடிப்படையான ஒரு நம்பிக்கை மனோபாவம் என்பது, ஆன்மாவின் அமைதிக்காகவும் பாதுகாப்பிற்காகவும் மட்டுமல்லாமல் தனது மூலாதாரத்துடன் அது இணைக்கப்படுவதற்கும் மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகிறது. இந்த முறையில்தான் அது மலர்ச்சி யடைகிறது; மேம்பாடு காண்கிறது. தனக்கு இறைவனின் அருளாசிகள் கிடைத்தது பற்றிய இறைதூதர், ஜோஸஃபின் (ஹஸ்ரத் யூசுஃப் அலைஹிஸ் ஸலாம்) கூற்றே, இந்த அடிப்படை நம்பிக்கைக்குச் சான்றாக அமைந்துள்ளது:

> "இறைவன் உண்மையிலேயே நம் மீது கருணை கொண்டுள்ளான். இறைவனுக்குப் பயந்து, அவனிடம் முழுமையாக சரணாகதியடைந்து, பொறுமையுடன் நடந்து கொள்கிறவர்களுக்கும், குற்றம் குறையில்லாத நல்லவர்களுக்கும் இறை வனின் கொடை கிடைக்காமல் போவ தில்லை."[106]

அ.தி: தெய்விக அன்பைக் கண்டுபிடித்து, அதை ஒன்றிணைத் துக் கொள்கிற ஒருவரின், உயர்வுக்குத் தேவையான பெரும் பக்க பலத்தையும், உந்து சக்தியையும் அது அளிக்கிறது என்பதை என்னுடைய தனிப்பட்ட அனுபவத்திலிருந்து என்னால் சொல்ல முடியும். நான் மாரடைப்பிலிருந்து ஒரு தடவை மீண்டு வந்த பிறகு, இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே ஒன்று திரண்டு வந்து எனக்குத் தேவையான மருத்துவ நிபுணத்துவ உதவி, முறையான கவனிப்பு, அனைத்துவிதமான பொருளா தார மற்றும் உணர்வுபூர்வ ஆதரவு என்ற எல்லாவித உதவிகளையும் வழங்கியது போலத் தோன்றியது. மருத்துவமனையில் நான் தங்கியிருந்த அந்த 49 நாட்களிலும், ஒரு நாள்கூட புத்தகங்களையும் பூங்

கொத்துகளையும் பெறாமல் நான் இருந்ததேயில்லை. நீங்களும்கூட வந்திருந்தீர்கள்.

ஆ.ப.ஜெ: நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர். எந்த அளவுக்கு ஆழமாக தெய்விக அன்புடன் ஆன்மா இரண்டறக் கலக்கிறதோ அவ்வளவு முழுமையான ஞான வடிவமாக அது பரிணமிக்கிறது. இதன் விளைவாக, அது மலர்ச்சி யடைகிற பயணத்திற்குத் தேவையான வழிகாட்டுதலும் மற்ற அனைத்து விஷயங்களும் கிடைக்கும். சிக்கல்கள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை அதிக அளவில் கிடைக்கிறது. எனக்கு இந்த நம்பிக்கை என் பெற்றோர் களிடமிருந்து கிடைத்தது.

அ.தி: குறைந்தது, மூன்று சந்தர்ப்பங்களில்- எனது வேதனை சம்பந்தப்பட்ட தருணங்களில்- நீங்கள் எனக்கு வழங்கிய நம்பிக்கையை என்னால் மறக்கவே முடியாது. இரண்டு சந்தர்ப்பங்களில் அந்த வேதனையை உடல் ரீதியாக நான் அனுபவித்தேன். இன்னொரு முறை, இதைவிட அதிகமான வேதனையை அனுபவித்தேன். வாழ்க்கை யின் வேதனை என்று அதைச் சொல்லலாம். அப்போது நீங்கள் வழங்கிய நம்பிக்கையால் உண்மையிலேயே நான் பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் இருப்பதாக உணர்ந்தேன்.

ஆ.ப.ஜெ: இந்தப் பாதுகாப்பு உணர்வு, வழக்கமான செக்குமாட்டுச் சுற்றிலிருந்து உங்களை விடுவித்து, வாழ்க்கையில் மேலும் அதிகமானவற்றைத் தேடுவதற்கு, குறிப்பாக அன்பு, சத்தியம், நிஜம் சம்பந்தப்பட்ட புனிதமான நெறிகளை முனைந்து தேடுவதற்கு உங்களுக்கு உத்வேகமூட்டுகிறது. இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் பதவியிலிருந்து நானாகவே முன்வந்து விடுபட்டு, சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பணியை மேற்கொண்டபோது, இப்படித்தான் நான் செயல்பட்டேன்.

அ.தி: பிறகு, நீங்கள் இந்தியாவின் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றீர்கள்.

ஆ.ப.ஜெ: என் ஆன்மாவின் மலர்ச்சிக்கு, இந்தப் பிரபஞ்சமே பக்கபலமாக இருந்ததை நான் அறிந்தேன். இதற்கு நான் காரணமல்ல என்பதையும், அன்பு பொங்கும் தெய்விகம் தான் அளவிட முடியாத அளவிற்கு மிகவும் சிறப்பாக இதை நிகழ்த்திக் காட்டியுள்ளது என்பதையும் நான் அறிந்தேன். இப்படிப்பட்ட அடிப்படையான நம்பிக்கையும் ஆன்ம மலர்ச்சியும், உங்களுடைய பயணத்தில் நீங்கள் முன்னேறிச் செல்வதற்கு உந்து சக்தியாக அமைகிறது. ஆன்ம மலர்ச்சியையும், தனது ஞானத்துடன் மூலாதாரம் வெளிப்படுவதையும் இது விரைவு படுத்துகிறது.

அ.தி: வழிகாட்டும் ஞானச்சுடர்களாக இந்த பூமியில் வாழ்ந்த சிலரிடமிருந்து உங்களுக்கு வழிகாட்டுதல் கிடைத்திருக்கிறது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அவர்கள் அனைவருமே அதிசயிக்கத்தக்க சாதனைகளை நிகழ்த்தியவர்கள். மூலாதாரத்தின் வடிவமற்ற ஒரு முழுமைக்குள் கரைந்து, கலந்துவிடுகிற இருப்பு நிலையிலிருந்து இந்த சாதனைகள் எப்படிப் பிறந்தன?

ஆ.ப.ஜெ: சரியான கேள்வி. இப்போது இலக்கை மிகவும் துல்லியமாகத் தாக்கிவிட்டீர்கள். இந்தப் புத்தகத்தில் நான் குறிப்பிட்டுள்ள அனைத்து ஆத்மாக்களும், முழுமையான மூலாதாரத்தின் சுய-உணர்தலை சாதித்தவர்கள். ஆனால், அது, இந்த பூமியில் அவர்கள் மேற்கொண்டிருந்த பயணத்தின் அடையாளச் சின்னம் அல்ல. இதற்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்று நிகழவில்லையென்றால், எப்படி அது தெரிந்திருக்கும்?

அ.தி: இந்த உலகத்தில் அவர்கள் நிகழ்த்திய சாதனைகள் என்ற அர்த்தத்தில் சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: அதை நான் மூலாதார மலர்ச்சி என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அ.தி: உடல் சார்ந்த மற்றும் வழக்கமான வெளியைக் கடந்து, முழுமையான, மூலாதார வெளியை எட்டிய பிறகு, நாம்

எப்படித் திரும்புவது? மேலே ஏறிய பிறகு, கீழே இறங்குவது போன்ற ஒரு விஷயமா இது?

ஆ.ப.ஜெ: மிகவும் துல்லியமான வார்த்தைகளை ஒருவேளை நீங்கள் அறியாமலேயே, முழுவதும் உணராமலேயே பயன்படுத்தியிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். இருப்பு நிலையிலிருந்து, மூலாதாரத்தை நோக்கிச் செல்கிற உள்முகப் பயணம் என்பது மேல்நோக்கிச் செல்கிற பயணமாக இருக்கும். அனுபவத்தின் மிகவும் சாதாரணமான, மிகவும் ஸ்தூலமான பரிமாணங்களிலிருந்து மறைபொருளின் மற்றும் சத்தியத்தின் உச்சிக்கு செல்கிற பயணம், இது. தகித்துக்கொண்டிருக்கும் நமது லட்சியத்தின் அளவிற்கு நாம் உத்வேகம் பெறுகிறோம். துண்டு துண்டாக சிதறிக்கிடக்கிற நமது அறிவு, சிந்தனை, அனுபவம் மற்றும் உயர்ந்த இலக்கை அடைய வேண்டுமென்ற ஆசை என்பவை உருமாற்றம் அடைந்து, முழுமையடைந்து, நமக்குத் திரும்பக் கிடைக்கிறது.

அ.தி: தயவு செய்து இது பற்றி விளக்கமாகச் சொல்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: இந்தப் பயணத்திற்கு காந்திஜி மிகவும் பொருத்தமான ஓர் உதாரணம். தனக்குள்ளேயும், தனது தேசம் முழுவதிலும் மிகவும் கீழான நிலையில் உள்ள அனைவருக்குள்ளேயும் உறைந்துள்ள பவித்திரமான ஆன்மிக இயல்பை அவர் புரிந்து கொண்டிருந்தார்.

அ.தி: ஏற்றம் இறக்கம் என்ற வகையில் இந்தப் பயணத்தை நாம் எப்படிக் காண்பது?

ஆ.ப.ஜெ: மேல்நோக்கிய பயணத்தில் இதன் தொடர் கட்டங்கள், ஆரம்பநிலையில், வேறுபடுத்தல், தனியாகப் பிரித்தல், தூய்மைப்படுத்தல் மற்றும் தீர்வு காணுதல் என அமைந்துள்ளன. தனது இயல்பை எளிமையாகவும் மிகவும் நுட்பமானதாகவும் தானாகவே வெளிப்படுத்துகிற அது, தனது வடிவங்கள், குணாம்சங்கள், தீர்மானங்கள் மற்றும் கருத்தாக்கங்களிலிருந்து மேலும் மேலும் விடுபடுகிறது. தொடர்ச்சியாகத் துறந்து வருகிற ஒரு தொடர்கட்ட நடவடிக்கை மூலமாக முழுமையான

எளிமையை நோக்கி, காந்ஜிதி தனது பயணத்தைத் தொடர்ந்தார். முழுமையான மூலாதாரத்தின் சூன்யத்தையும் களங்கமில்லாத எளிமையையும் வெளிப்படுத்துவதற்காக அனைத்து வடிவங்களும் பரிமாணங்களும் அகற்றப்பட்டன.

அ.தி: கீழிறங்கும் பயணம் என்பது என்ன?

ஆ.ப.ஜெ: கீழ்நோக்கிய பயணம் என்பது, முழுமையின் சாதகமான நிலையிலிருந்து, வெளிப்பாட்டின் அதே பரிமாணங்கள் மூலமாக பின்னோக்கி இயங்குவது. கீழ் நோக்கிய தொடர் கட்டங்களில், மூலதாரத்தை விட்டுவிடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதையும் வெளிப்பாட்டின் அனைத்துப் பரிமாணங்களையும் முழுமைக்குள் ஒன்றிணைத்துக் கொள்வது தான் அந்த கீழ் நோக்கிய பயணம் என்பதையும் காந்திஜி அறிந்திருந்தார். 'சவுரி சவுரா'[107] கலவரம் இதற்கு ஓர் உதாரணம். 'நவகாளி' இன்னொரு உதாரணம்.

அ.தி: சவுரி சவுராவில் நிகழ்ந்த வன்முறைக் கண்டு காந்திஜி அதிர்ந்து போய்விட்டார். ஒத்துழையாமை இயக்கம் உச்சத்திலிருந்த 1922-ஆம் ஆண்டில், அதை அப்போதே வாபஸ் பெற்றுக் கொண்டார். தேசத்தின் விடுதலைக்காக சரியான போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு மக்கள் கூட்டம் இன்னமும் தயாராகவில்லை என்பதற்கான ஒரு 'தெய்விக எச்சரிக்கைதான்' சவுரி சவுரா என்று அவர் கூறினார்.

ஆ.ப.ஜெ: *சிகாகோ டெய்லி* (Chicago Daily) இதழின் தெற்காசியச் செய்தியாளர் பிலிப்ஃஸ் தல்பாட் எழுதியிருந்த ஒரு கடிதத்தை நான் பார்த்தேன். சுதந்தரம் அடைவதற்கு முன்பு நிகழ்ந்த வகுப்புக் கலவரத்தின்போது அவர், நவகாளிக்குச் சென்று மகாத்மா காந்தியுடன் இருந்தார். 1947 பிப்ரவரி 16-ஆம் நாளன்று அவர் எழுதிய அந்தக் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''மிகவும் சிக்கலான கட்டத்தில், கிழக்கு வங்காளத்தின் தொலைதூர நவகாளி மாவட்டத்தில், கிராமம் கிராம

மாக, வெறும் காலுடன் ஹிந்து - முஸ்லிம் நல்லிணக் கத்தை நாடி அவர் பாத யாத்திரையை மேற்கொண்ட காட்சி பிரமிக்க வைத்தது. இங்கே 77 வயதான முதிர்ந்த சாது, தனது உடல் ரீதியான உபாதைகளையும், சிரமங் களையும் பொருட்படுத்தாமல் தேசத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கிற பிளவைத் தவிர்ப்பதற்கான ஒரு விநோதமான இந்திய அணுகுமுறையில் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தார்.

அவர் தங்கியிருந்த துப்புரவுத் தொழிலாளர் குடியிருப்பில் அவருடன் நானும் நடந்து சென்றேன். நாடு முழுவதும் ஒருவரையொருவர் மக்கள் கூட்டமாகக் கொன்று குவிப்பது பற்றி அவர் அங்கு பேசினார். இந்தப் படுகொலைகள், தான் மேற்கொண்டுள்ள முடிவைப் பாதிப்பதற்கு, இடம் கொடுக்கவில்லை என்று அவர் சொன்னாலும்கூட, அவர் பேச்சில் அவருடைய தோல்வி தொனிக்காவிட்டாலும்கூட, விரக்தி உணர்வை நாங்கள் உணர்ந்தோம். அஹிம்சை மீதான நம்பிக்கையின் முக்கியத்துவத்திற்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அதன் உண்மையை எப்போதுமே தோற்கடிக்கவே முடியாது என்று அவர் வலியுறுத்தினார். ஆனால், அவரது போதனைகள் தோற்கடிக்கப்பட்ட விதம், அவருக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்காது.''[108]

அ.தி: நான் ஓர் உருவகத்தை முன் வைக்கலாமா?

ஆ.ப.ஜெ: இந்தப் புத்தகம் அர்த்தம் நிறைந்த, சூசகமான தகவல்கள் அடங்கியதாக வடிவம் பெற்று வருகிறது.

அ.தி: மேல்நோக்கிய பயணத்தில் தனிப்பட்ட ஆன்மா, சிருஷ்டியின் பல்வேறு பரிமாணங்களை ஊடுருவிச் செல்கிறது. இந்த பரிமாணங்கள் என்பவை, பார்க்கப் படாத மூலாதாரத்தை மூடி மறைத்திருக்கிற ஆடை. கீழ் நோக்கிய பயணம் என்பது, இந்த ஆடைகளை அகற்றி விட்டு, மூலாதாரத்தை வெளிப்படுத்திக் காட்டி, பிறகு, அதை மறைத்திருந்த அதே ஆடைகளால் அலங் கரிக்கப்பட்ட மூலாதாரத்துடன் பயணிப்பதாகும்.

ஆ.ப.ஜெ: மேல்நோக்கிய பயணத்தில், துறப்பதும் தனியாகப் பிரிவதும், ஒருமைத் தன்மையின் எளிமைக்கு இட்டுச் செல்கிறது. ஒன்றிணைக்கிற மற்றும் இரண்டறக் கலக்கிற கீழ்நோக்கிய பயணம் என்பது, பூரணத்துவத்தின் மேன்மைக்குக் கொண்டு செல்கிறது.

அ.தி: ஸார்... இன்னொரு உருவகம் என் மனதில் தோன்றுகிது.

ஆ.ப.ஜெ: சொல்லுங்கள்.

அ.தி: திரைப்படக் காட்சி தெரிகிற ஒரு திரை உள்ளது. அந்தத் திரையில் ஒரு நபர், போவதைப் பார்க்கிறோம். ஆனால் உண்மையில் அங்கு எந்த அசைவும் இல்லை. அந்தப் படக் காட்சியின் முழுமை ஒரு ஃப்ரேமிலிருந்து அடுத்த ஃப்ரேமிற்கு என்று மாறிக்கொண்டே வருகிறது. ஃப்ரேம் களின் இந்த மாற்றம் படிப்படியாக நிகழ்வதாலும், நமது கண்களால் அதைப் பகுத்துப் பார்க்க முடிவதை விட வேகமாக அதன் மாற்றங்கள் நிகழ்வதாலும், ஒரு நபர் நடந்து செல்கிற படக் காட்சியை நாம் தொடர்ச்சியாகப் பார்க்கிறோம்.

ஆ.ப.ஜெ: நீங்கள் சொல்வது சரிதான். திரையில் தோன்றுகிற ஒவ்வொரு புள்ளியும் ஒரு மறுவடிவ நிகழ்வைக் கடந்து வருகிறது. திரையில் ஒரு நபர் நடந்து செல்கிற முழுமை யான காட்சி என்பது உண்மையிலேயே பல்வேறு ஃப்ரேம்களில் அடுத்தடுத்த ஒரு தொடர் காட்சிதான். நடந்து செல்கிற நபர் என்பது உண்மையிலேயே முழுமை யான படத்தின் ஒரு பகுதிதான். அந்த முழுமையான படம் மாற்றமடைகிறது. நிஜத்தில் அங்கே எந்த மனிதரும் கிடையாது. தனது உள்ளடக்கங்களை ஒரு படம் மாற்றிக் கொள்கிறது. அவ்வளவுதான்.

அ.தி: திகைக்க வைக்கிற இந்தக் கருத்தின்படி பார்த்தால், உங்களுடனான இந்த சந்திப்பு, இந்தப் புத்தகத்தை உருவாக்குகிற பணி, இந்தக் கருத்துப் பரிமாற்றம்... இவை எல்லாவற்றிலும் உங்களுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை...!

ஆ.ப.ஜெ: சொல்லப்போனால், நாம் யார்? நமது மூலாதாரம் மலர்ச்சியடைகிறது. அவ்வளவுதான். இப்போது நாம் வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்கிறோம். இதற்கு, நீங்கள் நாளை ஒரு புத்தகமாக வடிவம் கொடுப்பீர்கள்; அதற்கு அடுத்த நாள், வெளியீட்டாளர், இதை வெளியிடப் போகிறார்; எங்கோ இருக்கிற யாரோ ஒருவர் இதை வாசிப்பார்; இந்தப் புத்தகத்தில் எழுதப் பட்டிருக்கும் ஏதோ ஒன்று வாசகருக்குள் இருக்கிற ஏதோ ஒன்றைத் தூண்டிவிடும். அதன் விளைவாக அவருடைய சூழ்நிலையில், ஒரு மாற்றம் உண்டாக வாய்ப்புள்ளது. நமது ***அக்னிச் சிறகுகள்*** நூல் லட்சக்கணக்கானவர் களைச் சென்றடைந்தபோது, இப்படித்தான் நிகழ்ந்தது. அதில், நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? நான் எங்கே இருக்கிறேன்?

அ.தி: ஸார்...! நான் குழப்பத்தில் சிக்கிக் கொண்டிருப்பதாக நினைக்கிறேன். நீங்கள் சொல்கிறபடி பார்த்தால், இந்த பூமியில் யாரும் நடமாடவில்லையா? எந்த மனித ஜீவனும் இதுவரையில் ஓர் அடிகூட எடுத்து வைக்க வில்லையா? யாருமே இதுவரையில் பிறந்ததில்லையா? அல்லது வாழவில்லையா? மாற்றமடைகிற இவையெல் லாமே மாற்றமடைகிற மூலாதாரத்தின் புற வடிவங்கள் மற்றும் தோற்றம்தானா? நாம் இயங்குதல் என்று குறிப்பிடுவது, சில இடமாற்றங்களின் தோற்றம்தானா?

ஆ.ப.ஜெ: இதோ இப்போது இந்த கணத்தைப் பாருங்கள். இப்போது ராஷ்ட்ரபதி பவனில் நீங்கள் என்னுடன் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இது, மிகவும் பிரம்மாண்ட மான கட்டடம். நம்மைச் சுற்றிலும் அத்தனை அழகும் பொலிவும் நிறைந்திருக்கிறது. மக்கள் இங்கு வந்து, விருதுகள் பெறுகிறார்கள். எத்தனையோ வைபவங்கள் இங்கு நடைபெறுகின்றன. இங்கு வருகிற பார்வை யாளர்கள் மிகவும் பெருமையாக உணர்கிறார்கள்; பரவசப்படுகிறார்கள்; குதூகலமடைகிறார்கள், அதே சமயத்தில் இங்கு பணியில் அமர்த்தப்பட்டிருக்கிற ஊழியர்கள், பாதுகாவலர்கள், பராமரிப்பாளர்கள்,

தோட்டக்காரர்கள் மற்றும் பலரும் இருக்கிறார்கள். அவர்களைப் பொருத்தவரையில் இது அவர்கள் வேலை செய்கிற ஒரு இடம். இதோ, இப்போது நான் உட்கார்ந் திருக்கிற இதே இடத்தில் 1931-ல் லார்ட் இர்வின் அமர்ந்திருந்தார். இதே நாற்காலியில் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அமர்ந்திருந்தார், அப்போது, நான் எங்கிருந்தேன்? இப்போது, அவர்கள் எங்கிருக் கிறார்கள்? நாளை வேறு யாரோ ஒருவர், இங்கே அமருவார். இங்கே, இப்போது என்பதுதான் நிஜம். அப்போது அது நிஜமாக இருந்தது. இப்போது இது நிஜமாக இருக்கிறது. இனி வரப்போவது, இனிமேல் நிஜமாக இருக்கும்.

அ.தி: அருண் திவாரியிடம் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் பேசிக் கொண்டிருப்பது, இந்த கணத்தின் நிஜம் இல்லையா?

ஆ.ப.ஜெ: அது ஒரு மாயை! ஆ.ப.ஜெ. அப்துல் கலாமும் அருண் திவாரியும் மாயைதான். இந்த கணத்தில் நமது சிந்தனை களை பரிமாறிக் கொள்வதுதான் நிஜம். நம்- நீங்கள் மற்றும் நான்- மூலமாக மூலாதாரம் மலர்ச்சியடைந் துள்ளது என்பதுதான் நிஜம்.

அ.தி: சத்தியத்தை நான் நெருங்கி வந்துவிட்டதாக உணர் கிறேன்.

ஆ.ப.ஜெ: சத்தியம் என்பது ஒரு மாயையை அகற்றுவதல்லாமல் வேறொன்றும் இல்லை. வசதியான வீடுகளிலும், பணி இடங்களிலும் இருக்கிற நமக்கு, கிராமங்களிலும் நகர்ப்புற குடிசைப்பகுதிகளிலும் வாழ்கிற மக்களின் தாங்க முடியாத துயரங்கள், வெகு தொலைவில் இருப்ப தாகவும், அருவமானதாகவும், நிஜமற்றதாகவும் தோன்று கிறது. அதற்கும் நமக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று நாம் எப்படியோ கற்பனை செய்து கொள்கிறோம்.

அ.தி: ஒரு தார்மிக கற்பனை இல்லாததை சாடுகிற ஜியோஃபிரே ஹில்லின் ஒரு கவிதை எனக்கு நினைவு வருகிறது:[109]

ஆ.ப.ஜெ. அடுத்தடுத்து தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிற ஆக்கம், அழிவு என்பதன் மூலம்தான் எல்லாப் பொருள்

களுமே நீடித்திருக்கிறது. இந்த உரையாடலுக்குப் பிறகு, நாம் ஒவ்வொருவரும் வேறுவிதமாக மாறிவிடுவோம். நமது தனிப்பட் பிரக்ஞை விரிவடையும்; அறியாமை அகன்றுவிடும். இருத்தலின் அனைத்துமே தொடர்ச்சி யாக வந்து இருப்பாக மாறுகிறது. அந்த இருப்பில் எப்போதுமே ஒரு புதிய இருத்தல் உருவாகிறது. நான் வெவ்வேறு இடங்களுக்குச் செல்லும்போது குழந்தை களிடம் பேசுகிறேன். அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறேன். அப்போது என்ன நிகழ்கிறது?

அ.தி: இளம் உள்ளங்களில் பொறி கிளப்பப்படுகிறது.

ஆ.ப.ஜெ: அதுவேதான்...! ஒரு புதிய இந்தியா மலர்ச்சியடைகிறது. இந்திய ஜனாதிபதி ஒரு கிராமத்திற்குச் சென்று அங்குள்ள ஒரு பள்ளிக்கூடத்தின் குழந்தைகளை சந்தித்தார் என்பது நிஜமல்ல. அப்படிப்பட்ட ஒரு சந்திப்பு சில ஆன்மாக் களில் எதையோ தூண்டிவிடுகிறது; சில மொட்டுக்கள் மலர்கின்றன; சில கூட்டுப் புழுக்கள், வண்ணத்துப் பூச்சிகளாக மாறுகின்றன என்பதுதான் நிஜம்.

அ.தி: இந்தப் பிரபஞ்சம் எப்போதுமே பழமையாவதில்லை, எப்போதுமே புதிதாக இருக்கிறது. அதற்காக ஒவ்வொரு கணத்திலும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. எல்லாவற்றிலுமே இப்படித்தான் நிகழ்கிறது. உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களிலும் இந்தப் புதுப்பித்தல் இடையறாது நிகழ்கிறது. பூமி, வானம், கிரகங்கள், சூரியன், நட்சத்திரங்கள், பால் வெளி மண்டலங்கள் மற்றும் இவற்றையெல்லாம் தன்னகத்தே கொண்டுள்ள வெளி என்ற அனைத்துமே அதில் அடக்கம்.

ஆ.ப.ஜெ: எண்ணங்கள், தோற்றங்கள், நினைவுகள், உணர்வுகள், நுண்ணுணர்வுகள் அனைத்துவிதமான காரண காரியத் தொடர்புகள் மற்றும் இருப்பின் நிலைகளும்கூட இந்தப் புதுப்பித்தலில் அடக்கம்.

அ.தி: இவையனைத்தும் தொடர்ச்சியான, ஒரு துடிதுடிப்பான் தனிப்பட்ட ஒரு பொருளை தொடர்ந்து உருவாக்கி, இருப்புக்கு இடைவிடாமல் வந்தடைகின்றன.

ஆ.ப.ஜெ. துடிதுடிப்பான இருப்பு நிலையின் பரிமாணத்தை நாம் அறிந்து கொள்ளும் போது, இதை நேரடியாக நம்மால் அனுபவித்து உணர முடியும். கால ஓட்டத்தின்படி இந்த வெளியில் இயங்குகிற பொருள்களை சாதாரணமாக நாம் புரிந்துகொள்வதில்லை. ஆனால், தொடர்ந்து தாமாகவே பிரபஞ்சத்தின் பல்வேறு பொருள்களாகவும், வடிவங்களாகவும் மறுவடிவம் பெற்று வருகிற முடிவற்ற, எல்லையற்ற ஓர் இருப்பு நிலை நாம் என்பதை அனுபவித்து அறிகிறோம்.

அ.தி. வழிகாட்டுகிற ஞானச்சுடர்கள் பற்றி பேச வேண்டும் என்று நீங்கள் முடிவு செய்ததற்கு இதுதான் காரணமா?

ஆ.ப.ஜெ: ஆம். அனைத்து விதமான வடிவங்களின், தோற்றங் களின் இயல்பாகவும் அடித்தளமாகவும் அமைந் திருப்பது, மூலாதாரம்தான் என்ற கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இடைவிடாமல் தொடர்ந்து நிகழ்கிற மறுவடிவ செயல்முறையில் அடிநாதமாக அமைந்திருப்பதும் இந்த மூலாதாரம்தான். இந்த மறுவடிவம் பெறும் நிகழ்வின் மூலம்தான் தொடர்ந்து பொருள்கள் தோன்றி, அடுத்து ஒரு கட்டத்திற்குப் பிறகு மறைந்துவிடுகின்றன.

அ.தி: இந்த மூலாதாரத்தை ஒருவர் வசப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது அல்லவா?

ஆ.ப.ஜெ: நிச்சயமாக.

அ.தி: மதரீதியிலான அனுபவ அறிவிலிருந்து இது வருகிறதா?

ஆ.ப.ஜெ: நம்பிக்கை, சடங்கு, சம்பிரதாயங்கள் மற்றும் நெறிகளுக் கிடையேயான தொடர்பு சம்பந்தப்பட்ட மத நடைமுறை குறித்த அணுகுமுறைகளில் பெரும் வேறுபாடு உள்ளது. யூத மதத்திற்கும் கிறித்துவ மதத்திற்கும் இடையேயான முரண்பாடு ஒரு நல்ல உதாரணம். இந்த இரண்டு மதங்களுக்கிடையேயான ஒரு நிலையில் இஸ்லாமிய மதம் இருக்கிறது. பிறகு, கிழக்கத்திய மதங்களும் உள்ளன.

அ.தி: அப்படியானால், நாம் என்ன செய்வது?

ஆ.ப.ஜெ: சில மதங்களில், முக்தி என்பது முதன்மையாக இடம் பெற்றுள்ளது, வேறு சில மதங்கள் ஞானமடைதலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஆத்மா மற்றும் ஆவி பற்றி மேற்கத்திய அணுகுமுறைகள் பெரிதும் வலியுறுத்துகின்றன. கிழக்கத்திய அணுகுமுறைகளில் மனம் மற்றும் சிந்தனை என்பன பிரதானமாக இடம் பெற்றுள்ளன.

அ.தி: சவாலாக இருப்பது எது?

ஆ.ப.ஜெ: ஒளிவு மறைவு இல்லாத, ஆராய்ந்து செயல்படுகிற, சுய கட்டுப்பாடு நிறைந்த வாழ்க்கையை, மற்றவர்களின் நலன்களில் எப்போதுமே நாட்டம் கொண்டிருக்கிற, பொது நலனில் எப்போதுமே அக்கறை கொண்டிருக்கிற ஒரு வாழ்க்கையை, ஒரு வலுவான நடத்தையை உருவாக்குகிற பல்வேறு பழக்கங்களின் அடித்தளத்தில் உருவான ஒரு வாழ்க்கையை வாழ்வதுதான் சவால்.

அ.தி: வெவ்வேறு மதங்கள் இதில் எப்படிப் பொருந்து கின்றன?

ஆ.ப.ஜெ: பொருந்துகிறது என்பது இதில் எங்கே வருகிறது? இஸ்லாமியக் கோட்பாடுகளில் கூறப்பட்டுள்ள சில விஷயங்களை நான் ஆழமாக உணர்ந்து கொள்வதற்கு என் நண்பர் ஒய்.எஸ்.ராஜன் உதவி செய்தார். ***இறைதூதர் தந்த முத்துக்கள்*** (Pearls from the Prophet) என்று ஜோதிர்லதா கிரிஜா மிகவும் அற்புதமாக எழுதியுள்ளார்.

அ.தி: ஆனாலும் வேறுபாடுகள் நிலவுகின்றன; மோதல்கள் மூள்கின்றன.

ஆ.ப.ஜெ: மதத்திற்குள் அரசியல் மிகவும் அதிகமாகப் புகுந்து விட்டது. சொல்லப் போனால், மதங்களுக்கிடையேயான வேறுபாடுகளைவிட, மதங்களுக்குள்ளேயே நிறையப் பிளவுகள் நிலவுகின்றன.

அ.தி: வரையறுக்கப்பட்டுள்ள மத நியதிகளில் எந்த அளவுக்கு நவீனத்துவமும், மதசார்பற்ற தன்மையும் ஏற்றுக்

கொள்ளப்பட்டிருக்கின்றன அல்லது நிராகரிக்கப் பட்டிருக்கின்றன என்பதைப் பொருத்தே இந்த வேறுபாடுகள் அமைந்துள்ளன என்பதுதான் உண்மை.

ஆ.ப.ஜெ: சரியாகச் சொன்னீர்கள்.

அ.தி: நவீன மதிப்பீடுகளுக்கு மதம் ஒரு சவாலாக இருக்கிறதா அல்லது அவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக் கிறதா?

ஆ.ப.ஜெ: மதம் என்பது தன்னந்தனியான ஒன்றாகவும் நவீன சமுதாயத்திலிருந்து பிரிந்திருக்கிற ஒன்றாகவும் இருக்க முடியாது. நவீனத்துவத்திற்கு இடம் கொடுக்கத்தான் வேண்டும். உலகியல் மதிப்பீடுகளை ஒரு ஆன்மிக திசையை நோக்கி அதிகமாக மாற்றம் பெற வைப்பதில் மதம் வெற்றிபெறப் போகிறதா அல்லது புதுவிதமான மதிப்பீடுகளுக்குள் அது மூழ்கடிக்கப்பட்டு, முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக, அதன் மூதாதையர்களால் அடை யாளம் காணப்பட முடியாத ஒன்றாக மதம் வேறு வடிவம் எடுக்கப்போகிறதா? இதுதான் சவால்.

அ.தி: ஆழமான உண்மைகள், மத எல்லைகளைக் கடந்து, தங்களை வெளிப்படுத்திக் கொள்கின்றன.

ஆ.ப.ஜெ: உறுதியாகவும், தீர்மானமாகவும் செயல்படுபவர்களை இறைவன் நேசிக்கிறான். தங்களுக்கு என்ன நேர்ந்தாலும் எல்லாவற்றையும் பொறுமையுடன் தாங்கிக்கொண்டு, தங்களது லட்சியத்தில் - நம்பிக்கை, சாம்ராஜ்ஜியம், கணிதம், இசை போன்ற எப்படிப்பட்ட லட்சியமாக இருந்தாலும் - தொடர்ந்து முன்னேறிச் செல்கிற தனி நபர்களும் நம்மிடையே உள்ளார்கள்.

அ.தி: வடிவங்களை உருவாக்குவதும் உணர்ந்துகொள்வதும் மூலாதாரம்தான் என்றுதானே நீங்கள் சொல்கிறீர்கள்? சிருஷ்டி கர்த்தா, சிருஷ்டி, சிருஷ்டிக்கிற செயல்முறை என எல்லாமுமாக இருப்பது மூலாதாரம்தான்,

ஆ.ப.ஜெ: சிருஷ்டி என்பது சாதாரணமான உருவாக்கம் தான். வடிவங்கள் மற்றும் அனுபவங்களின் தொடர்ச்சியான ஒரு வெளிப்பாடு அது. தனிப்பட்ட மற்றும் தன்னிச்சை

யான எந்த ஆன்மாவும் இல்லவே இல்லை என்பதை நாம் உணர்கிறபோது, தானாகவே நிகழ்கிற ஒரு செயல், தனிப்பட்ட விருப்பம் அல்லது தீர்மானம் என்ற எதுவுமே கிடையாது என்பதை நாம் காண்கிறோம். அனைத்துமே இறைவனுடைய விருப்பத்தின் வெளிப்பாடுதான். செயல், செய்வது, நடந்து கொள்ளும் பாங்கு, மற்றும் செயல்படுத்தல் என்று நாம் சொல்வது எல்லாமே உண்மையிலேயே கற்பனையான விஷயங்கள்தான். நிஜத்தில் அப்படிப்பட்ட எந்த விஷயங்களும் கிடை யாது. என் கையை இயக்குகிற அதே ஓர் இருப்புதான், சந்திரனை பூமியைச் சுற்றி வர வைக்கிறது.

அ.தி: ஒரு மனித ஜீவன் அனுபவிக்கிற, தன் விருப்பப்படி செயல்படுகிற தன்மைக்கு எங்கு இடமிருக்கிறது?

ஆ.ப.ஜெ: தன் விருப்பப்படியான செயல்பாடு என்பது சரியான பாதையில் ஆன்மாவை செலுத்துகிற என்ஜின்.

அ.தி: ஆனால், இந்த விருப்பம் சரியான பாதையிலிருந்து விலகிச் செல்வதற்கும் வழி வகுத்துவிடுமே? அப்படி நீங்கள் நினைக்கவில்லையா?

ஆ.ப.ஜெ: தன் விருப்பப்படி செயல்படுகிற ஆற்றல் என்பது, நிச்சயமாக உங்களை எங்கோ ஓர் இடத்திற்கு கொண்டு செல்லும்.

அ.தி: கடைசியாக உங்களிடம் ஒரு தனிப்பட்ட கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

ஆ.ப.ஜெ: கேளுங்கள்.

அ.தி: உங்களுடைய சொந்த உள்முகப் பயணத்தை எப்படி விவரிப்பீர்கள்?

ஆ.ப.ஜெ: என்னுடைய உள்முகப் பயணம் என்பதில் பல விஷ யங்கள் அடங்கியுள்ளன. ராமேஸ்வரம் தீவிலிருந்து ராஷ்ட்ரபதி பவன் வரையிலான, சாகசமும் கண்டு பிடிப்பும் நிறைந்த அந்தப் பயணத்தில் நான் மிகவும் நீண்ட தொலைவைக் கடந்து வந்திருக்கிறேன். இயற்பிய லில் இருந்து விமான வடிவமைப்பு, செயற்கைக்கோள்

ஏவுகலங்கள், வழிகாட்டிய திசையில் செலுத்தப்படுகிற ஏவுகணைகள், அணு ஆயுதங்கள், மனித ஆற்றல் நிர்வாகம், நம்பிக்கைகளை நாடிய தேடல்கள், மனங் களின் சங்கமம் என ஒவ்வொரு கட்டமாக தொடர்ந்த அந்தப் பயணம், பக்குவ நிலையும் பூரணத்துவமும் நிறைந்த ஒரு பயணம். இந்தப் பயணப் பகுதி விசால மடைந்து கொண்டே போகிறது. உண்மை மற்றும் நிஜத்தின் பயணம், இது. நேசமும் பக்தியும் நிறைந்த பரவசப் பயணம்; பரிவு, கொடுத்தல் மற்றும் சேவை பரிணமித்திருக்கிற ஒரு பயணம்; ஆன்மா மற்றும் நிஜத்தின் இயல்பை உணர்ந்த பயணம்; உள்முகத் தேடலும் கற்றல் தாகமும் பொங்குகிற ஒரு பயணம்; வாழ்க்கையில் நிறைவு கண்ட பயணம்; மனித ஆற்றலின் பயணம்; உள்ளார்ந்த விடுதலையின் ஒரு பயணம்... பயணம், பயணம், பயணம்... இறுதி வரையிலும் தொடர்கிற பயணம், இது.

அ.தி: உங்களுடைய பயணத்தில் இதுவரையிலும் நிறை வேறாத, நீங்கள் கடந்து வராத தளம் என்று ஏதாவது இருப்பதாக நினைக்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: துயரநிலை மற்றும் வரையறுக்கப்பட்ட நிலையிலிருந்து தொடங்கிய எனது விடுதலைப் பயணம், முடி வில்லாதது. நாட்டில் வேதனையும் அமைதியின்மையும் நிலவுகிறது. கிராமங்களில் உள்ள மக்கள் தவிர்க்கப்படக் கூடிய இன்னல்களால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். நமது முன்னேற்றச் செழிப்புக்கு இடையேயும், நகர்ப்புற குடிசைப் பகுதிகளை துயரங்களும் துன்பங்களும் பீடித்துள்ளன. வன்முறைகள் நிகழ்கின்றன. மக்களி டையே பகைமை நிலவுகிறது.

அ.தி: அமைதியும் நல்லிணக்கமும் மலரும் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறீர்களா?

ஆ.ப.ஜெ: அதிலென்ன சந்தேகம்? கருணையும் கண்ணியமும், பரிவும் நிறைந்த இந்திய மூலாதாரத்துடன் எனது மக்கள் இணைந்து விடுவார்கள். வாழ்க்கையின் சுக துக்கங்

களையும், தங்களுடைய காலத்தில் அவர்கள் எதிர் கொள்கிற பாதிப்புகளையும் கடந்து வருவதற்கு, இந்த இணைப்பு துணை நிற்கும். அமைதியும் நல்லிணக்கமும் தவழ்கிற, தங்களுடைய சூழ்நிலைகளுக்குப் பொருந்து கிற எந்த வாழ்க்கையையும் இறுதியில் அவர்கள் வாழ்வார்கள்.

அ.தி: நமது தேசத்தில் ஏன் இன்னமும் அமைதி கைகூடாமல் நழுவிக்கொண்டே போகிறது? விடைபெறுகிற கட்டத்தில் இதுபற்றிய உங்களுடைய சிந்தனைகளைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆ.ப.ஜெ: ஜலாலுதீன் ரூமியின் கீழ்க்கண்ட வரிகளைப் படியுங்கள்:

அறிவு பெற்றிருப்பதால்
இறைவன் சுதந்தரமாய் இருக்கிறான்.
அறிவு இல்லாததால்
மிருகம் சுதந்தரமாய் இருக்கிறது.
இரண்டுக்கும் இடையே
மனிதன் போராடிக் கொண்டிருக்கிறான்.[110]

உங்களுடைய மனதை நீங்கள் அடக்கி ஆளும் போது, இந்த உலகத்தை நீங்கள் அடக்கி ஆளலாம். தனது கட்டுப்பாட்டிற்குள் தன்னை வைத்திருக்கும் போதுதான் பிரகாசமான ஒளியை வழங்கக்கூடிய மிகவும் சக்தி வாய்ந்த ஆதார மையமாக சூரியன் மாறுகிறான். மகசூல் தருகிற பயிராக பரிணமிக்கிற பக்குவத்தை எட்டும்போது தான், செடிகள், உணவை வழங்கத் தொடங்குகின்றன. நம்மிடையே கடவுள்களும் விலங்குகளும் மற்றும் போராடிக் கொண்டிருக்கிற ஆனால், வீறுகொண்ட நூறு கோடி மனித ஜீவன்களும் உண்டு. இந்த மக்கள் அனைவரும் தங்களுடைய இருத்தலுக்கு மதிப்பளிக்கத் தொடங்கி, தங்களுடைய வறுமைக்கு அடிபணிய மறுக்கும் போதுதான் இந்தியா தலைசிறந்த நாடாக ஒளிரும்.

அ.தி: கடவுளின் விருப்பம் அப்படியே அமையட்டும்.

NOTES

1. *Paraphrased from Vietnamese Buddhist Monk Thich Nhat Hanh.*
2. *Adapted from 13th Century Turkish Poet Jalal-al-Din Muhammad Rumi.*
3. *The hut is in the Banyan Grove at Rashtrapati Bhavan.*
4. *Al-Ahzab; The Confederates; The Holy Quran 33.72.*
5. *Ashtavakra Gita consists dialogue between Sage Ashtavakra and King Janaka. Ashtavakra Gita is melody of interior brain, beyond the thought and feeling, which understands and always, remains drowned in the calmness.*
6. *Chapter 1, Stage 3.*
7. *Chapter 2, Text 25.*
8. *Subhash Kak teaches Electrical and Computer Engineering at the Louisiana State University.*
9. *Audio book based on Wings of Fire.*
10. *"Only you must be honest with yourselves.": General Epistle of James (I, 22).*
11. *Quoted in: Helminski, Kabir (2000). The Rumi Collection. P.19.*
12. *Unity of humanity.*
13. *Stage 1.19.*
14. *Ramana Maharishi (1879-1950) may be taken as the greatest devotee of formless brahman.*
15. *Friedrich Nietzsche (1844-1900) inquired into the foundations of traditional morality.*

16. *Jain seer and the head of the Terapanth school, A man striving for Universal Peace and Amity.*
17. *Originator of the Diamond Approach to Self-Realization and founder of The Ridhwan School.*
18. *American poet Walt Whitman (1819-1892) wrote, "One must let the true self out, just like the spider lets out his filament."*
19. *Meng Tzu, in Latinized form, Mencius (372-289 BC), based his thought on the concept of jen (humanness).*
20. *The thousand yard Model of the Solar System by Guy Ottewell (1989).*
21. *You are drunk, and this is the edge of the roof—Rumi.*
22. *Proverbs 29:18.*
23. *Yad gatva na nivartante. (Chapter 15, Text 6, Line 3).*
24. *Roman Emperor (161-180 AD).*
25. *"God hath given them the spirit of slumber, eyes that they should not see, and ears that they should not hear, unto this day" (Romans 11:8).*
26. *Rumi frequently used dung and musk as metaphors for profane and sublime. "No one discerns the musk from the dung. The town has become packed with dung worshippers."*
27. *The Analects, Book HI (Pa Yih), Chapter XIII.*
28. *Jaya Row is founder of Vedanta Vision and teacher of Indian philosophy.*
29. *Vivekacudamani is one of the most important texts in the Advaita tradition and the most popular philosophical work ascribed to the great Indian philosopher, Sankara (650-700 AD).*
30. *The Manu Smriti were a code of conduct adopted by Aryan tribes, who first settled and later gradually expanded their dominance in the Indian subcontinent.*
31. *Shangri-La, or Shambhala in Tibetan, means the "sun and the moon in one's heart."*

32. *Ivan Rilski, was Bulgarian monk lived in ninth century. Under the 500-year rule of Ottoman Turks, he became a source of Bulgarian identity and culture.*

33. *Founder of the Franciscan Order lived during 1181-1226 AD in Italy.*

34. *Powell is widely recognized as one of the most inspired writers on the subject of Advaita the teaching of non-duality. " True religion or spirituality is nothing other than the reversal of this whole process of chaos, conflict, to a state of simplicity, naturalness, and therefore order..."*

35. *American Author lived during (1883-1970) is widely recognized as the founder of the modern genre of personal success literature.*

36. *Term 'Circle of Influence' is first used by author Steven Covey. "You also have to create time to get out of your comfort zone."*

37. *The complex connotations of this concepts is seen in Buddhist Tradition as Bardo. We can understand it as transcendental insight that may arise with the direct experience of reality.*

38. *Hazrat Inayat Khan (1882-1927) started 'The sufi Order in the West' (now called the Sufi Order International) in the early part of the 20th century.*

39. *A British writer lived during 1864-1912, James Alien teaches two essential truths: today we are where our thoughts have taken us, and we are the architects -for better or worse - of our futures.*

40. *Second President of India (1962-1967) lived during 1888-1975.*

41. *Carl Jung (1875-1961) was a Swiss psychiatrist who propagated the concepts of collective consciousness and synchronicity as an explanation for anything in the real world.*

42. *Mathnawi I, 3703-3706, quoted in: Helminsky, Kabir (2000). The Rumi collection. P.21.*

43. *Pythagoras (582-500 BC) is regarded as one of the brightest figures of early Greek antiquity.*

44. *Mathnawi IV.-2348-2353, Version of Camille and Kabir Helminski "Rumi: Jewels of Remembrance" Threshold Books, 1996.*

45. *321-185 BC, founded by Chandragupta Maurya (321-297 BC).*

46. *Kural 211.*

47. *Kural 595.*

48. *Kural 623.*

49. *Kural 596.*

50. *Sir Vidiadhar Surajprasad Naipaul is winner of the Nobel Prize in literature 2001. His writings dealt with the cultural confusion of the Third World.*

51. *Launched on 19 April, 1975.*

52. *Galileo Galilee lived in Italy during 1564-1642.*

53. *Abu Bakr As-Siddiq (The Upright) was the first Muslim caliph (632-634 AD).*

54. *The Rings of Persia (224-651 AD).*

55. *The Greek-speaking Roman Empire during the Middle Ages.*

56. *Ja na koi hindu hai, Na ko musalaman (Janam Sakhi).*

57. *Every tour is called 'Udasi'.*

58. *Sacho urai sabh ko, opar sach achar.*

59. *Holy Guru Granth Sahib, Jup 4: 187.*

60. *Famous for his thoughtful narrative of ten ideals that have shaped American thought, life, and the unique national identity.*

61. *American historian lived during 1899-1978.*

62. *Professor Emeritus of Mechanical Engineering and History at the University of Houston.*
63. *A world conflict occurring from 1914 to 1918.*
64. *Published on 20 August, 1862.*
65. *John Hope Franklin in From Slavery to Freedom.*
66. *For translated version of his cycle of song-poems, Gitanjali.*
67. *Harijan, 20-7-1935; Gandhian Institute Bombay Sarvodaya Mandal.*
68. *American journalist invited by Gandhiji in 1942; lived during 1896-1970.*
69. *Sri Eknath Easwaran is regarded as a great contemporary spiritual teacher.*
70. *Received Noble Prize in Literature 1990 for writing characterised by sensuous intelligence and humanistic integrity. Lived during 1914-1998; Mexican Ambassador in India during 1962-1968.*
71. *Einstein's letter to Gandhi written in 1931; Gandhi Serve Foundation.*
72. *Robert Kanigel is Professor of Science Writing at Massachusetts Institute of Technology.*
73. *Jai Maharaj, February 1990.*
74. *The Giant Who Touched Tomorrow, Tata Sons Ltd., 2005.*
75. *Defence Research & Development Organisation, New Delhi.*
76. *For his work on the scattering of light and for the discovery of the effect named after him.*
77. *Vinayak Bhat.*
78. *One of the world's oldest and richest musical traditions, Carnatic music is the classical music of Southern India. The basic form is a monophonic song with improvised variations.*
79. *Alexis Carrel (1873-1944) was mainly concerned with experimental surgery and the transplantation of tissues and whole organs. In 1912, he won the Nobel Prize in Medicine.*

80. *As a staff reporter for The Wall Street Journal Steven Mufson witnessed much of the 1984-1986 black uprising.*

81. *A British journalist, Anthony Terrell Seward Sampson (1926-2004) was a personal friend of Nelson Mandela.*

82. *Andre Brink is a White South African novelist whose anti-apartheid books inspired Nelson Mandela.*

83. *Address by President Nelson Mande La at Midrand on 10 October, 1998.*

84. *American essayist and poet (1803-1882).*

85. *Kural 157.*

86. *Volume 19 - Issue 02, Jan. 19 - Feb. 01, 2002.*

87. *Current Science 82: 222-225.*

88. *University was founded in 1925.*

89. *A Swedish, Dag Hjalmar Agne Carl Hammarskjöld (1905-1961) was elected Secretary-General of the United Nations in 1953 for a five-year term and re-elected in 1957.*

90. *English-born poet Wystan Hugh Auden (1907-1973) is widely considered among the greatest literary figures of the 20th century. "Beware of words, for with words we lie."*

91. *Amrita Patel, Chairman, National Dairy Development Board, Anand.*

92. *A central figure in the Mexican Green Revolution; Recipient of The Nobel Peace Prize 1970.*

93. *Physicist-Philosopher. Founder Chief of Defence Research & Development Organisation (1948-1961).*

94. *Page 212.*

95. *C.N.R. Rao is the Linus Pauling Research Professor and Honorary President of Jawaharlal Nehru Centre for Advanced Scientific Research, Bangalore.*

96. *The essence of dogness, according to Plato, is at a whole level of being more real than an individual dog.*

97. *Page 70.*

98. Sudden unpleasant situations automatically generates negative emotions, including primitive anger feelings and hostile or flight impulses, even before the person has time to think about what has happened or what to do about it.

99. Czech-bom German-speaking writer whose posthumously published novels express the alienation of modern man. Lived during 1883-1924.

100. K. Ramchand, then Director of Centre for Airborne Systems (CABS).

101. A dish like structure mounted on the aircraft body.

102. President Lincoln wrote this letter expressing condolences to Mrs. Bixby, a widow on 21 November 1864.

103. Jean-Jacques Rousseau (1712-1778). He is best known for his Social Contract philosophy that describes the relationship of man with society.

104. Discrete objects created in the mind out of an inseparable reality. A term used by A.H. Almaas.

105. Around 200,000 Pound Sterling.

106. Qaloo ainnaka laanta yoosufa qala ana yoosufu wahatha akhee qad manna Allahu AAalayna innahu man yattaqi wayasbir f ainna Allaha la yudeeAAu ajra almuhsineena (Yusuf; Holy Quran :12.90)

107. As many as 22 policemen were burnt alive by a rampaging mob after the police fired on a procession of satyagrahis in Chauri Chaura near Gorakhpur on 4 February 1922.

108. Addressed to Walter S Rogers, Institute of Current World Affairs, New York; courtesy New India Digest,

109. English Poet, Essayist and Lecturer; currently Professor of English Literature and Religion, at Boston University.

110. Fihi Ma Fihi 17, quoted in: Helminski, Kabir (2000). The Rumi Collection. P. 16.

நன்றி

பெரும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ராமகிருஷ்ண மடத்தின் சுவாமி பரமானந்தர்; இந்திய மஹா போதி சொஸைட்டியின் பிக்கு-பொறுப்பாளர்; போற்றுதலுக்குரிய யு.ஞானரத்ன தேரோ; ஹைதராபாத் ஆர்ச் பிஷப், புனித அருட் தந்தை மாரம்புடி ஜோஜி; தில்லி, ஃபேத்புரி மசூதி ஷாஹி இமாம், மவுலானா முஃப்தி முஹம்மது முகரம் அஹமது மற்றும் தில்லி சீக்கிய குருத்வாரா பிரபந்தக் கமிட்டியின் தலைவர் சர்தார் பரம்ஜித் சிங் சர்னா ஆகியோருக்கு என் முதன்மையான நன்றிகளை உரித்தாக்குகிறேன். என் சக்திக்கும் திறன்களுக்கும் அப்பாற்பட்ட இந்தப் பணியைப் பூர்த்தி செய்வதில் இந்தப் பெருமக்களின் நல்லாசிகளும் வழிகாட்டுதலும் எனக்குத் துணை நிற்கின்றன.

பல வருடங்களாக என்னை நெறிப்படுத்தி வழிநடத்தி வருகிற கேர் மருத்துவமனை (Care Hospital) யின் சேர்மன் பி.சோமராஜு அவர்களுக்கு நான் பெரிதும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். இந்த நூலின் ஆரம்ப கட்டத்தி லிருந்தே ஆர்வத்துடன் ஒப்புதலையும் ஒத்துழைப்பையும் வழங்கி வந்தார். அவருக்கே உரித்தான கனிவுடனும் முன்யோசனையுடனும் நான் படிப்பதற்கான நிறையப் புத்தகங்களையும் கருத்து வடிவங் களையும் வழங்கி வந்ததோடு, இந்த நூலை உருவாக்கும் பணிக்காக தங்குதடையில்லாமல் பயணம் செய்யவும் அனுமதி தந்தார்.

அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகத்தின் சையத் அப்துல் சயீத் மற்றும் உஸ்மானியா பல்கலைக் கழகத்தின் அன்வாருல் உலூம் கல்லூரியின் ஒய்.சத்யநாராயணா ஆகிய இருவரும் வழங்கிய செறிவான கருத்துகள், இந்த நூலுக்கு அடித்தளமாக அமைந்துள்ளன.

கடந்த இருபது ஆண்டுகளாக என்னுடைய அறிவார்ந்த வழிகாட்டி யாகத் திகழ்ந்து வருகிற ஆர்.சுவாமிநாதனுக்கும், இந்திய ஜனாதிபதியின் பத்திரிகைத் துறைச் செயலர் எஸ்.எம்.கானுக்கும் என் இனிய நன்றிகள். இவர்கள் இருவரும் தங்களுடைய அனுபவ அறிவையும் கருத்து

களையும், ஓர் அறிஞராக என்னை மதிக்கிற வகையில் பகிர்ந்து கொள்கிறவர்கள். இந்த மதிப்புக்கு நான் உரியவன்தானா என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை.

நான் தில்லியில் இருந்தபோதெல்லாம் எச்.ஷெரிடனும், ஆர்.கே. பிரசாத்தும் என்னை அன்புடன் கவனித்துக் கொண்டதுடன் இந்த நூலை உருவாக்குவதில் மகத்தான உதவி செய்தனர். என் புத்தகங்களை, நயமாகவும் உண்மையாகவும் பாராட்டி வருகிற ஷெரிடனுடன், சவுத் பிளாக்கில் நான் இணைந்து பணியாற்றியதிலிருந்து, விஞ்ஞான பவன் மற்றும் ராஷ்டிரபதி பவன் வரையிலும் தழைத்தோங்கி வருகிற அவருடைய தூய்மையான நட்பை, நான் பொக்கிஷமாகப் போற்றிப் பாதுகாத்து வருகிறேன்.

இந்த நூல் அச்சுக்குப் போவதற்கு முன்பு, நிறையப் பகுதிகளைப் படித்துப் படித்து ஆழமான, மிகவும் அவசியமான விமர்சனத்தை வழங்கி, பி.எஸ்.ஆர்.சுவாமி, இதற்கு மெருகு சேர்த்தார். இதன் இறுதி வடிவத்தை முழுமையாகப் படித்துப் பார்த்து, மிகவும் அன்புடன் பயனுள்ள ஆலோசனைகளை வழங்கி, டென்னிஸ் மார்க்கஸ் மாத்யு உதவி செய்தார்.

'கேர்' பவுண்டேஷன் சேர்மன் பி.கிருஷ்ணன் ராஜு, இந்த நூலின் மாதிரி வடிவத்தை முதலாவதாகப் படித்தவர். இறுதியான ஒப்புதல் முத்திரையைப் பதித்தவரும் இவரேதான். ரத்தினச் சுருக்கமாகப் பாராட்டும் சுபாவம் கொண்டிருந்த இவர், மோசமான சேதிகளை என்னிடம் சொன்ன சந்தர்ப்பங்களில் பரிவோடு நடந்து கொண்டார். என் சகாவான எஸ்.சி.பிரசாத், கடந்த சில வருடங்களாக எனது அனைத்துப் பணித் திட்டங்களிலும் எனக்குப் பெரும் பக்கபலமாக இருந்து வந்தவர். இந்தப் புத்தகம் உள்ளிட்ட எனது எந்தப் பணியும் இவரது பங்கேற்பு இல்லாமல் பூர்த்தியடைந்ததில்லை.

இதை எழுத ஆரம்பித்ததிலிருந்தே இந்தப் பணியில் சுவாசம் போன்று என்னோடு துணை நின்றவர், என் துணைவியார் அஞ்சனா திவாரி. 25 வருடங்களுக்கும் மேலாக, தன்னலமில்லாமல் எனது அனைத்து முனைப்புகளையும் தனதாக்கிக் கொண்டு துணை நிற்கும் என் துணைவி, அவ்வளவு பெருந்தன்மையுடன் என் தலைவிதியைப் பகிர்ந்துகொண்டிருக்கிறார்.

-அருண் கே.திவாரி

BIBLIOGRAPHY

Kalam, A.P.J. with Arun K. Tiwari—Wings of Fire, University Press, 1999.

Abdul Kalam, A.P.J.—Ignited Minds: Unleashing the Power Within India, Penguin, 2002.

Almaas, A.H.—Inner Journey Home: The Soul's Realization of the Unity of Reality, Shambhala, 2004.

Arthur Osbome (Editor)—The Collected Works ofRamana Maharshi, Weiser Books, 1997.

Auden, W.H. and Leif Sjoberg (Translator)—Markings by Dag Hammarskjold, Faber, 1964.

Baldwin, Neil—Edison: Inventing the Century, University of Chicago Press, 2001.

Biihler, G (Translator)—The Laws of Mann In The Sacred Books of the East, vol. 25, Motilal Banarasidass, 1975.

Carrel, Alexis—Man, The Unknown, Macfadden, 1961.

Chesterton, GK.—Saint Francis of Assissi, Random House, 2001.

Coleman, Barks—Essential Rumi, Harper, San Francisco, 1997.

Derek A. Long—The Raman Effect: A Unified Treatment of the Theory of Raman Scattering by Molecules, John Wiley & Sons, 2001.

Eknath Easwaran—Gandhi, The Man: The Story of His Transformation, Nilgiri Press (third edition), 1997.

Fischer, Louis—Gandhi: His Life and Message for the World, Signet Book, 1989.

Franklin, J.H.—From Slavery to Freedom, Alfred A. Knopf, 1988.

Franz Kafka and Harold Bloom (Editor)—The Metamorphosis (Bloom's Modem Critical Interpretations), Chelsea House Publications, 1988.

Helminsky, Camille and Kabir—Rumi: The Path of Love byManuela Dunn Mascetti (Editor), Element Books, 1999.

Hill, Napoleon—The Law of Success, Master Mind Books, 2002.

James Alien—As A Man Thinketh, Peter Pauper Press, 1960.

James Joyce—Portable James Joyce, Penguin Books, 1976.

Josephson, Matthew—Edison: A Biography, History Book Club, 2003.

Jung, Carl G.—Man and His Symbols, Dell Publishing, 1968.

Kak, Subhash—The Prajna Sutra, Louisiana State University, Baton Rouge, 2003.

Kamath, M.V.—Milkman from Anand: The Story of Verghese Kurien, Konark Publishers, 1996.

Krishnamurti, Jiddu—The First and Last Freedom, Harper, 1975.

Kurien Verghese—An Unfinished Dream, Tata-McGraw-Hill, 1997.

Lienhard, John H.—The Engines of Our Ingenuity: An Engineer Looks at Technology and Culture, Oxford University Press. 2001.

Mandela, Nelson—Long Walk to Freedom, Back Bay Books, 1995.

Mufson, Steven—Fighting Years: Black Resistance and the Struggle for a New South Africa, Beacon Press, 1990.

Paz, Octavo— In Light of India, Rupa Paperback, 1998.

Price, Robert M.—The Apartheid State in Crisis: Political Transformation in South Africa, 1975-1990, Oxford University Press, 1991.

Radhakrishnan, S.—Living with a Purpose, Orient Paperbacks, 1977.

Row, Jaya—Profile of the Perfect Person: Based on Bhagvad Gita Chapter II, Jaico, 2004.

Sampson, Anthony—Mandela : The Authorized Biography, Knopf, 1999.

Solomon, Robert C. and Higgins, Kathleen (Editor)— Reading Nietzsche, Oxford University Press, 1990.

Subbarao, Kakarla with Arun K. Tiwari—A Doctor's Story of Life and Death, Ocean Books, 2002.

Thomas Byrom (Translator)—The Heart of Awareness : A Translation of the Ashtavakra Gita, Shambhala, 2001.

Venkataraman, G.—Journey Into Light: Life and Science of C.V. Raman, Indian Academy of Sciences, 1988.

எனக்கு ஏற்ற களத்தை, துறையை எப்படி நான் தெரிந்துகொள்வது? மோதலும் போராட்டமும் நிறைந்ததாகத் தோன்றுகிற உலகத்தில் நானே சுயமாக என் வாழ்க்கைப் பயணத்தை எப்படித் தொடங்குவது? என் வாழ்க்கையை மகிழ்ச்சியானதாகவும் உபயோகமானதாகவும் எப்படி அமைத்துக்கொள்வது? தொலைநோக்கு படைத்த நமது ஜனாதிபதி செல்லும் இடங்களிலெல்லாம் இப்படிப்பட்ட பல கேள்விகளை மாணவர்களும் இளம் தொழில்முறை நிபுணர்களும் அவர்களிடம் கேட்கிறார்கள். எனது வானின் ஞானச்சுடர்கள்: வாழ்க்கையில் குறிக்கோள் குறித்த உரையாடல், இந்த மாதிரியான பல கேள்விகளுக்கு விடையளிக்கிறது.

டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் - அவருடைய நண்பரும் அக்னிச் சிறகுகள் இணையாசிரியருமான பேராசிரியர் அருண் கே. திவாரி - இவர்கள் இருவருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் வடிவத்தில் படைக்கப்பட்டுள்ள இந்த நூல், வாழ்க்கையை ஆன்மீக அடிப்படையில் அணுகும் கலையைக் கற்றுத் தருகிறது. உலகமயமாக்கல் பற்றிய தம்பட்ட முழக்கங்கள்... மோதல்களின் அரங்கேற்றக் களமாக இந்த உலகத்தைக் கருதுகிற அவநம்பிக்கை.. என்ற இரண்டு அதீத நிலைகளையும் இந்த நூல் நிராகரிக்கிறது. இந்த பூமியின் பரிணாம வளர்ச்சிக்கு துணை நிற்பதை, தனது இறுதி இலக்காகவும் லட்சியமாகவும் மனித குலம் அமைத்துக் கொள்வது குறித்தும் இது விவரிக்கிறது.

வரலாற்றில், மானுடத்தின் பல்வேறு நிகழ்வுகளைப் பரந்துபட்ட கண்ணோட்டத்தில் படம் பிடித்துக் காட்டுகிறது இந்நூல். இதன் அடிநாதமான கருத்தோட்டங்களுக்கு வாழும் உதாரணங்களாகத் திகழ்ந்து, இந்த பூமியில் வழிகாட்டிய சில ஞானச் சுடர்களின் மேன்மையையும் நமக்கு உணர்த்திக் காட்டுகிறது.



இந்தியாவின் தலைசிறந்த, தனித்தன்மை வாய்ந்த அறிவியல் மேதை, ஆவுல் பக்கீர் ஜெயினுலாபுதீன் அப்துல் கலாம் 1931 அக்டோபர் 15-ஆம் நாள் பிறந்தார். இந்தியாவின் முதலாவது செயற்கைக் கோள் ஏவுகலமான எஸ்.எல்.வி - 3 ஏவுகலத்தின் சிருஷ்டி கர்த்தா.! தொழில்நுட்பத் தகவல், முன்னறிவிப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக தொழில்நுட்பத் தொலைநோக்கு 2020 ஆவணத்தை வடித்துத் தந்த புனர் நிர்மாணச் சிற்பி..! இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பான இஸ்ரோவிலும் பாதுகாப்பு ஆய்வு மற்றும் மேம்பாட்டு அமைப்பான டி.ஆர்.டி.ஓ அமைப்பிலும் பல்வேறு முக்கியப் பொறுப்புகளை வகித்த ஆ.ப.ஜெ. அப்துல் கலாம், இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகராகவும் பணியாற்றியவர்... முப்பதுக்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களில் கவுரவ டாக்டர் பட்டங்களைப் பெற்றிருக்கும் தனிப்புகழை ஈட்டியுள்ள அவர், இந்திய தேசத்தில் மிக உயர்ந்த மூன்று விருதுகளான பத்ம பூஷண் (1981), பத்ம விபூஷண் (1990), மற்றும் பாரத் ரத்னா(1997) விருதுகளையும் வென்றுள்ள தனிப்பெருமை கொண்டவர். நாடுமுழுவதிலும் ஐந்து லட்சத் திற்கும் மேற்பட்ட குழந்தைகளைச் சந்தித்து தனது இந்தியத் தொலைநோக்கை பகிர்ந்து கொண்டுள்ள ஆதர்சன நாயகன்! இந்தியக் குடியரசின் 11-ஆவது ஜனாதிபதியாக வழிகாட்டிவரும் நம்பிக்கை நட்சத்திரமாக மிளிருபவர், டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்.



அருண் கே. திவாரி

பயோ மெடிக்கல் உயிரி மருத்துவப் பொறியியல் பேராசிரியரான அருண் கே. திவாரி இப்போது ஹைதராபாத்திலுள்ள கேர் ஃபவுண்டேஷனின் இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். 1987-ல் அறிவியல் கருத்தோவியங்களைத் தீட்ட ஆரம்பித்த இவர், விற்பனையில் முன்னணி வகிக்கும் அக்னிச் சிறகுகள் நூலை - ஜனாதிபதி ஆ.ப.ஜெ. அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாற்றை - அவருடன் இணைந்து எழுதியுள்ளார். மேலும், பல் புத்தகங்களைப் படைத்துள்ள இவர், தீர்க்கமான சிந்தனையாளர்; ஆழ்ந்த ஞானம் கொண்டவர்.

கண்ணதாசன் பதிப்பகம்

கதாபதி